தமிழ்

சுறுசுறு

நிஞர். அ.சங்கரவள்ளிநாயகம்

தமிழ் அமுது

அறிஞர். அ.சங்கரவள்ளிநாயகம்

வெளியீடு :
" குறளகம் "
கதிரேசன் கோயிற் சாலை,
கோயிற்பட்டி.

நூல் அச்சு அமைப்பு விளக்கம்

நான்காம்பதிப்பு : மே, 2005

நூலின் பெயர் : தமிழமுது

ஆசிரியர் : அறிஞர். அ. சங்கரவள்ளிநாயகம்

மொழி : தமிழ்

நூல் வெளியீடு : பிப்ரவரி, 2002

உரிமை : குறளகம், கோயிற்பட்டி.

தாள் : கரீம் ஓ பேப்பர் 14.7 Kg

நூல் அளவு : 195 cm X 265 cm

எழுத்து வடிவம் : 10

பக்கங்கள் : 148

விலை : ரூ. 35.00

அச்சிட்டோர் : சண்முகம் நிறுவனம்
47, தெற்குக் கடை வீதி
கோயிற்பட்டி.

இந்நூல் . . . . . .

என்னையும் என்குடும்பத்தினரையும்

மாளா வேதனையிலும்

மீளாத் துயரிலும்

ஆளாக்கி,

எதிர்பாராத நிலையில்

சாலை நேர்ச்சியில்

இயற்கை எய்திய

என்மைந்தன்

கமலச் சரவணன், அவன்

அருமைத்துணைவி சீதை, அன்புக்குழந்தை மீரா

ஆகியோரின் நினைவிற்கான

இலக்கியப் படைப்பாகும்.

அணிந்துரை

இருட்காட்டில் விரிந்த வெளிச்சப்புள்ளிகள் !

- ஞானபாரதி வலம்புரிஜான்

முன்னாள் மேலவை, நாடாளுமன்ற உறுப்பினர்.

புலவர் பெருந்தகை அ. சங்கரவள்ளிநாயகம் அவர்களின் தமிழமுது அவர் தன்னையே பிழிந்த தவமாகும். எது சிறந்த புத்தகம் என்று என்னைக் கேட்டால் " எந்த ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டிப்புரட்டி நீ தூங்க முயற்சிக்கிறபோது, எந்தப்புத்தகம் உன்னைப் புரட்டிப் புரட்டி விழித்துக்கொள்ளப் பண்ணுகிறதோ, அதுவே சிறந்த புத்தகம்" என்பேன்.

அந்த வகையில் மனிதனை விழித்துக்கொள்ளப் பண்ணுகிற விழுமிய புத்தகம் 'தமிழமுது' குறிக்கோளுடையது இலக்கியம் என்கிறார் ஆசிரியர். வாழ்வே குறிக்கோளுடையதுதான்.

சான்றோர்கள் தங்கள் வாழ்வின் குறிக்கோள்களைத் தாங்களே வகுத்துக் கொண்டார்கள். சான்றாகத் தந்தை பெரியார், " திராவிட சாதியாரைக் காப்பதற்கு எவரும் முன் வராதபடியால் நான் வந்து காக்க வேண்டியதாயிற்று" என்று தமது முதல் இதழில் எழுதினார்.

மகாகவி பாரதியாரோ,

" நமக்குத் தொழில் கவிதை
நாட்டுக்கு உழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தல் " என்றார்.

இப்போது நூற்றாண்டு காணும் மொழிஞாயிறு தேவநேயப்பாவாணரோ, "வடமொழியின் துணையின்றித் தமிழ் தனித்தியங்க வல்லது என்பதை நிறுவுதலே என் வாழ்நாளின் குறிக்கோள் " என்றார்.

ஆகவே குறிக்கோள் உடையதே வாழ்க்கை. அந்த வாழ்க்கையிலிருந்து வருவது இலக்கியம் : வாழ்க்கைக்காவது இலக்கியம். இந்த அடிப்படைக் கருத்தினைப் பெரும்புலவர் அ. சங்கரவள்ளிநாயகம் அவர்கள் மேற்கு நாட்டு அறிஞர்களின் கருத்தோவியங்களோடு ஒப்பிட்டுத் திறம்பட வெளிப்படுத்தியிருக்கிறார்.

திருக்குறளை மேற்கோள் காட்டுகிற மேன்மைக்குரிய பொருளாகவே கருதுகிற தமிழுலகத்தில் திருக்குறளை வாழ்ந்து காட்டுகிறவர் பெரும்புலவர் அ. சங்கரவள்ளிநாயகம் அவர்கள்.

பல்லாண்டுகளாகத் திருக்குறள் பற்றி அவர் ஆற்றிய சொற்பொழிவுகளின் பிழிவாக இந்நூலில் திருக்குறளைப் பற்றிய அதிகாரங்கள் சில அமைந்துள்ளமை இருக்காட்டைக் கிழித்து வெளிச்சப் புள்ளிகளை விரித்து வைப்பது போல உள்ளது.

மதுரைக்காஞ்சி, சேக்கிழார் மாக்கதை, தாயுமானவர் காட்டும் மனிதநேயம், தமிழ்த்தென்றல் திரு.வி.க., மகாகவி பாரதி, பாவேந்தர் போன்றோரைப் பற்றிய அலசல்கள் ஆழமானவை. குறிப்பாகப் பாவேந்தர் பற்றிய பெரும்புலவர் அ. சங்கரவள்ளிநாயகத்தின் பார்வை ஒவ்வொரு தமிழனும் நெஞ்சோடு ஏந்த வேண்டிய நேச வரிகளாகும். தமிழ்வழிக் கல்விக்குத் தக்க வகையில் குரல் கொடுத்திருக்கிற பெரும்புலவர் காலம்தோறும் கனிந்து வாழ்க !

தமது இலக்கிய ஆய்வுப் பரப்பில் இன்று இரவல் தாய்நாடுகளில் வாழ்ந்துவரும் ஈழத்தமிழர்களுக்கும் இடம் தந்தது பெரும்புலவர் அ. சங்கரவள்ளிநாயகத்தின் பரந்துபட்ட பார்வைக்குச் சான்று பகர்கின்றது.

நெறியாளராகவே நிமிர்ந்துள்ள பெரும்புலவர் அ. சங்கரவள்ளிநாயகம் தமிழர்களை இந்நூல் வாயிலாக ஆற்றுப்படுத்துவதிலும் வெற்றியே பெற்றிருக்கிறார். வாழ்க பெரும்புலவர் அ. சங்கரவள்ளிநாயகம் ! வளர்க அவர்தம் பணி !

வலம்புரிஜான்

சென்னை
26.1.2002

அணிந்துரை

கவிஞர் வைரமுத்து

பேராசிரியர். அறிஞர் சங்கரவள்ளி நாயகம் அவர்கள் படைத்த தமிழமுது பருகினேன்.

சிந்தனையும் கல்வியும் சுவாசமாய் அமையப்பெற்ற அருந்தமிழ் அறிஞர் பேராசிரியர் சங்கரவள்ளி நாயகம் அவர்கள், தமிழ் கூறும் நல்லுலகம் உச்சிமேல் வைத்துக் கொண்டாடும் இந்தப் பெருந்தகையின் பார்வை பாய்ச்சும் வெளிச்சத்தில் தமிழிலக்கியத்தின் பல்வேறு பரிமாணங்களும் தூய்மை பெற்றுத் துலங்குகின்றன. திருக்குறள் ஓர் உலகப் பேரிலக்கியம் என்னும் தலைப்பில் உலக இலக்கிய அரங்கில் குறள் குறித்த பதிவுகளை மிக அழகாக விளக்குகிறார்.

அத்துடன் அமையாமல் வள்ளுவர் உணர்த்தும் பண்பாடு என்கிற கட்டுரையிலும், வள்ளுவர் வாய்மொழி என்கிற கட்டுரையிலும் குறளியல் அறிஞராய்க் கொடி நாட்டுகிறார் பேராசிரியர் சங்கரவள்ளி நாயகம்.

பெரிய புராணத்தின் பெருமை பேசப் புகுந்த சேக்கிழார் புராணத்தில் உள்ள சரித்திரப் பிறழ்வுகள் பற்றிய இவரின் குறிப்புகள் நடுநிலை மாறாத ஆய்வுப் பார்வைக்கு நல்லதோர் இலக்கணம்.

ஜீவாவின் எழுத்துக்கள் குறித்தும் தமிழ்த் தென்றல் திரு.வி.க குறித்தும் பொது நோக்கோடு பயன்மிக்க கட்டுரைகளைப் படைத்திருக்கிறார். சிந்தனைச் சரடுகளின் தொடர்ச்சி பற்றி நூலின் தோற்றமும் - வளர்ச்சியும் என்ற கட்டுரையில் ஓலை ஏட்டிலிருந்து ஒலிநாடா வரை எனும் கிளைத்தலைப்பில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் இவர் எழுதியிருக்கும் பாங்கு சிந்தனைத் தெளிவின் சிகரம் எனலாம்.

எங்கும் புதுமை எதிலும் புதுமை எனும் தலைப்பில் புதுக்கவிதைகள் குறித்தும் தோய்வோடு எழுதுகிறார்.

சங்கத் தமிழ் தொடங்கி எங்கள் தமிழ் வரையில் பரந்துபட்ட பார்வையில் தன் பட்டறிவையும் படிப்பறிவையும் குழைத்துக் கொடுத்திருக்கும் இந்தப் படைப்பு தமிழின் மிக முக்கிய பதிவென்று உணர்கிறேன்.

பேரறிஞரை வாழ்த்தி வணங்குகிறேன்.

அன்புள்ள . . .

சென்னை
3.2.2002

மெய்ப்பொருள் காண்பது :

கவிஞர் இன்குலாப்

என் நினைவாற்றல் குறித்து எனக்குப் பெருமிதம் இல்லை. என் நண்பர்களுக்கோ நம்பிக்கை கிடையாது. எனினும் இன்னும் என் சிறுவயதில் நிகழ்ந்தவை சில அழியாத சித்திரங்களாக என் நினைவில் பதியப் பெற்றிருக்கின்றன.

அப்படிப்பட்ட அழியாத சித்திரங்களுள் ஒருவர் தாம் பேராசிரியர் அ. சங்கரவள்ளிநாயகம் அவர்கள். உயர்நிலைப்பள்ளியில் தம் குறுகிய காலப் பணியின் மூலம் என் நினைவில் தடம் பதித்தவர் பேராசிரியர் ஆவார். புதுக்கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் சா. அமீது அவர்களிடம் ஒருமுறை என் பள்ளி நாட்களை நினைவு கூர்ந்து பேசிக் கொண்டிருக்கும் போது, பேராசிரியர் சங்கரவள்ளிநாயகம் அவர்களைப் பற்றியும் அவர்களுடைய பேச்சாற்றல் என்னைச் சிறுவயதில் ஈர்ந்த விதம் குறித்தும் சொன்னேன். திரு. அமீது அவர்கள் கண்களை அகல விரித்துச் சொன்னார் : '' அவர் (சங்கரவள்ளிநாயகம்) என் உடன்பமின்றவர்தான். பிறகு திரு. சா. அமீது அவர்களே பேராசிரியர் அவர்களிடம் இப்படி ஒரு மாணவன் (நான்தான்) இன்குலாபாக இருக்கிற சங்கதியைச் சொல்ல . . . . இந்த வகையில் எங்களுடைய உறவு பல ஆண்டுகளுக்குப் பிறகு புதுப்பிக்கப்பட்டது.

நான் இன்னும் முழுமை பெறாதவன். வெறும் பாறையாய் கிடந்த என்னை அடையாளம் கண்ட சிற்பிகள் என் நினைவில் உண்டு . . . . என்னைச் செதுக்கிய உளிகளின் தாக்கமும் இன்னமும் இனிதாய் என் நினைவில். அந்தச் சிற்பிகளை என்றும் நினைவில் வைத்திருப்பேன். எங்கும் சொல்வேன். அப்படித்தான் சன் தொலைக்காட்சிச் செவ்வியல் என்னைச் செதுக்கிய என் முதல் சிற்பியை நினைவு கூர்ந்தேன். அய்யா சங்கரவள்ளி நாயகம் பற்றிச் சொன்னேன்.

இன்று அவர்களின் நூலுக்கு ஒரு கருத்துரை வழங்கும் வாய்ப்பை எனக்குத் தந்திருக்கிறார்கள்.

இடைப்பட்ட ஆண்டுகளின் நீட்சியில் என் ஆசானது சிந்தனையில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்திலேன். என்னை நேரில் சிந்தித்துக் கருத்துரையாடும்போதுதான் அவருக்கும என் முகம் தெரியும். (அந்தச் சந்திப்பும் அவர் மருத்துவமனையில் இருந்தபோது நடந்தது.) அவருடைய கருத்துக்களின் தொகுப்பை இப்பொழுது இந்தத் தமிழ் அமுதில்தான் நான் சென்று தேடிப் பார்க்கின்றேன்.

பள்ளியில் அந்தச் சில மாதங்களில் சுயமரியாதையின் கொழுந்தாகச் சுடர்ந்தார். இந்தத் தமிழ் அமுதில் இன்று பல்வேறு பரிமாணங்களுள் நிறைந்து நிற்கிறார். அவருடைய தமிழ் அனுபவம் தமிழ்ச் சிந்தனையின் ஆழத்தையும் அகலத்தையும் அவருக்கு உணர்த்தி இருக்கிறது என்பதை இந்த நூலின் வாயிலாகப் புரிந்து கொள்கிறேன். அவருடைய அறிமுகத்துக்கும் தமிழ் அமுது என்ற இந்த நூலுக்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் எழுத்துக்களாகப் படைத்தவை எவை என்பது எனக்குத் தெரியாது அருடைய பேச்சாற்றாலைப் பள்ளியில் உணர்ந்த பிறகு கோவில்பட்டித் திருவள்ளுவர்மன்ற ஆண்டு விழாவில் மீண்டும் நுகர்ந்தேன். அது என் வாழ்க்கையில் அரிதாக நேர்ந்த நெகிழ வைத்த நிகழ்ச்சி. அவருடைய அரிய படைப்பாகத் திருவள்ளுவர் மன்றம் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நூற்படைப்போடு சேர்ந்துப் பெருமிதம் கொள்கிறேன்.

' இலக்கிய நோக்கும் போக்கும்' என்ற முதற் கட்டுரை தொடங்கி 'பூவொன்று புயலானால்' என்று நிறைவுறும் பதினாறு கட்டுரைகளில் வெறுந் தகவல்களைத் தந்து செல்லும் வரலாற்று வரைவு என்ற எல்லையைத் தாண்டித் தமிழ்ச் சிந்தனையின் வளர்ச்சியையும் சிகரத்தையும் பார்க்கிறேன். அத்துடன் அது உலகவானை அளந்து செல்லும் இறகுகளாக விரிவதையும் பார்க்கிறேன். ஒரு நல்ல மாணவனைப் பெறுவது ஆசிரியருக்குக் கிடைக்கும் பேறு என்று சொல்வார்கள். நானோ நல்லாசிரியர்களைப் பெறும் பேறு பெற்ற மாணவன் என்ற நிறையுணர்வு கொண்டவன். இந்த நூலைப் பயில்கிற போது அந்த நிறையுணர்வு உறுதிப்படுகிறது.

பொதுவான இலக்கியம் பற்றியும் இலக்கியத் தோற்றம், அதற்குரிய காரணங்களை விவரிக்கும் முதற்கட்டுரை அடுத்துவரும் கட்டுரைகளின் புரிதலுக்குத்துணை புரிகிறது. ' திருக்குறள் ஓர் உலகப் பேரிலக்கியம்', 'வள்ளுவர் உணர்த்தும் பண்பாடு', 'வள்ளுவர் வாய்மொழி' என்று தொடரும் மூன்று கட்டுரைகளும் குறளின் வெளிச்சத்தில் மாறிவரும் உலகைக் காண்பதற்கான வழிகளைத் திறந்து விடுகின்றன.

வள்ளுவத்தின் உலகளாவிய பண்பு என்பது அதன்இயல்பாய் இருக்கிறது. ' முண்டாசுக் கவிஞன் பாராட்டும் மூவர் ' என்ற கட்டுரையில் வள்ளுவம் நாடு கடந்து நிற்கும் நிலைமையை நயம் படச் சுட்டுகிறார்:

உலகின் பல நாடுகளில் பற்பல அறிஞர்கள் தோன்றியுள்ளார். அவர்கள் அனைவரும் அவ்வக்கால மக்களுக்குப் பல அறிவுரைகள் வழங்கிப் போயுள்ளனர். அவர்கள் கூறிய அறிவுரைகள் மிகுதியும் அவரவர் நாட்டு மக்களுக்காகப் புகலப்பட்டவையே ஏசுநாதர் இசுரேலிய நாட்டு மக்களுக்கு வழிகாட்ட வந்தார். நபிகளின் நல்லுரைகள் இசுலாமிய இனத்தவர்களுக்கு மட்டும் உரியன. ஆனால் வள்ளுவர் கூறிய கருத்துக்களின் நிலை என்ன? அவை தமிழ்நாட்டுக்கு மட்டுமின்றி மனித இனம் அனைத்துக்கும் பொதுவாகச் சொல்லப்பட்டவை. வள்ளுவர்க்கும் உலகத்தின் மற்ற அறிஞர்க்கும் நூற்பமான வேறுபாடு உண்டு.

மற்ற அனைத்து நாட்டு அறிஞர்களும் தத்தம் நாட்டு மக்களுக்கு அறிவுரை கூறுவதன வாயிலாக உலகை அறிவுறுத்தி உள்ளனர். ஆனால் வள்ளுவரோ உலகத்தவர்களுக்கு அறிவுரை கூறுவதன வாயிலாகத் தம நாட்டுக்கு அறிவுரை வழங்கியுள்ளார். எனவேதான தமது நூலில் தமிழர் எனறோ, தமிழநாடு எனறோ கூறாது உலகம, மக்கள எனறு பொதுவாகக கூறியுள்ளார்.

' முண்டாசுக் கவிஞன் பாராட்டும் மூவர் ' (க.எண் : 9) என்ற கட்டுரையில் காணப்படும் இக்கருத்தைத் ' திருக்குறள் ஓர் உலகப் பேரிலக்கியம்' (க. எண் : 2) என்ற முந்திய கட்டுரையில் காணப்படும் பின்வரும் கூற்றோடு ஒப்பிடலாம் :

தமிழகத்துடன் பிற நாடுகளும் சுற்றிப் பார்த்தறிந்து அவர் உலகப் பொதுமறை காணவில்லை. தமிழகத்தில் இருந்து கொண்டுதான் உலகப்பொதுமறையை அவர் படைத்தார். தமிழ்ப்பண்புடன் வேறு எப் பண்பையும் ஒப்பிட்டுப் பார்த்து அவர் பொதுமை நிறுவவில்லை. தமிழ்ப்பண்பையே அப்பொதுமைப் பண்பாக அவர் காட்டியுள்ளார்.

இவ்விரண்டு கூற்றுக்களும் முரண்படுவது போலத் தோன்றலாம். எனினும் வள்ளுவர் தமிழ் என்று தம் நூலில் சுட்டிச் சொல்லாவிடினும் அவர் முன்னுள்ள உலகம் விரித்தது தமிழ்ப்பண்புக் கருவூலங்களையே. தமிழ்ப்பண்பில் கண்டது உலகத்தையே. உலகத்தாருக்கு அறிவுரை கூறுவது தமிழ்ப் பண்பாட்டின் வழிவேதான் - உலகத்தவர்க்குச் சொன்னது தமிழர்க்கும் தமிழர்க்குச் சொன்னது உலகத்தவர்க்கும் என்று சிந்திக்க இடந்தருகிறது.

திருக்குறளோடு மட்டும் அவர் சிந்தனை விசாரணை நின்று விடவில்லை ' மதுரைக்காஞ்சி ' அழகிய தொரு அறிமுகம் செய்கிறது. ' சேக்கிழார் மாக்கதை ' சாதியம் கடந்து செல்லும் ஆன்மீகத்தை அழகாக விளக்குகிறது. தாயுமானவரின் ஆன்மீக உள்ளத்தில் அழுந்தும் மனநிலை குறள் வழி மனிதத்தை உணர்ந்ததனால் அவருக்குச் சாத்தியப்பட்டிருக்கிறது.

இப்படிச் சென்ற நூற்றாண்டுகளின் சிந்தனை இயக்கத்தோடு ஒன்றிய இவரால் புதுயுகத்தின் மாறுபட்ட சிந்தனைக்குள்ளும் ஒரு காற்றுப்போல் எளிதாக நுழைய முடிகிறது. திரு.வி.க. வின் தமிழ்நேயம் சைவம் தொழிலாளர் விடுதலை நோக்கு, பெண்ணைப் போற்றும் பெருமை ஆகியவற்றை அகன்ற சிந்தனையால் தமக்குள் வரித்து விரித்துச் சொல்லவும் முடிகின்றது.

பாரதியை வணங்குவோர் பாரதிதாசனைப் பாராட்டுவதில்லை. பாரதிதாசனை முன்னிறுத்துவோர் பாரதியைப் புறக்கணிப்பதுண்டு. ஆதித்தமிழ்ச் சிந்தனையின் வழியே பயணம் செய்யும் பேராசிரியர் அவர்களுக்குப் பாரதியிடமும், பாரதிதாசனிடமும் பயின்ற விடுதலைத் தமிழ்தான் தெரிகிறதே தவிர, குழு சார்ந்த பாகுபாடு தெரியவில்லை. இதனால் மரபு வழிப்பட்ட தமிழ்ச் சிந்தனை உலகு புறக்கணித்த ஜீவாவை இவரது எழுத்து அரவணைக்கிறது. அவரது பொதுமைக் கொள்கையை இவர் உணர்ந்த தமிழ் தனது என்று ஆரத்தழுவுகிறது. வ.சு.ப. மாணிக்கனார் பற்றிய மதிப்புரை அப்பேராசிரியப் பெருந்தகையின் சாதனைகளை இளந்தலைமுறையினர்க்குத் தெளிவுபடுத்தி உணர்வூட்டும்.

' ஓலை ஏட்டிலிருந்து ஒலி நாடாவரை ' . . . . நூல் வளர்ந்த வரலாற்றை விளக்கும் அரியதொரு ஆய்வுக் கட்டுரை ' நூலின் தோற்றமும் வளர்ச்சியும் ' என்பதாகும். சுவடிகளின் கதையைச் சொல்லும் போதே மறைந்த தமிழ்நூல்களையும் சுட்டுகிறார். மனப்பாடமாக - ஆசிரியர், மாணவர் பயில்முறை அமைந்த பாங்கை வெளியீட்டின் தொடக்கமாகக் கொண்டு இன்றைய நூல் வளர்ச்சி வரை மிக அருமையாகத் தொகுத்துரைக்கிறார். நூல் எழுதக் காரணங்களையும் கண்டு சொல்கிறார். ' இனிது இனிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம் இலகுவது புலவர் தரு சுவடிச்சாலை ' என்ற பாரதிதாசனாரின் வரிகளுடன் இந்த ஆய்வுக் கட்டுரை முடிகிறது. இத்தொகுப்புக்குக் கனம் சேர்க்கிறது.

குமரப்பா ஒரு தேச விடுதலைப் போராட்டக்காரர். காந்திய வழிமில் மனித விடுதலை குறித்து ஆழ்ந்து சிந்தித்தவர். அவரைப் பற்றிய அறிமுகம் இளைஞர் உலகத்துக்குத் தேவை.

' எங்கும் புதுமை எதிலும் புதுமை ' என்ற கட்டுரை புதுக்கவிதைகளைப் பற்றிப் பேசுகிறது. சங்க இலக்கியத்திலும் வள்ளுவத்திலும் ஆன்மீக இலக்கியத்திலும் தோய்ந்த இவர் மனம் புதுக்கவிதைமிலும் நயம் காண்கிறது.

' பூவொன்று புயலானால் ' என்றக் கட்டுரை பெண்களைப் பற்றிப் பேசுகிறது என்பது புதுவதன்று. பேசத் துணியாப் பொருளைப் பேசுகிறது என்பதுதான் புதிது.

' அஜிதா ' என்ற பெயர் ஆளும் வர்க்கத்துக்கு நடுக்கம் தந்தது. ஒடுக்கப் பட்டோரக்கு உணர்வூட்டியது. அந்த அஜிதாவின் பழைய நிலைப் பாடுகளைக் பதிவோடும் இன்றைய செயல்பாட்டைப் பாராட்டுதலோடும் சித்திரிக்கும் இக்கட்டுரையில் ஒல்லும் வகையெல்லாம் ஓவாது ஒப்புரவாற்றிய பெண்மணிகள் பேசப்படுகிறார்கள்.

எந்தச் சிந்தனையையும் வழிபாடு செய்யும் மனோபாவம் எனக்கில்லை. ஆராயவேண்டும் என்கிற போக்கு என்னுடையது. பேராசிரியர் திருக்குறளை, சங்க இலக்கியத்தை, பெரிய புராணத்தை, பாரதியை, திரு.வி.க. வை, பாரதிதாசனை, ஜீவாவை, வ.சு.ப மாணிக்கனாரைப் பெரிதுபட்டப் பேசுகிறார். இது மேலோட்டமாகச் செய்யப்படும் பெரிதுபடுத்துதல் அன்று. ஆராய்ந்த நிலையில் செய்யப்படுவது. எக்கருத்தையும் ஏற்பதும் மறுப்பதும் இந்த மெய்ப்பொருள் காணும் முறையிலேதான் சாத்தியப்படும் என்பதற்கு இந்நூல் துணை செய்யும்.

இதைத் தமிழறிஞர் உலகம் பாராட்ட வேண்டும். நூலகங்களில் இடம் பெற வேண்டும். தமிழ் மாணவர் உலகம் பயில வேண்டும். இதனால் தமிழகம் பயன்பெற வேண்டும்.

இன்குலாப்

சென்னை

28.1.2002

என்னுரை

வாழ்வினில் பொய்ம்மை போக்கிச் செம்மையைச் சேர்க்கவும் மாசு துடைத்து மாண்புகளை இம்மன்பதையில் மலரச் செய்யவும் வீழ்வாரை வீழாது வீறுபெறச் செய்யவும் தமிழின் தாழ்ந்திடு நிலையினைத் தகர்த்துத் தரமேற்றவும் தமிழனின் தலைக்குனிவைப் போக்கி நிமிரச் செய்யவும் துன்பம் நீக்கி, நல்லின்பச் சூழல் ஆக்கவும் எனது உயிராகவும் மூச்சாகவும் விளங்குகின்ற செந்தமிழால் இயன்ற இத் 'தமிழமுது' பயன்படுமானால் பிறவிப்பயன் எய்திய பெரும்பேறாகவே அதனை நான் கருதுவேன். மூலமான முத்தமிழின் வழி இப்புவியில் மூர்க்கம் தவிர்வதும் ஞாலமெல்லாம் தமிழே ஆளுமை பெறுவதும் தமிழமுதாம் எனும் இப்புத்தமுதின் விளைவாக அமைய வேண்டுமென்பதே எனது விடுதலறியா விருப்பமாகும். தனித்து இயங்கும் தன்மை பெற்றதும் ஞாலத்தின் பண்டைய மொழியாக உற்றதுவுமான தமிழ் செழிக்கக் கனிச்சாறு போல் பல நூலெல்லாம் கண்டு, கற்கண்டினும் இனிக்கும் தமிழைக் காதலித்தும் காத்தும் வருகின்ற தமிழ்த்தொண்டர்களின் வரிசையில் இடம்பெற வேண்டும் என்ற வேணவாவின் கருவே இந்நூலின் உருவாய்க் காட்சியளிக்கின்றது.

இந்திரர் அமிழ்தமும் இன்றமிழ் அமுதமும் ஒன்றாகா. இந்திரர் அமிழ்தம் கற்பனைக் கெட்டாதது; நுகர்விற்கு அப்பாற்பட்டது. தமிழமுதோ நடைமுறைப் பயிற்சிக்கு உட்பட்டது; நுகர்விற்கும் அகப்படுவதாகும்; அகப்படுதல் மட்டுமல்லாமல் பயிலும் அகத்தைப் பண்படுத்துவதுமாகும். தமிழமுதை உட்கொள்வார் நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு நீங்கி, ஊழி உய்த்த உரவோராக விளங்குவர். நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகவும் எனது எண்ண அசைவில் இருந்த 'தமிழமுது' தற்போது எழுத்து வடிவம் பெற்றுள்ளது. நான் ஆற்றிய வானொலி உரை, தொலைக்காட்சிப் பொழிவு, மேடை முழக்கம், நான் பயின்ற மேதைகளின் நூற்கருத்துக்கள் ஆகியன இந்நூலின் கொள்ளிடங்களாகும்.

" பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவே " என

இம்பரும் உம்பரும் போற்றும் கம்பநாடன் பாயிரப்பாடல் குறிப்பது போல் தமிழ்ப்பித்தன் - தமிழ்ப்பேதை - தமிழ்ப் பத்தனுமான நான் சமைத்துள்ள தமிழமுதும் உண்பாரின் நாவிற்கு நற்சுவையாகவும் தமிழுணர்விற்கு உகந்ததாய் உரமூட்டுவதாகவும் படிப்பெனும் வேட்கை வேள்வி வளர்ப்பார்க்கு வேண்டிய அவியுணவாகவும் விளங்கும் என அழுத்தமாக நம்புகிறேன். இந்நூலின் பெருமையெல்லாம் தமிழைச் சாரும்; சிறுமை எல்லாம் எனது சிற்றறிவைச் சேரும்.

தமிழமுதைச் சரியாகச் சமைத்துப் படைக்கப் பக்கத் துணையாய் நின்று, பொருட்செல்வம் வழங்கிய அருட்செல்வரும் என்னருமை மாணவருமான கலிங்கப்பட்டித் தொழில் வலாளர் திருமிகு. நுரைராசு, தமிழ் ஊற்றில் நாளும் திளைத்து வரும் என் கெழுதகை நண்பரும் ஆசிரியருமான திருமிகு. அரங்கசாமி, என் செல்லப்பிள்ளைகளான கவிஞர்கள் திருமிகு. கருத்தப்பாண்டி, திருமிகு. சீனிவாசன், அமைதியே உருவான ஆசிரிய நண்பர் திருமிகு. இராசகோபால், மன்ற மாசற்ற பெரியாரும் நல்லாசிரியருமான திருமிகு. முத்துமாலை ஆகியோர் என் போற்றுதலுக்கு உரியராவர்.

பல்வேறு பணிகளுக்கிடையேயும் அணிந்துரை வழங்கி, நூலை வளப்படுத்திய வார்த்தைச் சித்தரும் வண்டமிழ்ச் செல்வருமான ஞானபாரதி திருமிகு. வலம்புரிசான், பாவுலகில் பரந்துபட்ட புகழுக்குரியவரும் வைர வரிகளுக்கு உரிமைப் பட்டவருமான கவிஞர் வைரமுத்து, என் முன்னாள் மாணவரும் இந்நாள் கவிதை உலகின் புரட்சி ஞாயிறுமான கவிஞர். இன்குலாப் ஆகியோர்க்கு என் தமிழார்ந்த நன்றி படைப்பதில் நவிலுவதற்கரிய மகிழ்வெய்துகின்றேன்.

படியெடுப்பதில் மடியின்றி உதவிய எனதருமை மாணாக்கியர் திருமிகு. ச. பத்மா, திருமிகு. செள. கீதாபிரியதர்சணி, கண்ணைப் பறிக்கும் வண்ணவடிவத்தில் நூலாக்கிய சண்முகம் அச்சக நிறுவனத்தின் உரிமையாளர் திருமிகு. ஆ. கார்த்திகேயன், அவர்க்குத் துணையாய் நின்று செயல்பட்ட து. இராதிகா, அவ்வப்பொழுது தம் ஊக்க உரைகளால் நூல் எழுதும் தாக்கத்தை என்னிடம் ஏற்படுத்திய நற்றமிழ் அன்பர்களும் என் நன்றிக்கு உரியர் ஆவர்.

வாருங்கள்! வண்டமிழ்ச் செல்வர்களே வாருங்கள்! புத்தம் புதிய கருத்துப் பானையின் உருவத்தில் 'தமிழமுதம்' காத்திருக்கின்றது. காகமாய்க் கரைந்து, கலந்துண்ணக் கைகோர்த்து வாரீர் ! கருத்தாழமிக்க திறனாய்வைத் தாரீர் !

நற்றமிழ்த் தொண்டன்



(அ. சங்கரவள்ளிநாயகம்)

உள்ளுறை

வ.எண்.	தலைப்பு	ப.எண்
1.	இலக்கிய நோக்கும் போக்கும்	1
2.	திருக்குறள் ஓர் உலகப் பேரிலக்கியம்	7
3.	வள்ளுவர் உணர்த்தும் பண்பாடு	19
4.	வள்ளுவர் வாய்மொழி	33
5.	மதுரைக்காஞ்சி	45
6.	சேக்கிழார் மாக்கதை	51
7.	தாயுமானவர் காட்டும் மனிதநேயம்	63
8.	நேயம் மறவாத் தூய தொண்டர்	69
9.	முண்டாசுக் கவிஞன் பாராட்டும் மூவர்	75
10.	பாரதிதாசன் காட்டும் பைந்தமிழ் வாழ்வு	89
11.	சீவாவின் இலக்கியச் சிதறல்கள்	97
12.	மாணிக்கக் குறளில் மணக்கும் தமிழ்	103
13.	நூலின் தோற்றமும் வளர்ச்சியும்	111
14.	எங்கும் புதுமை ! எதிலும் புதுமை !	121
15.	குமரப்பா பார்வையில் மனிதன்	135
16.	பூவொன்று புயலானால்	139

1 இலக்கிய நோக்கும் போக்கும்

எது இலக்கியமாகும் ?:

இலக்கியம் மனிதனின் மொழியுடன் தொடர்புடையதாகும். மனிதனின் சிந்தனைக்கோ உணர்விற்கோ கற்பனைக்கோ இலக்கியம் விருந்தாக அமைகின்றது. ஒரு குறிப்பிட்ட வடிவத்தை இலக்கியம் பெற்றிருக்க வேண்டும். கவிதை, புதினம், சிறுகதை, நாடகம், கட்டுரை, உரைநடைக்கவிதை போல்வன இலக்கியத்துள் அடங்கும். மொழியுடன் இலக்கியத்திற்குத் தொடர்பில்லையெனில் ஓவியம், சிற்பம் போன்ற பிற கலைகளுக்கும் இலக்கியக்கலைக்கும் வேறுபாடிராது. மொழி எழுத்துவடிவம், பேச்சு வடிவம் என இருவகைப்படும். எனவே பேச்சு வடிவத்தில் வழங்கும் நாட்டுப்பாடலும் விடுகதையும் இலக்கியத்துள் அடங்கும்.

' இலக்கியத்தின் இயல்பு ' என்னும் தமிழ்ப் பொருள் தாங்கியுள்ள 'The nature of literature ' என்னும் ஆங்கில நூலின் ஆசிரியர் இலக்கியம் என்பது எழுத்து வடிவத்தில் வெளிப்படும் கலையெனக் குறிப்பிடுகின்றார். இவ்விதிப்படி நோக்கின் எழுத்து வடிவத்தில் இராத நாட்டுப்பாடல் போன்றவைகள் இலக்கியத்தில் அடங்காது. தனியொருவர் ஒரு மொழியை ஒரு குறிப்பிட்ட வகையில் கையாளும் கலையே இலக்கியமாகும் என்பாரும் உளர். இவ்வரையறை மிகுதியும் கலைஞர் அல்லது கவிஞர்க்கே பொருந்தும். ரௌவெல்லட், ஆஸ்டின் போன்றோர் கற்பனையுடன் தொடர்புடையது எதுவோ அது இலக்கியமாகும் எனக் கருதுகின்றனர். ஒரு குறிப்பிட்ட மொழி பேசும் மக்களின் பண்பாட்டுக் கருவூலத்தை இலக்கியம் தாங்குகின்றது என்று கருதுவாரும் உளர். ஆக்கப்படுவதெல்லாம் இலக்கியமா? ஆகாது. அங்ஙனம் ஆகுமாயின் மருத்துவம், அறிவியல், வானயியல், பொருளாதாரம், வரலாறு ஆகியவை பற்றியனவும் இலக்கியமாகிவிடும்.

ஹட்சன் வகுத்துள்ள இலக்கணம் :

(1) வாழ்க்கையில் மனிதர் கண்டவை.
(2) கண்டு அனுபவித்தவை.
(3) உடனடியாகக் கவர்ச்சி ஊட்டுபவை.
(4) கவர்ச்சி ஊட்டுவன யாவையோ அவை பற்றிச் சிந்தித்தவை, உணர்ந்தவை.

இவைபற்றி அறிவிக்கும் உயிர்ப்பு மிக்க பதிவேடே ஹட்சன் வகுத்துள்ள இலக்கணமாகும். இலக்கியம் என்பது மொழி என்னும் கருவி வாயிலாக அமையும் 'வாழ்க்கை வெளிமீடு ' என்பதுதான் இலக்கியம் என்பதற்குச் சரியான வரையறையாக இருக்க முடியும். அறிஞர் ச.வே.சுப்பிரமணியமும் இலக்கியம் பற்றி விளக்கம் தந்துள்ளார் :

இலக்கு + இயம் = இலக்கியம்

இலக்கு எனில் விளக்கம், நோக்கம், கொள்கை, குறிக்கோள் என்னும் பொருள்களைத் தரும்.

இயம் எனில் ஒலிப்பது, கூறுவது, வெளிப்படுத்துவது எனப் பொருள்படும். எனவே குறிக்கோள்களையும் கொள்கைகளையும் இயம்புவது இலக்கியம் ஆகும் என அவர் கருதுகின்றார்.

இலக்கியத்தைப் பிறப்பிக்கும் மூல ஊற்று மனித வாழ்க்கையிலோ, அவனைச் சுற்றியுள்ள இயற்கையிலோ அமைந்து கிடக்கலாம். இலக்கியம் இயற்கை வாழ்க்கை பற்றியதாகும். மனித சமுதாய வாழ்க்கை பற்றியும் இலக்கியம் அமையலாம். இலக்கியமும் வாழ்க்கையும் இணைபிரியாதன ஆகும். வாழ்வின் பல்வேறு நிகழ்வுகள் படைப்புக்குரிய நிலைக்களங்களாகும். வாழ்க்கையின்றேல் மனித வாழ்வின் நல்வாழ்விற்குரிய ஆதார ஊற்றில்லை.

இலக்கியத் தோற்றத்திற்குரிய துடிப்புக்கள் :

இடையறாத இலக்கியத் துடிப்புடன் பார்த்த ஒன்றும் உணர்ந்த ஒன்றும் கற்பனைக்குச் சுவையூட்டிய ஒன்றும் படைத்துக்காட்ட வேண்டும் என்ற துடிப்பும் இலக்கியத்தைத் தோற்றுவிக்க உதவும் துடிப்புக்களாகும். தனிப்பாடலை எழுதும் கவிஞராயினும் காப்பியம் எழுதும் கவிஞராயினும் வேறு வகைக் கவிஞராயினும் நாடகம், சிறுகதை, புதினம் போன்றவற்றை எழுதும் ஆசிரியராயினும் அனைவரும் ஓர் அடிப்படைக் கலையுணர்வினால் தாக்குண்டே இலக்கியம் படைக்கின்றனர். கவிஞர் எஸ்.டி. சுந்தரத்தின் பாடல் ஒன்று படைப்பாளர்க்குரிய இதயத்துடிப்பைப் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளது.

" எண்ணி எண்ணிப் பார்த்தேன்
எழுதுகின்றேன் இப்பாட்டை
இன்னும் பொறுப்பதற்கு
என்மனமும் கல்லல்ல
நல்லமனம் உள்ளவர்கள்
நலிகின்றார், நாணுகின்றார்
நயவஞ்சப் பிண்டங்கள்
நன்றாய்க் கொழுக்கின்றார்
கொன்று கிழிக்கின்றார்
குழந்தையின் குடல்வெட்டித்
தின்று மனத்தினவு
தீராமல் அலைகின்றார்
நுண்ணறிவு உள்ளவர்கள்

நூல்கண்ட கலைமணிகள்
நாணத்தால் பசிதாங்கி
நடுத்தெருவில் அலைகின்றார் " என்ற

அவரது பாடல் அல்லவர்களின் அரசவாழ்வையும் நல்லறிஞர்களின் நலிவு வாழ்வையும் தெள்ளிதிற்காட்டுகின்றது.

நால்வகைத் துடிப்புக்கள் :

1. நம்மை நாமே வெளிப்படுத்திக்கொள்ள வேண்டும்.
2. மற்ற மனிதர் பற்றியும் அவர் செயல் பற்றியும் நாம் காட்டும் அக்கறை.
3. உண்மை உலக ஈடுபாடு, கற்பனை உலக ஈடுபாடு.
4. ஒரு குறிப்பிட்ட வடிவத்தை, வடிவ அழகுகாரணமாக விரும்பும் விருப்பம் எனப்படும் நால்வகையான துடிப்புக்கள் இலக்கியப் படைப்பாளிகளிடம் இடம் பெற்றுள்ளன.

ஐவகை இலக்கியப் படைப்புக்கள் :

(1) சொந்த அனுபவம் பற்றியது.
(2) மனிதனுக்கு அமைந்த பொதுவான வாழ்க்கை பற்றியது.
(3) சமுதாயம் பற்றியது.
(4) இயற்கையுடன் தொடர்புடையது.
(5) இலக்கியம் பற்றியது, கலைபற்றியது என இலக்கியப் படைப்புக்களை ஐவகைப்படுத்தலாம்.

உணர்ச்சி வயப்பட்ட உண்மை இலக்கியம் :

தொல்காப்பியர் காட்டும் மெய்ப்பாடுகள் இலக்கியத்தில் இடம்பெறும் உணர்ச்சிகளாகும். படைப்பவனின் மன உணர்ச்சி மட்டுமல்ல, பயில்வோரின் மன உணர்ச்சியாகிய இவ்விரண்டிற்கும் இடையேயுள்ள கலை உலக வெற்றிடத்தை நிறைவு செய்யும் கருவியே இலக்கியமாகும். இலக்கியத்தில் இடம் பெறும் உணர்ச்சிகள் குறித்து மு.வ.வின் பின்வரும் கருத்து சிந்திக்கத் தக்கதாகும்:

இலக்கியத்தில் பலவகையான உணர்ச்சிகள் இடம் பெறுகின்றன. எனினும் மகிழ்ச்சி, வேடிக்கை, கவலையற்ற மனநிறைவு முதலியவற்றை விட அச்சம், துயரம், கவலை முதலிய உணர்ச்சிகளை உடைய இலக்கியம் விரும்பிப் படிக்கப்படுகின்றது. சேக்ஃச்பியரின் இன்பியல் நாடகங்களைவிடத் துன்பியல் நாடகங்கள் மிகப் போற்றப்படுகின்றன.

நேற்றைய இலக்கியம் :

(1) மனிதனை மனிதன் பாடிய காலம்
(2) மனிதன் அறம் பாடிய காலம்

(3) மனிதன் இறைவணைப் பாடிய காலம்

(4) சிற்றிலக்கியம் எழுந்த காலம்

(5) தனிப்பாடல்கள் தளிர்த்த காலம்

(6) மறுமலர்ச்சிக் காலம்

எனக் காலவகையில் இலக்கியத்தின் தோற்றத்தினையும் அதன் வளர்ச்சியையும் வகைப்படுத்தலாம். உரை நடையை விடச் செய்யுள் வடிவமே மிகுதியாக இலக்கிய உலகில் ஆட்சி செய்தது. கிறித்துவர் வருகைக்குப் பின்னர் அச்சுப்பொறிப்பயன் ஏற்பட்டது. அதன் பின்பே உரை நடை இலக்கியம் செழிக்கத் தொடங்கியது.

விடுதலைக்கால இலக்கியம் :

இக்காலகட்டத்தில் ஆங்கிலக் கல்வியின் புதிய மேதாவித் தனம் இடம் பெற்றிருந்தது. நடுத்தர வகுப்பு என்கிற புதிய மக்கள் தொகுப்பு உருவாகியது. புதியன பரப்புவர்கள் தொகை பெருகியது. காசாக்கக்கற்றுக்கொண்ட இதழ்கள் மலிந்தன. நூல்களின் பதிப்புத் தொழில் நடைபெற்றது. புத்துணர்ச்சி பெற்ற தொழிலாளர் கூட்டம் எழுந்தது. சாதி,மதம், பால் கடந்த பொதுக் கல்வி முறை நடைமுறையானது. காந்தியச் சிந்தனை தலைதூக்கத் தொடங்கியிருந்தது. புதிய திரைப்படங்களின் தாக்கமும் காணப்பட்டது. இவற்றுடன் தமிழ்நாட்டில் திராவிடம், மறுமலர்ச்சி, இந்தி எதிர்ப்புச் சிந்தனைகளும் வளர்ந்திருந்தன. இதற்கான அடிப்படைத் தளங்களை விடுதலைக்கு முன்பே நீதிக்கட்சியும் பெரியாரின் தன்மான இயக்கமும் அமைத்துத் தந்தன. இத்தகைய சமூகப் பின்னணியே தமிழ் இலக்கியங்களை வடிவமைத்தது. காந்தியம், பெரியாரியம், பொதுவுடைமையியம் தமிழ் இலக்கியத்தைத் தழுவத் தொடங்கின. தி.மு.க, தமிழரசுக் கட்சி. தனித்தமிழ் இயக்கம், நாம் தமிழர் கட்சி என்பவற்றின் செல்வாக்கால் தமிழ், தமிழினம், தமிழ்ப்பண்பாடு ஆகிய குரல்கள் இலக்கியத்தில் ஓங்கி ஒலித்தன. கவிதை உலகில் பாரதி, பாரதிதாசன் பரம்பரைகள் உருவாயின.

புனைகதைத் துறையில் மு.வ., நாடகத்துறையில் அண்ணா போன்றோரின் கொள்கைப் பரப்பு இலக்கியமே மிகுதியும் காணப்பட்டது. பொதுவுடைமைக் கருத்துக்கள் உருசியாவுடன் தொடர்பினை ஏற்படுத்தின. அதனால் உழைக்கும் மக்களின் சிக்கல், சீரழிவு, துக்கம், போராட்டம் ஆகியன எழுத்துலகின் பொருள்களாயின. இத்தகைய சிந்தனை வளர்ச்சிக்குப் பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரம் தொடக்கமாவார்.

" எதையும் எழுதுங்கள். ஆனால் இலக்கியமாக எழுதுங்கள் " என்ற குறிக்கோளுடன் சி.சு. செல்லப்பாவின் 'எழுத்து' என்ற இதழ் நடைபோட்டது. புதுக்கவிதையும் பிறந்தது. வெறுமை, மனமுறிவு, நம்பிக்கை, வறட்சி, சாவு,

இணைவிழைச்சு, தனிமனிதம் ஆகியன புதுக்கவிதைகளின் தொடக்ககாலக் கருவாயின.

உரைநடை இலக்கியம் பெருகப் பெண் படிப்பாளிகள் காரணமாயினர். இலட்சுமியைத் தொடக்கமாகக் கொண்டு பெண் எழுத்தாளர்கள் எழுதலாயினர். 'கசடதபற' இலக்கிய இதழ் பிறக்கும் சூழலும் எழுந்தது. சமூக நிறுவனங்கள் அனைத்தும் ஏமாற்றுபவையாக மாறிவரும் சூழலைக்கண்டு வெறுத்ததன் பயனே இவ்விதழின் பிறப்பாகும்.அரசியல், சமயம், மரபு இவை சம்பந்தப்பட்ட ஒழுக்கங்களுக்கு வாரம் தவறாமல் தோப்புக்கரணம் போடுபவர்கள் இவ்விதழ் எழுத்தாளர்களுள் எவரும் இலர். இவர்கள் ஞானக் கூத்தனைத் தொடக்கமாகக் கொண்டு இயங்கினர்.

'வானம்பாடி இயக்கம்' செயற்பட்ட காலத்தில் நம்பிக்கை, மன உறுதி தருகின்ற இலக்கியங்கள் எழுந்தன. கவிஞர் காமராசனைத் தொடக்கமாகக் கொண்டு வானம்பாடி இயக்கம் வன்மையாக வளர்ந்தது. புனைகதை வரலாற்றில் செயகாந்தன், சானகிராமன், இராசநாராயணன், சுந்தரசாமி ஆகியோர் சிறப்புற்றனர். நாடக இலக்கியத்தில் வீதி நாடக இலக்கியம் முதன்மை பெற்றது. இடது சாரி இயக்கத்திற்கு நம்பிக்கையுடன் வந்த பல இளைஞர்கள் இடது சாரி இயக்கத்தின் மேலும் நம்பிக்கையிழந்து போக வேண்டிய சூழல் ஏற்பட்டது. எனவே எதிலும் மிகையான ஈடுபாடு, நம்பிக்கை கொள்வதென்பது தற்கொலைக்குச் சமமானது என்ற கருத்து இலக்கியத்தில் எதிரொலித்தது.

இலங்கைப் போராளிகளின் போர் முழக்கம் இலங்கையில் வலுவாக ஒலித்தது. இங்கும் இலக்கியத்தில் அதன் பாதிப்பு எழுந்தது. ஆனாலும் இலங்கையைப் போலப் பாதிப்பு அவ்வளவு முனைப்பாக இல்லை. இன்று உலகமயமாகும் போக்கு எழுந்துள்ளது. தொடர்புச் சாதனக் கருவிகள் பெருகி வருகின்றன. கண்ணிகள் வருகை தந்துள்ளன. மூலதனங்களின் குவிப்பும் தொலைக்காட்சி வழி நடக்கும் பண்பாட்டுப் படையெடுப்பும் நாளுக்கு நாள் மிகுந்து வருகின்றன. தமிழில் தற்பொழுது இயங்கும் மூன்றுவகை இலக்கியப் போக்குகள் பின்வருவனவாகும். அவை :

(1) தலித்தியம் (2) பெண்ணியம் (3) தமிழ்த்தேசியம் என்பனவாகும்.

நானை இலக்கியம் :

சொந்த மண்ணை இழந்து பிழைப்புக்காக உலகம் முழுவதும் பரவி, அனாதையாய்த் திரிகின்ற தமிழினத்தின் அவலம் எழுத்துலகத்தைத் தொடும் நிலையினை இன்று பெற்றுள்ளது. தமிழ்த்தேசிய அடையாளங்களை அழிக்க முயலும் ஆதிக்க சக்திகளுக்கு எதிரான போராட்டக் களத்தைக் காட்டும் போராளி

இலக்கியம் இனி உருவாகும் என்பது உறுதியாகும். தமிழினம் இன்று படும் வேதனைகளை, முக்கல்களை, முனகல்களை, ஆத்திரங்களை, அழிவுகளை, ஆக்கங்களை எந்தப் படைப்பாளி தம் படைப்பால் பதிவு செய்ய அணியமாய் இருக்கிறாரோ அவரிடம் தான் நாளைத் தமிழ் இலக்கியம் நல்ல வடிவம் பெறும் என நம்பலாம்.

2 திருக்குறள் ஓர் உலகப் பேரிலக்கியம்

அறிவியல் பெருக்கமும் அன்புச் சுருக்கமும் :

காலையில் கண்விழித்ததிலிருந்து இரவு கண்ணயரும் வரை வாழ்க்கையில் இன்று எங்கும் எதிலும் ஒரே பரபரப்பு! ஆரவாரம்! அமைதியின்மை! அச்சம்! காலைக்கதிரவன் கண்ணில் படும் முன்பே நம் கருத்தில் படுவன கொலை, கற்பழிப்பு ஆகும். இவை நாளிதழ் அறிவிக்கும் செய்திகளாகும். தலைப்பைத் தாங்கி மனத் தளர்வுற்று இதழின் உள்ளே ஊடுருவிப்பார்த்தால் குடும்பத்திற்குள்ளேயே குத்து, வெட்டு, கொலை நிகழ்கின்றன. இது ஒரு செய்தி. அன்பு பெருக்கி, அறம் காக்கும் பெண்மைபலியிடப்படுவது மற்றொரு செய்தி. ' தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் ' என்று சொல்லத்தக்க அளவில் அன்பு ஊற்றெடுக்கும் உடன் பிறந்தவர்களுக்குள் பிளவு, பிணக்கு, பிரிவு நிகழும். இது பிறிதொரு செய்தி.

இத்தன்மைத்தான செய்திகள் இடம்பெறாத நாளுண்டா? நாளேடுதான் உண்டா? ' நல்ல குடும்பம் பல்கலைக்கழகம் ' என்பது பாரதிதாசனின் கூற்றாகும். நல்ல பலகலை பயிற்றுவிக்கும் கலைக்கூடம் - அன்பின் ஊற்று - அறத்தின் அரங்கு - அருளின் இருப்பிடம், ஈகையின் இல்லம் என்றெல்லாம் போற்றப்படுவதற்குரிய குடும்பம் என்ற களத்தில்தான் இத்தகைய குழப்பங்கள் கொக்கரித்து நடமாடுகின்றன. கொடுமைகள் தருக்கி நின்று தாண்டவமாடுகின்றன. வானத்து வெண்ணிலா குழந்தையின் வேடிக்கைப் பொருளாக மண்ணில் நின்று காட்டியது மறைந்து, அக்குழந்தையினை நிலாவுலகிற்கே அழைத்துச் சென்று நிலவின் தண் ஒளியையும் அதுதரும் பேரழகினையும் குழந்தைக்குக் காட்டும் நிலைக்கு இன்றைய அறிவியல் முன்னேறியுள்ளது. கவிஞரின் கற்பனையில் ஊர்ந்த விமானம் இன்று விண்ணில் உலா வருகின்றது. கனவுலகில் பன்னூறு மைல்களுக்கு அப்பால் சென்று அங்குள்ள காட்சிகளைக் கண்டு களித்த மனம் இன்று ஒருசில மணித்துளிகளுக்குள் பன்னூறு மைல் சென்று அங்குள்ள நிகழ்ச்சிகளில் நேரில் கலந்து கொள்ள முடிகின்றது. வீட்டின் ஒரு மூலையில் அமர்ந்து உலகின் மறுகோடியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை நேரில் காணமுடிகின்றது. நின்றுவிட்ட மனித இதயத்தின் ஓட்டத்தை மீண்டும் இயக்குகின்ற அறிவியல் வளர்ச்சி உண்மையில் போற்றப்படவேண்டும்.

ஆனால் இவ்வளவில் வளர்ந்து விந்தை பல ஆக்கிவரும் அறிவியல் உலகில்தான் அன்பு மங்கி, அறம் ஒடுங்கி, அறிவு தடுமாறுகின்றது. குடும்பத்திலே சூது, சூழ்ச்சி, சுரண்டல், காழ்ப்பு, கடுமை, போட்டி, பொறாமை, வஞ்சகம் என வளர்ந்து, வழக்கு ஏற்பட்டு, நீதிமன்றப் படிகளை நாள்தோறும் எண்ண வேண்டியுள்ளது. ஆகவே புறவுலகின் புதுமை பல கண்டு மனிதனுக்குப்

புத்தூட்டம் தந்துள்ள அறிவியல் மனிதனின் அகவுலகில் அன்பினை வித்திட்டு, அறம் வளர்க்க இயலவில்லையே! ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வானொலியோ, தொலைக்காட்சிப் பெட்டியோ,விண்ணூர்தியோ, மின்அணுப்பொறி போன்றவைகளோ இல்லாத நிலையில் நிலவிய அன்போ, அறமோ இன்று இல்லையே! இந்நிலைமை மாற வேண்டும் என்ற வேட்கை எழுந்துள்ள உள்ளங்கட்கு எல்லார்க்கும் ஒப்பானதான வள்ளுவர் அருளிய குறள் ஒன்றுதான் உய்திறமும் உயர்வும் அளிக்கும் என்பதில் கருத்து வேற்றுமையுண்டோ?

சமுதாய அரசியல் கருத்துருவாக்கம் :

பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றி, அன்று நிலவிய லூயி மன்னர்களின் நீதிப் பிறழ்ச்சியையும் கொடுங்கோன்மையயும் உணர்ந்து தானே, ரூசோ என்ற அறிஞரின் அறிவில் 'சமுதாய ஒப்பந்தம்' என்ற தத்துவம் மலர்ந்து, மக்களை எழுப்பிப் ஃபிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டது. ஆடம் சுமித்து என்ற அரசியல் அறிஞன் வந்தபின்தான் 'நாடுகளின் செல்வம்' என்ற நூலின் வாயிலாக நாட்டைக் காக்கும் காவலனின் கடமைகள்,பொறுப்புக்கள் எவை என்று வரையறை செய்யப்பட்டன. அடுத்தவனின் கொடுமைப்பிடியிலிருந்து தன் நாட்டைக் காத்தல், சமுதாயத்தில் உள்ளவனை அதே சமுதாயத்தில் உள்ள அடுத்தவன் செய்யும் நீதிக் கேட்டிலிருந்து காத்து நீதிகொண்டு ஆட்சி நடத்துதல், நாட்டு உடைமைகளான பொதுப்பணிகள் மற்றும் பொது அமைப்புக்களைப் பாதுகாத்தல் என்று முக்கடமைகளை அந்நூல் புலப்படுத்தியது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய செருமானிய அறிஞரான காரல்மார்க்சு ஃபிரான்சிலிருந்து இங்கிலாந்து சென்று தமது நண்பனான பிரெடரிக் ஏங்கல்சு என்பாருடன் இணைந்து எழுதிய 'மூலதனம்' என்ற நூல்தான் ''ஜார்'' என்ற முடி மன்னர்களின் கொடுமையாட்சி கலைக்கப்படுவதற்கும் உருசியப் புரட்சி 1917 - இல் தோன்றி உலகத்திற்கு முன்னோடியாகப் பொதுவுடைமைப் பூங்கா மலர்வதற்கும் காரணமாய் இருந்தது. ஆகவே உலகச் சமுதாய நீண்ட, நெடிய வரலாற்றினை உற்று நோக்கினால் சமுதாய அரசியலின் முன்னோடிக் கருத்துக்களில் மிகப் பேரளவு 17, 18 - ஆம் நூற்றாண்டுகளில் தான் தோன்றியுள்ளது.

ஆனால் இவற்றிற்கெல்லாம் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பாகவே சமுதாய அமைப்பினையும் அரசியல் நெறியினையும் தெளிவாக ஆய்ந்து, உலகம் முழுவதும் ஒம்பத்தக்கதான ஒப்புயர்வற்ற ஒரு நூல் எழுதிய பெருமை வள்ளுவர் ஒருவரைத்தான் சாரும். எனவேதான் இந்நூற்றாண்டின் இணையற்ற தத்துவ அறிஞரும் சமூக அறிவியல் அறிஞருமான ஆல்பர்ட் சுவைட்சர் குறிப்பிட்டதை அவர் வரிகளிலேயே காண்போம் :

'With sure strokes the kural draws the ideals of simple ethical humanity. On the most varied questions concerning the conduct of man to himself and to the world, its utterances are characterised by nobility and good sense. There hardly exists in the literature of the world a collection of maxims in which we find so much lofty wisdom'. எல்லாப் பொருளும் திருக்குறளில் உள்ளது. இதில் இல்லாதது எதுவுமில்லை. எந்நூலிலும் இதில் இல்லாதது இல்லை. ஆகவே இந்நூல் ஒன்றே மண்ணுலக மாந்தர்க்குத் துணையாக நிற்க வல்லது.

''எல்லாப் பொருளும் இதன்பால்உள; இதன்பால்
இல்லாத எப்பொருள் இல்லையால் ; - சொல்லால்
பரந்தபா வால் என்பயன் வள்ளுவனார்
சுரந்தபா வையத் துணை''

என்ற புலவர் மதுரைத் தமிழ் நாகனார் கூற்றிற்கு முரண் உண்டோ?

வள்ளுவம் வாழ்க்கை நூல் :

வாழ்க்கையறிவு புகட்டாத நூல்கள் பயனற்றவை. வாழும் கலையைத் தவிர வேறு எதைக் கற்பிக்க நூல்கள் இருக்கின்றன? இவ்வையக வாழ்வையே அரும்பெரும் கலையாகக் கொண்டு அதைப் பல்வேறு முனைகளிலிருந்தும் அறிந்து, மக்கள் எப்படி வாழ வேண்டும், எந்த வகையிலே வாழ்ந்தால் வாழ்வு இனியதாக, பண்புடையதாக, பயனுடையதாக இருக்கும் என்பன போன்றவற்றைப் பற்றியெல்லாம் வலியுறுத்திக் கூறும் நூல் குறளைத் தவிர இக்குவலயத்தில் வேறேது? குறளுடன் ஒப்பு நோக்கிப் பேசத்தக்கப் பிறிதொரு நூல் இவ்வையகத்தில் எதுவுமில்லை, ஏசுவின் விவிலியம், புத்தரின் திரிபிடகம், வடமொழி வேதம், கண்ணனின் கீதை, ஓமரின் ஒப்பற்ற நூல்கள், மில்டனின் பெரு நூல்கள், தாந்தேயின் தெய்வீக நாடகம், சாக்ரடீசின் சொற்பொழிவுகள், பிளேட்டோவின் குடியரசு, அரிஸ்டாட்டிலின் அறிவுரைகள், கன்பூசியசின் கனிமொழிகள், கதேயின் கருத்துக்கள், காரல்மார்க்கசின் மணிமொழிகள் இவற்றுள் எதுவும் குறளுக்கு இணையாகா.

சென்ற நூற்றாண்டில் இணையற்ற இலக்கியம் எனப் புகழ்பெற்ற நூல் இந்நூற்றாண்டில் இருக்குமிடம் தெரியாது போய்விடுகின்றது. சென்ற தலைமுறையின் பேரறிஞன் என்று பாராட்டப் பெற்றவன் இன்று கேட்பாரற்றுக் கிடக்கும் காலமிது. சென்ற ஆண்டின் புத்தம் புதிய கருத்து எனச் சொல்லப்பட்டது இன்று பழமையிலும் பழமையாகக் கருதப்படுகின்றது. ஆம்! அவ்வளவு விரைவாகக் காலம் மாறுகின்றது; மாறிக்கொண்டே இருக்கின்றது.

கால மாற்றத்திற்கு ஏற்பக் கருத்துக்களும் மாறிக்கொண்டே இருக்கின்றன. சென்ற ஓராயிரம் ஆண்டுகளில் உலகம் எவ்வளவு மாறிவிட்டது? பழமை போனயிடம் தெரியாது புல்முளைத்துப் போய்விட்டது. எங்கும் எதிலும் புதுமை பூத்துக் குலுங்குகின்றது. இவ்வளவு மாற்றத்திற்கும் முன்னேற்றத்திற்குப் பின்பும் வள்ளுவரின் எழில்மிகு எண்ணங்கள் இன்றும் மின்னிப் பொலிகின்றன எனின் அதன் பெருமையை என்னென்பது? உலகத்தில் இதுவரை தோன்றியுள்ள மற்ற எல்லா நூல்களின் பெருமையும் நாளுக்கு நாள் மங்கி மறைந்து வரும்போது குறளின் பெருமை மட்டும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகின்றது.

21ஆம் நூற்றாண்டின் நுழைவாயிலில் உள்ள இன்றைய அணு உலகச் சமுதாயத்தின் பல்வேறு சிக்கல்கள், பூசல்கள், பிணக்குகள், பிளவுகள், பிரிவுகள் ஆகியவற்றைத் தீர்க்கும் மாமருந்தாக வள்ளுவர் கண்ட குறளமுதம் உள்ளது. அறிவு வளர்ச்சியாலும் காலமாற்றத்தாலும் காணப்படும் கணக்கிலடங்கா இன்றுள்ள சமுதாயச் சிக்கல்களை வள்ளுவரின் உள்ளம் தொலைநோக்குப் பார்வையால் கண்டிருக்குமோ என்னவோ என்று எண்ண வேண்டியுள்ளது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் வாழ்ந்த சமுதாயத்தில் போக்குவரத்துச் சாதனங்களும் பிற அறிவியல் முன்னேற்றங்களும் இல்லாதிருந்த நேரத்தில், உலகச் சமுதாயம் குறுகிய வட்டத்திலிருந்த நிலையில் வள்ளுவர் அறிவில் பட்ட ஒருலகச்சிந்தனை இன்று அறிஞர் பெருமக்களால் போற்றிப் பாராட்டப் பெறுகின்றது. அணுவின் அழிவாற்றலால் அவதியுறும் இன்றைய மனித இனச் சமுதாயத்தைத் தூக்கி, உயர்த்தி நிறுத்த வள்ளுவர் வழியே சிறந்தது, ஒப்புயர்வற்றது என்ற அடிச்சுவட்டில் ஓர் உலக அரசு காண விழைகின்றவர் பெருஞ்சிந்தனையாளரும் வரலாற்றுப் பேராசிரியருமான டாயின்பி ஆவார். வா.செ. குழந்தைசாமி குறள் எவ்வாறு பொதுமறையாக அமைந்துள்ளது எனப் பின்வருமாறு கூறுகிறார் :

' Is it relevant Today ? ' - இது இற்றைச் சூழலில் ஏற்புடைத்ததா என்பது இன்றைய தலைமுறை எல்லாத் துறைகளிலும் கேட்கும் கேள்வியாகும். இப்படியொரு கேள்வியைப் பொதுவாக மதங்களில் மறைநூல்களைப் பற்றி அந்தந்த மதத்தினர் கேட்க இயலாது. கேட்டால் அம்மதத்தில் நம்பிக்கை இழந்தவராக எண்ணப்படுவர். மதங்கள் ஏற்கப்படவேண்டியவையே தவிர எண்ணப்பட வேண்டியவை அல்ல. வள்ளுவம் மதம் கடந்த மறையாகும்.' சமயக்கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறும் பொருள் இது' என்கிறது வள்ளுவம். ஒரு வாழ்வியல் நூலாகக்கருதப்படுவதால் அது தூய ஆய்வுகட்கு ஆட்படுத்தப்படக்கூடிய ஒன்றே தவிர அதற்கு அப்பாற்பட்ட ஒன்றன்று. வாதத்திற்காகக் கூற வேண்டுமென்றால் அதில் பழையன காணும் புலவர்கள் அவை நம் வாழ்விற்குத் துணையாக நிற்கும் வரை அவற்றை ஏற்கலாம். ஒரு காலகட்டத்தில் அவை நமது வளர்ச்சிக்குச் சுமையாக மாறிவிட்டால் அவற்றைத்

தவிர்க்கலாம். அப்படிப்பட்ட பாராட்டத்தக்க ஒரு வாய்ப்பை மதம் கடந்து நிற்பதால் வள்ளுவம் நமக்கு வழங்குகின்றது. குறள் ஓர் இயற்கை நூலாகும். தமிழ் மண்ணில், தமிழ் மரபில், தமிழின வாழ்வில் தோன்றிய ஒரு தமிழ் நூலாகும். தமிழன் மனிதனாய், மாமனிதனாய், இறைவனாய், அதனையும் கடந்து பெருநிலையை எய்தும் உயிரினமாய்அவனை உருவாக்கும் ஒரு மறை நூல் அதுவாகும். அந்நூல் நுவலும் உண்மைகள் உலகிற்கெல்லாம் உரிய இயல்பினதாய் உள்ளன. வள்ளுவரின் சிந்தனை உலகம் முழுவதும் பரவிய பொதுச் சிந்தனையே என்பது சான்றோர் கருத்தாகும். ஒரு காலத்தில் எழுதப்பட்டதாயினும் எல்லாக்காலத்திற்கும் பொருந்துவதாக இருப்பதுவே உலகப் பொதுச்சிந்தனையின் அடையாளமாகும். அனைத்து மக்களுக்கும் பொருந்துவதே இப்பொதுச் சிந்தனையின் விரிவாகும். அச்சிந்தனையைப் பயில்தொறும் நம் உள்ளத்தில் இன்பமும் அற உணவர்வும் செயல் துடிப்பும் மனித நேயமும் இயற்கையின்பால் நேசமும் இறைவன்பால் பேரன்பும் பெருகும்.

குறளிற்குக் குவலயப் பாராட்டு :

உலகின் தலையாய மாந்தரான ஆதிசங்கரர், புத்தர், லாவோத்சே ஆகியவர்களின் வாழ்க்கையைப்பற்றி நோபல் அறிஞர் ஆர்தர் ஜசன்பர்க் குறிப்பிடும் போது, ' இம்மாமனிதர்களின் வாழ்க்கை வரலாறு பற்றி நமக்கு ஒன்றுமே தெரியாது. இம்மனிதர்கள் தம் சிந்தனையின் ஒளியில் தன்வெளி உருவத்தை மறைத்துக் கொண்டனர்' எனக் குறிக்கின்றார். வள்ளுவர் வரலாறும் அவ்வாறானதே. அவரைப்பற்றி நாம் அறிந்ததெல்லாம் அவர் பெருவியப்பிற்குரிய ஞானி, அறநூலாசிரியர், இலக்குடைய இலக்கியம் படைத்த மேதை, உலகப் பொதுநலனில் கருத்துக் கொண்ட கவிஞர் என்பதேயாகும்.

குறளைப் பாரத நாட்டு மொழிகள் பலவற்றிலும் மேலைநாட்டு மொழிகளிலும் ஆக்கியுள்ளனர். 25 ஆசிரியர்கள் 28 ஆங்கில மொழி பெயர்ப்புக்களைப் படைத்துள்ளனர். இதுவே எந்த ஒரு மொழியிலும் குறளின் மிகுதியான எண்ணிக்கையிலான மொழிபெயர்ப்புக்களாகும். இவ்விருபத்தைந்து அறிஞர்களில் 8 பேர் வெளிநாட்டவராவர். மற்றவர் பாரத நாட்டவராவர். யுனெசுகோ உலகப் பேரிலக்கியங்களில் ஒன்றாகக் குறளை ஏற்றுக் கொண்டுள்ளது.

' இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் ' என்னும் குறள்

இயேசுவின் அறிவுரையை விட உயர்ந்ததாகவும் உளவியல் நுட்பம் வாய்ந்ததாகவும் இருப்பதாக டால்ஸ்டாய் குறிப்பிட்டுள்ளார். 1794இல் இங்கிலாந்தில் 'அறிவுக்கடல்' என்னும் பெயரில் கிண்டர்சிலி என்பவர் குறளை மொழியாக்கம் செய்துள்ளார். இலங்கையில் ' புவனேகபாகு' என்னும் அரசனின் அவையில் சமயவாதிகள் தத்தம் சமயமே உயர்ந்தது என்று ஒரு தடவை சொற் போரிட்டனராம்.

அப்பொழுது 'பிராஜோம் டிவில்லாகோந்தே' என்னும் போர்த்துக்கீசியச் சமயவாதி, 'நீங்கள் உங்களுடன் மறைத்து வைத்திருக்கும் திருநூலை - வள்ளுவரின் நூலைப் படித்துப் பாருங்கள்' என்று கூறினாராம். அப்போதே போர்த்துக்கீசியரும் குறளை அறிந்து வைத்திருந்தனர் எனத் தெரிகிறது. ஏரியல் என்னும் பிரெஞ்சு நாட்டறிஞர், 'திருவள்ளுவர் மனித இனம் முழுமைக்கும் பொருந்தக் கூடிய சிந்தனையையும் பெரும் சிறப்பு வாய்ந்த அறங்களையும் அறிவுறுத்துவது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது' என்கிறார். ஆல்பர்ட் சுவைட்சர் கூறுகிறார் :

'உலக இலக்கியத்தில் இத்தகைய மாண்புமிக்க மெய்யறிவு வேறு எந்நூலிலும் இத் துணைச் சிறப்பாகப் பொலிவுறவில்லை'. உருசிய நாட்டறிஞர் ஒருவர் தாம் மொழியாக்கம் செய்த நூலிற்கு எழுதிய முன்னுரையில் பின்வருமாறு கூறுகின்றார் : 'திருக்குறள் உலக இலக்கியங்களுள் சிறந்தது என்று கருதப்படுகின்றது. இக்கருத்து முற்றிலும் பொருத்தமானதாகும். ஏனெனில் குறளின் கலையழகு ஈடு இணையற்றது. அதைவிட முக்கியமானது நூலில் ஒளிரும் மனித இனத்தின் நலத்தை நாடும் சிறப்புக் கருத்துக்களாகும். அவை அனைத்து நாட்டிற்கும், அனைத்து மக்களுக்கும் பயன்படத்தக்க விலை மதிப்பிடற்கரிய கருவூலமாக உள்ளன'.

' எட்வர்ட் ஜெவிட் இராபின்சன் ' என்பார் அறிவிற்கும் ஆய்விற்கும் முற்றிலும் பொருந்தாத ஒரு கருத்தைக் குறள் பற்றி வெளியிட்டார். கிறித்துவ மதத்தின் எல்லைகட்கு வெளியே நல்லது எதுவுமே இருக்க முடியாது என்ற மனப்பாங்கை அவர் வெளிப்படுத்தினார். மயிலாப்பூரில் கிறித்துவச் சமயப் பணிபுரிந்த புனித தாமசிடம் நெருங்கிப் பழகியும் ஞான பாடம் பயின்றும் ஏசுவின் கொள்கைகளை நன்கு உணர்ந்தும் இருந்ததால்தான் திருவள்ளுவர் இத்தகைய சிறப்புமிகு அறநூலை இயற்ற முடிந்தது. தாமசின் தொடர்பு இல்லாமலிருந்தால் இத்தகைய அருள் மறையைத் திருவள்ளுவர் இயற்றி இருக்க முடியாது என்பது அவரது கருத்தாகும். இக்கருத்தினை ஆங்கிலேய அறிஞர்களான ' சார்லசு கோவரும் ' ' ரெவிட்ருவும்' மறுத்துள்ளனர் :

'திராவிடரின் சிந்தனையில் இத்தகைய சீரிய கருத்துக்கள் தோன்ற இயலாது எனக் கூறுவது அறிவுடைமை ஆகாது. தமிழ்ப்புலவர் ஒருவரைக் கிறித்துவராக்கிக் காட்டும் நேர்மையற்ற செயலை நாம் எதிர்க்கிறோம்'. ஆங்கிலேய அறிஞர்களின் இவ்வாழமான மறுப்புரை குறள் வடமொழி நூல்களைத் தழுவி எழுந்த வழி நூலே என வல்லடி வழக்கில் ஈடுபட்டிருக்கும் போலித் தமிழர்களின் பொருத்தமற்ற வாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்குமானால் தெரிந்தே கருத்துப்பிழை செய்யும் அத்தமிழர்களைத் தமிழன்னை மன்னிப்பாள்.

'குறளில் மேல்நாட்டார் நோக்கு' என்னும் கட்டுரையில் அ. ஞானப்பிரகாசம் கூறுவதைச் சிந்திப்போம் :

போப் நாம் கட்டி வைத்த ஏலேல சிங்கர் கதையப் பயன்படுத்திக் கிறித்தவ சமயச் செல்வாக்கைக் குறளுடன் இணைக்கின்றார். அவ்வப்போது சென்னைக்கு வந்த கிருத்தவ சமயவாதிகள் கப்பலை விட்டு இறங்கியதும் ஏலேல சிங்கர் மூலம் வள்ளுவரைக் கண்டதால் வள்ளுவரிடத்தில் கிருத்தவச் சமயத்தின் செல்வாக்கு வந்தது என்கிறார். திருக்குறளில் பணிவுடமை , ஈகை, பிறர்செய்த தீமைகளை மறத்தல் ஆகிய பண்புகள் இடம்பெற்றதற்குக் கிருத்துவச் செல்வாக்குத்தான் காரணம் என்கிறார். கிருத்துவுக்கு முந்திய ஐரோப்பாவில் இக்கொள்கைகள் இல்லை. கிருத்து ஐரோப்பாவில் இவற்றைப் புகுத்தியது போலவே குறளிலும் புகுத்தினார் என்கிறார். ஐரோப்பாவிற்கு வேண்டுமானால் பணிவுடமை, ஈகை, பிறர் செய்த தீமைகளை மறத்தல் ஆகியவை புதியன்வாக இருக்கலாம். தமிழகத்தைப் பொறுத்தவரை இம்மூன்றும் புதியவையே அல்ல. ஏசு நான்கு ஆண்டுகள் இந்தியாவில் வாழ்ந்ததாகக் கூறப்படும் கருத்து முற்றிலும் உண்மையானால் இம்மூன்று கருத்துக்களையும் ஏசு இங்கிருந்து கொண்டு சென்றிருக்கலாம் அல்லவா? ஞானப்பிரகாசத்தின் குறள் ஞானம் உணர்வுக் குறைவான தமிழரிடையே ஒளி வீசட்டும்.

தலைசிறந்த இலக்கியவாதியான பெர்னாட்சா,

" கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும் ". என்னும்

குறளை மிகுதியும் மேற்கோளாகக் காட்டுவார்.

" உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு "

என்னும் குறள்தான் அண்ணல் காந்தியின் நெஞ்சைப் பிணித்த குறளாகும்.

வள்ளுவப் பொதுமை :

மனிதனை உலகப் பொதுநிலையில் நிறுத்தி அவனது வாழ்க்கை மேம்பாடு அடையத் திருக்குறள் இயற்றப் பட்டுள்ளது. தனிப்பட்ட எப்பிரிவைச் சார்ந்தும் வள்ளுவர் அறம், பொருள், காமம் பாடவில்லை. மனிதனை உலகச் சமுதாய உறுப்பினன் என்ற தட்டில் வைத்துச் சமுதாயத்தின் மற்ற உறுப்புக்களான அரசு, அமைச்சு, சுற்றம், நண்பர் ஆகியோர்களிடம் அவனுக்குள்ள தொடர்பின் தன்மையை மற்றத் தட்டில் வைத்துப் பேசுவார். தனிப்பட்ட மன்னனைப்பற்றியோ, அமைச்சனைப் பற்றியோ அவர் பேசவில்லை. அரசன் எவ்வாறு ஆட்சி செய்ய வேண்டும், அவ்வாட்சிக்குரிய அமைச்சனின் பங்கும் பணியும் எவை என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சொன்ன கருத்துக்கள் வள்ளுவர் காலத்தில் நிலவிய முடியாட்சிக்கும் இன்று நிலவும் குடியாட்சிக்கும் பொருந்துவனவாக உள்ளன. குறளின் அரசியல் கருத்துக்கள் அன்றைக்கு மட்டுமன்று, இன்றைக்கும் என் என்றைக்கும் பொருந்துவது கண்கூடு.

இக்காலத்து அரசியலுக்குப் பொருத்தமாக இருக்கும் அளவிற்கு அவ்வளவு பழங்காலத்திலேயே ஒருவருக்கு அரசியலில் இவ்வளவு தெளிவான அறிவு இருந்திருக்கின்றது என்ற வியப்பு நமக்கு எழத்தான் செய்கிறது. ஆட்சிமுறை மாறினாலும் ஆட்சியின் தன்மை மக்களின் நன்மைகளைக் காப்பதுதானே! சுற்றத்தாரைப் பேணுதல் என்னும் நெறி எந்நாட்டிற்கும் எக்காலத்திற்கும் பொருந்துவது தானே ! சுற்றத்தாரைப் பேணுதல் நாட்டுக்கு நாடு, காலத்திற்குக் காலம் மாறுமோ? பகைத்திறம் தெளிந்து தெரிதல் வேண்டும். சொல்லோர் உழவர் பகை கொள்ளற்க. அஞ்சுக கேள் போல் பகைவர் தொடர்பு. உட்பகை குறித்து எப்பொழுதும் அச்சத்துடன் விழிப்பாக இருத்தல் வேண்டுமென்று வள்ளுவர் மொழிந்த கருத்துக்கள் அவர் காலத்தில் வாழ்ந்த முடியுடை வேந்தர்க்கு மட்டுமல்ல. இன்று மக்களாட்சி முறையில் மிக நம்பிக்கை கொண்டு முழு வெற்றிப் பாதையில் நடைபோடும் இந்திய நாட்டிற்கும் ஏன் உலக நாடுகள் அனைத்திற்கும் பொருந்தும் அன்றோ ! இக்கருத்தினைக் காவாததால் தானே இந்தியஅன்னையாகிய இந்திராப் பெருமகளைப் பறிகொடுத்தோம். வள்ளுவரின் இக்கோட்பாடு காக்கப்படாததால் தானே காந்தியடிகள் காலமிருந்து இக்காலம் வரையிலும் கேள் போல் உள்ள பகைவர் பெருகி வருகின்றனர்.

போர்நிறுத்தம் என்று பேசி உடன்பாடு கண்டு இரு தரப்பினரும் கையெழுத்து இட்ட பின்பும் மக்களைப் புற்பூண்டினைப் போல் கொன்று குவிக்கும் கொடுமைப் போக்குக் கண்டு வள்ளுவம் கொதிக்கின்றது. நல்லவர் உள்ளம் நடுங்கின்றது. பன்னூறு ஆண்டுகட்கு முன்பே தாம் அன்புடைமை, அருளுடைமை, இன்னா செய்யாமை, ஒப்புரவு அறிதல் பற்றிக் கூறிய கருத்துக்கள் இதுவரை மக்களின் மனத்தில் பதியாதது கண்டும் பதிந்தும் செயல்படாததது கண்டும் வள்ளுவர் நெஞ்சம் நெக்குருகுகின்றது. 'தொழுத கையுள்ளும் படையொடுங்கும்' என்ற வள்ளுவனின் வாய்மொழி எவ்வளவு பேருண்மை ! உலகம் உய்ய உருவெடுத்த உயர் சால்பாளர் காந்தியடிகளைத் தொழுது காலடியில் வீழ்ந்தே கொலைக் கருவி கொண்டு கொன்றான் கொடியவன் அன்று. திருக்குறளின் ஆழமான தாக்கத்தைப் பற்றி ம.பொ. சிவஞானம். 'திருக்குறள் பொழுது போக்கு இலக்கியம் அல்ல. மனித சமுதாயத்தின் பொதுச்சட்டம். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் என்கிறோமே, அதுபோல மனித சமுதாயத்தின் அரசியல் அமைப்புச்சட்டம் திருக்குறள். மக்கள் சமுதாயம் எப்படியெல்லாம் வாழ வேண்டுமென்று வள்ளுவர் நினைத்தாரோ, அப்படியெல்லாம் நாம் வாழ்வதற்கே அவர் விதிமுறைகளை வகுத்துத் தந்தவர் ' எனக் குறட்பொதுமையை விளக்கியுள்ளார். 'அனைத்துலக மனிதனைப் பாடிய பாவலர் ' எனப் புகழாரம் சூட்டுபவர் ஜி.யூ.போப் ஆவார்.

நாகரிகம் என்பது என்ன? உடையிலும் நடையிலும் பாவனைகளிலும் வருபவன அல்ல நாகரிகம். நாகரிகம் ஓர் உயரிய மனக் கோட்பாடு ஆகும். அது புறத்தால் வருவதும் அல்ல ; பிறர் தமக்குத் துன்பம் செய்தது கண்டு அவர்கட்கு இன்பம் தருதலே நாகரிகம் ஆகும். பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர் என்பது வள்ளுவப் பேராசானின் வாழ்வு இலக்கணம் ஆகும்.

தமக்கு இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிட வேண்டுமாம்! எவ்வளவு உயரிய நெறி! இவ்வன்பு வழிதானே காந்தியடிகள் கொண்ட 'இன்னா செய்யாமை' என்னும் நெறி ஆகும். வெளியிலிருந்து வந்து வெறியாட்டம் ஆடி, வெங்கொடுமை செய்து, தனி மனிதனை மட்டுமல்ல, பல்லாயிரக்கணக்கானவர்களைத் தலைதெறிக்கத் தடி கொண்டு அடித்து, நொறுக்கிக் குருதி கொட்டுவதையும் கண்டு கண் கலங்காத கரவு நெஞ்சம் கொண்டு கதிரவனும் மறையாத பெரிய நிலப்பரப்பைத் தன் கீழ்க் கொண்டு அரசோச்சிய ஆங்கில ஆட்சியைக் காந்தியம் தன் காலடியில் பணிய வைத்ததை நாம் காணவில்லையா!

'எவ்வினத்தார்க்கும் எந்நாட்டினர்க்கும் எச்சமயத்தாருக்கும் எக்காலத்திலும் மாறாப்பயன் தரும் மாண்புடைய நூலாகும்' எனப்பாராட்டி மகிழ்கின்றவர் ச. ஆறுமுகனார் என்னும் அறிஞராவார். நாடுகள், இனங்கள், வகுப்புக்கள் யாவற்றையும் வள்ளுவர் கடந்து நிற்கின்றார். அவர் கற்பிப்பது மக்கட்குப்பொது ஒழுக்கமும் அறிவுமே ஆகும். ' குறள் தோன்றிய நாட்டில் அந்நூல் பெரிதும் படித்து, ஆய்ந்து, உயர்வாகப் போற்றப்படுவது மட்டுமல்லாமல் மேல் நாடுகளில் அது தெரியத் தொடங்கியது முதல் அவ்விடங்களிலும் அதனைப் போற்றுபவர்கள் பலரைப் பெற்றிருக்கிறது என்பதில் வியப்பேதும் இல்லை' என வள்ளுவருக்குப் புகழ் மகுடம் அணிவிக்கின்றவர் பேராசிரியர் எம்.வின்டர்னிட்ச் ஆவார். ' குறள்பாக்களில் காணப்படும் உறுதிக்கும் செறிவிற்கும் வேறெந்த மொழியிலும் ஒப்பில்லை என்பது திண்ணம் ' எனக் குறளைப் புகழ்க் குன்றில் ஏற்றி வைத்து ஏற்றம் சேர்க்கின்றவர் ரெவரண்ட் பெர்சிவல் எனும் அறிஞராவார்.

வள்ளுவம் தேசிய மறை :

1950ஆம் ஆண்டில் வரைவு பெற்ற சமயச் சார்பற்ற இந்திய அரசியல் அமைப்பிற்குத் தேசிய மறையாகும் பொருத்தமான நிலையில் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே குறள் தோன்றிக் கிடக்கின்றது. நாடு, அரசு, அரசின் நோக்கம், அரசின் உறுப்பு, இறைமை, அமைச்சு, நீதி, படை, ஆட்சி, நிதி, விளைவு, வருவாய், செலவு, மக்கள்நலம், கல்வி, தொழில் என்ற நூற்றிற்கு மேற்பட்ட கூறுகளை அமைப்பியல் முறையில் தெரிவித்திருப்பது திருக்குறளாகும். அன்று முடியரசு முறை இருந்தபோதிலும் அரசிலும் அமைப்பிலும் பிறவற்றிலும் பரம்பரையைத் திருவள்ளுவர் இடம் பெறச் செய்யவில்லை என்பதனை நாம் நன்கு எண்ணிப் பார்க்க வேண்டும். எல்லார்க்கும் தகுதி வழிச் சுட்டியுள்ளாரே அன்றிக் குருதி வழிச் சொல்லவில்லை. பொருள் வழியோ, மத வழியோ, இடவழியோ அவர் கூறவில்லை. தேசிய மறைத் திருக்குறள் என்பதற்குத் தக்காங்கு வேண்டுவனவற்றுள் சிலவற்றை அறிஞர் வ.சு.ப. மாணிக்கம் சுட்டிக் காட்டுகின்றார் :

'' எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு ''

என்பதால் எல்லாருக்கும் சிந்திக்கும் உரிமையும்,

'' எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு ''

என்பதனால் இருபாலார்க்கும் கல்வி உரிமையும்,

'' விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்''

என்பதனால் குடிமக்கட்குப் பேச்சுரிமையும், ' அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை ' என்பதனால் பாதிக்கப்பட்டோருக்கு அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும் உரிமைக் குறிப்பும்,

'' முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்''

'' ஒர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை''

என்பதனால் யாவர்க்கும் ஏற்ற நீதி உரிமையும் குறள் வழங்கும் உரிமை வள்ளுவங்களாகும். அதிகாரம் தோறும் அணுகிப் பார்ப்பின் குடிமக்களின் உரிமைப்பாடுகளும் அவர்கள் நாட்டிற்கு ஆற்றவேண்டிய கடமைப்பாடுகளும் புலப்படும். கள்ளுண்ணாமை, சூதாடாமை, வரைவின் மகளிர் முதலான அதிகாரங்களால் அரசிற்குரிய சமுதாயச் சீர்திருத்தத் திட்டங்களும் மருந்து என்ற அதிகாரத்தால் மக்கள் உடல் நலங்களால் ஆகும் ஒழுங்கு முறைகளும் குறள் உலக நாடுகளுக்கு வெளியிடும் செம்மை வள்ளுவங்களாகும். இன்று உலகையே அச்சுறுத்தும் அச்சம் தரும் போக்குகளையும் சாதி, சமய, இனக் கலவரங்களால் எதிர்பாராமல் எழும் ஆர்ப்பாட்டங்களையும்,

'' உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு ''

'' பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு ''

எனும் குறள்கள் கண்டிக்கின்றன. இவையில்லாமல் அனைத்து மக்களும் உரிமையுணர்வுடன் நடமாடுவதே நாடு என்று வலியுறுத்துவது குறளாகும். இந்தியத் தேசிய மறைக்குத் திருக்குறளைக் காட்டிலும் தகுதியான நூல் வேறுண்டோ? எனக்கேட்டுத் தமிழ்க் குருதிக்குச் சூடேற்றுகிறவர் வ.சு.ப. மாணிக்கம் ஆவார்.

வாழையடி வள்ளுவம் :

' கற்றாரைக் கற்றாரே காமுறுவர் ' என்றபடி வள்ளுவரைத் தமிழகத்தில் தலைசிறந்த புலவர் பெருமக்கள் போற்றியுள்ளனர். சிலப்பதிகாரத்தில் நாட்டுவளமும் வாணிப வளமும் நகரச் சிறப்பும் கண்ணகி கோவலன் இன்ப வாழ்க்கையும் அதன் ஏற்றத் தாழ்வகளும் கண்ணகி சிந்திய கண்ணீரும் அவள் காட்டிய வீரக்கற்பும் இளங்கோவடிகள் வள்ளுவர்க்குச் செய்துள்ள கவிதையஞ்சலியாகவே தெரிகின்றன. குலமகளிர் பெருமை, வான்தரு கற்பு, மன்னன் கடமை, மன்னனும் மழையும், பசியென்னும் தீப்பிணி, ஈத்துவக்கும் இன்பம் ஆகிய ஒவ்வொன்றிலும் சாத்தனார் பெருமையுடன் வள்ளுவரைப் போற்றுகின்றார். சிந்தாமணியிலும் வள்ளுவரின் அருட்குரல் ஊடுருவி நிற்கிறது என்பார் சொல்லின் செல்வர் இரா.பி.சேது. தமிழுக்குக் கண்ணாய் விளங்கும் கம்பனும் வள்ளுவனும் நட்புப் பூண்டு காலத்தால் பிந்தியவர் கருத்தாலும் முந்தியவர்க்குக் கவிதை வணக்கம் சொல்வது பொருத்தமே.

தமிழ்நாட்டில் தோன்றி உலகத் தொண்டாற்றியவர் என்று வள்ளுவரைப் போற்றிய பாரதி 'தெய்வ வள்ளுவன்' என்றே துதி பாடுகின்றான். பாரதிகண்ட பாஞ்சாலி அல்லற்பட்டு அவள் ஆற்றாது அழுத கண்ணீர் துரியோதனனின் செல்வத்தைத் தேய்த்தது. பாரதி கண்ட வல்லரசும் நல்லரசும் வள்ளுவத்தில் காட்டப்பட்டவையே ஆகும்.

ஞாலம் வென்ற ஞானக்குறள் :

'மற்றைய நூல்களிலும் சிறந்தது என்பதனால் குறளுக்கு உலகப்பொதுமை வராது. மற்றைய அறநூல்களில் காணப்படும் பண்புகளே திருந்திய வடிவத்தில் காணப்படுகின்றன என்பதனாலேயே அதற்குப் பெருமதிப்பு ஏற்படும். அப்பொழுதுதான் குறளின் பொதுப்பண்பும் தனிச்சிறப்பும் எவராலும் ஏற்றுக் கொள்ளப்படும்' என்பது அறிஞர் கு. கைலாசபதியின் கூற்றாகும்.

'' மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்தது விடின் ''

என்று பாடிய வள்ளுவர்க்கே நாம் தாடியையும் மீசையையும் வைத்துக் கையில் ஏட்டையும் எழுத்தாணியையும் தந்து உட்கார வைத்து விட்டோம். வள்ளுவர் - வாசுகி அம்மையார் இல்லற வாழ்க்கையைக் குறித்து வானளாவப் போற்றுகின்றோம். ஆனால்,

''உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று''

என்று வள்ளுவர் பாடிமிருப்பதை ஒரு பொழுதும் சிந்திப்பதில்லை. ' எல்லாப்

பொருளும் இதன்பால் உள : இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்' என்னும் மதுரைத் தமிழ் நாகனாரின் வாக்கையே அளவுகோலாகக் கொண்டு வள்ளுவர் வாய்மொழி மாண்பினை வாயாரப் பாராட்டுகின்றோம்.

'' அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்''

என்பது போல் வள்ளுவரையே நினைக்க வைத்த - ஏன் திகைக்க வைத்த சமுதாய அவலங்களைப் பற்றியும் அவற்றிற்கு வள்ளுவர் கூறியுள்ள தீர்வுகள் என்ன என்பது பற்றியும் விரிவாகச் சிந்தித்தோமில்லை. அறிஞர் க. கைலாசபதி குறிப்பிடுவது போல், 'அது எடுத்துரைக்கும் வாழ்க்கைத் தத்துவம், அதன் மொழிநிலை, அதன் ஆசிரியர் மதம், குறள்காட்டும் சமுதாய நோக்கு, இலக்கு, அதன் குறைபாடுகள், முரண்பாடுகள் என்பன போன்ற பொருள்களுக்குத் தீர்க்கமான விளக்கம் கூறப்படவில்லை. இவ்வவல நிலமையிலிருந்து குறளாராய்ச்சி விடுதலையடைந்து பயனுள்ளதாய் அமைய வேண்டுமானால் புதிய ஆய்வுமுறை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது கைலாசபதியின் வேண்டுகோளாகும்.

வள்ளுவப் பொதுமை பலவற்றை மேலீடாக அரித்தெடுத்த பொதுமையன்று. தமிழையும் பிறமொழிகளையும் ஒப்பிட்டு அவர் பொதுமை காணவில்லை. தமிழமை ஆழ்ந்து கற்றே அப்பொதுமை கண்டார். தமிழகத்துடன் பிற நாடுகளும் சுற்றிப் பார்த்தறிந்து அவர் உலகப்பொதுமறை காணவில்லை. தமிழகத்திலிருந்து கொண்டுதான் உலகப் பொதுமையை அவர் படைத்தார். தமிழ்ப் பண்புடன் வேறு எப்பண்பையும் ஒப்பிட்டுப் பார்த்து அவர் பொதுமை நிறுவவில்லை. தமிழப்பண்பையே அப்பொதுமைப் பண்பாக அவர் காட்டியுள்ளார்.

வள்ளுவர்க்குத் தமிழ்ப்பண்பே மனிதப் பண்பாய் இருந்தது. ஏனென்றால் அவர் நாளில் அதனுடன் போட்டியிடும் பண்பு பிற இல்லை. தமிழர் கண்ட பண்பு தமிழகத்தில் அன்று உச்ச நிலையில் இருந்தது. உலகமெங்கும் அதுவே சிறுகச் சிறுகப் பரந்து பண்புடைய உலகையே வளர்த்தது. இன்றைய உலகப்பண்பு பேரளவில் வள்ளுவர் கண்ட தமிழ்ப்பண்பின் வளர்ச்சிதான். அது காலம், இடம் கடந்து நிலவுவதன் மறை இதுவே. காலம் கடந்தும் ஞாலத்தையே வென்று காட்டும் திருக்குறளை மறையாகக் கொள்வோம். அம்மறையைச் சொல்லித் திருமணம் ஏற்றுக்கொள்வோம். தமிழர் விழாக்களில் குறள் நூலை வழங்குவோம். தமிழர் தம் இல்லங்களில் எல்லாம் குறள் நாளும் ஓலிக்கப்பட வேண்டும்; ஒதப்படவேண்டும்.

ஓ ! திருக்குறளே! அறிவின் வற்றாத பொன்னூற்றே! அழகின் அழகே! இனிமையின் இனிமையே! அன்பின் அன்பே! உலகம் உய்ய, மனித இனம் வாழ நீ வாழ்க ! கார் உள்ளளவும் கதிர் உள்ளளவும் கடல் உள்ளளவும் நீ வாழ்க! நீ வாழ்ந்தால் தான் வையகம் வாழும்!

3 வள்ளுவர் உணர்த்தும் பண்பாடு

பண்பாடு பொருள் விளக்கம் :

பண்பு என்னும் சொல்லின் அடிப்படையில் பிற்காலத்தே உருவாக்கப்பட்டது பண்பாடு என்னும் பதமாகும். சொற்பொருள் நோக்கில் பண்பாடு என்பது பண்படுதல் என்னும் தொழிற் பெயரின் பொருண்மை கொண்டது எனலாம். உலகத்தில் உயிரினங்கள் பலவாகக் காணப்படினும் மக்கள் இனத்திற்கே பண்பாடு என்பது பொருந்துவதாக எண்ணுகின்றனர். பண்பாடு என்பது பொதுவாக நாகரிகத்தில் அடங்கியதாகும். காலப்போக்கில் மக்கள் தம் வளர்ச்சியின் மனநல ஆக்கமே பண்பாடாகப் பெயர் பெறுகிறது எனலாம். மனநல ஆக்கத்திற்கு அறிவு மட்டும் இருந்தால் போதாது. ஒரு பக்கம் அறிவால் மதிநலம் பெறும்போது மற்றொரு பக்கம் ஒவ்வொருவரின் மனமும் படிப்படியே அன்பால் நிறைந்தொளிர வேண்டும். மனநலம் நன்கு அமைகின்ற நிலையில் வையத்தில் வாழ்வாங்கு வாழவேண்டிய தடம் புலப்படும். அந்நிலையில் தூய்மை தவழ, ஒவ்வொருவரின் சிந்தையும் சொல்லும் செயலும் சிறப்பாக அமைய வாய்ப்பு ஏற்படும். இத்தகைய மனநலம் இன நலத்திற்கும் நாட்டு நலத்திற்கும் வழிகோலும் என்பர். எனவே தனி மனிதன் மனத்தைப் பொருத்தே நடத்தையும் அந்நடத்தையைப் பொருத்தே நாட்டுப் பண்பாட்டின் வளர்ச்சிக் கூறுகளும் அமைகின்றன என ஒருவகையாகக் கூறலாம்.

பண்பாடு என்பதற்கு விளக்கம் கூறுவதுபோல், 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்' என்று கற்றோர் போற்றும் கலித்தொகை அடிஅமைந்துள்ளது. பண்புபடுதல் பண்பாடாகும். அஃதாவது பண்பு பொருந்துதலே பாடு எனப்படும். 'பாடு' என்பதற்கு உலக ஒழுக்கம், கடமை, பண்பு, செவ்வி முதலிய பொருள்கள் உள்ளமையால் பண்பாடு சிறந்த ஒன்று என்பது நன்கு விளங்கும். கரடு முரடான நிலத்தைப் பண்படுத்தினால் தான் உழவுத் தொழிற்கு உகந்ததாய் உலகவருக்குப் பெரும் பயன் விளைவிப்பதாய் அமையும். அதுபோலவே மனிதன் தன் உள்ளத்தைச் செவ்விதாய்ப் பண்படுத்தினால் தான் பல நற்பண்புகள் தழைக்க உகந்த வண்ணமாய் உலகவருக்குப் பெரும் பயன் விளைவிக்கலாம்.

பண்பாடு என்பதைக் குறிக்க ஆங்கிலத்தில் 'Culture' என்ற சொல்பயன்படுத்தப்படுகிறது. 'Culture' என்பதன் பொருள் 'The State of being Cultivated' என்று கேம்பிரிட்சு அகராதிகுறிப்பிடுகின்றது. 'Cultura' என்ற இலத்தின் மொழிச் சொல்லிலிருந்து ஆங்கில மொழிச்சொல் பிறந்ததாம். அதன் பொருள் பண்படுத்தல் எனக் கொள்கின்றனர். மனத்தை மற்றவருக்குப் பயன்படும் வகைகளில் நன்னெறியில் இயக்கி, நல்லறிஞர்களின் நன்மொழிகளும் ஆசிரியர் தம் பொன் மொழிகளுமாகிய எருவினையிட்டுச் சீரிய சிந்தனை ஏரோட்டி, நல்வகைகளில் நம்மை நாம் பண்படுத்திக் கொள்வதே பண்பாடாகும்.

அகப்புறப்பண்பாடுகள் :

இப்பண்பாடு அகப்பண்பாடு, புறப்பண்பாடு என இருவ்கைப்படும். உணவு, உடை, உறையுள் முதலிய அடிப்படையில் காணக்கூடியது புறப்பண்பாடாகும். இது ஒருவகையில் இன்றைய நாகரிகத்தில் அடங்கும். அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, மெய்யுணர்வு, இறை நம்பிக்கை, அருள், புலனடக்கம், நன்றி, ஒழுக்கம் முதலிய அடிப்படையில் உணரக்கூடியது அகப்பண்பாடு என்பர். பண்பாடானது மனத்தை விரிவடையச் செய்வதும் ஆன்மாவை விளக்கம் செய்வதுமாக இருத்தலின் பண்பாட்டுக் கூறுகள் இவ்வுலகத்தில் பொருள் பற்றிய போக்கிலும் அருளியல் பற்றிய நோக்கிலுமாக இருவகையில் ஆழ்ந்து சிந்திக்கப்படுகின்றன.

பண்பாடு என்பது நல்லபாட்டிற்கு இயைந்த இசை போலவும் பார்வையுள்ள மக்களின் கண்களுக்கு இயைந்த கண்ணோட்டம் போலவும் நன்மக்களுக்கு இயைந்த ஒருவகை மனிதப்பண்பாகும் என ஒப்புமைச் சிறப்புடன் விளங்கக் காணலாம். பண்பாடுகளுக்கு இடையே அமையும் வேறுபாடு புறத்தே காணலாகும் பல்வேறு உடைமைகளிடமே மிகுதியாக இருக்கும்; அன்றி அகத்தே உருவெடுக்கும் அன்பு, அருள், பொதுநலம் முதலிய பண்புகளின் ஈட்டத்தில் அ°து அவ்வளவாகக் காணப்படுவதில்லை என்றும் சிலர் கருதுகின்றனர். சுருங்கக் கூறின் மானுடரைப் பிற உயிர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டக் கூடியனவற்றில் மிகச் சிறப்பானதாகக் கருதப்படுவது பண்பாடு எனலாம். இதுவே நாகரிகத்திற்கு வழிகோலும் அடிநிலமாகும். பண்பாட்டால் உருவாகும் நாகரிகம் தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் அறிவுத் தெளிவையும் ஆற்றலையும் ஒழுக்கத்தையும் பொதுநலத்தையும் பெருமையையும் புகழையும் வழங்க வல்லது என்பதை உலகம் உணர்ந்து வருகின்றது. உலகம் கூடிவாழும் சமுதாயம் என்ற நோக்கிலே எஸ்க்கி மோக்களிடம் ஒருவகைப் பண்பாடு உண்டு. தொன்மைக் குடிகளாகிய தொதவர், காடர், இருளர், படகர் முதலியோரிடமும் அவ்வாறே பண்பு உண்டு எனக் கருதுவதே ஆகும். தொன்மையையும் செந்நெறியையும் அழகுணர்வையும் ஆற்றலையும் மனத்துக்கொண்டு உயரிய வாழ்க்கை நடத்திய பழங்கால எகிப்தியரையும் கிரேக்கரையும் எபிரேனியரையும் உரோமானியரையும் சீனரையும் இந்தியரையும் தமிழரையும் சிறந்த பண்பாடு உடையவர்கள் என்று பொதுவாக வரலாற்று நோக்கில் கூறுவர்.

உலக மக்களின் மனநலத்தின் வளமான கூறுபாடுகளே பண்பாடாக உருக்கொள்வதைக் கண்டு வருகிறோம். பண்பாடு பல விழுதுகளுடன் கூடிய ஆலமரம் போன்றது. உலக நோக்கில் பண்பாட்டினைக் கண்டு அதனுள் இந்தியப் பண்பாட்டைக் காணும் பொழுது எத்தனையோ ஒப்புமைக் கூறுகள் தென்படும். கிரேக்க நாட்டுச்சாக்கரடீசு, சீனநாட்டுக் கன்பூசியசு, அமெரிக்க நாட்டு எமர்சன், செருமன் நாட்டுக் கதே போன்ற உலகச் சிந்தனையாளர் வரிசையில் இந்திய நாட்டு வேதகால இருடியர், முனிவர், வரலாற்றுக் காலப்புத்தர், மகாவீரர், சங்கரர், காளிதாசர், குருநானக், கபீர்தாசர், இராமகிருட்டிணர்,

விவேகானந்தர், தாகூர், அரவிந்தர், சிவானந்தர் முதலியவர்களை இயைத்து வைத்துச் சிந்திக்கையில் எவ்வளவோ அரிய கருத்துக்கள் தென்படும். இந்திய நாட்டுச் சிந்தனையாளர்களிடையே தமிழ்நாட்டுப் பெரியோர்களான திருவள்ளுவர், இளங்கோவடிகள், கம்பர், சேக்கிழார், பட்டினத்தார், வில்லிபுத்தூரார், கச்சியப்பர், தாயுமானவர், இராமலிங்க அடிகள் முதலியவர்களைப் பொருத்தி வைத்துச் சிந்திக்கையில் எவ்வளவோ வாழ்வியல் அடிப்படையில் புரிந்து கொள்ளக்கூடிய பண்பாட்டுக் கூறுகள் புலனாகும். இவ்வாறே வாழ்வின் பல்வேறு துறைகளால் பண்பாட்டிற்குப் பெருமை சேர்த்த உயர்ந்தவர்கள் உலக அரங்கிலும் நாட்டு அளவிலும் மாநில அளவிலும் பலராக உள்ளனர். அவர்களையும் அவர்களின் பொருளியல், அருளியல் சாதனைகளையும் பண்பாட்டு அடிப்படையில் காண்போமாயின் எவ்வளவோ பண்பாட்டுக் கூறுகள் பார்வையில் படும்.

பண்பாடு அன்றும் இன்றும் :

இவ்வடிப்படையில் திருக்குறள் வழித் திருவள்ளுவர் உணர்த்தியுள்ள தமிழ்ப்பண்பாட்டைச் சிந்தித்துப் பார்த்தல் பண்பாட்டுத் தராசில் தமிழர் தம்மைச் சமன் செய்து சீர்தூக்கிப் பார்ப்பதற்கும் அண்மைக் காலத்தில் தமிழ்ப்பண்பாட்டுத் தளத்தில் வீழ்ந்து வரும் விரிசல்களை விலக்கி, உறுதியான பண்பாட்டுத்தளத்தை உருவாக்கிக் கொள்வதற்கும் பெருந்துணை புரியும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. வள்ளுவர் வகுத்துக் காட்டியுள்ள பண்பாட்டு நெறி பற்றிச் சிந்திப்பதற்கு முன் அதைப் பற்றி மிகுதியும் சிந்திக்க நம்மைத் தூண்டும் இற்றைக் காலச்சூழலை நம் நினைவில் நிறுத்த முயல்வோம். வள்ளுவப் பண்பாடு இன்று வாய்ப்பறையாக மட்டும் ஒலிக்கின்றதே தவிர வாழ்க்கை நெறியாக அப்பண்பாடு மலரவில்லை. அவ்வள்ளுவப் பண்பாட்டின் குரல்வளை நெறிக்கப்பட்டு அது மீண்டும் எழாதவாறு குழிதோண்டி இன்று ஆழமாகப் புதைக்கப்பட்டுள்ளது. அன்று திங்கள் மும்மாரி பொழிந்து, பயிர் செழித்து, நாடு வளம்பல கண்டது. பெண்மை போற்றப்பட்டது. கற்பு வழிபாட்டிற்குரியதாயிற்று. அன்பு வெள்ளம் எங்கும் பரவியிருந்தது. அறம் மலர்ந்து வளர்ந்திருந்தது. குடிதழுவிக் கோலோச்சியவர்களாக மன்னர்கள் விளங்கினர். வந்தவர்களின் வாட்டம் போக்கித் தம் ஈட்டமெல்லாம் ஈந்து, தாம் வறுமையுற்ற பொழுதிலும் வருந்தாது களிப்பெய்திய கலங்கரை விளக்கங்களாகக் காணப்பட்ட உள்ளங்கள் அன்று கணக்கில, ' வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற மனத்தின் பெருந்தன்மை எத்தகையது! அதனால்என்றோ 'ஈதல் இசைபட வாழ்தல் அதுவன்றி ஊதியமில்லை உயிர்க்கு' என்று உலகினர்க்கு உணர்த்தியது ஒரு பேருள்ளம். பொன்செய் கொல்லன் பொய்ச் சொற்கேட்டுத் தன் நடுவு நிலைமை தவறிக் கள்ளமற்ற கோவலனைக் கொன்ற குற்றமுணர்ந்து தன்னுயிர் நீத்துத் தமிழ்ப்பண்பாடு காத்த மன்னன் வாழ்ந்ததும் இந்நாட்டில் தான்.

இவ்வாறெல்லாம் உயர்வெய்திய தமிழ்ச் சமுதாயம் - உலகினர் யாவர்க்கும் ஒத்த உலகப் பொதுமறை கண்ட ஓர் ஒப்புயர்வற்ற சமுதாயம் இன்று தமிழ்ப்பண்பாட்டைத் தொலைத்துக் குழப்பத்தில் குடியிருந்து, அன்பின்மையில் அகப்பட்டு, அறக்கேட்டில் சிக்கிச் சீரழிந்து வருவதை எண்ணும்போதும் தாண்மோர் மனமெல்லாம் கலங்குகின்றது. நல்லவர்

உள்ளமெலாம் நடுங்குகின்றது. இந்நிலைமை மாற வேண்டும் என்ற வேட்கை எழுந்துள்ள உள்ளங்களுக்கு எல்லார்க்கும் ஒப்பானதாகிய வள்ளுவர் அருளிய குறள் ஒன்றுதான் உய்வு தந்து உயர்வளிக்கும் என்பதில் கருத்து வேற்றுமை காணமுடியாது.

எங்கும் எதிலும் போர்க்களமாய்க் கனன்று கொண்டிருக்கும் இன்றைய உலகு தென்றல் உலாவும் குளிர் பூஞ்சோலையாக மணம்பெற வாய்ப்பே இல்லையா? இருப்பின் ஏதுவழி என உன்னி உழன்ற பொழுது உள்ளங்கை நெல்லிக்கனியாய்ப் பொய்யா மொழியாம் வள்ளுவரின் வாய்மொழிக் குறள் அமுதம் அரு மருந்தாய் உயிர்ப்பச் செய்தது. படைக்கப்பட்டு ஈராயிரம் ஆண்டுகள் கடந்த பின்னும் இன்றைய பெரும் சிக்கல்களுக்குத் தீர்வளிக்கும் குறள் உலகப் பொதுமறையாகப் போற்றப்படுதல் இயல்பே. இக்குறள் வழி வள்ளுவர் வலியுறுத்தும் பண்பாடு எத்தகையது? அது எங்ஙனம் தமிழக ஏன் உலக அமைதிக்கு, ஒருமைப்பாட்டிற்கு வழிநடத்திச் செல்லும் என இனிச் சிந்திப்போம்!

அறிவியல் முன்னேற்றம் இல்லாதிருந்த பொழுதில் - உலக சமுதாயம் குறுகிய எல்லைக்குள் சுருங்கி இருந்த நிலையில் வள்ளுவர் அறிவில் தோன்றிய ஒருலகச் சிந்தனையே தமிழ்ப் பண்பாட்டின் மணிமுடியாகும். அணுவின் அழிவாற்றலால் அல்லலுறும் இன்றைய மனித சமுதாயத்திற்கு வள்ளுவர் வழியே சிறந்தது, ஒப்புயர்வற்றது என்ற அடிச்சுவட்டில் ஒருலகு அரசுகாண விழைகின்றவர் பெரும் சிந்தனையாளரும் வரலாற்றுப் பேராசிரியருமான டாயின்பி ஆவார். இச்சிந்தனையையே தமது எண்ணத்தில் தேக்கி எழுத்தாலும் பேச்சாலும் உலகிற்கு உணர்த்தி வந்த பெரும் தத்துவ அறிஞரான இராதாகிருட்டிணன், ' Civilizations are no more remote from each other in this shrinking world. We cannot live without others. This is a condition arising out of series of historical facts and consequences. The many experiments in International Co-operation, in education, health, science, culture, labour, food and agriculture, the increasing awareness of common interests among the people of the world, the growing inter-dependence of nations indicate that we are moving towards an International society in a family of mankind'. எனக் குறிப்பிட்டுள்ள ஒருலகச் சிந்தனையைப் பெறுதல்தான் தமிழ்ப்பண்பாட்டினைத் தழைக்கச் செய்யும் பெரு மருந்தாகும்.

வள்ளுவர் சுட்டும் பண்பாடு :

அரும்பெரும் அறிஞராகிய வள்ளுவர் தாம் படைத்த வள்ளுவத்தில் 'பண்புடைமை' என ஓர் அதிகாரமே வகுத்துள்ளார். பண்புடைமை என்ற சொல்லிற்குப் பரிமேலழகர், ' பெருமை சான்றாண்மைகளில் வழுவாது நின்று எல்லார் இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல் ' என்று உரைத்துள்ளார்.

'அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும் பண்புடைமை என்னும் வழக்கு' என்னும் குறளில் ஆன்ற குடிப்பிறத்தல் ஆகியவற்றை உரைத்துள்ளார். சான்றாண்மைக்கு அடுத்தபடியாகப் பண்புடைமை அமைந்தவைப்பு முறைக்குப் பரிமேலழகர் ' அஃதாவது பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்று எல்லார் இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல். 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல் ', (கலி - 16) என்றார் பிறரும். அதிகார முறையும் இதனாலே விளங்கும் என்று உரைத்துள்ளார். இனி வள்ளுவர் அமைத்துள்ள பண்புடைமை என்னும் அதிகாரப் பத்துக் குறள்களில் உறைந்து கிடக்கும் உட்பொருளை உணர்வோமாக :

எவரிடமும் எளிமையாகப் பழகுக. பிறர் உன்னைப் பார்க்க இடம் கொடுத்திடுக. கெடுபிடி கூடாது. பண்புடைமை நம் குடிப்பிறப்பின் உயர்வைக் காட்டும். நற் சொற்களும் செயல்களும் பண்புடைமை எனப்படும். மனிதன் என்பதற்குக் கை, கால், கண் இவை தக்கனவாக அமைந்தால் மட்டும் போதாது. நற்பண்புகளும் செயலும் அவனிடம் அமைவதே மனிதன் என்பதற்கு வேண்டிய அடையாளங்களாகும். நீதியும் நன்மையும் நிலவச் செயல்படுவார் பண்புடையார் எனப்படுவார். அவர்களை உலகம் பாராட்டும். பகைவன் ஆயினும் அவனை நகைத்துப் பேசற்க. விளையாட்டிற்குக் கூட மற்றவர்களை எள்ளிப் பேசற்க. அஃது பண்பைப் பாழாக்கும். பண்புடையார் இருப்பதால்தான் இவ்வுலகம் வாழும் தகுதி பெற்றுள்ளது. இல்லாயின் மண்புகுந்து புரையோடிப் போகும். அரம் போலும் கூரிய அறிவு படைத்தவராக இருக்கலாம். மக்கட் பண்பில்லாதவர் மரம் போல்வர் ஆவர். நல்லுணர்வு அற்றவராக அவர் கருதப்படுவர். பகைவனாக இருந்தால் அவனிடம் நகைமுகம் காட்டுவது நற்பண்பாகும். பண்பு கெடுமாறு எத்தீமையும் செய்யக்கூடாது. சிரித்துப் பழகுவது சீமை பயக்கும். நகைத்து மகிழ முடியாதார்க்கு உலகம் பகலாயினும் இருட்டாகத்தான் தெரியும். களிம்பு பொருந்திய கலத்தில் பால் பெய்தால் அது யாருக்கும் பயன் தராது; திரிந்து கெட்டுவிடும். அதுபோல் பண்பில்லாதவன் செல்வம் மிகுதியாகப் பெற்றிருந்தாலும் அது பயன்படாது.

ஐவகைச் சால்புகள் - என்பை உருக்கும் அன்பு :

அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய ஐந்தும் சான்றாண்மைக்குத் தூண்கள் ஆவன என வள்ளுவர் உரைத்துள்ளார். இவ்வைந்து பண்புகளுள் முதலிடம் பெறும் அன்பு பற்றி 'அன்புடைமை ' என்னும் அதிகாரத்தில் அருமையுடன் பொருள் ஆழத்துடன் பகர்ந்துள்ளார். மனத்தின்கண் அன்பில்லா உயிர் வாழ்க்கை வன்னிலத்தின்கண் வற்றல் மரம் தளிர்த்தாற் போல் ஆகும்.

" அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு " என்னும் குறளிற்கு உரை கூறும் பொழுது பரிமேலழகர், ' என்பும் உரியராதல் தன்னகம் புக்க குறுநடைப் புறவின் தபுதி அஞ்சிச் சீரை புக்கோன் முதலாயினோர்கண் காண்க ' எனச் சான்று காட்டி விளக்கியுள்ளார். மேலும்

வள்ளுவர் அன்பின் சிறப்பைத் தெள்ளத் தெளிவாக 'அன்பு துணையாவது அறத்திற்கே என்று சொல்லுவர் அறியார் சிலர். ஏனை மறத்திற்கும் அவ்வன்பே துணையாகும்' என்று இயம்பினார். இக்கூற்றின் உண்மையினை மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றின் வழி உணரலாம். சிவனடியார்க்குத் தொண்டு புரிந்து வாழ்ந்தவர் மெய்ப்பொருள் நாயனார் ஆவார். இதையறிந்த பகை மன்னன் சிவனடியார் வேடம்பூண்டு அரண்மனைக்கு வந்தான். சிவனடியார் வேடத்தில் வந்தவரை மெய்ப்பொருள் நாயனார் பணிந்து வீழ்ந்து வணங்கிய பொழுது புத்தகச்சுவடியில் மறைத்து வைத்திருந்த படைக்கலன் கொண்டு கொன்று வீழ்த்திய பொழுதில் அருகிலிருந்த மெய்க்காப்பாளர் சிவனடியார் வேடத்தில் இருந்த பகைவனைத் தாக்க முற்பட்டபோது, மெய்ப்பொருள் நாயனார் அவனைத் ' தத்தா! இவர் நமர் ' என்று உறவு கூறித் தடுத்ததுடன் யாரும் தாக்காத வண்ணம் தக்க பாதுகாப்புடன் அழைத்துச் சென்று நகர் எல்லையில் அவனைக் கொண்டு விடும்படிப் பணித்தார். வள்ளுவர் மொழிந்தபடி அறத்திற்கு மட்டுமன்றி மறத்திற்கும் அன்பே துணையாகும் அரும் பண்பாட்டைப் பாரதியும், ' பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே ' என்று பாடி வைத்துள்ளான். அன்பு உள்ளத்தில் ஊற்றெடுக்கையில் ஒருவரால் பிறருக்குத் தீங்கு செய்ய இயலாதது மட்டுமல்ல, பிறர்பால் கொள்ளும் அழுக்காறு, புறங்கூறல், வெகுளி இன்னபிற தீய ஒழுக்கங்களையும் அறவே அழித்து விடுகின்றது. உள்ளம் முழுமையும் அன்பு மயமாகும் பொழுது பிறர் துயர் நம்மை உருக்குகின்றது. அவர் துன்பம் தன் துன்பமாக அது துடைக்க உயிர் முந்துகின்றது. மனிதநேயம் மலர்கின்றது. எனவே அன்பின் வழியது உயிர்நிலை மட்டுமன்று, பண்பாட்டின் உயர்நிலையும் ஆகும்.

நாணமெனும் நல்லணிகலன் :

இழிந்த செயல்கண்டு நன்மக்கள் நாணுவது இயல்பாகும். சான்றோர்க்கு நாணுடைமை சிறந்த அணிகலனாகும். அவ்வணிகலன் இல்லையாயின் அவர் பெருமித நடை கண்டார்க்குப் பினியாகும். பிறர்க்கு வரும் பழியையும் தமக்கு வரும் பழியையும் ஒப்ப மதித்து நாணுபவரை உலகத்தார் நாணிற்கு உறைவிடம் என்று சொல்லுவர்.

" நாணுல் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர் "

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப வாழ்ந்து காட்டியவர்களைப் பற்றிச் சங்க இலக்கியம் சான்று பகர்கின்றது. புறநானூற்றிலே புறப்புண் நாணி வடக்கிருந்து உயிர்துறந்த சான்றோர்கள் போற்றப்பட்டுள்ளனர். கோப்பெருஞ்சோழன் தன்மக்களுடன் மாறுபட, இடை நின்று சந்து செய்வித்த புலவர்களின் சொல்லால் ஏற்றதொரு தன் வீரத்திற்கு இழுக்குநேராவண்ணம் தன் செயலுக்கு நாணி வடக்கிருந்து உயிர் துறந்தான்.

ஒப்புரவே ஒப்பற்ற பண்பு :

ஒப்புரவு என்பதன் பொருள் பிறர்க்கு உதவுதல் என்பதாகும். அவ்வுதவி கைம்மாறு கருதாத்தன்மையதாகும். உலகவர் உயிர்வாழ மேகம் கைம்மாறு கருதாமல் நீர் பொழிந்து உதவுகின்றது. தகுதியுடைய சான்றோரும் தம் முயற்சியால் ஈட்டிய பொருளனைத்தையும் பிறர்க்குத் தந்துதவுதன் பொருட்டே செலவிடுவர். ஒப்புரவாற்றும் பண்புடையவர் பேரறிவாளர், நயனுடையார், பெருந்தகையர் என்றெல்லாம் வள்ளுவப் பெருமகனால் வாழ்த்தப்படுகின்றார். அவரிடமுள்ள செல்வம் ஊரிலுள்ளவர்களுக்கெல்லாம் பயன்படும் குளத்து நீர்போலவும் பயன்படும் மரம் ஊர் நடுவே பழுத்தாற் போலவும் எல்லா உறுப்புக்களும் நோய் தீர்க்கும் மருந்தாய் விளங்குவதில் தப்பாத மரம் போலவும் பெரும்பயன் விளைவிக்கும். இத்தகைய சீரிய ஒப்புரவு செய்தலால் ஒருவனுக்குப் பொருட்கேடு வரும் என்பாருளர் ஆயின் அக்கேடு தன்னை விற்றாயினும் கொள்ளும் தகுதியையுடையதாகும். வள்ளுவன் கூறிய இவ்வுண்மைக்கு இலக்கியமாகத் திகழ்ந்தவன் வள்ளல் பெருமகன் குமணன் ஆவான். மன்னனாய் வீற்றிருந்த பொழுது வந்தவர்க்கெல்லாம் வான்பொருளை வாரி, வாரி வழங்கியவன் நிலம் காக்கும் பதவியை இழந்து காட்டில் அலைந்த பொழுது, தன்னைக் காண வந்த புலவர் பெருஞ்சித்திரனாருக்குப் பொருள் கொடுக்க முடியா நிலைக்கு வருந்தி நின்றவன், தன் தலையைக் கொய்து வருபவர்க்குப் பரிசில் தருவதாக அறிவித்து இருந்த தன் தம்பியின் ஆணையை நினைவு கூர்ந்தவனாய்த் தன் தலையைக் கொய்து கொடுக்கவும் தயங்காத தமிழ்ப்பண்பு இலக்கியத்தில் இன்றும் என்றும் நிலைத்த புகழ்பெறும். அப்பண்பு பாரில் உள்ளார் வியக்கும் பண்பன்றோ?

கண்ணிற்கு அணிகலன் :

பண் பாடற்றொழிலோடு பொருத்தமாக அமைந்தால்தான் பயனுடையதாகும். இதுபோலவே கண்ணோட்டமில்லாத கண்ணால் பயனில்லை. கண்ணோட்டம் என்பதன் பொருள் அருளுடன் கூடிய நோக்கு, பயின்றார் கூறினமை மறுக்க மாட்டாமை, பொறுத்தல் என்பனவாகும். கண்ணோட்டம் கண்ணிற்கு அணிகலனாகும். அஃதில்லையாயின் 'கண்' அறிவுடையோரால் 'புண்' என்றே கருதப்படும். கண்ணோட்டம் உடையவரே கண்ணுடையவராய்க் கருதப்படுவர். கண்ணோட்டம் உடையவரையே ' நாகரிகம் வேண்டுபவர் ' என நயந்து வள்ளுவர் போற்றுகிறார். விரும்பத்தக்க கண்ணோட்டம் என்னும் பண்பு சார்ந்த நாகரிகம் படைத்தவர் தம்முடன் பழகியவர் நஞ்சினைக் கொடுத்தாலும் அதனையும் ஏற்றுண்பர். இக்கருத்தினையே நற்றினையும்,

" முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநாகரிகர் "

எனப் பாராட்டியுள்ளது. உலகின் இயக்கமே கண்ணோட்டத்தில் அடங்கியுள்ளது எனுங்கால் அதன் முதன்மைச் சிறப்பிற்கு - இன்றியமையாமைக்கு வேறு சான்று தேவையில்லை. இக்கண்ணோட்டம் எனும் கழிபெருங் காரிகையால் பொறையும் அருளும் உள்ளத்தில் குடிபுகுகின்றன. அன்பின் ஆட்சிக்கும் இக்கண்ணோட்டமே இடனாகின்றது.

பொய்ம்மையும் வாய்மையிடத்த :

அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம் இவை ஒருவரிடம் அமைந்து விட்டால் வாய்மை மிக இயல்பாக அவருள் சிறப்பெய்தும் என்பதனை உணர்த்தவே அதனை இறுதியில் வள்ளுவர் அமைத்தார். பண்பெனும் மாண்பிற்கு மையமாக விளங்குவது ஒப்புரவு, அதனைச் சுற்றிப் பல நற்பண்புகள் தோற்றம் கொள்கின்றன. எனவே அதனை நடுவண் கொண்டார் எனவும் நவிலலாம். அன்பு நாணத்துடன் இயைந்தது. ஒப்புரவு கண்ணோட்டத்திற்குக் களனாவது என்ற நிலையில் அவை முறையே தொடர்ந்து இடம் கொண்டுள்ளன போலும். இவற்றுள் வாய்மை தனித்துச் சிறப்பிக்கத்தக்க பெருமையுடையதாகும். இதனை,

" வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல் "

என மிகக் கருத்துடன் வள்ளுவர் விளக்குவார். நடந்ததை நடந்தபடி அல்லது கேட்டதைக் கேட்டபடிக் கூறுதல் அன்று வாய்மை. கேட்பவர்க்கு எள்ளளவும் தீமை தராத ஒன்றே வாய்மை என்பது அவரது அழியா நம்பிக்கையாகும். இதனை வலியுறுத்தற் பொருட்டே அடுத்த குறளாகப்

" பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின் "

என அமைக்கிறார். சொல்லின் தூய்மையை விட அது விளைவிக்கும் நன்மையையே கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என இவற்றால் அறிவிக்கிறார். பிறிதொருவர் நன்மைக்காக ஆன்றோர் தம் வாய்மையில் மனிதப் பண்பாட்டின் பொருட்டு முரண்படுவதை வள்ளுவர் வரவேற்கின்றார். இங்குத் தன் பெருமை, பிறர்நலம் எனும் இரண்டில் பிறர் நலம் பேணலே சாலச் சிறந்தது. தன்னலம் மறந்த பிறர்நலம் மட்டுமல்லாது தன் பெருமை மறைந்த பிறர் நலமும் வேண்டற்பாலது. அதுவே பாராட்டிற்குரிய பண்பாடாகும் என வள்ளுவர் உணர்த்துகிறார். வாய்மையைக் கடைப்பிடித்தல் மட்டுமல்லாமல் இன்றியமையாத தேவையின் போது அதனைக் கைவிடுதலும் மனிதப் பண்பாடே ஆகும். இவண் . மனித நேயம் என்பது எண்ணம் (அன்பு, நாண்) சொல் (வாய்மை), செயல் (ஒப்புரவு, கண்ணோட்டம்) என மூன்று நிலைகளிலும் சூழ்ந்து, மனித வாழ்வுடன் இரண்டறக்கலந்து, மக்கட்பண்பாக மாண்புறக் காண்கின்றோம். மனிதநேயம் கொண்டவனே மனிதன் என்ற உண்மையும் உள்ளுறுத்தப்படுகின்றது.

இத்தகு சிறப்புடைய மனித நேயத்தைப் பெற்றாரை 'மாசற்றார்' என்றும் 'பண்புடையார்' என்றும் செந்நாப்போதார் போற்றுகின்றார்.

நேயம் வளர்க்கும் பண்புக்கூறுகள் :

மனித நேயமாகிய பண்பாட்டினை வளர்க்க - அறிவுறுத்த அன்புடைமை, , அறன் வலியுறுத்தல், இனியவை கூறல், பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, தீவினையச்சம், ஒப்புரவறிதல், ஈகை, அருளுடைமை, கல்லாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, அவாஅறுத்தல், கண்ணோட்டம், வினைத் தூய்மை, சான்றாண்மை, பண்புடைமை எனப்படும் இருபது அதிகாரங்களை வள்ளுவர் துணைக் கொள்ளுகின்றார். மனித நேயத்திற்கு - மக்கட்பண்பிற்கு அவர் அளித்துள்ள முதன்மையான மற்றொரு காட்டாக இதனைக் காட்டலாம்.

மனிதப்பண்பாடு ஒருவருள் நன்கு கால் கொள்வதற்குரிய நல்வித்தாக 'இன்னா செய்யாமை' அமைந்திருப்பதாக வள்ளுவர் அறிவுறுத்துகின்றார். வள்ளுவர் சுட்டிக்காட்டியுள்ள 'இன்னா செய்யாமை' என்பது சங்கப்புலவர் நரிவெரூஉத்தலையாரின்,

" நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறி " என்னும் கூற்றுடன்

ஒன்றி நிற்கக் காணலாம். மக்கட்பண்பு என்ற சொல்லை மனிதநேயத்தின் மாற்றுச் சொல்லாக வள்ளுவர் பயன்படுத்தி உள்ளார் எனக்கருதுதல் பிழையாகாது. அங்ஙனமாயின் மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் மேற்கொள்ளவேண்டிய தலையாய பண்பாகவும் மனிதன் என்று ஒருவனை இனம் காட்டுவதற்குரிய பண்பாகவும் வள்ளுவர் மதித்துள்ளார் எனலாம்.

சான்றாண்மைப்பண்புடன் மேலும் சில நற்பண்புகளையும் வள்ளுவர் எடுத்துரைத்துள்ளார். ஒருவர் உள்ளத்தில் மலரும் அன்பு, அருள், இரக்கம், ஈகை, உண்மை முதலிய பண்புகள் அவர்தம் சொல்லாலும் செயலாலும் மற்றவர்க்குப் புலனாகும். அன்புள்ளம், அருள்உள்ளம், உண்மைஉள்ளம் வாய்த்தவர் வாய்மொழிகளும் இனிமை நிரம்பியதாய் அமைவதே இயல்பு. உள்ளத்திலிருந்து இனிய சொற்களைச் சொல்லுதல் நற்பண்பாகும்.

"பண்புடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற " என்றார் வள்ளுவர்.

சொல்மட்டுமல்ல செயலும் இனியதாய் அமையவேண்டும். நமக்கு இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யும் மனப்பாங்கு வேண்டும்.

" மிகுதியான் மிக்கவை செய்தவரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல் "

" இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் "

என்பன வள்ளுவர் காட்டும் வழியாகும்; பண்பட்ட, பக்குவப்பட்ட மனிதநேய நெறியாகும். இவ்வாறு இனியவை கூறி, இன்னா செய்தவர் நாண நன்னயம் செய்து வாழும் இல்லறம் நல்லறமாகும்.

இல்லறத்தார் மேற்கொள்ள வேண்டிய கடமைகளுள் ஒன்று விருந்தோம்புதல் ஆகும். விருந்தினர் அனிச்ச மலரைக் காட்டிலும் மென்மையர் ஆவர். அனிச்சமலர் முகர்ந்தால் வாடிவிடும் தன்மை உடையது. விருந்தினரோ முகம் திரிந்து நோக்க வாடி வருந்தும் தன்மையினர் என்பதனால் விருந்தினர் ஓம்பும் பண்பாட்டைப் பாங்குற வள்ளுவர் விளக்கியுள்ளார். விருந்தோம்புதல் இல்லறத்தார் போற்றவேண்டிய பண்பு என உரைத்த வள்ளுவர் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் அறங்களுள் எல்லாம் முதன்மையானது என்றார். அறவோரும் அறிஞரும் படைத்த நூல்களை ஐயம் திரிபறக் கற்பதுடன் கற்ற வண்ணம் வாழ்ந்து காட்டுதலும் வள்ளுவர் கருத்தின்படி பண்புடைச் செயலே ஆகும். நற்பண்புடன் வாழ்க்கையை நடத்துவதால் என்ன பயன் என்று வினா எழுப்புவோர்க்கும் வள்ளுவர் விடை தருகின்றார். இம்மை மற்றும் மறுமை நலன்கள் இதனால் கிடைப்பதாக நவில்கிறார். அன்பு ஈனும் ஆர்வம் உடைமையால் நண்பு எனும் நாடாச் சிறப்பு என்றும் அழிவு தோன்றுங்கால் அழியாத உற்ற துணை என்றும் அல்லவை தேய அறம் பெருகும் என்றும் இன்பத்துள் இன்பம் பயக்கும் என்றும் இம்மைப் பயன்கள் பற்றிப் பேசுகின்றார். ஒருவன் தன்வாழ்நாள்தோறும் காட்டிய பண்பாடு அவனது மறுபிறப்பு வழியை அடைக்கும் திறனுடையது என மறுமைப் பயனையும் காட்டுகின்றார்.

பழி சூழும் பண்புக்கேடு :

பண்பாட்டால் விளையும் பயனுரைத்த வள்ளுவர் அஃதின்மையால் தோன்றும் இழிவையும் எடுத்துரைக்கின்றார். பண்பாட்டுடன் நடப்பதால் எவ்வளவு சிறப்புண்டோ அவ்வளவு அழிவு அதனை மறுத்தலால் - மறத்தலால் தோன்றுகின்றது. நற்பண்பிற்கெதிராக அமையும் தீயபண்புகளால் விளையும் கேடுகளையும்,

" அழுக்காறு எனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்"

" தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும் "

" துறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனால் வரும் "

என்பன போன்று வள்ளுவர் தெளிவுறுத்துகின்றார்.

' மண்ணோடு இயைந்த மரத்தனையர் ஆவர் ' என நவின்று, சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் பிறர்க்கு இன்னா செய்யாமை மாசற்றார்கோள் என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். பண்பாட்டை மறப்பார்க்கு - மறுப்பார்க்குப் பகலும் இருளேயன்றி உண்மையொளி காண்டல் இல்லை. பண்பாட்டின் தேவை ஏன் என்ற வினாவிற்கு வள்ளுவர் பலகுறட்பாக்களில் விளக்கம் தருகின்றார். அவற்றுள் ' நாடு ' பற்றிய அதிகாரத்துள் பெய்துள்ள,

"உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு "

"பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து "

எனும் இரு குறட்பாக்கள் எண்ணத்தக்கன. மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் பசி, பிணி, பகை, என்னும் முப்பெரும் தீமை ஒழித்து, நோய்நொடியற்ற, வளமான, நலமான, முறையான இன்பத்துடன் பகைவர்களிடமிருந்து விலகிப் பாதுகாப்புடன் வாழ வேண்டும். இத்தகு இனிய வாழ்வை ஒவ்வொருவரும் பெறுதல் எளிதன்று. ஆயின் ஒருவர்க்கொருவர் மனிதநேயப் பண்பாட்டுடன் ஒன்றும் பொழுது அவ்வினிய வாழ்வு மிக எளிதாகக் கிட்டுகின்றது. இருப்போர் இல்லாதாருக்குக் கொடுத்து உதவுதல், துயர் துடைத்தல், தீங்கு செய்யாதிருத்தல், அதன்வழிப்பகைமை அழித்தல் எனப் பண்புடன் நடக்கும் பொழுது அனைவரும் ஒப்பாகும் நிலைதானே உருவாகின்றது. காழ்ப்பு மறைகின்றது. இன்பம் களமாகின்றது. எனவே தனக்கும் பிறர்க்குமான நல்வாழ்வுக்குப் பண்பாடே ஊன்று கோலாகின்றது.

பண்பாட்டினை மறுத்துப் பிறர்க்குத் தீங்கிழைக்க முனையும் பொழுது,

" வலியார்முன் தன்னை நினைக்கத்தான் தன்னின்
மெலியார் மேல் செல்லும் இடத்து "

" இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறர்கண் செயல் "

என வள்ளுவர் நயம்பட அறிவுறுத்துகின்றார். ' தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான்யென்கொலோ, மன்னுயிர்க்கு இன்னா செயல் ' என வள்ளுவர் வினவுகின்றார். மேலும்,

" அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின் நோய்
தன்நோய் போல் போற்றாக் கடை "

என்பதன்வழி மனிதநேயப் பண்பினை உள்ளுணர்வுடைய ஒவ்வொருவரையும் கைக் கொள்ளும்படி வள்ளுவர் தூண்டுகின்றார். மறுப்போரை 'அரம் போலும் கூர்மையரேனும், மரம் போல்வர் மக்கட்பண்பில்லாதவர் ' என வள்ளுவர் இடித்துரைக்கின்றார்.

உலக ஒருமைமை வளர்க்கும் உயர் பண்பாடு :

இங்ஙனம் வள்ளுவர் வேண்டும் மனிதப் பண்பாடு எங்ஙனம் உலக ஒருமைப்பாட்டிற்கு வழி வகுக்குகின்றது என்பதையும் இங்கே இயம்புதல் பொருத்தமாகும். இன்று உலகில் மானிடர் தம்முள் வேறுபட்டு நிற்பதற்கு அடிப்படைக் கரணிகளாக அமைவனவற்றுள் பொருள்வளம், இனம், நிறம், மொழி, நாடு, சமயம் போன்றன முதன்மை பெறுகின்றன. மனிதரை மனிதர் மதிக்கும் பண்பாட்டினை முதற்கண் கற்றுக்கொள்ளவேண்டும். இதற்கு அடிப்படையாய் அமைவது தூய அன்பு ஒன்றே. இதனை ஒவ்வொருவரும் நெஞ்சில் நிலைநாட்டும் பொழுது எவ்வகை வேற்றுமையும் மறைகின்றது. பிறர் துயர் துடைக்க மனம் துணிகின்றது. மாற்றார்க்குத் தீங்கிழைக்க மனம் அஞ்சுகின்றது. பிறர் உயர்வு மனத்திற்கு மகிழ்ச்சி தருகின்றது. பொறாமையையும் பேராசையையும் வேரறுக்கின்றது. பிறர் உள்ளத்திலும் தம்மைக் காணும் பெருநிலை வந்தடைகின்றது. மனிதநேயப் பண்பாடு ஆளுமை பெறுகின்றது. இந்நிலை அடைந்தபின் மனம் அமைதியடைகின்றது. அறிவு தூண்டப்படுகின்றது. ஒற்றுமையழுத்தம் பெற மானிட மேன்மைக்கு உழைக்க வேண்டும் என்ற உந்துதல் ஆள்வினைக்கு அடிக்கல் இடுகின்றது. ' யாதும் ஊரே யாவரும் கேளிர் ' என்னும் பொது உலகு புத்துலகாகத் தோன்றுகிறது.

இயக்கமற்று இருக்கின்ற நீர்நிலையில் கல்லொன்று விழுந்தால் விழுந்த இடத்தைச் சுற்றிச்சுற்றிப் பல வட்டங்கள் தொடர்ந்து எழுதலைக் காணலாம். மனிதப் பண்பாடு அற்ற - உயிரற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் நம் உள்ளமாகிய நீர்நிலையில் தூய அன்பு எனும் கல் விழின், அது ஒவ்வொன்றாகப் பிற நற்பண்புகளையும் கொணர்ந்து முழுமையாக மனித நேயத்தை மனத்துள் வேரூன்றச் செய்யும். இவ்வியக்கம் தொடர்ந்து நம் இல்லம், தெரு, ஊர், நாடு, உலகம் எனப் பரந்து ஆளுமை பெறும். தமக்கென வாழாமல் பிறர்க்கு உரியாளராய் வாழும் பெற்றியால் தமக்குக்கிடைத்தது சாவா மருந்து எனப் போற்றப்படும் அமுதமாயினும் தாம் தமியராய் உண்ணாமல் பலருடன் பகிர்ந்துண்ணும் பண்பால், பழி எனின்

உலகுடன் பெறினும் கொள்ளாமல் புகழெனின் தம் உயிரையும் கொடுக்க முன்வரும் மாட்சிமையால் ஆகிய இத்தகு பண்பாட்டில் உயர்ந்த அன்பும் அறப்பண்புகளும் நிறைந்த சான்றோர் வாழ்வதனால் தான் உலகம் இன்றளவும் இயங்கிக் கொண்டிருக்கின்றது. காவலனாய் மட்டுமன்றிப் பாவலனாகவும் திகழ்ந்த கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி புகன்ற இக்கருத்தையே வள்ளுவர்,

" பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன் "

என்று உள்ளத்தில் உறுதியாகப் பதியும் வண்ணம் உரைத்துள்ளார். உலகம் போற்றும் வள்ளுவப் பண்பாட்டை உணர்வோமாயின், உணர்ந்தபடி ஒழுகுவோமாயின் சமுதாயக்கேடுகள் சாயும். வஞ்சகரின் முகத்திரைகள் கிழியும். ஒன்றே குலம் என்ற தமிழ் மாமந்திரம் எங்கும் ஒலிக்கும். சாதிகள் சாவினை ஏற்கும். புதிய சந்ததி உருவாகும். முயற்சியே நமது வளர்ச்சி என்ற வள்ளுவத் திருமந்திரம் நம்மை வாழவைக்கும். ஒழுக்கம் நமது குறிக்கோளாகும். வாய்மை நமது வழிமுறையாகும். இன்பமயமான வாழ்வைப் பெறுவோம். திருவள்ளுவர் பிள்ளைத் தமிழ் பாடிய தீந்தமிழ்க் கவிஞர் போசுவின் பாடல் வரிகளைஅசைபோடுவோம் :

" புதியதோர் பரிணாமம் எனப்பேசிப்
புத்தியை மலிவாகத் தூண்டிவிடும்
போக்கற்ற பாலியல் கருத்துக்களைப்
பொருந்தாத எதார்த்தம் எனும் பேரில்
சதிவலையை வீசுகிறார் நாகரிகச்
சமுதாயம் கீழிறங்கி நலியுமாறு
சங்கதிகள் பாடுகிறார் கோணல்களைச்
சரியென்று வாதாடிப் பெரும்செல்வம்
குதிபோட்டு அள்ளி அள்ளிச் சுருட்டுகின்றார்
குன்றுபோல் நிமிர்ந்திருந்த பண்பாட்டைக்
குழிபறித்து மூடிவிட்டுப் பரிமாற்றம்
கூடுமான துறையெல்லாம் என விரித்தார்
கொதிக்குதய்யா நெஞ்சமெல்லாம் பொய்யாமொழிக்
கோச்சிறு தேருருட்டி அருள்வாயே
குறைபடாமல் பண்பாட்டை முறைசெய்து
கோச்சிறு தேருருட்டி அருள்வாயே "

அலைக்குக் கடல்மீது அடங்காக் காதல்
இலைக்குக் கிளைமீது இடையறாக் காதல்
இயங்கும் காற்றிற்கு மலர்மீது மனம் ஒன்றிய காதல்
நமக்கோ வள்ளுவக் காதல் வாழ்நாளிலெல்லாம்.

4 வள்ளுவர் வாய்மொழி

தெள்ளுதமிழ் நடையில் சின்னஞ்சிறு அடிகளில் அள்ளுதோறும் சுவையும் உள்ளுதோறும் உணர்வும் பிறக்கும் நிலையில் குறளை வள்ளுவர் அமைத்துள்ளார். அவர் வாய்விளைத்தவற்றுள் எதுவும் வெல்லாததில்லை ; புரை தீர்ந்த வாழ்வினிலே அழைத்துச் செல்லாததில்லை ; பொது மறையான திருக்குறளில் இல்லாதது இல்லை.

உலகெங்கும் குற்றங்கள் எண்ணிக்கையில் பெருகி வருகின்றன. தம் குற்றம் காணாது பிறர் குற்றம் பேசும் பேதையர் நிறைந்துள்ளனர். மடியை மடியில் வைத்துத் தாலாட்டி மண்ணிற்கும் உப்பிற்கும் பாரமாக உள்ளோர் தொகை வளர்ந்து வருகின்றது. குடியழிக்கும் குடியை விடாப்பிடியாய்ப் பிடித்துத் தமக்குக் கேடு சூழ்வார் எண்ணிக்கையில் மிகத் தொடங்கி உள்ளனர். செல்வப் பயன் தெரியாத செல்வரின் செருக்கும் முறுக்கும் நாட்டில் மலியத்தொடங்கி உள்ளன. அனைத்துத் துறையிலும் காலூன்றி உள்ள கயமை விளைவிக்கும் கேடுகள் எண்ணத் தொலையாதனவாய் உள்ளன. இத்தீமைகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் ஒழுக்கத்தை உயர்வாகப் போற்றாமையே ஆகும். இழுக்கம் வாழ்வாகி வருவதால் ஒழுக்கம் புறக்கணிக்கப்படுகிறது. ஒழுக்கம் என்று விழுப்பம் பெறுகின்றதோ அன்று தான் உலகைப் பிடித்துள்ள அரக்கக் கேடுகள் அழியும். இனி நாட்டில் மலிந்து வரும் கேடுகளை அன்றே தொலை நோக்கில் உணர்ந்துரைத்த வள்ளுவர் வாய்மொழி காண்போம்.

குற்றம் கடிதல்:

உடம்பிற்கு முதன்மை சேர்ப்பது தலை எனும் உறுப்பினைப் போன்று சமுதாயத்தின் தலைமை உறுப்பு அரசியல் ஆகும். தலைசரியாக இருந்தாலன்றி உடம்பின் பிற உறுப்புக்கள் சரியாக இயங்காது. வேர்கள் சிறந்தாலன்றி மரக்கிளைகள் மாண்புறா என்பதற்கேற்ப அரசியல் வேர்கள் சமுதாயத்தில் சரியாக ஊன்றப் படவில்லையானால் எஞ்சிய துறைக் கிளைகள் ஒடிந்து விடும் தன்மையதாய் அமையும். இவ்வரசியலைப் பற்றிப் பழங்காலத்திலேயே விரிவாக விளக்கியவர்களுள் வள்ளுவரும் பிளேட்டோவும் தலைசிறந்தவர்கள் ஆவர்.

வள்ளுவரின் அரசியல் நெறிக்கும் மற்றவர்களின் அரசியல் நெறிக்கும் மாபெரும் வேறுபாடு உள்ளது. வள்ளுவரின் அரசியல் அறத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் அரிஸ்டாட்டில், சாணக்கியன், ரூசோ. மாக்கியவல்லி, மார்க்சு போன்றவர்கள் அறத்தை அரசியலில் வலியுறுத்தவில்லை. வள்ளுவர் முடியாட்சியைப் பற்றிப் பெருமையாகப் பேசுகின்றார். இதுவோ குடியாட்சிக் காலமாகும் எனவே வள்ளுவரின் அரசியல் கருத்துக்கள் இக்காலத்திற்கு உகந்தனவாக இருக்காது எனச்சிலர்

கருதலாம். வள்ளுவர் முடியரசு பற்றிப் பேசுவது உண்மைதான். ஆனால் வள்ளுவர் வகுத்துக் கொடுத்துள்ள கோனாட்சி சாணக்கியனின் கொடுங்கோன்மையையோ மாக்கியவல்லியின் வஞ்சகத்தினையோ கொண்டதன்று. வள்ளுவரின் கோனாட்சி குடிதழுவிய கோனாட்சியாகும். மனித இன நல் வாழ்விற்கு ஒரு துணையாகவே அரசியல் அமைதல் வேண்டுமெனத் தமிழறிஞர்கள் விரும்பினர். ஆகவேதான் வள்ளுவர் கண்ட அரசியல் தலைவன் பரம்பரையாக ஆளும் அரசனாக அமையவில்லை. அவன் குருளையைப் புறம் காக்கும் புலிபோலவும் குழந்தையைப் பேணும் தாயைப் போலவும் குடிமக்களைக் காக்கும் காவலன் ஆவான்.

அரசு என்பது என்ன? தனிமனிதன் பலர் கொண்டது தானே. தனிமனிதன் அறவழியில் நின்றால் அந்நாட்டு அரசும் அறவழியில் நிற்கும். மக்களின் குற்றங்களைக் கடிந்து ஒதுக்குபவன் அல்லது ஒறுப்பவன் மன்னன் ஆவான். மக்கள் குற்றங்களைக் கடிவதற்கு முன்னே, தான் அக்குற்றங்களைக் கடிந்து கொண்டுள்ளோமா? எனத் தன்னைத் தானே திறனாய்வு செய்து கொள்ள வள்ளுவர் சொல்கிறார். இற்றைஅரசியல் உலகம் போலிகளையும் பொய்யர்களையும் கொண்டுள்ளது. அரசியல் உலகில் சொல்வேறு, செயல் வேறுபட்டவர்களாய் உள்ளனர். பதவித் திமிர் பட்டொளி வீசுகின்றது. சுரண்டலுக்கு அரசியல் ஆலவட்டம் வீசுகின்றது. கொள்கை கொள்ளையடிக்கப்பட்ட உலகமாக உள்ளது. எனவேதான் மக்கள் குற்றங்களைக் கடியுமுன் அக்குற்றங்களை மன்னன் அல்லது நாடோள்வோன் முன்னதாகவே கடிந்திருக்க வேண்டும்.

அக்குற்றங்கள் யாவை? கடமையிலிருந்து தவறச் செய்யும் ஆணவம், சூழ்ந்திருப்பவர்களின் அன்பை இழக்கச் செய்கிற சினம், பழியையும் உயிரிழப்பையும் தரவல்ல காமம் இவை இல்லாதாரின் அரசாகிய செல்வம் பெருமைத் தன்மை உடையதாகும். ஆணவம், சினம், காமம் ஆகிய மூன்றும் அரசாகிய செல்வத்தைக் காக்காமல் அழிப்பதுடன் அச்செல்வம் உடையாரையும் அழித்துவிடும் தன்மையனவாகும். இனிக்குறளை எடுத்தோதுவோம் :

" செருக்கும் சினமும் சிறுமையும் இல்லாப்
பெருக்கம் பெருமிதம் நீர்த்து "

பொருளதிகாரத்தில் 'குற்றம் கடிதல்' என்னும் அதிகாரத்தின் முதற் குறள் இதுவாகும். அறிவுடையோரே குற்றம் கடிய விழைவர். குற்றம் கடியப் பெரியாரைத் துணைக் கொள்வர். எனவேதான் 'அறிவுடைமை' என்னும் அதிகாரத்திற்கும் ' பெரியாரைத் துணைக்கோடல் ' என்னும் அதிகாரத்திற்கும் இடையில் 'குற்றம் கடிதல்' என்னும் இவ்வதிகாரத்தை வள்ளுவர் இடம் பெறச் செய்துள்ளார்.

நிலமென்னும் நல்லாள் :

" இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்"

இது 'உழவு' அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள பத்தாவது ஆகிய நிறைவுக் குறளாகும். பண்புடைமை, நாணுடைமை, குடிப்பெருமையைக் கூறிய பின்னும் நல்குரவு, இரவு, இரவச்சம் கூறுவதன் முன்னும் வள்ளுவர் உழவு பற்றிக் கூறியிருப்பது நயமுடையதாகக் காணப்படுகின்றது. உழவுத் தொழில் இந்நாட்டின் முதல் தொழில் மட்டுமல்ல; முதன்மைத் தொழிலுமாகும். தொழில்களிலெல்லாம் உடலை மிக உழக்கச் செய்வது உழவுதான். உழவும் ஒருவகையான சூதாட்டமே. பயிர்மேனி செழித்தால் மக்களும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்வர். எனவே தான் நாட்டில் நிகழ்வது பசுமைப்புரட்சியாகும்.

நாட்டில் நாளுக்குநாள் எண்ணிக்கையில் மிகுந்து வரும் வேலையில்லாப் பட்டதாரிகளை நினைக்கவே நெஞ்சு நடுங்குகின்றது. இற்றைக் காலக் கல்வி தொழில் வாழ்க்கையில் அவர்களைக் கைதூக்கி விடுவதில்லை. 'வேலை தேடுவதே வேலை' என வீதி வீதியாய்த் திரியும் பட்டதாரிகள் அல்லது 'வேலைகாலி இல்லை' என்னும் விளம்பரப் பலகைகளை எழுதித் தம் வயிற்றைக் கழுவும் இளைஞர்களே நாட்டைச் சூழ்ந்துள்ளனர். 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம்' என்ற பைந்தமிழ்த் தேர்ப்பாகனான பாரதி வரிகளை இவ்விளைஞர்கள் பொய்ப்பித்து வருகின்றனர். நிலம் என்பதனைப் 'பார்' என்றும் அழைப்பர். ' என்னைப் பார், என்னுள் இருப்பதைப்பார், என்னை அகழ்ந்து பார், என்னைப் பயன்படுத்துவோரைப் பார் ' என்றெல்லாம் இப் 'பார்' என்னும் சொல் அறிவுறுத்துகின்றது.

சோர்வை உச்சியிலும் மடியை மடியிலும் ஊக்கமின்மையைக் காலிலும் தூக்கி வைத்துக் கொண்டு நிலக்குப் பொறையாய் உள்ள மக்களைப் பார்த்து நிலம் நகுகின்றதாம். ' நகும்' என்ற சொல்லினைக் கொண்டு அதை மகிழ்ச்சிச் சிரிப்பு என்று கொள்வதற்கில்லை. மகிழ்ச்சிச் சிரிப்பு என்னும் பொருளிலும் இச்சொல்லை வள்ளுவர் கையாண்டுள்ளார். 'படைச்செருக்கு' என்னும் அதிகாரத்தில் ஒரு குறள் இப்பொருளைத் தருகின்றது :

" கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும் "

'குறிப்பறிதல்' என்னும் அதிகாரத்தில் மற்றுமொரு குறள் இப்பொருளில் காணப்படுகிறது.

" யானோக்கும் காலைநிலன் நோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும் "

நல்லாள் சிரிப்பு ஏளனச்சிரிப்பாகும். இப்பொருளிலும் 'நகும்' என்ற சொல்லை வள்ளுவர் பயன்படுத்திய குறளும் உண்டு. 'கூடா ஒழுக்கம்' என்னும் அதிகாரத்தில் காணப்படும் குறளில் இது கையாளப்பட்டுள்ளது :

" வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும் "

நகுதல் வேறு, சிரிப்பு வேறு. நகுதல் சிற்றளவுப் புன்னகையாகும். சிரிப்பு பேரளவுப்புன்னகையாகும். நகுதலை ' முறுவல்' எனலாம். ' நலம் கேழ் முறுவல் நகைமுகம் காட்டி' என்று கூறுவது சிலம்பாகும். 'நிலம் நகும்' என்பதில் கூட நிலத்தை ஒரு பெண்ணாக உவமித்து நிலப்பெண் ஏளனமாய்ச் சிரிப்பாள் என்று கூறி வள்ளுவரும் அந்நகைப்பில் பங்குபெற்று நகைப்பது நகைப்பை நமக்கு உண்டாக்குகிறது. ' சிரித்து வாழ வேண்டும். பிறர் சிரிக்க வாழாதே ' என்பதில் பிறர் சிரிக்கும் சிரிப்பை விட ஓர் ஆண்மகனுக்குத்தன்மான உணர்ச்சியை ஊட்டுவது ஒரு பெண்ணின் சிரிப்பே என்பதை உணர்ந்த வள்ளுவர் இக்குறளில் அதனைப் பயன்படுத்தியுள்ளார்.

பெண் மக்களில் கூடக் கெட்ட பெண்களைச் சிரிக்க விடவில்லை. அவர்களைச் சிரிக்கவிட்டால் 'ஈயம் பித்தளையைப் பார்த்து இளித்தது போலாகும்'. எனவேதான் நல்ல பெண்களே எள்ளி நகையாடுவர் என்பதை ' நல்லாள் நகும்' எனும் சொற்களால் அறிவிக்கின்றார். நகும் என்பதுடன் விட்டு விட்டதிலிருந்து தன்னைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாத ஆண் மகனைக் கண்டு நகைப்பதுடன் விட்டுவிடும் என்பதும் அவ்வாறே தன்னைப் பயன்படுத்திக் கொள்ளாத கணவனைக் கண்டநல்லாளும் நகைப்பதோடு விட்டுவிடுவாள் என இல்வாழ்வின் நுட்பத்தினையும் வெளிப்படுத்தியுள்ளார். இத்தகு சிறப்பு வாய்ந்த குறளை மீண்டும் நினைவில் பதிப்போமாக :

" இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்".

குடிகெடுக்கும் குடி :

குடி என்பது இரு பொருள்களைத் தருகின்ற ஒரு சொல்லாகும். ஒரு பொருள் உயர்வும் மறுபொருள் இழிவும் ஆகும். இங்கு நாம் கூறவந்த குடியின் பொருள் குடிக்கும் பழக்கத்தை ஒழித்துக் குடியின் பெருமையை உயர்த்த வேண்டும் என்பதாகும். குடியன், குடித்தான் என்று சொல்லும் போது கள் என்ற சொல்லையும் சேர்த்துச் சொல்வதில்லை. ஏனெனில் அச்சொல்லைச் சொல்வதும் கேட்பதும் எழுதுவதும் படிப்பதும் ஏன்? நினைப்பதும் கூடத் தவறு என்பது தமிழ்மக்களின் கொள்கையாகும்.

உலகின் அனைத்துச் சமயங்களும் குடியை வெறுத்துப் பேசியுள்ளன :

" வெறிக்கக் குடியாதே " - இயேசு

" குடிப்பழக்கம் ஆண்டவனை அணுகவிடாது " - நபிகள் நாயகம்

" குடிப்பது அறச் செயலல்ல, மறச் செயல் " - புத்தர்

" வயிற்றுள் கள் இருந்து அறிவில் வெறி இருந்தால் உடல் கோயிலில் இருந்தால்லும் உள்ளம் கடவுளுக்கு வெகு தூரத்தில் இருக்கும்" - குருநானக்

" இந்தியா குடியினால் பாழ்படுகின்றது" - காந்தியடிகள்

" ஐம்பெரும் பாவங்களுள் ஒன்று குடிப்பழக்கம் " - தமிழ்ச்சான்றோர்

பாவச் செயல்களுள் சூதாடுதலும் ஒன்று. எனினும் தமிழறிஞர்கள் குறித்துள்ள பெரும்பாவம் ஐந்தில் குடியிருக்கக் குடிக்கு மட்டும் உரிமை கிடைத்திருக்கின்றது. பாவம் ! சூது அங்கும் வெற்றிபெறாமல் தோல்வி அடைந்து விட்டது. பொய், கொலை, கள், களவு, காம்ம என்பன ஐம்பெரும் தீமைகளாகும். கள் வலப்புறம் இரண்டையும் இடப்புறம்இரண்டையும் கொண்டு பெருந்தீமைகளுக்கெல்லாம் நடுநாயகமாக விளங்குகின்றது. மற்ற நான்கை விடக் கள் அவ்வளவு கொடியதா? ஆம். மற்றவற்றைச் செய்யப் பிறரின் துணை வேண்டும். பிறர் சேராமல் நான்கும் நடவாது. ஆனால் குடி மட்டும் தனித்து நடக்கக் கூடியதாகும். ஐம்பெரும் பாவச் செயல்களில் எதையும் செய்ய விரும்பாத ஒருவன் அறிவிழந்து குடிக்கப் பழகியிருப்பானானால் காலப் போக்கில் பிற பாவச் செயல்களைச் செய்யும் பழக்கமும் அவனுக்கு மிக எளிதாக வந்துவிடும். உலகில் நடைபெறும் குற்றங்களில் நூற்றுக்கு எண்பது விழுக்காடு குடிகாரர்களாலேயே நிகழ்கிறது. குடி ஏன் வெறுக்கப்படுகின்றது ? குடித்தவுடன் அறிவு இழப்பு, பின் அறச் செயலிழப்பு, அதைத் தொடர்ந்து குடும்பப் பொறுப்பிழப்பு, பின் குடும்பமே அவனைஇழக்கின்றது. இறுதியில் நாட்டையும் நல்லவர்களையும் அவன் இழக்கின்றான். அவன் வாழ்வையே இழக்கின்றான். கள் மட்டுமல்ல, சாராயம், கஞ்சா, அபின் என்பன கள்ளின் தம்பி தங்கைகளாகும் ; காப்பி, தேநீர் பிள்ளைகளாகும்; பீடி, சுருட்டு, வெண்சுருட்டு, பொடி, புகையிலை பேரப்பிள்ளைகளாகும். இவை அனைத்தும் சோர்வைப் போக்கி உற்சாகத்தை அளிக்கின்றன என்ற தவறான கருத்தில் இவை உட்கொள்ளப்படுகின்றன. பழக்கத்தின் கொடுமை யாதெனின் முதலில் கவர்ச்சி காட்டிப் பின் வீழ்ச்சியில் வீழ்த்தும்.

அனைவர்க்கும் அறங்கூறிய வள்ளுவர் குடிகாரனை நோக்கி அறம் கூறவில்லை; கூறவிரும்பவுமில்லை. கள் உண்டு வெறித்த ஒருவனிடம் போய் அவனது செயல் தவறு எனக் காரணங்களை எடுத்துக்கூறி அவனைத் திருத்திவிடலாம் என எவரேனும் நினைப்பாகளேயானால் அசசெயல் தண்ணீரில் மூழ்கிய ஒருவனை விளக்குக் கொண்டு கண்டுபிடிக்கும் செயலுக்கு ஒப்பாக இருக்கும் என வள்ளுவர் கருதுகிறார். இதில் இரு நுட்பமான செய்திகள் அடங்கி உள்ளன. ஒன்று நீருக்குள் மூழ்கியவனைக் கண்டு பிடிக்க முடியாமையாகும். மற்றொன்று நீருக்குள் எடுத்துச் சென்ற சுடர் விளக்குத் தொடர்ந்து எரியாமையாகும். குடிக்கிறவனைத் திருத்தப் போய்த் தாமே அப்பழக்கத்திற்கு அடிமையாய் விடக்கூடிய சூழல் ஏற்பட்டு விடுமோ என அஞ்சித்தான் குடிகாரனுக்கு அறம் கூறக்கூடாது என்கிறார் வள்ளுவர்.

கள் உண்டவனின் மயக்கத் தோற்றம், தள்ளாடும் நடை, விலகும் உடை, உளறும் பேச்சு, குழறும் நாக்கு ஆகியவற்றைக் கண்டு பிறர் கைகொட்டிச் சிரித்து ஏளனம் செய்கிற காட்சியைக் கண்ட ஒரு குடியன் நாமும் கள் உண்ட போது இப்படித்தானே இருந்திருப்போம் என எண்ண மாட்டானா? எவ்வளவு பெரிய குற்றம் செய்தாலும் பெற்ற தாய் தம் பிள்ளைகளைப் பொறுத்துக் கொள்வாள். பெரியோர்கள் எவ்வளவு சிறிய குற்றமாக இருந்தாலும் பொறுக்க மாட்டார்களாம். பெற்ற தாயும் குடிகாரனை வெறுத்து ஒதுக்குவாள் என்றால் அறிவாளியாகிய பெரியோர் முன் என்ன ஆவான்? என அவன் சிந்திக்க மாட்டானா?

இப்பொழுது சட்டத்தின் மூலம் நம் நாட்டில் குடி தடுத்து ஒழிக்கப்பட்டுவிட்டது. இது போதாது. மக்கள் உள்ளத்தில் இருந்தும் அது விலக்கப்பட வேண்டும். அமெரிக்க நாடு முன்பு ஒரு முறை குடியை ஒழித்தது. ஆனால் அங்கு விரைவில் அது திரும்பவும் வந்துவிட்டது. அதுபோல் நம் நாட்டிலும் நடைபெறும் எனச் சிலர் நம்பிக் கொண்டும் எதிர்பார்த்தும் கொண்டும் இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் குடியை விட முடியாதவர்கள்ஆவர். குடியால் பொருள் திரட்டுபவர்களும் இப்பெரும் குடியர்களின் எண்ணத்தை நிறைவேறச் செய்யாமல் அழித்து ஒழிக்க வேண்டியது தமிழ்நாட்டுப் பெருங்குடி மக்களின் நீங்காத கடமைகளுள் ஒன்றாகும். எனவே,

" உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார் "

என வியங்கோள் அமைப்பில் வள்ளுவர் தம் வேண்டுகோளை விடுக்கின்றார். இக்குறள் கள் உண்ணாமை எனும் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள இரண்டாவது குறளாகும். இக்குறள் கட்குடியர் செவிப்புகுந்து நற்குடியராய் நடமாட அவர்களை நல்வழிப்படுத்தட்டும். சான்றோரால் எண்ணப் பட விருப்பமா ? சாகச் செய்யும் குடியிலிருந்து நீங்கி வாழச்செய்யும் குடிப்பெருமை காக்க அனைவரும் முன் வர வேண்டும்.

கூத்தாட்டு அவைக் குழாம் :

" கூத்தாட்டு அவைக் குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று".

இக்குறள் 'நிலையாமை' என்னும் அதிகாரத்தின் இரண்டாவது குறளாகும். பொருள் இல்லவரை பொருளாகச் செய்யும் ஆற்றல் பெற்றது பொருளாகும். எனவே 'செய்க பொருளை' என்று வேண்டுகோள் விடுக்கின்றவர் வள்ளுவராவார். அம்மட்டுமா ! அச்செல்வம் திறன் அறிந்ததாகத் தீதின்றி வந்ததாக இருத்தல் வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். அங்ஙனம் நல்வழி வரப்பட்ட செல்வமும் நெடுநாள் ஒருவனிடம் நிலைக்காது என அறிவுறுத்தியவரும் அவரே. தரித்திரம், செல்வம் என்ற

சொற்களின் பொருள் நுட்பத்தை ஓர்க. ஒருவனிடமே நிலையாகத் ' தரித்து இரோம்' என்பதால் அதற்குப் பெயர் தரித்திரம் ஆகும். ஒருவனிடமே நிலைத்து நிற்காமல் 'சென்று கொண்டே இருப்போம்' என்பதால் அது செல்வம் என அழைக்கப்படுகின்றது. செல்வ நிலையாமையை முற்றத் துறந்த துறவிகளுக்கு வள்ளுவர் எடுத்துரைக்கின்றார். ஆனால் உலகின் பெருஞ்செல்வர்களே இற்றைக் காலத் துறவியரே ஆவர்.

நிலையில்லாதவனவற்றை நிலைத்து நிற்கக் கூடியவை என எண்ணுவது அறிவுடையவர்க்கு இழுக்காகும் என்று கூறிய வள்ளுவர் நிலைத்து நில்லாதவைகளுள் செல்வமும் ஒன்று என இக்குறளில் கூறுகின்றார். குறைந்த செல்வம் ஒருகால் அழியலாம். நிறைந்த செல்வம் எப்படி அழியும் என்று நினைப்பார்க்கே இக் குறளாகும். பெருஞ்செல்வம் சேர்வது எப்படி என்ற கேள்விக்கு வள்ளுவர் நாடகக் கொட்டைகளில் மக்கள் திரண்டு வந்திருப்பதை உவமையாக்கிக் காட்டியுள்ளார்.

கூட்டம் நாடகக் கொட்டகைகளில் மட்டுமா? கோயிலில் கூட்டம், குளக்கரையில் கூட்டம், கூடி விளையாடும் இடத்தில் கூட்டம் என எங்கெங்கோ மக்கள் பெருங்கூட்டமாய்க் கூடி இருக்க, அவற்றையெல்லாம் விட்டு விட்டு, நடிப்பைக் கண்டு மகிழக் கூடியிருக்கும் சுவைஞர்களின் கூட்டத்தை மட்டும் உவமையாகக் காட்டியிருப்பது அவரது கலை உள்ளத்தையே நமக்குக் காட்டுகின்றது.

எப்படி நாடகக் கொட்டகைக்கு மக்கள் ஒவ்வொருவராக வந்து பின் பெருங்கூட்டமாகக் காணப்படுகிறார்களோ அப்படியே ஒருவனுக்குச் செல்வமும் சிறிது சிறிதாக வந்து பின் பெருஞ்செல்வமாகத் திரள்கின்றது. நாடகத்திற்கு வரும் பொழுது தனித்தனியாக வந்த மக்கள் முடிவில் ஒன்று சேர்ந்து ஒரே அடியாய்ப் போய்விடுவதைப்போல் வருகின்ற காலத்தில் சிறிது சிறிதாகச் சேர்ந்த செல்வம் போகுங்காலத்தில் ஒன்று சேர்ந்து போய்விடும். நாடகக் கொட்டகைக்கு மக்கள் வரும் பொழுது ஒரு வழியில் மட்டுமே வருவர். வந்து போகும் போது அவர்கள் பல வழிகளிலும் போய் விடுதல் போல் செல்வமும் வரும் பொழுது ஒரு வழியில் வந்து போகும் போது பல வழிகளிலும் போய்விடும். நாடகத்தைக் காணவரும் மக்களிடம் வரும்போது மகிழ்வும் போகும்போது சோர்வும் ஏற்படுவது போல் செல்வம் சேரும் போது மகிழ்வும்செல்வம் போகும் போது சோர்வும் உண்டாகின்றன.

ஒரே கூத்தாட்டு அவையை மக்கள் நிறைந்து காணப்படும் பொழுதை நிறைந்த செல்வத்திற்கும் அது குறைந்து காணப்படும் பொழுதைக் குறைந்த செல்வத்திற்கும் அது கலைந்துவிட்ட பொழுதை வறுமை நிலைக்கும் வள்ளுவர் உவமையாக்கியுள்ளது எண்ணத்தக்கது. கூத்தைப் பார்க்க வந்த கூட்டம் மட்டுமல்ல : கூத்தை நிகழ்த்த வந்த நடிகர்களின் நிலையும் அதுவே.

அவர்களின் நடை, உடை, நடிப்பு, வேடம், கதை, காட்சி அனைத்தும் பொய்ம்மையே ஆகும். நாடகம் முடிந்ததும் அவை அனைத்தும் அழிந்து, ஒழிந்து ஒன்றுமே இல்லாமல் போய்விடும். அதுபோலவே செல்வத்தின் தோற்றமும் இருப்பும் அழிவும் அமைந்திருக்கும் என வற்புறுத்தவே இக்குறள் எழுந்திருக்க வேண்டும். செல்வம் வருகின்ற வேகத்தை விட அ°து அழிகின்ற வேகம் மிகுதியாக இருக்கும் என்பது கலைஞர்களைப் பொறுத்த வகையில் நூற்றிற்குத் தொன்னூற்று ஐந்து பங்கு சரியாக இருக்கும் என்பதை எண்ணியே வள்ளுவர் கூத்தாட்டு அவைக் குழுவை உவமையாகக் கொண்டாரோ என்று எண்ண வேண்டியுள்ளது.

சிலப்பதிகாரத் தலைவன் பற்றிச் சிந்திப்போம். மன்னனுக்கு அடுத்த படியாகப் பொருள் வளம் மிகுந்த வணிகக் குடியில் கோவலன் பிறந்தான். அவன் வாழ்வில் வறுமை நிழல் படிந்ததில்லை. செல்வச் செழிப்பில் அவன் உருண்டு திரண்டவன். குன்று ஏறி யானைப் போர் கண்டதற்கு ஒப்பான செல்வப் பெருக்கினன் அவன். ' செக்களவு பொன் இருந்தாலும் செதுக்கித் தின்றால் எத்தனை நாளுக்கு ? ' என்பது போல் கோவலன் செல்வம் இழந்தான் ; சீர் இழந்தான் ; சிறப்பான நகர் நீங்கினான் ; நள்ளிரவில் யாரும் அறியாமல் காலன் துணையைக் கைப்பிடித்து மதுரை சென்றான். வணிகம் செய்யலாம், வளமான பொருள் ஈட்டலாம் என எண்ணிய கோவலன் இறந்தே போய்விட்டான். நிலையாமை செல்வத்திற்கு மட்டும் அல்ல. செல்வம் உடையவனுக்கும் அது பொருந்தும். வள்ளுவர் காலத்தில் நாடகக் கலை இருந்திருக்கின்றது. நாடகங்கள் பல அவர் காலத்தில் நடைபெற்றிருக்க வேண்டும். அவற்றை வள்ளுவரும் பார்த்திருக்க வேண்டும். அதுவும் எல்லார்க்கும் முன் சென்று அவர் அமர்ந்து பார்த்திருக்கின்றார். அவர் பார்த்தது முன்புறத்தை மட்டும் அல்ல, பின்புறத்தையும் திரும்பிப் பார்த்துக் கூட்டப்பெருக்கைக் கணக்கிட்டு மகிழ்ந்திருக்கின்றார். நாடகம் முடிந்த பிறகுநெருக்கடியில் அகப்பட்டு வெளியேறாமல் வெற்றிடத்தைக் கண்டு கடைசியாக அவர் வெளிவந்திருக்கின்றார். நாடக அவையை, நாடகக் கலையை, நாடகக் கலைஞர்களைச் செல்வமாக அவர் கருதியிருக்கிறார். வெறுஞ் செல்வமாக அல்ல. அருஞ்செல்வமாகவே அவர் கருதி இருக்கிறார் என்பதைக் கருதிப் பார்ப்போமாக.

மக்களே போல்வர் கயவர் :

" உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ்".

'கயமை' அதிகாரத்தின் ஒன்பதாவது குறள் இதுவாகும். இக்குறளின் இறுதிச் சீரான 'கீழ்' என்பது இரண்டே எழுத்துள்ள ஒரு சொல்லாகும். இதன் வெளிப்படையான பொருள் கீழானவன், தாழ்ந்தவன், இழிந்தவன், கயவன் என்பனவாகும். இச்சொற்களால் குறிப்பிட்டால் கயவனை மனிதன் என ஒப்புக் கொண்டதாகி விடுமாம். ஆகவே அவ்வாறு கூற விரும்பாமல் வள்ளுவர்

அவனைக் 'கீழ்' என்று அழைத்தியே கூறிவிட்டார். பாவம் இழந்து இரங்கத்தக்க ஒன்றாகும்.

கயவனைக் 'கீழ்' என்றது இக்குறளில் மட்டுமன்று, இதனுடன் தொடர்புடைய மற்றிரு குறள்களிலும் வருகின்றது. ஒரு 'கீழ்' குறைந்த தீமை விளைவிக்கும் மக்களைக் கண்டதும் தீமை விளைவிப்பதில் அவர்களை விடத் தான் உயர்ந்தது என எண்ணி இறுமாப்புக் கொள்ளுமாம். மற்றொரு 'கீழ்' தன்னிடம் வந்து அழுது, கெஞ்சி, உதவி வேண்டும் எவர்க்கும் எதுவும் கொடாமல் அடித்து உதைக்க வரும் முரடர்கட்கு மிகுதியாகக் கொடுத்து உதவுமாம். ஆனால் இக்குறளில் உள்ள 'கீழோ' பிறர் வாழ்வதைக் கண்டதுமே மனம் பொறுக்காமல் துடிக்குமாம். எப்படி இக்கீழின் இழிநிலை ! கயமை வேறு, தீமை வேறு என்பது வள்ளுவர் கருத்தாகும். தீயோர்கள் நல்லதோ, கெட்டதோ ஏதேனும் ஒன்றைச் செய்யும் ஆற்றல் பெற்றவராவர். கயவர்க்கு அவ்வாற்றலும் இராது. தீமை செய்ய எண்ணுவர் ; சொல்லுவர் ; அவ்வளவுதான் அவர்களால் எதுவும் செய்ய இயலாது. இதனால் கயவர் தீயோர்க்கும் கீழானவர் ஆவர். கயமை வேறு, பொறாமை வேறு என வள்ளுவர் கருதுகிறார். வண்டி, வாகனம், நீர், நிலம், பொன், பொருள் முதலியவைகளை வைத்து ஒருவர் வாழ்வது பொறாமைக்காரருக்குப் பிடிக்காது. ஆனால் கயமைக்கு அவை எதுவும் தேவையில்லை. வெள்ளைத் துணியை உடுத்தி, வெறுஞ் சோற்றை உண்பதைக் காண்பதே அதற்குப் போதுமானதாகும். உடனே கயமை குறை கூறத் தொடங்கி விடுமாம். எனவே கயவன் பொறாமைக்காரனைவிடவும் கீழானவன் ஆவான்.

கொடியவர்கள் தங்களுக்குப் பிடிக்காதவர்களிடம் நேரில் சென்று ஏசிப்பேசி, அடித்துத் தம் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்வர். கயவர் நேரில் செல்ல அஞ்சிப் பிறரிடம் சென்று குறை கூறிக் கொண்டே இருப்பார்களாம். இதனால் இக்கயவர் கொடியவர்க்கும் கீழானவர் ஆவர். கருமித்தனம் கயமைத் தனத்திலிருந்து வேறுபட்டதாகும். கருமிகள் ஏச்சில் கையால் காகம் ஓட்டார். ஆனால் கயவர்கள் தாம் உண்டு கழுவிய ஈரக் கையைக் கூட இரப்போர் முன் உதறி உதவமாட்டார்களாம். இதனால் இக்கயவர் கருமியர்க்கும் கீழானவர் ஆவர். கொம்பு உள்ளதற்கு ஐந்து முழம், குதிரைக்குப் பத்து முழம், யானைக்கு ஆயிரம் முழமும் எட்டி இருக்க வேண்டும். ஆனால் கயவர்களின் கண்காணாத் தூரத்திலேயே வாழ வேண்டும். எனவே இக்கயவர் விலங்கிற்கும் கீழானவர். எதற்கும் உதவாத கீழானவர் இடத்து ஒரு வலிமை மட்டும் காணப்படுமாம். இதனை 'வற்றாகுங் கீழ்' என்ற சொற்கள் அறிவிக்கின்றன. அவ்வலிமை என்ன வலிமையாகும்? ஒருவர் பற்றி மற்றவரிடம் குறை கூறி அதை அவன் நம்பும் படிச் செய்து விடுவதாகும். உடுத்திய துணி உடற் புண்ணை மறைப்பதற்காக இருந்தாலும் உண்டது உணவாக இல்லாமல் மருந்தாக இருந்தாலும் அவற்றைக் காண்கின்ற கயவர்கள் அவற்றை உடையும்

உணவும் என்றே எண்ணி மனம் பொறுக்கமாட்டார்களாம். இப்பொருளை இக்குறளில் உள்ள 'காணின்' என்ற சொல் காட்டும். ஒருவர் மீது குறை கூறுவதற்கு அவர்கள் உண்மையாகவே தவறு செய்திருக்க வேண்டும் என்பதில்லை. இல்லாத குறையைக் கூடக் கற்பனை செய்து கூறி எவரையும் நம்ப வைத்து விடுபவர் இக் கயவராவர். இதனை 'வடுக்காண' என்ற இரு சொற்கள் அறிவிக்கின்றன.

கயமைத் தன்மை ஆணிடத்தில் மட்டும் அன்று, பெண் இடத்திலும் காணப்படும். கயவன், கயத்தி என்ற இரு பாலரையும் சேர்த்து வள்ளுவர் 'கீழ்' என்றார். கயமைத் தன்மை உடையாரை வெறுக்கக் கற்றுக் கொள்வதும் நம் உள்ளத்திலேயே அத்தன்மை தோன்றுவதாக நமக்குத் தோன்றினால் அதற்காக வெட்கித் தலை குனிவதும் ஒரு நல்ல பண்பாகும். நாடு நலம் பெற, மக்கள் நல்வாழ்வு வாழ நாம் அனைவரும் கயமைத் தன்மையிலிருந்து விடுபடுவோம். கயம் நுழையும் உள்ளத்தில் நயம் நுழையாது. கீழ்மை வாழும் இல்லத்தில் மேன்மை வாழாது.

ஒழுக்கம் விழுப்பம் தரும் :

" ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் ".

'ஒழுக்கம் உடைமை' என்னும் அதிகாரத்தில் தொடக்கக் குறளாக இக்குறள் அமைந்துள்ளது. இன்று ஒழுக்கமின்மையே ஒழுக்கமாகியுள்ளது. பட்டப்பகலில் பலர் பார்வையில் மதுரை மாநகர வீதியில் கோவலன் கொலை செய்யப்பட்டான். செய்தி கேட்ட கண்ணகி செங்கண் சிவப்ப அழுதாள். காய்கதிர்ச்செல்வனை நடுவனாக்கித் தன் கணவன் கள்வனல்லன் என்ற நல்ல தீர்ப்பை அவள் பெற்றாள். பொடித்த மேனி, விரித்த கூந்தல், சினத்த முகம், வடித்த கண்ணீர், சிலம்பேந்திய கை இவற்றுடன் பாண்டியனவை அவள் அடைந்தாள். அவனை நேருக்கு நேர் அவள் சந்தித்தாள். மன்னனே சிந்தித்துப் பார்த்திருக்க முடியாத சொற்களை அவள் தொடுத்தாள். கூடலான் வெறுங்கூடாயினான். போற்றப்படவேண்டியது ஒழுக்கமா? உயிரா? என்ற ஒரு சிறு போராட்டம் சில நொடிகளுக்குள் மன்னன் மனத்தில் எழுந்தோய்ந்தது. இன்றோ நாளையோ என்றோ ஒருநாள் அழியப் போகும் உயிரைவிட என்றும் அழியாத ஒழுக்கத்தை அவன் உயர்வாகக் கருதினான். கோவலனைக் கொன்ற கொடுங்கோலன் என்ற பழிச்சொல்லிற்கு அவன் பயந்தான். பட்டென்று உயிர்விட்டு ஒழுக்கம் அவன் காத்தான். அல்வினையால் வளைந்த செங்கோலைத் தன் உயிரைப் போக்குதலாகிய நல்வினையால் அவன் நிமிரச் செய்தான். காப்பியப் பாராட்டிலும் அவன் நிமிர்ந்து நிற்கிறான்.

வள்ளுவர் பட்டிமண்டபத்தைப் பாங்காக நிகழ்த்தி உயிர் பெரிதா? ஒழுக்கம் பெரிதா? என்பதற்குரிய தீர்ப்பை அவர் சிந்தித்து வழங்குகின்றார். ஒழுக்கமே உயர்ந்தது என்பது அவர் வழங்கிய தீர்ப்பாகும். ஒழுக்கத்திற்கு எதனை

உவமையாக்கலாம் என உலகத்துப் பொருள்களையெல்லாம் அவர் அலசிப்பார்க்கிறார். சரியாக எதுவும் அவருக்குப் புலப்படவில்லை. ஒன்று மட்டும் அவர் சிந்தனையைத் தொட்டது. ஒழுக்கம் போனால் வராது. அதுபோல் மனிதனிடமிருந்து எதுபோனால் வராதது என்று ஆய்ந்து அதுதான் உயிரென்றும் கண்டார். ஒழுக்கம் போனால் வராது, உயிர் போனாலும் வராது. எனவே அதனை ஒழுக்கத்திற்கு உவமையாக்கினார். 'ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம் உயிர் போல ஓம்பப்படும்' என்று கூறவில்லை.

இன்றைய உலகம் அறிவியல் உலகம் ஆகும். காலத்தையும், தூரத்தையும் மட்டும் அறிவியல் வெற்றி பெறவில்லை. உயிரைக் கவரும் காலனைக் கூட நெருங்க விடாமல் தூரத்தில் அவனை நிறுத்திவிடலாமா என்று அறிவியலார் ஆராய்ந்து வருகின்றனர். ஒருவேளை அவர்கள் நிகழ்த்தும் ஆய்வில் வெற்றி விளையலாம். அதன் விளைவாக உடம்பிலிருந்து நீங்கிய உயிர் கூட ஒருவேளை திரும்பலாம். மீண்டும் உடம்பை இயக்கலாம் ஆனால், போன ஒழுக்கம் போனதுதான். மீண்டும் அது வரவே வராது. வள்ளுவரின் தொலைநோக்குச் சிந்தனை பாராட்டத் தக்கது. உயிரை விடச் சிறந்தது வேறு எதுவுமில்லை என்று கருதுவார்க்கு இருக்கின்றது, அதுதான் ஒழுக்கம் என வள்ளுவர் கூறுகின்றார்.

உயிரை விட்டால் அழுது வருந்தும் துன்பம் உயிரை விட்டவனுக்கு இராது; பிறர்க்கு ஏற்படும். ஒழுக்கத்தைக் கைவிட்டால் அதனால் வருந்தும் துன்பம் பிறர்க்கில்லை. அதைக் கைவிட்டவனுக்கே அவ்வவல நிலை ஏற்படும். உயிர் ஒருவனை நல்வழிப்படுத்தும். சில வேளைகளில் அல்வழிப்படுத்தவும் செய்யும். ஒழுக்கமோ அவ்வாறில்லை. ஒழுகுவாரை நல்வழிப்படுத்தி அவர்க்கு நற்பெயரையும் புகழையும் நல்கும். உயிரிழந்தால் இழப்பது உயிரை மட்டுமல்ல, பழி படர் சொல்லையும் அதன் வழி இழக்கலாம். ஒழுக்கம் இழந்தால் அவன் மட்டும் வாழ்வதில்லை. பழிபடர் சொல்லும் அவன் பக்கலே நிற்கும். உயிருடைய மாந்தரனைவரும் உயர்ந்தவர் ஆகார். ஒழுக்கமுடைய ஒருசிலரே உயர்ந்தவராக உலக வரலாற்று ஏட்டில் இடம் பெறுகின்றனர். இவற்றையெல்லாம் நுட்பமாகச் சிந்தித்ததால்தான் ஒழுக்கத்தை 'உயிர்போல ஓம்புக' என்னாது 'உயிரினும் அதனை ஓம்புக' என்று வள்ளுவர் வேண்டுகிறார். மக்களாகப் பிறந்து, மக்களாகவே வாழ்ந்து, மக்களாவே மடிய விரும்பும் எவரும் ஒழுக்கத்தைப் போற்றும் கடப்பாடுடையவர் என்பதனை அறிவுறுத்தும் சொல்லே 'ஓம்பப்படும்' என்பதாகும். அப்படியானால் அணிகள், மாட மாளிகைகள், ஆடு மாடுகள், அலங்கார வகைகள், பொன் பொருள்கள், நீர் நிலங்கள், வண்டி வாகனங்கள் இவற்றுள் எதுவும் விழுப்பம் தராது எனவும் வள்ளுவர் அறிவுறுத்துகின்றார். இனி முழுக்குறளையும் எண்ணிப் பார்ப்போம்.

" ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் ".

வள்ளுவர் செய்தக்க அல்ல செய்வதாலும் செய்தக்க செய்யாமையாலும் நிகழும் கேடுகளை விளக்கியுள்ளார். தன் குற்றம் பெருக்கல், சோர்விற்கு உரம் ஊட்டல், குடிப்பெருமை பேணாது குடித்தல், செல்வநிலையாமையை உணராமல் அதன் செருக்கில் மிதத்தல், கயமையைக் கட்டவிழ்த்து விடுதல் என்பனவெல்லாம் செய்தக்க அல்ல செய்வனவற்றுள் அடங்கும். ஒழுக்கத்தை உயிரினும் மேலாக உயர்வாகக் கருதிப்பேணாமை செய்தக்க செய்யாதவற்றுள் அடங்கும். செய்தக்க அல்லன செய்வதில் இருந்து விடுபடுவோம். செய்தக்கதைச் செய்யப் பழகுவோம்.

5 மதுரைக் காஞ்சி

மதுரைக் கரஞ்சி என்னும் நூல் பற்றிச் சிந்திக்கப் புகுமுன், நூலாசிரியர் பற்றிய சிந்தனை அலைகளை முதற்கண் எழுப்புவோம். 'மாங்குடி மருதனார் கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவர்; மதுரைக்காஞ்சி பாடியவர். இவர் ஊர் சோழ நாடு மாங்குடியாய் இருக்கலாம். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனால்உய்விக்கப்பட்டவர் ' என இவர் பற்றிய செய்திகளை அபிதான சிந்தாமணி அறிவிக்கின்றது.

' மாங்குடி மருதனார் சங்ககாலப்புலவராவார்; பத்துப்பாட்டுள் ஒன்றாகிய மதுரைக்காஞ்சியை இயற்றியவர் ; மதுரைக்காஞ்சியில் நிலையாமைப் பொருள்தரும் காஞ்சித்திணையைச் சிறப்புற விளக்கிய ஆற்றலால் இவரை மதுரைக்காஞ்சிப் புலவர் என்றும் காஞ்சிப்புலவர் என்றும் பாராட்டினர். மாங்குடிக்கிழார் என்னும் புலவரொருவர் இயற்றிய செய்யுள்கள் கருத்திலும் சொல்லமைப்பிலும் மருதனாரின் செய்யுள்களுடன் ஒத்திருப்பதால் அவரும் இவரும் ஒருவரே எனக் கருதுவதற்கு இடமுண்டு. பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைச் சிறப்பித்துப் பாடியதே மதுரைக்காஞ்சி. அப்பாண்டியன் இவரைப் பாராட்டி,

'' ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தகைவ ணுக
உலகமொடு நிலையிய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைக வென்னிலவரை''

எனத் தன் வஞ்சினத்தில் கூறியதால் இவரிடம் அவன் வைத்திருந்த மதிப்பு விளங்குமென' மருதனார் பற்றிக்கலைக் களஞ்சியம் குறிப்பிடுகின்றது. ஆனால் இவர் பிறந்த இடம் இதுவென இக்களஞ்சியம் காட்டவில்லை.

'மதுரைக்காஞ்சி என்னும் இன்சுவைப் பனுவலை இயற்றியவர் மாங்குடி மருதனார் என்னும் நல்லிசைப் புலவராவார். மாங்குடிக்கிழார், மதுரைக்காஞ்சிப் புலவர், காஞ்சிப்புலவர் என்னும் பெயர்களாலும் இவர் வழங்கப்படுகின்றார். இவர் வேளாண் மரபினர் என்பர். தொல்காப்பியத்தில் புறத்திணையைப் பற்றி எழுந்த போர்த்துறைகளுக்கு இவர் பாடிய மதுரைக்காஞ்சி எடுத்துக்காட்டுகள் பலவுடைத்து. இம்மதுரைக் காஞ்சியே அன்றி, நற்றிணையில் 2, குறுந்தொகையில் 3, அகநானூற்றில் 1, புறநானூற்றில் 6 பாடல்களையும் திருவள்ளுவமாலையில் 24 ஆம் பாடலையும் பாடியுள்ளார். இவர் காலத்துப் புலவர்கள் குடபுலவியனார், கல்லாடனார், இடைக்குன்றூர்க்கிழார், நக்கீரர் முதலியோர் ஆவர்' என்று இவர் பற்றிய

'செய்திகளைச் செப்பும் பத்துப்பாட்டின் உரையாசிரியர்' பெருமழைப்புலவர் சோமசுந்தரனாரும் இவர் பிறப்பிடம் பற்றி எதுவும் குறித்தாரில்லை.

இனி நூல்பற்றிய செய்திகளைச் சிந்தனையில் பதிப்போம். பத்துப்பாட்டினுள் மதுரைக்காஞ்சி ஆறாவது நூலாக அணி செய்கின்றது. பத்துப்பாட்டினுள் இதுவே மிகுதியான அடிகளை உடையது. 782 அடிகளால் இந்நூல் இயன்றுள்ளதால் ' பெருவள மதுரைக்காஞ்சி 'என்ற நல்லடையினை இந்நூல் பெற்றுள்ளது. இந்நெடியபாட்டினைப் பயில்வோர் உணர்வு சலியாமைப் பொருட்டு இனிய வஞ்சியடிகளையும் ஆசிரிய அடிகளையும் விரவி இப்பாடலை இவர் யாத்துள்ளார். மதுரைக்காஞ்சி என்னும் இத்தீஞ்சுவைப் பனுவலின் சொற்பொருள் இன்பங்களில் தோய்ந்த பிற்றைநாள் சான்றோரொருவர் அப்பனுவலைப் புகழ்வோராய்,

" சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென்னும்
நல்லிருந் தீந்தாது நாறுதலான் - மல்லிகையின்
வண்டார் கமழ்தாம மன்றே மலையாத
தண்டாரான் கூடற் றமிழ் "

என்னும் அருமையான வெண்பா ஒன்றினை அப்பனுவலுக்குப் பாயிரமாக யாத்து அமைத்துள்ளார்.

வீடுபேறு நிமித்தமாக உயிரும் யாக்கையும் செல்வமும் இனிமையும் முதலான பல்வேறு நிலையாமையைச் சான்றோர் சாற்றுங்குறிப்பே காஞ்சியாகும். மதுரைக்காஞ்சி என்னும் தொடரை மதுரையிடத்து அரசர்க்குக் கூறிய காஞ்சி என விரிப்பர் நச்சினார்க்கினியர். நிலையாக நிற்கும் ஒன்றினைச் சுட்டிக்காட்டி, அதன்படி வாழ்ந்து, நிலையாமையை வெல்லுவதே காஞ்சியாகும். உடலை வருத்துவோர் ஒருபுறம்; உடலைக் கொழுக்க வைத்து இன்பம் துய்க்க வேண்டுமென்றெண்ணி இன்பமே காணாது போவோர் ஒருபுறம். இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட நல்வாழ்வே மதுரைக்காஞ்சி கூறும் வாழ்வாகும்.

பாட்டுடைத்தலைவன் பாண்டியன் நெடுஞ்செழியனே :

மிக இளமையில் தலையாலங்கானத்தில் தன்னுடன் முரண்பட்டு அருஞ்சமர் முருக்கிய எழுவரை வென்றவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனாவான். இளமை முறுக்கேறி இருந்ததால் பிறர் மண்ணை வவ்வும் ஆசை கடலென விரிந்தது. அதன் விளைவாய் வேள் எவ்வியின் மிழலைக் கூற்றமும் பழைய வேளிர்தம் முத்தூற்றுக் கூற்றமும் அவன் பிடியில் அடங்கின.

வயதோ இளமை; வளர்ந்துள்ள உணர்வுகளோ துடுக்கும் மிடுக்கும்; அடைந்ததோ அடுக்கடுக்கான வெற்றிகள்; கேட்கவா வேண்டும்? வெற்றி மிதப்பில் பாண்டியன் திளைத்தான்; புகழேணியில் ஏறினான். இடைக்குன்றூர்க்கிழார், கல்லாடனார், குடபுலவியனார் ஆகிய புலவர்கள் அவனுக்கு வாழ்வின் இறுதி இலக்கினை உறுதிப்படுத்திக் காட்டினர். அவர்தம்அறிவுரையெல்லாம் விழலுக்கிறைத்த நீராய் முடிந்தன. இந்நெருக்கடியில் தான் மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சியை மலரச் செய்தார்; பாண்டியன் நெஞ்சில் நல்லுணர்வை வளர்ச் செய்தார்.

இம்மதுரைக்காஞ்சியின் கண் அம்மன்னன் விரும்பும்சிறப்புக்களையே புகழ்வார்போன்று பாடிய பகுதியே மிக்கிருக்கின்றன: எனினும் தம் கருத்தாகிய நிலையாமையை உணர்த்துதலையே யாண்டும் குறிப்பாகப் புலப்படுத்தியுள்ள இவர் வித்தகம் உன்னி,உன்னி மகிழ்தற்குரியது. நூலின் தொடக்க வரிகளே இன்பத்தொடக்கம் இதுவென அறிவிக்கும் வரிகளாகும். உலகம் அலையெழும் கடலை ஆடையாக உடையது. இருப்பினும் நிலையிற் திரியாது அடங்கிய நீள் மலைகளும் இவ்வுலகில் உண்டு. மலைக்குவடுகளில் தேன்கூடுகள். அலைகடல் போன்ற மனிதவுள்ளம். அலைப்புண்டு தாக்குதலும் கலக்கமுறச் செய்யும் கடலைக்கருதாது ஓங்கியுயர்ந்த மலைகளைமலைவின்றி ஏறினால் அவற்றின் கொடுமுடியில் வீட்டின்பத்தைக் கூடச்செய்யும் தேன்கூடுகளைக் காணலாம்; கைப்பற்றலாம். ' ஏ ' மனித மனமே ! அழிவை அகற்றி ஆக்கம் பெறுவாயாக ! ' இக்கருத்துக்களையே,

" ஓங்குதிரை வியன்பரப்பின்
ஒலிமுந்நீர் வரம்பாகத்
தேன்தூங்கு முயர்சிமைய்
மலைநாறிய வியன்ஞாலத்து "

என்னும் கவிதை வரிகளாக மதுரைக்காஞ்சி காட்டுகின்றது.

எங்கு நோக்கினும் இயற்கைக் காட்சியின் ஆட்சி! காணும் கண்களுக்கோ மகிழ்வின் நீட்சி ! எனப் பொருள்படுமாறு,

"கண்டுதண்டாக் கட்கின்பத்து
உண்டுதண்டா மிகுவளத்தான் "

என்று பாடும் பொழுதே மன்னன் மனத்தில் ஓர் உண்மையைப் பதிய வைக்கிறார். இயற்கை தன் கடனாற்றிக் காண்பார் கண்ணையும் குளிரச் செய்கின்றதே! அப்படியாகின் இயற்கையை வெல்லும் நிலையில் உலகிற்கு 'உன்பயன் செல்ல வேண்டாவோ' என நுட்பமாக நூலாசிரியர் மன்னனை வினவுகின்றார்.

நேரிடையாக நிலையாமையை வலியுறுத்தினால் தம் கருத்தும் நிலையாமைக்கு உட்படும் எனத் தெள்ளிதின் உணர்ந்த கவிஞர் மன்னனின் இதயத்தைத் தம்பால் ஈர்த்துக் கொள்ளும் வகையில் அவன் இசை வாழ்வினை முதற்கண் இசைக்கத் தொடங்குகின்றார். ' தென்குமரி, வடபெருங்கடல்,குணகுடகடல்கள் ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்ட நாட்டின் நாயகன் நீ ! உன்னை நட்டவர் குடியை உயர்த்தும் உரவோன் நீ ! செற்றவர் அரசைப் பெயர்க்கும் பெருந்திறலன் நீ ! பிறர்க்கு அரியன எல்லாம் எளிதினிற் கொள்ளும் ஏற்றம் பெற்றவன் நீ ! உனக்கு உரியனவெல்லாம் தனக்கென ஓம்பாது பிறர்க்கு வழங்கும் வள்ளல் நீ ! உளமெல்லாம் வரம்பிகந்து வாய்த்திருப்பினும் அமைதியுறாமல் போர் ஏற்றெழுந்து, பனிபடர் சிமையக்கானம் கடப்பவன் நீ! பகைவர் அகநாடு புக்கு, அவர் அரணையெல்லாம் தன்னிடத்தே தங்கவைக்கும் தகுதியுடையவன் நீ ! '

புகழ்வரிகள் கேட்ட மன்னன் மனம் புலவரையே புகலிடமாகக் கொள்கின்றது. விடுவாரா புலவர் ! மன்னனின் வெற்றிப் பரணி பாடிய அவரே பகைவர் நாடு படும் துன்பத்தையும் சொல்லோவியமாக்கிக் காட்டுகின்றார்.

" வாழா மையின் வழிதவக் கெட்டுப்
பாழா யினநின் பகைவர் தேஎம் "

என்று பகைப்புலம் படும்பாட்டைப் பாட்டில் வடித்துக் காட்டுகின்றார். அவனின் எழுச்சி பிறரின் வீழ்ச்சி, அவனின் இன்பம் அடுத்தவர்க்கு இடுக்கண். அவன் வாழ்வு மற்றவர்க்குத் தாழ்வு என்று புலவர் சுட்டுகின்றார். அவன் எழுச்சியே அவனை அழிக்கும் எமனாக உருவாவதைத் தடுக்க எண்ணினார்.

" உன்நாடு மக்கள் உறையும் இன்பக்கூடு; எனவே மனித வெள்ளம் மகிழ்வால் கூடி ஆடுகிறது. அதனால் புலவர்களின் புகழ்மொழிக்கு உன்நாடு பாத்திரமாகிறது. உன் நன்னாடே பாடல் சான்றதாய் ஆகும் பொழுது நிலைப்புகழ் பெற நீ நினைக்கவில்லையா? நினைக்க வேண்டாமா?" இப்படி ஓர் எண்ணத்தைப் பாண்டியன் உள்ளத்தில் கவிஞர் மெல்லப் படரவிடுகிறார். அடுத்து மன்னன் ஊரின் அகக்காட்சி காட்டி,மன்னன் அகத்தில் உண்மை ஊறுமாறு செய்கிறார். யாறு கிடந்தன்ன அகல் நெடுந்தெருக்கள், வானை மூழ்கச்செய்யும் வளமாடங்கள், மாடங்களின் நிழலில் அமர்ந்தும் திரிந்தும் பண்டம் விலை பகரும் வணிகர்கள், நடுவில் நால்வகைப்படைகளின் எதிர்பாரா நடமாட்டம். அம்மம்ம! வணிகர் மருண்டு உயிரைக் கையில் தாங்கி நிற்கும் தளர்வுறு காட்சி. படைவரவையும், அதனாலான மக்கள் பரிதவிப்பையும் சுட்டிக் காட்டும் கவிஞர் படையெடுப்பால் மன்னன் பகைவர் என்ன படுவர் என எண்ணிப் பார்க்கச் செய்கிறார்.

பொய்ப்பொருளைப் பெற வணிகர் அலைகின்றனர். மெய்ப்பொருளை 'நீ நாடுவது என்று'? எனக் கவிஞர் கேளாமல் கேட்கிறார்.

மீண்டும் இரவு நேர நகரக்காட்சிக்கு நம்மைக் கவிஞர் நகர்த்துகிறார். ஓசைகள் ஒவ்வொன்றாய் ஒய்கின்றன. கடைகள் அடைக்கப்படுகின்றன. மகளிர் மஞ்சத்துள் தஞ்சம் புகுந்துள்ளனர். கொழுக்கட்டையைக் கூவி விற்பவர் அரைத்தூக்கத்தில் அமைந்துள்ளனர். பேய்களும் கழுகுகளும் அணங்குகளும் வழிகளில் திரிகின்றன. க்ரிய ஆடை அணிந்து, கருவிகளைக் கையிலேந்திக் காலில் செருப்பு அணிந்து, நூல் ஏணியைத் தோளிலே சார்த்திக் களவுத்தொழிலைக் கற்றுத் துறைபோய கள்வர்கள் உன் ஊருள் திரிகின்றனர். .நீ இருக்கும் பொழுதிலேயே ஊரைக் கொள்ளையடிக்கக் கள்வர் அலைகின்றனர். ஊரைக் காக்க முடியாத நீ உலகைக் கவர்ந்து என் செய்ய? ஊரைக் காக்கும் உரமற்ற நீ உன் உடலாகிய ஊரை எங்ஙனம் காக்கப் போகிறாய்? அங்கே ஒருவரல்ல கள்ளர். ஐவரல்லவா? " என்ற குறிப்பினையும் கவிஞர் தருகிறார். நிறைவாக மன்னன் பரம்பரையினரின் மாண்பினை விதந்து ஓதி, அன்னாரின் நன்னர் வாழ்வை அவனையும் நாடச் செய்கிறார். " உன் முன்னோர் உலக இயல்பினை உணர்ந்தவர் ஆவர். பல்வேறு நல்வேள்விகள் ஆற்றித் தொல்லாணை நல்லாசிரியர்கள் பெற்றுத் துய்த்த இறை உணர்வை அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி நின் முன்னோன் ஆவான். நிலந்தரு திருவின் நெடியோனும் அத்தகையனே. அவர்களைப் போல் நல் ஆசான்களைச் சார்ந்து அறிவினைப் பெறுவாயாக. ஒரே ஒரு பொய்யால் அமிழ்தமே கிட்டுவதாயினும் பொய்யைப் போக்கி, மெய்ம்மையை நட்பாக்கிக் கொள்க. தென்திசை மலைகளிலெல்லாம் வாணன் சேர்த்து வைத்துள்ள செல்வமே வரினும் பழி சூடற்க. நின்னுள்ளிலிருந்து நின்னை இயக்கும் மாயை மலிந்து மடிவதாக. என்னாற் காட்டுவதற்கு அரிதாயினும் பெரியதொரு பொருளையே நான் பேசுவேன். ஈதாலைவெலாம் உன் புகழ் தொலையாது நிற்பதாக " என்னும் பொருள்படும் நிலையில்,

" உயர்நிலை யுலகம் அமிழ்தொடு பெறினும்
பொய்சேண் நீங்கிய வாய்நட் பினையே
முழங்குகட லேணி மலர்தலை உலகமொடு
உயர்ந்த தேஎத்து விழுமியோர் வரினும்
பகைவர்க் கஞ்சிப் பணிந்தொழு கலையே
தென்புல மருங்கின் விண்டு நிறைய
வாணன் வைத்த விழுநிதி பெறினும்
பழி நமக் கெழுக வென்னுய் விழுநிதி,

ஈத லுள்ளமொடு இசைவேட் குவையே
கேட்டிசின்! வாழி ! கெடுக நின் அவலம்
கெடாது நிலைஇயர்நின் சேண்விளங்கு நல்லிசை "

எனக் கவிஞர் பாடி மன்னனுக்கு வாழ்வாங்கு வாழும் நெறியை வகுத்துக் காட்டுகிறார்.

வகுத்துக் காட்டியிருப்பது மன்னனுக்கு மட்டுமன்று, இம்மன்பதைக்கும் உரியது. மதுரைக் காஞ்சியின் வாயிலாக ஏறத்தாழ ஈராயிர ஆண்டுகட்கு முன் இருந்த தமிழக மாண்பும் ஆட்சி முறைமையும் ஆட்சித்தலைவரின் அறம்திறம்பா மாட்சியும் அரசு கட்டிலேறுவார் மிக்க இளைஞராமினும் அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், இந்நான்கிலும் தக்காராமிருந்து, ஒருவராய் ஒருகளத்து ஓரிடத்தும் பலருடன் ஒருங்கு போருடற்றி, மேலாம் வெற்றி எய்தி மேம்படும் புகழினையும் புலவர் பெருமக்கள் அத்தகைய வேந்தரையும் இடம் அறிந்து உரைத்துக் கடனறியச் செய்வர் என்பதனையும் செவ்விதின் உணரலாம்.

6 சேக்கிழார் மாக்கதை

தமிழகச் சமயம் :

உலகில் மக்கள் பேசும் அனைத்து மொழிகளிலும் இறைவன் தொடர்பான இலக்கியம் உண்டென்று கூறலாம். தமிழல்லாத ஏனைய மொழிகள் ஏனைய இலக்கியங்கள் மிகுதியாகவும் சமய இலக்கியம் ஓரளவு குறைவாகவும் பெற்றுள்ளன. ஆனால் தமிழ் மொழியில் சமய இலக்கியம் ஏனைய இலக்கியத்துடன் போட்டி போடும் அளவிற்கு மிகுந்து காணப்படுகின்றது. உலக மொழிகளின் மிகச் சிறந்த பக்திப்பாடல்கள் தமிழ்தான் பெற்றுள்ளது. சங்க காலத்திலிருந்து இற்றை நாள் வரை வளர்ந்து வந்துள்ள சமயப் போக்கினைப் பற்றி எண்ணிப் பார்ப்போம்.

1. சங்க இலக்கியத் தொகுப்பு :

எட்டுத்தொகை நூல்கள் - கடவுள் வாழ்த்துப் பாடல்கள்,
ஆங்காங்கே கடவுள் பற்றிக் காணப்படும் குறிப்புக்கள்.

பத்துப்பாட்டு - திருமுருகாற்றுப்படை.

2. சிலப்பதிகாரம் - வேடர் வழிபாடு, ஆயர் வழிபாடு,
குன்றக்குரவை.

மணிமேகலை - புத்தம் பரப்புதல்.

3. கொங்குவேள் மாக்கதை - சைன சமயப் பல கருத்துக்கள்.

4. கி.பி. 7 - 10ஆம் நூற்றாண்டு வரை சமய இலக்கிய ஆட்சி, தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், திருமந்திரம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு போல்வன.

5. 10ஆம் நூற்றாண்டு - சிந்தாமணி.

6. 12 ஆம் நூற்றாண்டு - பெரிய புராணம், 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி - கம்பராமாயணம்.

12ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட காலம் முதல் நேற்றுவரை தோன்றிய தமிழ் நூல்கள் எண்ணிறந்தன. அவற்றிற்கெல்லாம் புற்றீசல் வாழ்வே. பிறந்தவுடன் இறந்தவை பல உண்டு. ஆனால் காலத்தை வென்றவர்கள் குமரகுருபரரும் சிவப்பிரகாசரும் ஆவர். இவ்விடைக்காலத்தில் தோன்றிய தலபுராணம், உலா, பிள்ளைத்தமிழ், தூது, கலம்பகம், குறவஞ்சி இவற்றுள் எவை சமயத்தொடர்பு இல்லாதவை? அனைத்தும் சமயத் தொடர்புடன் தான் காணப்படுகின்றன. கவிதையில் புரட்சியைப் புகுத்திய கவியரசன் பாரதியும் 'பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம், பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்' என்றல்லவா பாடினான்.

இலக்கியம் ஒரு பக்கம் இருக்கட்டும். தொல்காப்பியம் முதல் புறப்பொருள் வெண்பா மாலை ஈறாக உள்ள இலக்கண நூல்களும் சூடாமணி, பிங்கலந்தை நிகண்டுகளும் சமயத் தொடர்புடையவையே ஆகும். இவை ஒருபுறம் இருக்கட்டும். வேற்றுச் சமயத்தவர்கள் இயற்றிய நூல்களும் சமயச் சார்புடையனவே ஆகும். கிருட்டிணப்பிள்ளையின் இரட்சணிய யாத்திரிகம் முதல் உமறுப்புலவரின் சீறாப்புராணம் வரையிலும் உள்ள அனைத்தும் சமய இலக்கியங்களே.

பெரியபுராணமும் சேக்கிழார் புராணமும் :

சேக்கிழார் புராணம் என்ற வரலாற்று நூல் இந்நூல் எழுந்தது பற்றி இரு செய்திகளைக் குறிப்பிட்டுள்ளன.

நூலாசிரியர் மன்னன் சைவ இலக்கியத்தில் ஈடுபடாது சைன இலக்கியத்தில் ஈடுபட்டதாகக் குறிப்பிடுகின்றார். இதனை உறுதிப்படுத்த வேறு சான்று எதுவுமில்லை. மன்னன் அதைப்படிப்பதாலோ அல்லது பிறர் படிக்கக் கேட்பதாலோ இழுக்கு ஒன்றுமில்லை. இதனால் சமய மாற்றம் எழும் என்பதை நம்புவதற்கில்லை. சேக்கிழாரே சிந்தாமணியைச் செவ்வையாகப் படித்தார் என்பதை அவரது நூலே உணர்த்தும். சான்றாக ஒன்றிரண்டைக் காட்டலாம் :

பசிய வயல்களின் இடையிலுள்ள தாமரை மலர்கள் மீது சங்குகள் காணப்படுகின்றன. இதனை விளக்க வந்த சேக்கிழார் ஊர் கோளால் சூழப்பட்ட மதியின் தோற்றம் என்னும் உவமையைக் கையாண்டுள்ளார். இவ்வுவமையைச் சிந்தாமணியும் கீழ்வருமாறு சுட்டுகின்றது :

' கட்டழற் கதிரை ஊர்கோள் வளைத்தவா
வளைத்துக் கொண்டார் '

கண்ணப்பர் சிவனிடம் கொண்ட ஈடுபாட்டை எடுத்துக் காட்டவந்த சேக்கிழார் பின்வரும் உவமையைப் பயன்படுத்துகின்றார் :

' வங்கினைப் பற்றிப் போகா வல்லுடும்பன்ன
நீங்கான் '

இதே உவமை சிந்தாமணியிலும் காணப்படுகின்றது.

' தணக்கிறப் பறித்தபோதும் தானளை விடுத்தல்
செல்லா நிணப்புடை உடும்பு
அன்னாரை '

சோழர் காலத்து முதற்காப்பியம் சிந்தாமணியாகும். இதனை அடுத்து எழுந்தது பெரியபுராணமாகும். பெரியபுராணத்தை அடுத்து எழுந்தது இராமாயணமாகும். சேக்கிழார் சிந்தாமணியை நன்றாகப் படித்ததைப் போலவே கம்பர் சிந்தாமணியையும்

பெரியபுராணத்தையும் அழுத்தமாகப் படித்துள்ளார் என்பது அவரது இராமாயணம் கொண்டு கூறலாம். சிந்தாமணியைத் தக்கவாறு நூலில் பயன்படுத்திக்கொண்ட சேக்கிழார் மன்னன் மட்டும் படித்தல் கூடாது என்று தடுத்ததாகக் கூறுவது அவரது பெரும் புலமைக்கும் தலைமையமைச்சர் பதவிச் சிறப்பிற்கும் ஏற்றதாகாது.

2. 'சிவகதை கேட்டல் நல்லது' என்று சேக்கிழார் கூறக்கேட்ட சோழ மன்னன் நாயன்மார் பெயர்களைக் கூட அறியாத பாமரனாய் இருந்து, ' நவகதையோ ! புராணமோ ! முன்னூல் உண்டோ? நானிலத்திற் சொன்னவர் யார்? கேட்பவர் யார்? ' எனப் பலவாறு வெளிநாட்டான் ஒருவன் கேட்டாற்போலக்கூறப்படும் வினாக்கள் சோழர் வரலாற்றை அறிந்த அறிஞர் நகைக்கத் தக்கனவாகும். சோழர் சைவ சமயத்தைத் தம் உயிர் போலக் கருதிப் பாதுகாத்து வளர்த்து வந்தவர் என்பது வரலாறு கூறும் உண்மையாகும். அநபாயன் கனவிலும் சிவத் தொண்டை மறவாத சோழர் மரபில் வந்தவனாவான். சைவ நன்மரபில் பிறந்து வளர்ந்த அநபாயன் நாயன்மார் வரலாறுகளை அறியாத முழு மூடனாக இருந்தான் என்று சேக்கிழார் புராண ஆசிரியர் கூறியிருத்தல் உண்மைக்குப் புறம்பானதாகும்.

சேக்கிழார் புலமைச் சிறப்பு :

" தூக்கு சீர் திருத்தொண்டத்
தொகை விரி
வாக்கினாற் சொலவல்ல
பிரான் எங்கள்
பாக்கியப் பயனாய்ப் பதி
குன்றை வாழ்
சேக்கிழான் அடி சென்னி
இருத்துவாம் " என்றும்

" திருத்தொண்டை நன்னாட்டு நானிலத்தைந்திணை வளமும்
தெரித்துக் காட்ட
மருத்தொண்டை ஆய்ச்சியர் சூழ் குன்றை நகர்க்
குலக் கவியே வல்லான் அல்லாற்
கருத்தொண்டர் எம்போல்வார் எவ்வாறு
தெரிந்துரைப்பார்? " என்றும் சேக்கிழாரின் மதி நலனைக் காஞ்சிபுராண

ஆசிரியர் பாராட்டி மகிழ்கின்றார்.

" கருங்கடலைக் கைநீத்துக்கொள எளிது முந்நீர்க்
கடற்கரையின் நொய்மணலை எண்ணி அளவிடலாம்
பெருங்கடல்மேல் வருதிரையை ஒன்றிரண்டு எண்ணிப்
பிரித்தெழுதிக் கடையிலக்கம் பிரித்து விடலாகும்

தருங்கடலின் மீனை அளவிடலாகும் வானத்
தாரகையை அளவிடலாம் சங்கரன்தாள் தமது
சிரங்கொள் திருத்தொண்டர் புராணத்தை அளவிட நற்
சேக்கிழார்க்கு எளிதலது தேவர்க்கும் அரிதே "

என்று பெரியபுராணத்தின் பெருமை பற்றி உமாபதி சிவாச்சாரியார் குறிப்பிடுகின்றார்.

" ஞாலமலை கடல் தண்ணில் பெரியதெது
என எடுத்து ஞாலம் ஆள் செங்
கோலனநபாயன் வினாவிய முத்
திறக்குறிப்பைக் குறிப்பின் ஓர்ந்து
சால உயர் திருக்குறள் மூன்று இறையாக
எழுதியவன் அரசு தாங்கி
வாலறிவால் திருத்தொண்டர் புகழ்விரித்த
சேக்கிழார் மலர்த்தாள் போற்றி "

என்று சபாபதிப் பாவலர் சேக்கிழார் புலமையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

கம்பர் காளியின் வரம் பெற்றவர் எனக் கூறப்படுகின்றது. இவ்வாய்ப்பைப் பெற்றுக் கம்பர் தம் நூலைக் கடவுள் வணக்கத்துடன் தொடங்குவதற்கு எச் சொல்லையோ, தொடரையோ அத்தேவியின் வழிப் பெற்றிலர். ஆகவே தாம் அந்நிலையைப் பெறாத காரணத்தால் கூத்தப் பெருமான் திருவருளால் 'உலகெலாம்' என்னும் தொடரைச் சேக்கிழார் பெற்று அதனைத் தம் நூலிற்கு மகுடமாகக் கொண்டு பாடியுள்ளார். அதனையே தம் நூலிற்குத் தொடக்கமாக இருக்க வேண்டும் என்ற கருத்தில் 'உலகம் யாவையும்' என்றே தம் நூலைக் கம்பர் தொடங்கியுள்ளார்.

இதில் ஒரு கருத்து வேறுபாடு சிந்திக்கத்தக்கது. அம்பலவாணர் எடுத்துக்கொடுத்த தொடர் 'உலகெலாம்' என்பதுதான். ஜி.யு.போப் இதனை உணராது', உலகெலாம் உணர்ந்து ஒதற்கு அரியவன்' எனும் அடியினையே கூத்தப்பெருமான் எடுத்துத் தந்ததாகத் தம் திருவாசக மொழிபெயர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.' Reference and Bibilyographical notes' என்றும் தலைப்பில் மூன்றாம் பக்கத்தில்,

" In response a noise was heard from the shrine which uttered the line. This both the poet and the three thousand devotees of the temple heard, and understood that the god sanctioned the undertaking and commanded that poem should commence with this line."

என்ற குறிப்பைப் போப் இடம்பெறச் செய்துள்ளார். அவர்க்குத் தாம் எழுதும் குறிப்புத் தவறாகவும் இருக்கவும் கூடும் என்ற எண்ணமும் இருந்திருக்க வேண்டும். அதனால் தான் தம் பெரும் தகைமையும் பணிவும் தோன்ற,

" If in this work any one word of Mine should give pain to any of my valued Tamil friends, I ask forgiveness in advance " என்றும் எழுதியுள்ளார்.

நூற்பெயர் :

சேக்கிழார் பெருமகன் தாம் இயற்றிய நூலுக்குப் பெரியபுராணம் என்று பெயர் வைக்கவில்லை. ஆனால் கீழ்வருமாறு ஒரு குறிப்புத் தந்துள்ளார்.

" எடுக்கும் மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்களிற்றைக் கருத்துள் இருத்துவாம்".

கதை என்றால் புராணம் எனப் பொருள்படும். மாக்கதை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். ஏன்? எண்ணிக்கையினால் இது பெரியபுராணம் ஆகாது. மிக எளிமையாக வாழ்ந்தவர்களின் வரலாறுதான் இக்காப்பியத்தில் காணக்கிடக்கின்றது. இது தொண்டர் புராணமாகும். ஞானத்தாயாகிய தமிழ்க்கிழவி ஞான பண்டிதனான தமிழ்க்குழவியைச் சந்திக்கின்றாள். பெரியது எது? எனக் குன்றக்குமரன் கேட்கின்றான். விடையாகத் தமிழ்க்கிழவி,

" பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது " எனத் தொடங்கித் தொண்டர் தம் பெருமை பெரிதென்றும் இறைவனே அத்தொண்டர் தம் உள்ளத்துள் ஒடுங்கியுள்ளார் என்றும் அடியார் பெருமை அளவிடமுடியாது என்றும் குறிப்பிட்டுப் பாடலை முடித்துள்ளார். பதினாமிரத்திற்கும் மேற்பட்ட இராமாயணம், பாரதம், கந்தபுராணம் இவற்றிற்கெல்லாம் பெரியபுராணம் என்ற பெயர் கிடையாது. ஏறத்தாழ நாலாயிரம் பாடல்கள் உள்ள திருத்தொண்டர் புராணம் மட்டும் பெரியபுராணம் என்று அழைக்கப்படுகின்றது.

" ஈ என இரத்தல் இழிந்தன்று அதனெதிர்.
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று "

என்னும் புறநானூற்று வரிகளுக்கு இலக்கியமாகப் பெரியபுராண அடியார்கள் விளங்கினர். பெரிய புராண அடியார்கள் 'கொடு' என்று எவரிடமும் எதனையும் கேட்டதில்லை. அவர்கள் நாடியதெல்லாம் கூடும் அன்பினில் கும்பிடுதலே ஆகும். சிவபெருமான் அருளும் வீட்டுப் பேற்றையே வேண்டாம் என்று கூறியவர்களின் கதைகள் அல்லவா. ! அதனால்தான் இது மாக்கதை என அழைக்கப்படுகின்றது.

" அளவிலாத பெருமையராகிய
அளவிலா அடியார்புகழ் கூறுகேன்
அளவுகூட உரைப்பது அரிதாயினும்
அளவில் ஆசை துரப்ப அறைகுவேன் "

எனப்பாடுகின்றார் சேக்கிழார். கம்பரும், 'ஆசை பற்றி அறையலுற்றேன்' என்றார். பலா வெளிப்பார்வையில் அழகில்லை. உள்ளே தேனினும் இனிக்கும் சுளைகள். எட்டிப்பழம் பார்க்க அழகாய் உள்ளது. ஆனால் உள்ளீடு இனிமையாக இராது. மாங்கனியோ பார்க்க அழகும் பருக இனிமையும் கலந்ததாகும். பெரியபுராணமும் மாங்கனிக்கு ஒப்பானதாகும்.

அடியார்களின் இயல்பு :

சேக்கிழார் கடவுள் பற்றிப் பாடவில்லை. அதுபோலவே மனிதரைப் பற்றியும் அவர் பாடவில்லை. அடியார்க்கு எளியராகிய கடவுளையும் கடவுளுக்கு அடிமை பூண்டு அவரைத் தம் திருவுளத்தில் எழுந்தருளச் செய்கின்ற அடியார் பெருமக்களைப் பற்றியுமே சேக்கிழார் பாடியுள்ளார். அடியார் வழிபட்ட கடவுள், கடவுள் வழிப்பட்ட அடியார்களை அவர் பாடினார். கயிலை உச்சியிலுள்ள கடவுளைப் பாடாமல் ஆரூர்த்திருவீதியில் நடந்த அண்டர் நாயகனை அவர் பாடினார். அரண்மனையில் வாழ்வோரை அவர் பாடவில்லை. அரனடிக்கு ஆளானோரையே அவர் பாடினார். வாழ்வாங்கு வாழ்ந்து வெற்றி பெற்ற நற்றவச் சான்றோர்களையே அவர் சிறப்பித்தார். அடியார்களுக்குப் பக்தி மிகவுண்டு. பக்திக்காக மட்டும் அவர்களை அவர் பாராட்டிப் பாடவில்லை. ஒழுக்கம், நோன்பு, செறிவு, அறிவு, ஆராஅன்பு, அருள் இவற்றிலெல்லாம் சிறந்து விளங்கியவர்களையே அவர் மதித்துள்ளார். வாழ்க்கையில் குறிக்கோள் கொண்டு, குறிக்கோளை அடையும் உறுதியும் பூண்டு, இன்ப துன்பங்களைப் பொருட்படுத்தாது குறிக்கோள் பயணம் செய்யும் தவச்செல்வர்களையே அவர் பாராட்டினார். மாதேவருக்கு ஏகாந்தராக ஒழுகித் தங்கள் வாழ்க்கையை உயர்த்திக் கொண்டவர்களாகிய அடியார் பெருமக்களின் வாழ்க்கையை எவ்வித வேறுபாடும் கருதாது திருத்தொண்டின் தகுதி ஒன்றையே அளவு கோலாகக் கருதிப் பெரியபுராணத்தைச் சேக்கிழார் பாடியுள்ளமை அ°து ஓர் உலகப்பொது நூல் என்பதற்குச் சான்றாகும்.

பெரியபுராணம் ஒரு புரட்சிக் காப்பியமாகும். அது ஒரு சமுதாயச் சீர்திருத்த நூலாகும். சேக்கிழார் வாழ்ந்த காலம் சாதி வேற்றுமைகள் கால்கொண்ட காலமாகும். சாதி வேற்றுமைகளைக் கடிந்து ஒதுக்காமல் ஒன்றில் ஒன்றை அவர் கலக்கச் செய்துள்ளார். அடியார்கள் பல்வேறு இனத்தைச் சார்ந்திருந்தாலும் அவர்களை ஒருவருடன் ஒருவரை உறவாடச் செய்துள்ளார். திராவிடச் சிசுவான ஞானசம்பந்தரைத் திருநீலகண்ட யாழ்ப்பாணருடன் கூடி மகிழச் செய்துள்ளார். அப்பூதியடிகளை அப்பரை வணங்கி வீடுபேறு பெறும் நிலைக்கு உரிமையாக்கியுள்ளார். கணிகையர் குலப்பரவையாரையும் வேளாண்குடிச்

சங்கிலியாரையும் இணைத்துக்காட்டியுள்ளார். சேக்கிழார் முன் மனுநீதிச் சோழனும் திருக்குறிப்புத் தொண்டனும் ஒரு தன்மையரே ஆவர். அவர்காட்டும் அடியார்கள் கேட்டையும் ஆக்கத்தையும் ஒரே தன்மையாகப் பாவிக்கின்றவர் ஆவர். ஓட்டையும் செம்பொன்னையும் அவர்கள் ஒக்கவே நோக்குவர். கூடும் அன்பினில் கும்பிடுதலைத் தவிர வீடும் வேண்டாத விறலினர் அவர்களாவர். அவர்கள் அணிந்த ஆரம் கண்டிகையாகும். உடுத்திய ஆடை கந்தையாகும். ஈசன் பணி தவிர வேறெதிலும் அவர்கள் ஈடுபடுவதில்லை. யாதும் குறைவில்லாத ஈர அன்பினராக அவர்கள் விளங்கினர். எனவேதான் ' வீரம் என்னால் விளம்பும் தகையதோ ' என அடியவர்களின் வீரத்தின்மையைச் சேக்கிழார் வியந்து பாராட்டியுள்ளார்.

சேக்கிழார் காட்டும் தொண்டுநிலை :

தொண்டு என்ற ஒரே ஒரு பண்பு ஓர் அடியாரை வாழ்நாள் முழுவதும் அழகிய இளம் மனைவியைத் தொடாமல் இருக்கச் செய்கின்றது. அதே பண்பு நம்பி ஆரூராரை இரு திருமணங்கள் செய்து கொள்ளச் செய்கிறது. சிறுத்தொண்டர் என்னும் அடியாரைத் தம் மகனை வாளால் அரிந்து கறி சமைக்கச் செய்கின்றது. சிவனுக்கென்று வைத்துவிட்டுப்போன நெல்லைப் பஞ்சகாலத்தில் உண்டுவிட்டார்கள் என்ற காரணத்தால் மனைவி, மக்கள், சுற்றத்தார்களைக் கொல்லுமாறு ஓரடியாரைச் (கோட்புலியார்) செய்விக்கின்றது. சிவலிங்கத்தின் மேல் சிலந்திப்பூச்சி ஊர்வதை வாயால் ஊதிப்போக்குமாறு ஓரம்மையாரைச் செய்வித்ததும் இத் தொண்டுதான். வாயுரல் ஊதித் தூய்மை கெடுமாறு செய்துவிட்டாள் என்று அதே மனைவியை ஓரடியாரைத் (திருநீலக்கர்) துறக்கச் செய்ததும் அத்தொண்டு மனப்பான்மையே ஆகும். அச்சிவலிங்கத்தின் மேல் நாளும் ஒரு கல்லை எடுத்து ஓர் அடியாரை (சாக்கியர்) அடிக்கச் செய்ததும் இத்தொண்டுணர்வே ஆகும். தொண்டுள்ளம் சிறுத்தொண்டரிடம் ஒருவகையாகவும் திருநீலக்கரிடம் மற்றொருவகையாகவும் அவர் மனைவியாரிடம் பிறிதொரு வகையாகவும் அமைந்துள்ளமையை உணரமுடிகிறது.

சேக்கிழார் புரட்சியுணர்வின் முன்னோடிகள் :

ஏழாம் நூற்றாண்டில் ஞாயிறு, திங்கள் என்ற இரு வான ஒளிக்கதிர்கள் சமய உலகில் விளங்கின. சம்பந்தரும் நாவுக்கரசருமே அவ்வொளிக்கதிர்களாகும். இருவரும் தோன்றவில்லையெனில் இசையும் கலையும் ஏது? உயிர்களை அன்பில் தோய்த்து வளர்க்கும் காதல் மனையற வாழ்க்கை ஏது? இன்பம் ஏது? இவையனைத்தையும் மறைத்து வாழ்க்கையை வறண்ட பாலைவனமாக்கும் புறநெறிகள் தலையெடுத்தபோது ஞானத்தின் திருவுருவாய் எழுந்தருளிய சம்பந்தர் அயல் வழக்கை வென்று தமிழ் வழக்கை நிலைபெறச் செய்தார். மனித இனத்தின் உரிமையை முடக்க அடிமைகொண்ட முடியரசை உலகினர் அஞ்சி, அஞ்சி உச்சி மேற்கொண்டு பாராட்டிக் கொண்டிருந்த போது அப்பரடிகள், ' நாமார்க்கும் குடியல்லோம் ' என முழங்கி முடியாட்சிக் கொள்கைக்கு எதிராக வீரக்குரல் எழுப்பினார். அரசனது ஆணை உலக நாடுகளில் தெய்வத்தின்

ஆணையாக நிலவிய போது, அரசின் ஆணையைத் துச்சமென அவர் தூக்கியெறிந்தார். ஆள்கின்றவன் - ஆளப்படுகின்றவன் என்ற வேற்றுமை களைய முதல் முதலில் வித்திட்டவர் அப்பரடிகளே ஆவார். அதன் பின்னர்தான் அமெரிக்க விடுதலைப் புரட்சி, பிரெஞ்சுப் புரட்சி போல்வன எழுந்தன. தமிழ்நெறிக்கு ஒவ்வாத சாதி வேற்றுமைகளை அப்பர் கண்டித்தார்.

" சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர் "

எனச் சாதி ஆதிக்கத்தைச் சாடியுள்ளார். வளம் - வறுமை, மேடு - பள்ளமும் ஆகச் சமுதாயம் அமைந்து கிடப்பது சாதிக்கு அடுத்த தீமையாகும். எனவேதான் ஈதற் பேரறத்தைக் கடைப்பிடிக்குமாறு மக்களை அவர் வேண்டினார். ஈதற் பேரறம்தான் இன்றைய தர்மகர்த்தாக் கொள்கையாகும். ஞானசம்பந்தரை அடியொற்றித் தம்காப்பியத்தில் தமிழ்வழக்கைச் சேக்கிழார் நிலைபெறச் செய்துள்ளார். அப்பரைப் பின்பற்றிச் சாதியுணர்வு பாராட்டாத அடியார்களையும் அடியார்களுக்கு உணவிட்டு உண்ணாத சைவத் தொண்டர்களையும் சேக்கிழார் தம் காப்பியத்தில் படைத்துக் காட்டியுள்ளார்.

சேக்கிழார் காட்டும் செம்மை ஆட்சிமுறை :

சேக்கிழார் ஆட்சிச் செம்மையையும் தம் காப்பியத்தில் காட்டத் தவறவில்லை. சேக்கிழார் திருநகரச் சிறப்பை அமைத்திருப்பது ஒரு தனிப்பெரும் சிறப்பாகும். நகரச் சிறப்பென அமைத்துக்கொண்டு அங்குள்ள மதிலையும் அகழியையும் அந்தணர் முதலிய நால்வகை வருணத்தாரையும் பொருளாகக் கொண்டு சிலர் அமைப்பர். ஆனால் நம் சேக்கிழாரோ நகரச் சிறப்பாகப் பேசுவதெல்லாம் மதிலுமன்று; அகழியுமன்று; நால்வகை வருணமுமன்று. மனுநீதிச் சோழனின் மாண்பையே நகரச் சிறப்பாக வைத்துப் பேசுகின்றார் சேக்கிழார். காரணம் என்ன?

" எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே "

என்பது அவ்வை பாடிய புறப்பாடலாகும்.

மக்கள் எவ்வளவு சிறப்பாக இருந்தாலும் அதனை ஆளும் மன்னன் குடிதழீஇக் கோலோச்சுபவனாக அமையவில்லையெனின் சிறப்புடைத்தது ஆகாது.

" ஆங்கமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமைவு இல்லாத நாடு "

என்பார் வள்ளுவர். இவையெல்லாம் சேக்கிழார் உள்ளத்தில் எழுந்தன. அவ்வெழுச்சி அவருக்கு நகரச் சிறப்பைப் பாடுவதற்கு ஒரு தனித்திருப்பத்தை உண்டாக்கியது.

நகரச் சிறப்பிற்கு உரியதாகத் திருவாரூரை எடுத்துக்கொண்ட சேக்கிழார் காப்பியத் தலைவியாகிய பரவையார் தம் மாளிகைச் சிறப்பையும் காப்பியத் தலைவராகிய சுந்தரருக்கு இறைவன் மணத்தூது போனதையும் முதற்கண் குறிக்கின்றார். திருப்பதிகங்களைப் பைங்கிள்ளைகள் பாடக் கேட்பன கூகைகளாம் என்றெல்லாம் நகரப் பெருமையைத் தெய்வமணத்தால் பொலியச் செய்கின்றார். அடுத்து,

" மண்ணில் வாழ்தரு மன்னுயிர்க்கெல்லாம்
கண்ணும் ஆவியுமாம் பெருங்காவலன் "

என்னும் நினைவு மீதூர, மனுநீதிச் சோழனைச் சேக்கிழர் நினைவு கூர்கின்றார். மனுநீதிச் சோழன் மகனால் கன்றை இழந்த தாய்ப்பசு தன் கொம்பால் ஆராய்ச்சி மணியைத் துளக்கியது. மறைநா ஓசை அல்லது மணிநா ஓசை கேட்டறியாத மன்னன் ஓசை கேட்டுத் துணுக்குறுகின்றான். அமைச்சர் அதன் செவ்வி தெரிந்து உரைக்கின்றார். அவ்விடத்து வரும் பாடல் கீழ்வருவதாகும்.

" வளவ ! நின்புதல்வன் ஆங்கோர் மணிநெடுந்தேர்மேலேறி
அளவில் தேர்த்தானே சூழ அரசுலாந் தெருவில் போங்கால்
இளைய ஆன்கன்று தேர்க்கால் இடைப்புகுந்து இறந்ததாகத்
தளர்வுறு மித்தாய் வந்து விளைத்ததித் தன்மை "

ஓர் அமைச்சர் அரசர்க்குக் கூறும் விடையாக இப்பாடல் அமைந்துள்ளது. அவ்வரசனோ தன்னால், தன் பரிசனத்தால், ஊனமிகு படைத்திறத்தால், கள்வரால், உயிர்களாலுமான அச்சம் ஐந்தும் தீர்த்து அருமந்த அரசாட்சி செலுத்தும் அரசனாக இருக்கின்றான். அதுவரை எத்தகைய தீங்கும் அவன் ஆட்சியில் ஏற்பட்டதில்லை. இப்பொழுதோ ஒரு பெருந்தீங்கு நேர்ந்துள்ளது. அத்தீங்கை இழைத்தவனோ அவ்வரசனின் ஒப்பற்ற ஓரே ஒரு மைந்தனாக இருப்பவனாவான். தீங்கோ பெரியது. செய்தவனோ மகன். அரசனோ குடிபுறம் காத்தோம்பிக் குற்றம் கடிதலில் வன்மையாளனாகவும் உண்மையாளனாகவும் ஒருபாற் கோடாதவனாகவும் இருக்கின்றான். இத்தகைய அரசனிடத்தில் நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறு சொல்லாதிருப்பதும் நல்லமைச்சனுக்கு அழகாகாது. இந்நிலையில் தான் இவ்விடை உருவாகின்றது. அமைச்சர் தம் பேச்சுத் திறனால் அரசனின் மைந்தனைக் குற்றமற்றவனாகக் காட்ட முயன்றாலும் பசுபெற்ற துன்பமனைத்தையும் தாம் பெற்றதாகவே அரசன் கருதுகிறான். தன்னை மறந்த நிலையில் அவன் புலம்புகிறான். அவன் வருத்தம் எல்லை மீறுகின்றது. என்ன செய்தால் தீரும் என அமைச்சர்களைக் கேட்கிறான். அமைச்சர்கள் அவன் சொன்னதைப் புரியவில்லை. கன்று உயிருடன் போராடிக் கொண்டிருந்தால் இவ்வினா பயனுடையதாய் இருக்கும். இறந்ததற்குப் பின் இவ்வினா எப்பயனையும் தரப்போவதில்லை. இறந்தவர்களை உயிருடன் எழுப்பும் வித்தை அரசனுக்குத் தெரியாதே. பசு வதையைப் போக்க அந்தணர் விதித்துள்ள கழுவாயைச் செய்வதே முறையாகும். ஆனால் அரசன் கேட்டது தன் மகன் பாவத்தைப் போக்க அல்ல : பசுவின் துயர் போக்குவது எப்படி என்பதாகும். துயர் தீர்க்க வேண்டிய

மன்னனாலேயே அல்லது அவன் மகனாலேயே உயிர்கட்குத் தீங்கு நேரின் அவனை என்னென்று குறிப்பது? அமைச்சர்கள் கூறுவதைக் கேட்பின் பசுவின் வருத்தம் தீராமை, அறப்பிறழ்ச்சி என்னும் இரு இழப்புக்களை அரசன் சந்திக்க நேரிடும். ஒருவேளை முயன்றால் மகன் பாவத்தைப் போக்கலாம். குழக்கன்றை இழந்து அலறும் கோ உறும் நோய்க்கு மருந்தாகுமோ?. எனவே பசுத்துயரம் போக்காத எக்கழுவாயும் பயனற்றதே என அரசன் கருதுகின்றான்.

" அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை "

இதற்குப் பரிமேலழகர், ' இது பெரும்பான்மையும் அஃறிணையின் கண் முன்னிய உடம்பு உடையவற்றைப் பற்றி வருதலின் 'பிறிதின்நோய்' என்றார்'. என உரை வகுத்துள்ளார். பிற உயிர் படும் துன்பத்தை எவ்வாற்றானும் போக்க முற்பட வேண்டும். அஃது இயலாது போயின் அவ்வுயிர்படும் துன்பத்தைத் தானும் அனுபவிக்க வேண்டும் என்பதே அரசன் கொண்ட முடிவாகும். அம்முடிவை உணர்த்தும் பாடலே கீழே தரப்பட்டுள்ளது :

" எனமொழிந்து மற்று இதனுக்கு
இனிஇதுவே செயல் இவ்வான்
மனமழியும் துயரகற்ற
மாட்டாதேன் வருந்தும் இது
தனது உறுபேரிடர் யானும்
தாங்குவதே தருமம் என
அரும்பொருள் துணிந்தான் "

இம்முடிவைக் கேட்ட அமைச்சர் அஞ்சினர் : அவ்விடம் விட்டு அகன்றனர் ; மைந்தனைக் கொல்லுமாறு அரசனின் ஏவல் பெற்ற ஓரமைச்சர் தன்னைத் தானே மாய்த்துக்கொண்டார். எனவே தானே தன் மைந்தன் மீது தேரூர அரசன் கருதினான்.

" ஒரு மைந்தன் தன் குலத்துக்கு
உள்ளான் என்பதும் உணரான்
தருமம் தன்வழிச் செய்கை
கடன் என்று தன் மைந்தன்
மருமம் தன்தேர் ஆழி
உற ஊர்ந்தான் மனுவேந்தன் "

என்னும் பாடல் அருமந்த அரசாட்சி எளியதாக இல்லாமல் அரியதாக உள்ளது என்ற உண்மையை உணர்த்துகின்றது.

இச்சூழலில் வான்மீகி காட்டியுள்ள இராம அரசு என்ன என்பதைத் தெளிதல் நலம் பயப்பதாகும். பரதன் நாட்டை ஆளுகின்றான், இராமன் பரதனிடம் ஆட்சிமுறை பற்றிச் சில வினாக்கள் தொடுக்கின்றான். அவ்வினாக்கள் இன்றும் ஆள்வோரால் சிந்திக்கத் தக்கனவாகும். இனிப் பரதனிடம் விடுக்கப்பட்ட வினாக்களை இவையென அறிவோம்:

(1) " பரதா ! உன்னமைச்சர்கள் அறிவாளிகளாகவும் நீதி, கலை நிபுணர்களாகவும் பிறர் எண்ணங்களை எளிதில் புரிந்து கொள்ளும் தன்மை கொண்டவர்களாகவும் நம்பத் தகுந்தவர்களாகவும் உள்ளனரா?

(2) அழிவும் கேடும் நெருங்கும் நேரத்தில் மனம் கலங்காத வீரமுடைய மனிதனைத் தளபதியாக வைத்திருக்கின்றாயா? அவன் தன் தலைவனிடம் நம்பிக்கை உள்ளவனாகவும் உள்ளும் புறமும் தூய்மையாகவும் செயல்களை ஆற்றுவதில் வல்லமை உடையவனாகவும் இருக்கின்றானா?

(3) தயவு, இரக்கம் பார்க்காமல் செயல்களைச் செய்யும் அறிவாளியைப் பணியில் சேர்த்திருக்கின்றாயா? வெகுமதி, ஊழல் முதலிய தீய வழக்கங்கள் இல்லாதவரும் பல தலைமுறைகளாக வேலை செய்து அனுபவம் உள்ளவர்களும் மனம், சொல், செயலில் தூய்மையான சிறந்த அமைச்சர்களிடம் மட்டும் பொறுப்புக்களை ஒப்படைத்திருக்கின்றாயா?

(4) போர் வீரர்களின் முன்தலைமுறை வரலாற்றையும் மனவீரத்தையும் நன்கு சோதித்து வெகுமதிகளைத் தந்து அவர்களை மேன்மைப்படுத்தி இருக்கின்றாயா?

(5) பசு மேய்க்கின்றவர்களும் பயிர் செய்கின்றவர்களும் உன் ஆளுமையில் எல்லையற்ற செல்வமடைந்து, உன்மீது மிகுந்த அன்பு வைத்திருக்கின்றார்களா?

(6) ஏற்றுமதி, இறக்குமதி, கொடுக்கல், வாங்கல் போன்ற வணிகச் செயல்களைச் செய்து உன்னை நம்பி நலமாகப் பிழைக்கின்றார்களா?

(7) நீர்ப்பஞ்சம் இல்லையே?

(8) உன் கோட்டையில் செல்வமும் தானியமும் ஆயுதமும் வேண்டியவரையில் உள்ளனவா?

(9) உன் வரவு மிகுதியாகவும் செலவு குறையாகவும் உள்ளதா? "

இவ்வினாக்களுக்குச் சரியான விடைகளாக எவ்வரசு இயங்குகின்றதோ அவ்வரசே இராம அரசாகும். இராம அரசை மிக முன்பே நடைமுறைப்படுத்தியவர்கள் நம் பழம் தமிழ் மன்னராவர்.

நூற்பயன் :

சேக்கிழார், வான்மீகி காட்டியுள்ள அரசுகள் வலுப்பெற இன்றைய இராவண அரசு தொலைந்து, அழிந்து, இரக்க அரசு இலங்கட்டும். சதிராடிச் சதிசெய்யும் சாதிப்பகை தொலையட்டும். சழக்கு வழக்குகளை உருவாக்கும் சமயப்பகை உருக்குலையட்டும். மக்களிடையே ஆழமாக விதைக்கப்பட்டுள்ள வேற்றுமையுணர்வு விலகட்டும். பிறப்பால் அனைவரும் ஒருவரே என்ற ஒற்றுமை உணர்வு உலவட்டும். ஆதிக்க நீதிப்போக்கு ஒழிந்து அனைவர்க்கும் நீதி உருவாகட்டும்.

தன்னலப்பேய் தகர்ந்து போகட்டும். பொதுநலப் பூ மணம் வீசட்டும். குண்டு சட்டிக்குள் குதிரை விடும் குறுகிய மனப்பான்மை குன்றிக் குறையட்டும். உலக மக்கள் எல்லாம் ஒருவரே எனும் உலகச் சிந்தனை வந்து குவியட்டும். சேக்கிழாரை நம் வாழ்வில் சேய்மைக் கிழாராக்காமல் அவர் காப்பியக் கொள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளும் கிழாராகத் தமிழர் தலையெடுக்கட்டும்.

7 தாயுமானவர் காட்டும் மனிதநேயம்

சாலச்சிறந்தோர் சாற்றிய ஞானமொழிகள் :

ஒவ்வொரு சிந்தனையாளர்க்கும் சிறப்புத் தருவது அவர்களின் வாய்மொழியேயாகும். அச்சிந்தனையாளர்கள் நம் சிந்தையில் கொள்ளத்தக்க வைர வரிகளை மொழிந்து, மக்கள் நினைவில் நிலைத்து நிற்கும் நீள் புகழினர் ஆவர். வாய்மொழி ஒவ்வொன்றும் அவ்வக்கூற்றிற்குரியாரையும் கூற்றிற்குரியார் கூறிய அருள் கூர் மொழியினையும் நம் நினைவில் பதித்துச் செல்வதை நம் கருத்தில் பதித்துக் கொள்ளுதல் நலம் பயப்பதாகும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' - - கணியன் பூங்குன்றன் இயம்பிய இனிய மொழியாகும். திருமூலரை நினைவு கூர்வார்க்கு, ' ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற அவர் தம் வாய்மொழி நம் நினைவில் வாய்த்து நிற்கும். 'என் கடன் பணி செய்து கிடத்தலே' - - அப்பரை ஆன்மீக உலகில் அறிமுகப்படுத்திய அழகு மொழியாகும்.' சேரவாரும் செகுத்தீரே' - இவ்வாய்மொழி வள்ளலாரை நம் கருத்தில் இருத்தும்.

எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே

இவ்வாய்மொழியை உருவாக்கித் தம் மணிவாய் திறந்து உதிர்த்தவர் யார்? அவர்தான் தாயுமானவர். அவரின் தந்தையாரோ கேடிலியப்பர். மக்களைக் கேடிலாதவாறு காத்ததால் அவர் கேடிலியப்பரானார். கேடிலாதவாறு காத்தல் மட்டும் பயன் தருமா? தராதன்றோ! தாயுமாகித் தண்ணளி காட்டித் தக்கன ஆற்றவேண்டாவோ! அங்ஙனம் அன்பின் உருவாய், அருளின் திருவாய் அமைந்து, தாய் உள்ளத்துடன் இத்தமிழ்த் தரணியைத் தம் பாடல்களால் தழைக்கச் செய்த செம்மலே தாயுமானவர் ஆவார்.

அன்பின் ஆற்றலும் மனித நேய மாண்பும் :

சின்னஞ்சிறு கடுகுள்ளம், கடுகிற்கு மூத்த துவரைஉள்ளம், மாம்பிஞ்சு உள்ளம், தென்னை உள்ளம் ஆகியன மனித நேயத்தை மலடாக்கும் தன்மை வாய்ந்தனவாகும். தாயுள்ளத்தில்தான் மனித நேயம் மலரும்; மணக்கும்; மாண்பும் உறும். மனித நேயத்தை வடிப்பது எது? வளர்ப்பது எது? வலுவூட்டுவது எது? என வினவுவார்க்கு அதுதான் அன்பு என விடையிறுப்போம். ' அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' என வினவி அன்பின் ஆற்றலுக்கு அழுத்தம் அளிப்பவர் அறநூல் பேராசான் வள்ளுவராவார். ' திறக்க முடியாத கதவுகளை அன்பு திறக்கும் ' என அன்பை உடன்பாட்டில் உணர்த்தியவர் உலகப் புகழ்பெற்ற விவேகானந்தர் ஆவார். இவ்வன்பின் திறம் உணர்ந்த தாயுமானவரும் 'எந்நாள் கண்ணியில் 'அன்பின் இயல்பினை 'அன்பு நிலைமை' என்னும் பகுதியுள் அழகாக விளக்கியுள்ளார் :

'உள்ளமானது கதிரவனைக் கண்ட கமலம் போல் திருவருளைக் கண்டபோது மலர்தல் வேண்டும். மேகம் கண்ட மயில்போல் இறைவனது ஞான நடனத்தைக் கண்டு களித்தாட வேண்டும். திங்கள் ஒளியை நாடிச் செல்லும் சகோரப்புள் போலத் தூய அறிவிலே தோன்றும் பரஞ்சோதியை உயிர் நாட வேண்டும். அந்தரத்தே நின்று ஆடுகின்ற - ஆனந்தக் கூத்தாடுகின்றவனைச் சிந்தனையினைத் திறையாக வழங்கி வணங்க வேண்டும். கள்வன் இவன் என்று கருதிக் கைவிடாதவாறு வள்ளலைக் கூவி வருந்த வேண்டும். 'அண்ணா' வாவென்று அரற்ற வேண்டும். செய்வதெல்லாம் இறைவன் பணியென்று மாதவனை -- மாதேவனை வழுத்தல் வேண்டும். பரம்பொருளைக் கண்டும் காணவில்லையே என்று கை குவித்தல் வேண்டும். இன்பம் எங்கே, எங்கே என்று இரங்க வேண்டும். கடல் மடை திறந்தாற்போலக் கண்ணீர் பெருகி ஆறாகச் செல்ல, உடல் வெதும்பி, மூர்ச்சித்து உருக வேண்டும். இறைவனைக் காணாத முகம் சருகாய் வாடி, அலந்து ஏங்க வேண்டும். மனக்கவலை ஆற்றாது இன்று அவன் பொன்னடியைப் போற்றி 'ஆற்றேன் ' என்று அரற்ற வேண்டும்.

இறைவனை மட்டுமல்லாது, மனிதராகப் பிறந்த பிறரையும் காணும் பொழுது உள்ளம் உவகையால் கூத்தாட வேண்டும். கண்கள் பனித்துக் களிப்புறுதல் வேண்டும். அவர்கள் பற்றிய நாட்டத்தை நம் நெஞ்சில் நிலை நாட்டவேண்டும். உதவக்கூவி அழைப்பார்க்கு அவர் முன் ஓடி நிற்றல் வேண்டும். இன்பம் எங்கே, எங்கே எனத் தேடித் துயர் கூறுவார்க்கு இன்பக் கேணியாய் ஆதல் வேண்டும். ' ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் ' என்பதற்கேற்ப அவர்கள் துன்பத்தில் நம்மைக் கரைந்துருகச் செய்ய வேண்டும். இறுதியில் மருந்து மரமாக நம் உள்ளத்தையே அவர்கட்காக ஒப்படைக்கும் உயரிய செயலில் ஈடுபடவேண்டும். இச்செயல்கள் தவிர வேறு எவை மனித நேயத்தை வளர்க்க முடியும்? எண்ணிப் பாருங்கள். அன்பினால் உளதாம் மெய்ப்பாட்டினை அடிகள் பல இடங்களில் பகர்ந்துள்ளார். காட்டுகள் சில காட்டுவோம் :

' உள் நிறைந்த பேரன்பால் உள்ளுருகி
மொழி குழறி உவகையாகிக்
கண்ணிறைந்த புனல் உகுப்பக் கரமுகிழ்ப்ப' என்றும்
' ஒயா உள்ளன்பாய் உருகி வாய்விட்டரற்றி' என்றும்
' உடல் குழைய என் பெலாநெக்குருக விழிநீர்கள்
ஊற்றென வெதும்பி ஊற்ற
ஊசி காந்தத்தினைக் கண்டு அணுகல் போலவே
ஓர் உறவும் உள்ளி உன்னிப்
படபடவென நெஞ்சம் பதைத்து உள்நடுங்கியும்
பாடி ஆடிக் குதித்தும்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பி ஆர்த்து ஆர்த்து எழுந்து
மடல் அவிழுமலரனைய கைவிரித்துக் கூப்பி
வானே ! அவ்வானில் இன்ப
மழையே ! மழைத்தாரை வெள்ளமே ! நீடுழி

வாழி என வாழ்த்தி ஏத்தும்
கடல்மடை திறந்தனைய அன்பர் அன்புக்கு எளியை
கல்நெஞ்சனுக்கு எளியையோ ''

என்றும் அன்பினால் ஆகும் மெய்ப்பாட்டினைத் தாயுமான அடிகள் விளக்கியுள்ளார்.

இங்ஙனம் உருகி நிற்பார்க்கு உதவும் இறைவனைக் கருணாகரக்கடவுள் என இயம்பும் தாயுமானவர் மனிதரே நடமாடும் கருணாகரக்கடவுளாக விளங்க முடியும் என இறைவழிநின்று மனித நெறியை வகுத்துக்காட்டுகிறார். பிறர் அவலநிலை காணும் மனிதனின் உடல் குழைதல் வேண்டும். என்பு நெக்குருக வேண்டும். விழிநீர் ஊற்றென வெதும்பி ஊற்ற வேண்டும். ஊசி காந்தத்தினைக் கண்டு அணுகல் போன்று வருத்தம் உறுவாரிடம் உறவினை நிகழ்த்தி, அவர் வருத்தம் உணர்ந்துழி, நெஞ்சு படபடவெனத் துடித்துப் பதைத்து உள்ளம் நடுங்க வேண்டும். அன்பிற்கு எளியராகி, அவர் துன்பம் துடைக்கும் அன்பராக ஆதலே மனிதநேயத்தின் புறவெளிப்பாடாகும்.

'' இடைந்து இடைந்து ஏங்கி மெய்புளகிப்ப
எழுந்து எழுந்து ஐய நின்சரணம்
அடைந்தனன் இனி நீ கைவிடேல் உனக்கே
அபயம் என்று அஞ்சலி செய்து உள்
உடைந்து உடைந்து எழுது சித்திரப்பாவை
ஒத்து நான் அசைவற நிற்பத்
தொடர்ந்து நீ எனை ஆட்கொள்ளும் நாள் என்றோ
சோதியே ஆதிநாயகனே '' எனத் தாயுமானவர் பாடுகின்றார்.

மனித நேயமின்றி மக்கள் கலாம் விளைவித்துக் கட்டவிழ்ந்து வாழும் நாளில் மனிதநேயத்தைத் துணைக் கொள்ளுமாறு தாயுமானவர் வேண்டுகிறார். அல்லலுறும் மனிதர்களைக் காணின் சித்திரப்பாவை ஒத்து அசைவற நிற்பதைத் தவிர்க்க வேண்டும். அவர்கட்காக இடைந்து, இடைந்து, ஏங்கி மெய்புளகாங்கிதமுற வேண்டும். தஞ்சம் என அடைந்தாரைக் கைவிடுதலைக் கைவிட வேண்டும். அவர்கட்கு ஆறுமுகம் காட்டி அவர்களின் அஞ்சுமுகம் அகற்றுதல் வேண்டும்.

அடியாகளுக்கு வாழுத்தும் வணக்கமும் :

'அடியார் வணக்கம்' என்னும் பகுதியில் சமய வேந்தராகிய ஞானசம்பந்தர், சிவ இன்ப நுகர்ச்சியிற் தலைசிறந்த நாவுக்கரசர், இறைவனைப் பரவைபால் தூதனுப்பிய திருநாவலூரர், புத்தரை வாதில் வென்ற திருவாதவூரடிகள் என்னும் சைவ சமயத் திருநெறித் தலைவர் நால்வரும் முதற்கண் தாயுமானவரால் வாழ்த்தப்பட்டுள்ளனர். பின்னர்ப் பட்டினத்தார், பத்திரகிரியார், சிவவாக்கியார், திருமூலர், அருணகிரிநாதர் என்பவர்கள் சிறப்பாகவும் பிற அன்பர்கள் பொதுவாகவும் தாயுமானவரின் வாழ்த்தைப் பெற்றுள்ளனர். மனிதனை மனிதன் மதிப்பது, மரியாதை செய்வது, வணங்குவது, வழிபடுவது அனைத்தையும் உருவாக்குவது மனித நேயமன்றோ ! 'தனக்காக அனைவரும்' எனத் தவறாக

எண்ணாமல்' அனைவர்க்காகவும் தான் ' என்ற உணர்வு வரப்பெறின் போர் ஏது? பூசல் ஏது? பிணக்கும் பிரிவினையும் புறங்காட்டி ஓடுமன்றோ ! ஆகவேதான், 'அன்பர் கூட்டத்தையே முற்றும் துணையென நம்புகண்டாய்' எனத் தாயுமானவர் அன்பர் கூட்டத்தில் கலந்துறைந்து அன்பினையும் மனித நேயத்தையும் வளர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கின்றார்.

இறைவன் வீற்றிருப்பது கல்லினால் கட்டப்பட்ட கோயிலிலா! அல்ல ! அல்ல ! கல்மனத்தையும் வாழைப்பழம் எனக் கனிந்துருகச் செய்துள்ள உள்ளமே அவன் வாழும் ஆலயமாகும் எனத் தாயுமானவர் பின்வருமாறு பன்னிப் பன்னிப் பாடுகிறார் :

'' மாசற்ற அன்பர் நெஞ்சே மாறாத பெட்டகமாகத்
தேசுற்ற மாமணி நின் தேசினையும் காண்பேனோ''

'' உரை இறந்த அன்பர் உளத்தோங்கு ஒளியாய் ஓங்கிக்
கரையிறந்த இன்பக்கடலே பராபரமே''.
'' இரவு பகல் நினைப்பு மறப்பு எனும் தொந்தம்
அறியார்கள் இதயம் வேதச்
சிரமென வாழ்பராபரம்''

மனிதநேயமும் மாசற்ற கல்வியும் :

மனிதநேய வளர்ப்பிற்கு இன்றைய கல்விமுறை வழிகாட்டுமா ? வழித்துணையாய் வந்துறுமா ? எனக் கேட்பாரைத் தாயுமானவரிடம் கேட்கச் செய்வோம். தமிழிலக்கணம், இலக்கியம் மட்டுமல்லாமல் வடமொழி இலக்கணம், வடமொழி இலக்கியம், வடமொழித்தத்துவ நூல்கள் பலவற்றையும் படித்துத் தேறியவர் தாயுமானவர் ஆவார். அவருடைய கல்வி வெறும் உலக வாழ்வின் அளவிலே மட்டும் நின்று விடவில்லை. இவ்வுலக வாழ்வின் உச்சியில் விளங்குகின்ற உண்மை நாட்டம், உணர்வின் நாட்டம் அவரை ஈர்த்தது. 'கற்றதனால் ஆய பயன் என் கொல்' என்று உணர்கின்ற எல்லைக்கே அவர் சென்று விட்டார்.

'' வாசக ஞானத்தால் வருமோ சுகம் பாழ்த்த
பூசல் என்று போமோ புகலாய் பராபரமே ''

இவ்வாறாக ஞானத்தால் வருவதெல்லாம் பூசல்களே என்று குறிப்பிடுகின்றார். கிளிப்பிள்ளை கேட்டதே சொல்லும். அதுபோல் தம்முடைய வாயும் கூடப் படித்ததைச் சொல்லிக் கொண்டு வருகின்றது. பயன் என்ன என வினவுகிறார்.

'' கேட்டதையே சொல்லும் கிளிபோல் நின் அருளில்
நாட்டம் இன்றி வாய்பேசல் நன்றோ பராபரமே ''

தாம் பெற்றிருந்த கல்வியைப் பற்றி அவரே குறிப்பிடுகின்றார். தாம் இந்தத் தெளிவு பெறுவதற்கு முன்னரே வடமொழிவல்லவர்கள் வந்தால் அவர்கள் பேசுவதைக்கேட்டுத் தமிழ் நூல்களின் கருத்தை எல்லாம் கூறி அவர்களை மடக்கி விடுவாராம். அதுபோலவே தமிழ் அறிஞர்கள்

வருவார்களானால் வடமொழியிலே சில வரிகளைச் சொல்லி அவர்களைத் திகைக்க வைத்துத் திருப்பி அனுப்பி விடுவாராம். ஆனால் இறுதியில் எண்ணிப்பார்க்கும் போது தம் இருமொழிப்புலமையும் சேர்ந்து என்ன என்றுகேட்டால் அது ஒரு வித்தையே எனக் கூறுகின்றார்.

" வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைவந்த
வித்தைஎன் முத்தி தருமோ "

இவ்வித்தையை வைத்துக் கொண்டே இதுகாறும் இறுமாந்திருந்ததாகவும் இவ்வித்தை முத்திப்பேற்றை முகிழ்க்கச் செய்யாது என்றும் குறிப்பிடும் தாயுமானவர் எவ்வரிவின் காரணமாக இதுவரை பெருமைப்பட்டாரோ அவ்வரிவையே இறைவன் திருவடிக்கு ஒப்படைப்பதாகக் கூறுகிறார் :

" கூர்த்த அறிவு அத்தனையும் கொள்ளை கொடுத்து உன் அருளைப் பார்த்தவன் நான் என்னை முகம் பாராய் பராபரமே "

மயலறுத்த மாசறுகாட்சியவர் :

தாயுமானவர் கல்வி வாழ்க்கையில் நிகழ்ந்த இத்தகைய மாறுதல் இன்றைய ஒவ்வொரு மனிதரிடத்தும் நிகழுமானால் இந்நீள் உலகம் மனிதநேய உணர்வில் நிறைவுற்று நிற்கும். தாயுமானவர் அரண்மனையில் கணக்கராகப் பணியாற்றிக் கொண்டு இருந்தபோது, மன்னர் விசய ரகுநாதசொக்கலிங்கர் இயற்கை எய்தினார். அதன் பின்னர் அம்மன்னர் தேவியாகிய மீனாட்சி அம்மையார் கண்ணைக் கவரும் அழகிற்கு உரியரான தாயுமானவரை ஒத்தார் எவரும் இலர் என்று எண்ணி, அவர் மீது மையல் உற்று, அவரை வரவழைத்துத் தக்க இருக்கையில் அமர்த்தித் தன் இச்சைக்கு இணங்குமாறு அவரிடம் வேண்டினார். மீனாட்சி அம்மையின் உள்ளக்கருத்தை அறிந்த தாயுமானவர் தக்கவாறு அவளுக்கு அறிவு புகட்டி, அவ்விடத்தில் இருந்து வெளியேறி, இனி இத்திரிசிரபுரத்தில் இருந்தால் தம் பெருமைக்குச் சிறுமை வரும் என்று எண்ணி அப்பொழுதே அந்நகரை விட்டு விலகி இராமேசுவரம் வந்தடைந்தார். மீனாட்சி அம்மையையோ, அவளது நாட்டையோ, அவளது அரண்மனைச் செல்வத்தையோ தாயுமானவர் கண்டு விரும்பினார் அல்லர். மயக்க வலையில் வீழ்ந்தார் அல்லர். எனவே தான்,

" பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன் "
என்று உறுதியாகப் பாடினார்.

அம்மையிடம் அடிகள் காட்டிய மனித நேயம் இற்றை இளம் ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் வழுவாத வாழ்க்கைப் பாடம் காட்டும் அன்றோ !

பறவையும் பாழ் நெஞ்சும் :

பறவை ஒன்று. அப்பறவைக்குக் கூடுண்டு. ஆனால் அது விடுதலை உணர்வுடையது. அதனால் அது எப்போதும் அக்கூட்டிற்குள் கட்டுண்டு இருப்பதில்லை. அத்தகைய பறவை தன் சிறகுகளை விரித்துப்

பறக்கத் தொடங்கியது. வன்பெருங்காற்று அதை எதிர்த்து வீசியது. பறவை அப்பெருங்காற்றையும் பொருட்படுத்தாது, தன் திண்மையை இழக்காது, மேலே எழுந்து சென்றது. தன் கண்ணின் பார்வையைத் திடுமெனக் கீழ்நோக்கிச் செலுத்தியது. அதனுடைய கண்ணையும் கருத்தையும் கவரும் நிலையில் கவின்காடு தென்பட்டது. அந்தக் காட்டில் பசுமை படர்ந்திருந்தது. பல்வேறு கனிகளும் காணப்பட்டன. அவற்றைக் கண்ட அப்பறவை தன்வேகத்தைக் குறைத்துக் கீழ்முகமாக அக்காட்டை வந்துசேர்ந்தது. அந்தோ ! பரிதாபம் ! அது விரும்பிய கனி கிடைக்கவில்லை. மறைவில் விரிக்கப்பட்டிருந்த கண்ணியில் அது சிக்கிக் கொண்டது. இக்காட்சியைத் தாயுமான அடிகள் தன் நெஞ்சினுடன் அமைத்துக் கவிபாடுகிறார் :

" திண்ணிய நெஞ்சப் பறவை சிக்கக் குழற்காட்டில்
கண்ணி வைப்போர் மாயம்" .

மனித நேயமில்லா நெஞ்சத்தைப் பறவையாகக் கற்பனை செய்து அப்பறவையின் நிலைகளை எல்லாம் நெஞ்சிற்கு உரியனவாக உணர்த்துகின்றார். மனித நேயமில்லா நெஞ்சம் எத்தனையோ எதிர்ப்புக்களை, துன்பங்களை எதிர்கொள்கின்றது. மனித நேயத்தைப் பற்றிக் கடுகளவும் கருதிப் பார்க்காத இந்நெஞ்சிற்குத் தன்னிலை பற்றிய இறுமாப்பு எழுகின்றது. தான் கடந்து வந்த தொலைவைத் திரும்பிப் பார்க்கின்றது. இங்ஙனம் மனித நேயத்தில் ஒன்றாமல் உருக்குலையும் மனிதப்பறவைகள் ஒன்றா இரண்டா! எண்ணத் தொலையாதனவாய் உள்ளன. மனித நேயத்தை மருந்தின் அளவாகக் கூடப் பெற்றிராத வேடர்கள் உயிரினங்களை இழுத்துச் சென்று தீயிலே சுட்டு உண்கின்றனர். புலன் உணர்வுகளாகிய வேடர்கள் ஐம்பொறிகளின் வாயிலாக உள்ளே நுழைந்து உட்பகை உருவாக்குவதுடன் நின்றுவிடாது தம் சேர்க்கையால் நன் மனத்தையும் தீயதாக்கித் தீமை விளைவிக்கின்றனர். மனத்தைக் காமத்தீயில் வெந்து கருகச் செய்கின்றனர். உடலை உயிருடன் உண்கின்றனர் எனத் தாயுமானவர் பறவை வழி நிகழ்த்தியுள்ள கற்பனை சிறப்பானதாகும். எனவே ஐம்பொறிகளையும் மனித நேயத்தின்பால் செலுத்துவோமாயின் செல்லும் இறை உலகத்திற்குத் துணையாகும் நற்கதி நம்மை நாடிவரும் எனத் தாயுமானவர் மனித நேய மேம்பாட்டினைத் தம் பாடல்களில் அங்கங்கே தமிழ்த் தேனில் குழைத்துத் தந்துள்ளார். மனித நேயம் இம்மண்பதையில் மலர, அம்மலர்தலுக்குத் தாயுமானவர் பாடல்கள் துணைநிற்கத் தாயுமானவரையே நெஞ்சில் வேண்டி, நினைவில் வழிபடுவோமாக !

8 நேயம் மறவாத் தூய தொண்டர்

முதுமைக் கட்டத்திற்குப் போகிறோம் என்று கட்டியங் கூறும் தளர்ந்த மெலிவுற்ற உடல், அன்பும் அமைதியும் தவழும் முகம், விடாத புன்னகை, விட்டு விட்டுச் சிமிட்டும் அருள் ஒழுகும் கண்கள், இடுப்பில் நான்கு முழ வேட்டி, திறந்த மார்பு, சிந்தனைதோய்ந்த நெற்றி இவற்றிற்குச் சொந்தக்காரர்தான் தமிழ்த் தென்றல் திரு.வி.க. ஆவார். சைவசித்தாந்தியாய்ச் சமரச சன்மார்க்கவாதியாய், அறப்புரட்சியின் ஆதரவாளராய்த் தொடங்கி, மார்க்சின் அறத்ததையே மன்பதைக்கு அறம் என்று விளம்பும் அளவிற்குப் பரிணாம வளர்ச்சி பெற்றவரே பைந்தமிழ்ச் செல்வர் திரு.வி.க. ஆவார். அடக்கம், அஞ்சாமை, ஈகம், நாட்டுப்பற்று, தமிழ்உள்ளம், தொழிலாளர் நலன், இதழ்த்தலைமை, சொல் வன்மை, இலக்கிய அறிவு. சமரச சன்மார்க்க நெறிப்பற்று, சீர்திருத்த உணர்வு , சோவியத் தோழமை, மனித நேயச் சிந்தனை ஆகிய அனைத்தும் ஒருங்கு திரண்டு ஒருருவானவரே திரு.வி.க. ஆவார்.

பிறவிக்கு ஒரு நோக்கம் :

எடுத்தபிறவி மக்கள் தொண்டிற்குப் பயன்படுமானால் அதுவே பெற்ற பிறவியிலும் பேறு பெற்ற பிறவியாகும் எனத் திரு.வி.க. கருதுகிறார். தொண்டாற்ற வாய்ப்புக் கிடைக்குமாயின் ஏழேழ் பிறவியும் எடுக்க உடன் படுகிறார் திரு.வி.க. ' தொண்டே எனது வாழ்க்கை; எனது செல்வம்; எனது ஆருயிர்; எனது சமயமெல்லாம் ' என்பது தொண்டு பற்றி அவர் உரைத்த தூயமொழியாகும். இது கருதியே தொண்டர் தம் பெருமை சொல்லவும் படுமோ என்றார் அவ்வையார். தொண்டர் தம் சிறப்புக்களை எடுத்து ஓத எழுந்ததே பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணமாகும். பெரியபுராணம் எடுத்துக் காட்டியுள்ள அடியார்களுள் ஒருவராக வைத்து எண்ணப்படும் தகுதியை அவராற்றிய தொண்டே அவர்க்குப் பெற்றுத் தந்தது.

அப்பழுக்கற்ற ஆசிரியப்பணி :

கடுமையான ஆசிரியர் காவல்துறைக்கே அருகர் எனத் தமக்குக் கற்றுக் கொடுத்த கடுமையான ஆசிரியர் பற்றிக் குறிப்பிட்ட திரு.வி.க. வே ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றார். ஆசிரியப் பணியினால் தாம் பெற்றுக் கொண்ட பயனைக் கீழ்வரும் வரிகளில் திரு.வி.க. விளக்குகிறார்.

'ஆயிரம் விளக்குப் பகுதிப் பள்ளியில் நாடோறும் ஆதி திராவிடப் பிள்ளைகளுடன் பழகும் பேறு எனக்கும் கிடைத்ததன்றோ! அதனால் யான் அடைந்தது என்னை? யானும் ஆதிதிராவிடனாகிய பேற்றை அடைந்தேன். அதாவது யான் சாதியற்றவன் ஆனேன். பிறப்பில் உயர்வு தாழ்வு கருதக்கூடாது என்று நான் பேசி வந்தேன்; எழுதி வந்தேன்; அப்பேச்சையும் எழுத்தையும் செயலாக்கியது ஆயிரம் விளக்குப் பள்ளி ' எனத் தம்மைப் பண்படுத்துவதில் ஆசிரியப்பணி ஆற்றிய பங்கினை அவர் அறிவிக்கின்றார்.

நெறி பிறழா நேர்மை ஆட்சி முறை :

வெறும் அரசியல் விடுதலையால் மட்டும் மக்களின் அடிமைத் துன்பம் நீங்காது. பொருளாதார விடுதலையும் உடன் வேண்டும் என்று திரு.வி.க கருதுகின்றார். எல்லாத்தன்மையான அடிமைத் தனமும் சுரண்டலும் அற்றதான ஆட்சி இந்தியாவில் நிறுவப்படவேண்டும் என்பது திரு.வி.க வின் உட்கிடக்கையாகும். அத்தகைய ஆட்சிச் சிறப்பினைத் திரு.வி.க வின் கவினை ஒன்று கட்டுரைக்கின்றது.

" பொல்லா அரசுகள் தந்த - கொடும்
போர்மதம் வேண்டா புரோகிதம் வேண்டா
எல்லாரும் வாழ இனிக்கும் - பொது
இன்ப அறத்தில் இயைந்திடத் தூண்டும்
முதல் தொழில் வேற்றுமை போக்கும்
முழுமை உலகைத் தொழில் வளமாக்கும்
வித விதⓊற்பத்தி செய்யும் - வெறும்
விதியை விலக்கும் மதியை வளர்க்கும்
கொள்ளை மனம் கொண்டுலகில் - மூர்க்கர்
கொலைப்போர் எழுப்பும் கொடுங்கோலை வீழ்த்தும்
கள்ளச் சபைகளைச் சாய்க்கும் - கொலைக்
கருவி வடித்திடும் கூடத்தை மாற்றும் "

எனப் புதியதோர் அரசியல் உலகைப் புனைந்துரைத்துள்ளார்.

தொழிலாளர் இயக்க மூலவர் :

தமிழாய்ந்த அறிஞர்களுள் தொழிலாளர் நலனைத் தம் பேச்சாகவும் மூச்சாகவும் ஆக்கிக் கொண்ட முதல் தமிழறிஞர் திரு.வி.க ஆவார். அவர் இறுதி மூச்சு வரை இடைவிடாது தொழிலாளர்களைப் பற்றிப் பேசியும் எழுதியும் வந்தார். 1938ஆம் ஆண்டில் வேலை நிறுத்தம் செய்யும் உரிமையைப் பறிக்கக் கருப்புச் சட்டம் இயற்ற அரசு முற்பட்டது. இதைக் கண்டித்துக் கூட்டங்கள், ஊர்வலங்கள் இவரால் நடத்தப்பட்டன. சென்னையில் கடற்கரைக் கூட்டம் ஒன்று நிகழ்த்தப்பட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பல்வேறு தொழிற்சங்கங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் மிகுதியாகக் குழுமியிருந்தனர்.

காவல்துறை அணியினரும் குதிரைப்படையினரும் சுற்றி வளைத்து நின்றனர். கூடியிருந்தவர்களுக்குள் கூட்டுணர்வு இல்லாது போயிற்று. இதைச் சாக்காக்கிக் கலைக்கக் காவல்துறை முயன்றது. இதனை உணர்ந்த திரு.வி.க மேடைமீது நின்றார். ஒரு பாட்டுப்பாடும் படி அருகிலிருந்த பெண்மணியை வேண்டினார். பாட்டு முடிந்தது. இவர் முழக்கம் தொடங்கியது.

' தோழர்களே ! யான் ஒரு பழைய ஆள். தொழில் இயக்கம் தோன்றிய நாள் தொட்டு உங்கள் பணி செய்து வருபவருள் ஒருவன். இங்கே எத்தனையோ கூட்டங்களை - கண்டனக் கூட்டங்களை யான் பார்த்திருக்கின்றேன். அவற்றில் போலீசார் தலையிட்டதாக நான் பார்த்ததேயில்லை. இன்று அப்பொல்லாக் காட்சியைக் காண்கிறேன். உள்ளம் துடிக்கிறது. ஊன் உருகுகிறது. உடல் நடுக்குறுகிறது. காங்கிரசு எவர் உடைமை? அது பொதுவானது. இந்தியருடையது. யான் இப்போது நான்கணாச் சந்தா செலுத்துவதில்லை. அதனால் யான் காங்கிரசுக்காரன் ஆகேனோ? என் உயிர் காங்கிரசு. என் உள்ளம் காங்கிரசு. என் உடல் காங்கிரசு. என் பேச்சுக் காங்கிரசு. என் எழுத்துக் காங்கிரசு. என் பணிகள் எல்லாம் காங்கிரசு. என் வாழ்க்கையே காங்கிரசு. யான் காங்கிரசுக்காரன். என் நாடி நரம்புகளில் எல்லாம் காங்கிரசு இரத்தமே ஓடுகிறது ' என முழங்கிய திரு.வி.க முடிவில்,

' கூட்டத்தை அமைதியாக நடத்தப் போகிறீர்களா? குழப்பத்தில் முடிக்கப் போகிறீர்களா? கூட்டம் அமைதியாக நடந்தால் யான் உயிருடன் வீட்டுக்குத் திரும்புவேன். இல்லையேல் இந்தக் கடலில் பாய்ந்து உயிர் துறப்பேன். என்னை வீட்டிற்கு அனுப்பப் போகிறீர்களா? கடலுக்கு அனுப்பப் போகிறீர்களா? 'என்று

முழங்கினார். அவரது பெரு முழக்கம் கேட்டுக் குழப்பம் அடங்கியது. கூட்டத்தில் அமைதி எழுந்தது. காவல்துறையினர் கூட்டத்திலிருந்து வெளியேறினர். கூட்டம் சிறப்புற நடந்தது. கண்டனத் தீர்மானம் ஆரவாரத்துடன் நிறைவேறியது. இத்தகைய பேச்சு வெறும் நாடகத் தன்மையில் அமைந்த உணர்ச்சிப் பொங்கல் அன்று. உண்மையில் தொழிலாளர் ஒற்றுமையை உயிரை விட உயர்ந்ததாய் அவர் கருதினார்.

' இயற்கை இறை என்னை உலகச் சேவை என்னும் தொழிலாளர் சேவையில் 1918 ஆம் ஆண்டில் ஈடுபடுத்தியது. அன்று முதல் இன்று வரை என்னால் இயன்ற அளவு தொழிலாளர் சேவை செய்து வருகிறேன். என் வாழ்க்கை எத்தனை கதவடைப்புகளை, எத்தனை வேலை நிறுத்தங்களை, எத்தனை வழக்குகளை. எத்தனை தடியடிகளை, எத்தனை துப்பாக்கிகளைக் கண்டிருக்கின்றது. நெருக்கடியான நேரங்களிலே எனக்கு ஊக்கம் அதிகம் உண்டாகும் ' என்னும் திரு.வி.க வின் கூற்று தொழிலாளர் உலகத்திற்கு அவர் ஆற்றிய தன்னலமற்ற தொண்டிற்குச் சான்றாகும்.

தொழிலாளர் சங்க விழாவில் அவர் ஆற்றிய உரையும் கருதத்தக்கதாகும். ' நிலம், பொருள், உழைப்பு ஆகியவை பொதுமையாதல் வேண்டும். இந்நோக்குடன் யான் 25 ஆண்டு உங்களிடையே தொண்டு செய்தேன். அத்தொண்டுக்குரிய ஆக்கம் தேடி வெற்றிக் கொடி நாட்ட வேண்டுவது உங்கள் கடன். உங்கள் முன்னே பெருங்கடமை நிற்கிறது. அதை நிறைவேற்ற நீங்கள் பாடுபட்டேதீரல் வேண்டும். யுத்த முடிவில் புது உலகம் தோன்றப்போகிறது என்று உலகம் பேசுகிறது. அப்புது உலகில் நிலம், பொருள், உழைப்பு ஆகியன பொதுவாகும். இல்லையேல் மீண்டும் மீண்டும் கோர யுத்தங்கள் தோன்றும். கோர யுத்தங்கள் தோன்றாதவாறு உலகைக் காக்கும் பொறுப்பு யாருடையது? தொழிலாளருடையது. உலகத் தொழிலாளருடையது. ஆகவே தோழர்களே ! ஒன்றுபட எழுங்கள்! எழுங்கள் ! புதுஉலகம் காண எழுங்கள் !! ' என்று திரு.வி.க. குறிப்பிட்டுள்ளவாறு உடைமைகள் இதுகாறும் பொதுவாக்கப்படாததால் போரின் நெருக்கடியால் உலகம் படாதபாடு படுகின்றது.

இதழ்த் துறையில் இணையற்ற தொண்டு :

தேசபக்தன், நவசக்தி ஆகிய இரு இதழ்களைத் திரு.வி.க. நன்முறையில் நடத்தினார்.

' யான் உருத்திரன் ஆனேன். என் எழுதுகோல் பாசுபதம் ஆயிற்று. தேசப்பக்தனுக்கென்று ஒரு தனிநடை கொண்டேன். சிறு, சிறு வாக்கியங்கள் அமைக்கலானேன். எளிமையில் கருத்துக்கள் விளங்கும் முறையைப்பற்றினேன் ' என்று இதழ் உலகில் தாம் மேற்கொண்டிருந்த எழுத்து நடைபற்றித் திரு.வி.க. குறிப்பிடுகின்றார்.

அந்நாள்களில் நாட்டுமொழி இதழ்களில் அயல்நாட்டு ஆங்கில மொழிமின் மணம் வீசும். ஆசிரியர் தலையங்கங்களுக்கு முதலில் தலைப்பு இட்டு இதழ் வெளி வரச் செய்வர். இதை அறவே அகற்றிப் புரட்சி செய்தது ' தேசபக்தன் ' ஆகும். அரசியல் சொற்கள், சொற்றொடர்கள் தமிழாக்கப்பட்டு அவை பரவலாக ஏடுகளிலும் மேடைகளிலும் திரு.வி.க.வால் ஏற்றம் பெற்று விளங்கின. தமிழரை ஆங்கில மோகத்திலிருந்து விடுவிக்கத் தேசபக்தன் அரும்பணி ஆற்றியது. மக்கள் மத்தியில் நாட்டுப்பற்றைப் பல வழிகளில் அது வளர்த்து வந்தது. நாட்டுத்தலைவர்களின் வாழ்க்கை, தியாகம், தொண்டுகளை விவரித்து, நாட்டுணர்வினையும் ஆற்றலையும் அது ஒருங்கே திரட்டியது. நாட்டுப்பற்றாளர்கள் மீது ஆட்சி தொடுக்கும் தாக்குதலை அது கடுமையாகக் கண்டித்தது.

'நவசக்தி' என்றால் இலக்கியத்தின் ஓர் உயர் தரத்தைக் குறிப்பதாகும். தேசிய இயக்கம், தொழிலாளர் இயக்கம், இலக்கியச் சமுதாய மறுமலர்ச்சி இவற்றின் விடுதலை உணர்வை - போராட்ட வேகத்தை மக்களிடையே இவ்விதழ் பரப்பியது. இங்ஙனம் இதழ்த் துறைக்குத் திரு.வி.க. ஆற்றிய பணி அருமையும் பெருமையும் உடையதாகும்.

பெண் பெருமை :

'பெண்ணிற்கு மதிப்பு கொடுங்கள். உரிமை கொடுங்கள். வணக்கம் செலுத்துங்கள். பெண்ணே மதித்துப் போற்றலே நாகரிகம் ஆகும். அவளைக் கட்டுப்படுத்தல், அடிமைப்படுத்துதல், கொடுமையாக நடத்துதல் அநாகரிகம் ஆகும். பெண்ணின் பெருமை விளங்க - இவ்வுலகில் நன்கு விளங்கப்பாடுபட உறுதி கொண்டேன். அதற்கென்று என் வாழ்வை அர்ப்பணம் செய்தேன்' என்று தம் மனைவி மறைந்த காலை திரு.வி.க. பேசினார். ஓலை வேய்ந்த குடிசையில் தேளும் பாம்பும் நடமாடிய இடத்தில் அன்புடன் வளர்த்த அன்னை, பாலூட்டிய வேறு பல தாய்மார், குழந்தமையில் வேற்றுமை தெரியாது விளையாடிய பெண் குழந்தைகள், பள்ளிப் பருவத்தில் உடன் சேர்ந்து களித்த சிறுமியர், உயர் படிவத்தில் கற்றுத் தந்த ஆசிரியைகள், அரசியலில் ஆர்வமூட்டிய அன்னைபெசன்ட் அம்மையார், பொது வாழ்வில் உடன் தொண்டு புரிந்த மாதர் திலகங்கள், சமயச் சமூக இலக்கியத் துறையிலே பணியாற்றியவர்கள், வாழ்க்கைத் துணையாக இருந்து பெண்ணின் பெருமையை வழங்கிய கமலாம்பிகை இவர்களனைவரும் ஏதேனும் ஒரு வழியில் பெண்மையின் சிறப்பை அவருக்கு அருளிச் சென்றுள்ளதாகத் திரு.வி.க. குறிப்பிடுவது கருதத்தக்கதாகும்.

இல்வாழ்க்கை என்பது ஒருத்தியையும் ஒருவனையும் காதலால் ஒருமைப்படுத்துவதாகும். இல்வாழ்க்கை ஒரு நற் கழகமாகும். போலித் துறவறத்தை திரு.வி.க. சாடினார். பொல்லாத கணவரிடம் வாழ்க்கைப் பட்டு அவர் தம் கொடுமை தாங்க முடியாமல் கிணற்றில் வீழ்ந்தும் நஞ்சுண்டும் தீயிடை எரிந்தும் தூக்கிலிட்டும் உயிர் துறந்த பெண்களின் அவல முடிவு குறித்துத் திரு.வி.க. ஆற்றொணாத் துயர் கொள்கின்றார். பெண்ணுலகம் உரிமையுடன் வாழும் நாள் எந்நாள் என ஏங்குகின்றார். மாதர்க்குத் தீங்கு விளைவிக்கும் மடமைகளை மாய்க்க வேண்டுவது அறிஞர் கடமையென அவர் கருதுகின்றார். மாதர் நலம் கருதியும் மாதர் உரிமைகளுக்காகவும் கொண்டு வரப்பட்ட சீர் திருத்த மசோதாக்களை அவர் ஆதரித்தார். அவை குறித்துக் கட்டுரைகள் அவர் எழுதினார். இதழ்களில் இவை பற்றிய தலையங்கம் தீட்டினார். தனிக்கூட்டங்கள், மாநாடுகளில் இவை பற்றி அவர் உரையாற்றினார். பெண் உலகிற்கு இவர் ஆற்றிய தொண்டு பேசுதற்கரிய பெருஞ்சிறப்பினதாகும்.

கலப்பு மணம் :

கலப்புமணம் நிகழ்வதைத் திரு.வி.க. ஏற்றிப் போற்றினார். ருக்குமணி என்னும் தமிழ்நாட்டு நங்கை அருண்டேல் என்னும் அயல்நாட்டு ஆடவரை மணம் புரிய நினைத்த பொழுது வ.உ.சிதம்பரனாரும் சுப்பிரமணிய சிவாவும் வெகுண்டு எழுந்தனர்.

'ஒரு வெள்ளையன் நமது பெண்ணைக் களவாடுகிறான். அதை நீங்கள் ஆதரிக்கிறீர்களே' எனச் சிவா திரு.வி.க விடம் வினாக் கணை தொடுத்தார்.

'காதல் நுட்பம் உங்களுக்குத் தெரியவில்லை. அந்நுட்பத்தை உணர்ந்து [illegible] நீங்கள் காலம் கழித்து விட்டீர்கள். காதற் கண்ணிற்கு வெண்மை,

கருமை தோன்றுமோ? களவு தான் காதல் ' எனத் தக்கவாறு விடையிறுத்து, ருக்குமணி - அருண்டேல் திருமண நிகழ்விற்குத் துணைநின்றார்.

மனித நேயம் :

' சில காலத்திற்கு முன்யான் முதலில் தமிழன், இரண்டாவது இந்தியன், மூன்றாவது உலகவன் என்று சொல்லி வந்தேன். இப்போது நான் முதலில் உலகவன், இரண்டாவது இந்தியன், மூன்றாவது தமிழன் என்று சொல்லி வருகிறேன். உலகம் வாழ்ந்தால் தமிழ் வாழும். தமிழ் நாடும் வாழும் என்னும் உறுதி எனக்கு ஏற்பட்டு விட்டது' என்னும் கூற்றின் வழியாகத் திரு.வி.க. வின் உலகளாவிய சிந்தனையை உணர்கின்றோம்.

' இங்கே விஞ்ஞானம் நெஞ்சை ஈர்க்கிறது. விஞ்ஞானியை நோக்குவோம். பெரிய விஞ்ஞானி ஆராய்ச்சியில் இறங்குகிறான். பூதத்தை ஆராய்கின்றான். எதை எதையோ ஆராய்கிறான். அவற்றைப் பிய்த்துப் பிய்த்துப் பார்க்கிறான். சில முடிவுகளைக் காண்கின்றான். முடிவுகள் அவனுடன் மாய்வதில்லை. அவை பின் வருவோர்க்குத் துணை புரிந்து அவரை ஊக்குவதாகின்றன'. இவ்வாறு விஞ்ஞான ஆராய்ச்சி உலகை வளர்த்துத் தானும் வளர்கிறது என்று அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்துள்ள அறிவியல் உலகிற்கு நம்மை அழைத்துச் செல்கின்றார்.

' உற்பத்திக்குப் பயன்படத்தக்க விஞ்ஞானத்தைச் சாம்ராஜ்ஜியம் நாசத்திற்குப் பயன்படுத்துகின்றது. இது காலை சாம்ராஜ்யத்தின் ஆக்கம் குன்றத் துவங்கிவிட்டது. அதனால் விஞ்ஞானத்தின் அழிவு வேலை குன்றி விடும். அதன் ஆக்கவேலை பெருகும். அப்பெருக்கம் இயற்கையின் நோக்கையும் போக்கையும் நிறைவேற்றும். உலகை நன்முறையில் வளர்க்கும். விஞ்ஞானத்தை வெறுத்தல் தவறே. அவ்விஞ்ஞானம் அகிலம் வளர்க்கும். அணுவால் அழிவே அணுகல் கண்டு விஞ்ஞானத்தை விடுதல் கேடே ' எனஅறிவியலின் கேடான போக்கினையும் உணர்த்தி, அது காரணமாக அதை வெறுத்தல் கூடாது எனவும் திரு.வி.க. அறிவுறுத்துகின்றார். என்றும் மனித நேய மேம்பாட்டிற்குஅது பெருந்துணை புரிய வேண்டும் என்பதுவும் திரு.வி.க. வின் அவா ஆகும்.

' பலர் புதுப்புது வேலைக்கென்று என்னை அடுப்பர். ஓரளவில் அவர்கட்குத் துணை செய்வேன். நிரபராதிகளாய் வேலை இழப்பவர்க்குப் பெருந்துணை புரிவேன். ஜூன் மாதத்தில் ஏழை மாணாக்கர் பலர் என்னை மொய்த்திருப்பர். குறைபாடு ஒரு வகையாய் இராது. பல வகையாய் இருக்கும். அவற்றைக் கவனிப்பதில் பெரும் பொழுது போகும் ' என்ற வரிகள் வழியாக வெளிப்படும் திரு.வி.க.வின் மனித நேயத்தை உச்சி மேற் கொள்வோமாக.

சோவியத்தின் நல்ல நண்பர் :

திரு.வி.க. வின் முற்போக்குச் சிந்தனை சோவியத்துடன் அவரைத் தோழமை கொள்ளச் செய்தது. சோவியத் நண்பர்கள் சங்க இயக்க விழாவிற்குத் திரு.வி.க. வழங்கிய வாழ்த்துச் செய்தியைக் கருத்தில் இருத்துவோம்.

'கவிஞரும் தத்துவரும் நீண்ட காலமாகச் சுதந்திரச் சூரியன் என்றே பாடியும் பேசியும் வந்தனர். அச்சூரியன் தோன்றி ஏறக்குறையக் கால் நூற்றாண்டு ஆகிறது. அச்சூரியன் எது? அதுவே சோவியத் யூனியன் என்பதாகும். அந்த யூனியன் இடத்தில் எனது உள்ளம் தவழ்ந்து ஏறக்குறைய இருபது ஆண்டுகள் ஆகின்றன. 1921இல் சென்னைத் தொழிலாளர் சங்கத் தலைவர் என்ற முறையில் எனக்கு முதன் முதல் சோவியத் கதிராகிய லெனின் படம்

கிடைத்தது. அன்று முதல் லெனின் கொள்கையை என்னால் இயன்றவரை பரப்ப முயன்று வருகிறேன். உலகம் முழுவதும் சோவியத் மயமாக முயன்று வருகிறேன். உலகம் முழுவதும் சோவியத் மயமாக வேண்டுமென்று கனவு காண்பவருள் யானும் ஒருவன். அக்கனவு நினைவாய், செயலாய், முகிழ்க்கும் காலம் அணித்தே நிற்றல் கண்டு மகிழ்வெய்துகிறேன் ' என்று திரு.வி.க. குறிப்பிடுவதிலிருந்து சோவியத் யூனியனிடத்தில் அவர் கொண்டிருந்தஈடுபாட்டினை உணர முடிகின்றது.

மார்க்சியம் :

' யான் மார்க்சியத்தையும் போற்றுகிறேன். காந்தியத்தையும் போற்றுகிறேன். சமதர்மம் உலகை நல்வழியில் நடத்தும் என்று யான் நம்புகிறேன். எனக்கு மார்க்சியம் உடலாகவும் காந்தியம் உயிராகவும் தோன்றுகின்றன. உடலும் உயிரும் தனித்தனியே நின்றால் வாழ்க்கையின் கதி என்னாகும்? மார்க்சியமும் காந்தியமும் ஒன்றினால் சமதர்ம வாழ்க்கை நல்லவழியில் முகிழ்க்கும். அவ்வாழ்க்கை உலகில் பெருகப் பெருக உலகம் ஒரு குலமாகும். வள்ளுவனார் அந்நாளில் வகுத்த பொது உலகம் மார்க்சிய முனிவர் இந்நாளில் வகுத்த புது உலகம் ' என்று குறிப்பிடுவதன் வாயிலாகக் காந்தியம் கலந்த மார்க்சியத்தில் அவர் கொண்டிருந்த ஈர்ப்பினை அறிய இயலும்.

' பலதிறத் தொல்லைகளிடை என் வாழ்க்கை வளர்ந்தது. ஆனால் அது பொருட்பெருக்காயின் என்னுடையது தோல்வி எய்தியதாகும். தொண்டாயின் அது வெற்றி எய்தியதாகும். தொண்டின் சேய் எது? அந்தண்மை. தொண்டு அந்தண்மை ஊற்றைத் திறந்தது. அந் தண்மை அருவியாய் ஓடுகின்றது. அது வெள்ளமாதல் வேண்டும்.தன்னலம் கருதாத தொண்டே யாண்டும் பரவினால் உலகில் கொடுமை ஏது? நடுக்கம் ஏது? கவலை ஏது? ' எனத் திரு.வி.க. தொண்டு பற்றித் தந்துள்ள விளக்கம் இற்றைத் தொண்டர்கள் உள்ளத்தைப் பற்றுமாயின் தூயதொண்டு இம் மன்பதையில் துலங்கத் தடை ஏதும் இராது.

9 முண்டாசுக் கவிஞன் பாராட்டும் மூவர்

ஒரு நாட்டில் கவிஞனே தோன்றவில்லை என்றால் அந்நாடு கொடுமையிலும் கொடுமையாய்க் கடும் புலி வாழும் நாடாகத்தான் காட்சியளிக்கும். கவிஞனால்தான் காதலும் அன்பும் முகிழ்க்கின்றன. வீரமும் தீரமும் வேரிடுகின்றன. கவிஞன் காலம் தந்த சொத்தாவான். அவன் ஒரு பொதுவுடைமைப் பூங்கா ஆவான். பாரதி! ஆம்! இவனும் இத்தகைய மக்களின் சொத்தாக மலர்ந்தான். அவன் பாட்டுக்களிலே இனிமை இருக்கும்; இன்பம் இருக்கும்; எளிமையும் இருக்கும் பாரதிக் கவிஞன் காதலை மட்டுமோ, இயற்கையை மட்டுமோ பாடவில்லை. பாரதியின் மொழிப்புலமையும் மொழிப்பற்றும் வேட்கையும் காணுமிடத்து, அவன் தமிழக மாந்தரனைவரின்பாராட்டிற்கும் உரியவன்தான் என்பதில் ஐயமில்லை.

" யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்
பூமிதனின் யாங்கணுமே பிறந்ததிலை
உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை "

என்ற வரிகளில் தேமதுரத் தமிழ் ஓசையை உலகமெல்லாம் பரப்பிய தமிழ் வித்தகர்களைப் பாட்டுக்கொரு புலவனான பாரதி பாராட்டுகின்றான்.

இப்பாடல் வரிகளில் பாவலர்களை வரிசைப்படுத்தும் போது அவர் தம் காலத்தைக் கணக்கில் எடுக்காமல் கம்பரைப் பாரதி முன் வைத்தமை கருதத்தக்கது. படைப்பின் அகல நீளங்களைக் கருதினாலும் கூட வரிசை முறை பொருந்தி வரவில்லை. இன்னும் கூறப் போனால் வள்ளுவரும் இளங்கோவும் தம் நூல்களைத் தமிழிலேயே முதல் நூல்களாக்கியிருக்க, வடபுலக்கதை ஒன்றினைத் தமிழில் ஆசை பற்றி அறையப் புகுந்தவர்தாம் கம்பர். ஆயினும் மூவருள்ளே முதன்மைப்படுத்தப்படும் நிலையில் கம்பரைத் தமிழ் கூறு நல்லுலகு போற்றுவதை உய்த்துணர்ந்து மகிழ முடிகின்றது.

மூவர்க்கு மட்டும் ஏன் பாராட்டு !

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்த இத் தமிழ்நாட்டில் அதன் முந்தையக் கவிஞர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வாழ்ந்து முடிந்தாலும் பாரதியின் சிந்தையில் இடம் பெற்ற கவிஞர்கள் கம்பர், வள்ளுவர், இளங்கோவடிகள் என்ற மூவரே ஆவர். எண்ணற்ற தமிழ்க் கவிஞர்கள் தமிழகத்தில் வாழ்ந்திருப்பினும் இம்மூவர் மட்டும் பாரதியின் தமிழ் நெஞ்சைத் தொட்டு ஈர்த்தற்குரிய கரணியங்களை அவன் கூற்றின் வாயிலாகவே காண்போம். உயிரற்ற உடலாய், சாரற்ற சக்கையாய், வேரற்ற மரமாய்த் தமிழரால் கருதப்பட்ட தன்னிகரில்லாத் தமிழ் மொழியின் வாழ்விற்கு, வளர்ச்சிக்கு, வளமைக்கு, வலுவிற்கு அவன் வகுத்துக் காட்டியுள்ள மூன்று வழிமுறைகளைப் பற்றிக் கருதிப் பார்ப்போம்.

அன்னைத் தமிழ்மொழி அழியா வாழ்வு பெறப் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும் என்பது பாரதியின் சிந்தனையில் படர்ந்த கருத்தாகும். இம்மொழி பெயர்ப்புத்துறையின் முன்னோடி கம்பராவார். எனவே அவர் பாரதியின் கருத்தில் நிற்கின்றார். இறவாப் புகழுடைய புது நூல்களைத் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும் என்பது அவனது அடுத்த வேண்டுகோளாகும். புது நூல்களின் பிறப்பின் மூல ஊற்றே இளங்கோஅடிகள் ஆவார். எனவே பாரதியின் கருத்தில் அடிகள் நிலைக்கின்றார். திறமையான புல்மை எனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும் என நூலொன்றின் உயர் தகுதிப் பாட்டினைப் பாரதி சுட்டியுள்ளான். பிறந்த தமிழ்நாட்டில் மறந்த ஏன் துறந்த நிலை பெற்றிருப்பினும் சிறந்த நிலையில் வெளிநாட்டினர் இன்றும் பாராட்டிக் கொண்டிருப்பது வள்ளுவர் இயற்றிய குறளைத் தான். எனவே வான்புகழ் வள்ளுவரைப் பைந்தமிழ்ப்புலவர் பாரதி நினைத்துப் போற்றுகின்றான். இனிப் பாரதி வைத்த வரிசைப்படியே மூப்பெரும் கவிஞர்களின் முதிர்ந்த புலமையினையும் மூவா ஆற்றலையும் அவர்தம் நூல்களின் வாயிலாகவே புலப்படுத்த முயல்வோம்.

கல்வியிற் பெரியவர் கம்பர்

கம்பரின் புலமைச் சிறப்பு :

கம்பரின் புலமை விரைந்து செய்யுளை இயற்றும் தன்மையுடன் அமையாது சொற்செறிவும் பொருள் ஆழமும் கொண்டதாக விளங்கியது. இதற்கெல்லாம் இவரது பரந்தகல்வியும் மதிநுட்பமும் உலக நுகர்வுகளும் கரணியங்கள் ஆகும்.

" கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு " எனப் பாரதி கம்பர் புகழை

எடுத்தோதுகின்றான். கம்பநாடர் வெறும் தமிழ்ப்புலவராக மட்டுமின்றி, அக்காலத்தே அனைத்துத் துறைகளிலும் வல்ல கலை நிபுணர் என்று யாவரும் பாராட்டும்படி விளங்கினார். இவையன்றிப் பொதுமறை தந்த வள்ளுவர் கொள்கைகளிலும் சிறப்பு மறையாகிய திருவாய்மொழி முதலிய பேரிலக்கியங்களிலும் ஈடுபாடு கொண்டு இராமனிடம் நிறைந்த பக்தி உணர்வும் உருக்கமும் பெற்றுக் கம்பர் திகழ்ந்தார். இவரது பக்தி உணர்வுப் பெருக்கை,

" பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவே " - என்ற

அவர் பாயிரப்பாடலே குறிப்பிட வல்லது. இச்சிறப்புப்பற்றியே,

" அம்பரா அணிசடை அரனயன் முதல்
உம்பரால் முனிவரால் யோகராலுயர்
இம்பராற் பிணிக்கரு மிராம வேழஞ்சேர்
கம்பராம் புலவரைக் கருத்தில் இருத்துவாம் " - என்றார்.

தமிழறிஞர் ஒருவர். இவர் அருளிய இராமாவதாரத்தை இலக்கிய முறையில் ஆராயப் புகின்,

" கடல் கண்டோம் என்பர் யாவரே முடிவுறக்கண்டார் " என்று படைப்பெருக்கினை ஓரிடத்தில் இவர் சிறப்பித்த முறையையே நாமும் சொல்ல நேரிடும்.

" எற்றாங்கு மேனி ரகுராம சரிதை யாவும்
கற்று ஆர் கலியிற் பெரிதாந் தமிழ்க் கம்பநாடன்
உற்றாங்கு உரைத்தான் " - என்றார் அரகேசரியார் என்ற பெரும் புலவர்.

இராமாவதாரத் திருப்பிறப்பு :

திருப்பிறப்பை மேற்கொள்ளாமல் மற்றை வழிகளில் உலக அறங்களை நிலை நிறுத்துவது பரம் பொருளுக்கு ஏற்றம் தராது என எண்ணினார் கம்பர். திருமால் எடுத்த பத்துத் திருப்பிறப்புக்களுள் இராம, கிருட்டிணத் திருப்பிறப்புக்களே முழுமை பெற்ற திருப்பிறப்புக்கள் ஆகும். இவற்றுள்ளும் கிருட்டிணத் திருப்பிறப்பிலோ அத்தன்மையைக் காண்டல் அரிது. ஆதலால் கம்பர் தாம் எடுத்துக் கொண்ட கொள்கைகளுக்கு ஏற்ப இராமாவதாரம் என்பதையே தம் பெருங்காப்பியத்திற்குப் பெயராக அமைத்தார். தெய்வமே மானிடமாகப் பிறப்பெடுத்துச் சிறந்த மானிடத் தன்மையை உலகுக்குணர்த்திய நிலையைச் சிறப்பிப்பதே கம்பர் மேற்கொண்ட காப்பிய நோக்கம் என்பது இவர் காட்டிய நூற் பெயரே குறிக்கும். இது பற்றிய இராமாவதாரம் என்பதற்குரிய பொருளைக் கம்பர்,

" நடையின் நின்று உயர்நாயகன் தோற்றத்தில்
இடைநிகழ்ந்த இராமவதாரப் பேர்த்
தொடைநிரம்பிய தொல்லை நன்மாக்கதை " - என்பதனால்

விளக்கியுள்ளார். ஆகவே தாம் வருத்துக் கொண்ட காப்பியப் போக்கு தெய்வம் மானுடமாக வந்து நடத்திப் போந்த செயல்களைக் கூறும் தன்மையதாம் ஆயிற்று.

புலனடக்க மேன்மை :

கதை அனைவருக்கும் நன்கு தெரிந்த கதையானாலும் தம் குறிக்கோளை நிறைவேற்றும் முறையில் அமைக்க வேண்டும் எனக் கம்பர் அவாவினார். தம்முடைய காப்பியத்தில் அவர் பொதிந்துள்ள குறிக்கோள் புலனடக்கமாகும். இப்புலனடக்கம் இல்லாமையினால்தான் தமிழகம் களப்பிரர் காலத்தில் அடிமைப்பட்டது என்பதைக் கண்ட கம்பர் இதற்கு முதலிடம் கொடுத்ததில் வியப்பே இல்லை. முதல் பாட்டையே. ' பொறிகள் தம் எல்லையை விட்டுப் புறம் செல்லாத மக்கள் வாழும் நாடு' என்று தொடங்கினார். காப்பியம் முழுவதிலும் புலனடக்கம் உடையவர்களின் மேன்மை, அஃது இல்லாதவர்களின் தாழ்மை என்பவற்றைக் காட்டிக்

கொண்டே சென்றதுடன் இப்புலனடக்கத்திற்காகவே அனுமன் என்ற பாத்திரத்தையும் படைத்துக் காட்டுகின்றார். புலனடக்கம் பற்றி முதல் பாடலில் தொடங்கிய கவிஞர் இறுதியாக இராவணன் இறந்ததைக் கூற வருகையிலும் 'சினமடங்க, மனமடங்க, வினையம் வீய . . . . . மும்மடங்கு பொலிந்தன அவன் முகங்கள்' என்று கூறி முடிக்கின்றார். புலனடக்கம்இல்லாத இராவணன் கூட அப்பொறிப்புலன்கள் செயல் இழந்த பிறகு மும்மடங்கு பொலிந்தான் என்று கூறிக் கம்பர் காப்பியத்தை முடிக்கின்றார்.

மானுடம் தாங்கிய பரம்பொருள் :

புலனடக்கத்தை அடுத்துக் கவிஞர் செய்த புது முயற்சி பரம்பொருளை இவ்வுலகத்திற்குக் கொண்டு வந்து நிறுத்தித் தொழிற்படச் செய்தலாகும். இம்முயற்சியை உலகக் காப்பியங்கள் பலவற்றுள்ளும் காணலாம். எனினும் கம்பர் ங்கையாண்ட உத்தி இதுவரை யாரும் செய்யாத ஒன்றாகும். இராமனைப் பரம்பொருள் என்று அவருடைய காப்பியத்தின் பிற பாத்திரங்கள் அறிந்திருப்பினும் இராமன் தன்னை ஒரு மனிதனாகவே கருதியும் பேசியும் நடந்து கொள்கின்றான். அறத்தை நிலை நிறுத்த வந்தவனாகவும் சாதாரண மனிதர்களுக்குரிய துயர், இடர் என்பவற்றை உடையனாகவும் கம்பரின் இராமன் காட்சியளிக்கின்றான். எதிர்பாரா நேரங்களில் உணர்ச்சிவயப்பட்டு நம் பரிவிற்கும் அவன் ஆளாகின்றான். மனிதனாக வந்த பரம்பொருள் உணர்ச்சிவயப்பட்டு வேகமாக, 'வாலியைக் கொல்வேன்' என்று சூளுரைத்துக்கொன்றும் விடுகின்றான். இறக்கப்போகும் வாலியின் வார்த்தைகளைக் கேட்டுக் கழிவிரக்கம் கொண்டு, அவன் மகனிடம், ' நீ இது பொறுத்தி ' என்று பேசும் மனிதனாகவும் காட்சி தருகிறான் கம்பன் கண்ட இராமன்.

மக்கள் பண்பாட்டிற்குரிய சிறந்த அறநெறிகளை எடுத்தோதியவர் வள்ளுவர் ஆவார். அந்நெறிகளைத் திருப்பிறப்பு நாயகனாகிய இராமன் ஒருவனிடம் வைத்துக்கொண்டு காப்பியத்தைக் கம்பர் இயற்றினார். இதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு குறளில் உண்டு. அஃது அறிஞர்கட்குப் புதியதும் அன்று. குறளில் 'படைச்செருக்கு' என்னும் அதிகாரத்தில்,

" பேராண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றுஅதன் எஃகு "

என வரும் குறள் இங்கே குறிப்பிடத்தக்கது. இதனை உணர்ந்த பரிமேலழகர், ' ஊராண்மை உபகாரியாம் தன்மையாகும். அஃதாவது இலங்கையர் வேந்தன் போரிடைத் தன் தானை முழுவதும் படத்தமியனாய் அகப்பட்டானது நிலையை நோக்கி அயோத்தியர் இறை மேற்செல்லாது, ' இன்று போய் நாளை நின் தாணையோடு வா ' என்று விட்டாற் போல்வது ' என்றெழுதிய உரைநயத்தால் அறியலாம். இனிக் கம்பரும் இளங்கோவும் என்ற பொருளுரையை நோக்குவோம்.

கம்பரும் இளங்கோவும் :

தற்குறிப்பேற்றங்கள் தருவதில் கம்பர் இளங்கோவைப் பின்பற்றுகிறார். மதுரையில் நுழையும் கோவலன் முதலானவரைக் காட்டும் அடிகள் கண்ணகிக்காக வையையாறு அழுவதையும் கோவல கண்ணகியர் உறும் துயரை அறிந்தன போல் மலர் நடுங்கிக் கண்ணீர் சொரிவதையும் மதிற்கொடிகள் அவரை ' வாரல் ' என மறித்துக் கைகாட்டுவதையும் தருகின்றார். இதனை மூன்றிடங்களில் வெவ்வேறு சூழலில் வேறுபட்ட பாத்திரங்களைக் காட்டுமிடத்துச் சிறிய மாற்றங்களுடன் உவமையாக்கிக் கையாள்வார் கம்பர். கவியெனக் கிடந்து பொலிந்த கடவுள் ஆறான கோதாவரி கானுறை வாழ்விற்கு வந்த தயரதன் காதலரைக் கண்டு கண்ணீரை மறைக்காது ஏங்கி அழுகின்றதாம். வானரப்படைகள் தூர்க்கவரும் அகழிக்காட்சியில் நில மலர்கள் தேன்சொட்டுவது அகழி அழுவது போலவும் இராவணன் புகழும் மேன்மையும் போயினவாம் எனக் கண்ணீர் உகுப்பதாகவும் கம்பர் காட்டுகின்றார். இளங்கோ முதன்மைப் பாத்திரங்களுக்குக் காட்டியதைக் கம்பர் இங்கு எதிர்மை மாந்தருக்குத் தருகின்றார். மதுரைக் கொடிகள் ' வாரல் ' எனக் கோவல கண்ணகியருக்கு மறுத்துக் காட்டுகின்றன. மிதிலைக் கொடிகளோ ' ஒல்லை வா' என இராமனைக் கையசைத்து அழைக்கின்றன.

வான்புகழ் வள்ளுவர்

வள்ளுவத்தின் வளர்சிறப்பு :

" வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு " என்று மனநிறைவுடன் பாடுகிறான்

பெருங்கவி பாரதி. தமிழ்ச் சமுதாயத்திற்குள்ளோ இந்தியத் துணைக்கண்டத்தின் எல்லைக்குள்ளோ அடங்காது உலகு தழுவிய உயர்வுடையது வள்ளுவம் என்பது பெருங்கவி பாரதியின் மதிப்பீடாகும். சென்ற நூற்றாண்டிலும் இந்நூற்றாண்டின் முற்பகுதியிலும் மேலைநாட்டினர் பலர் தங்கள் மத நம்பிக்கைகளை இம்மண்ணில் பரப்ப வந்தவர்களாக மட்டுமல்லாமல் தாங்களாகவே வள்ளுவத்தை ஆழ்ந்து படித்து அது கூறும் வாழ்வியலால் ஈர்க்கப்பட்டு அதைப் பல கோணங்களில் பார்த்துப் பாராட்டியதுடன் தங்கள் தாய்மொழியிலும் பெயர்த்தனர். சைவர்களாக, வைணவர்களாக, இரண்டும் இணைந்த இந்துக்களாக, கிருத்துவர்களாக, முகமதியர்களாக நின்ற தமிழர் தேவாரம், திருவாசகம், திருப்பாவை, திருவாய்மொழி, பகவத்கீதை, விவிலியம், திருக்குரான் என்ற மதநூல்கள் வழி நின்றனர். அவர்கள் குறளைப் பாராட்டவோ, பரப்பவோ எம் முயற்சியிலும் ஆழமாக ஈடுபட்டவர்கள் அல்லர். அதன் ஈர்ப்பு, ஏற்றம், இயல்புத்தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் உலகின் பலமொழிகளில் இடம்பெற்ற பெருமை வள்ளுவத்திற்கே உண்டு.

குறளின் பொதுமைப் பண்பு :

.எந்நாட்டவர்க்கும் எம்மதத்தவர்க்கும் எக்காலத்தவர்க்கும் எம்மொழியினர்க்கும் எப்பிரிவினர்க்கும் எவ்வயதினர்க்கும், எக்கொள்கையர்க்கும் ஏற்றதொரு நூல் என்று குறள் கருதப்படுகின்றது. வள்ளுவத்தில் கன்பூசியசையும் காரல் மார்க்சையும் காணலாம் : சாக்ரடீசையும் சாணக்கியரையும் உணரலாம் : காந்தியையும் அறியலாம்: பிளேட்டோவும் ரூசோவும் அங்குள்ளனர்; இப்படி அனைத்து அறிஞர்களின் கருத்துக்களையும் ஒருசேர இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தன்னகத்துக் கொண்ட பெருமை வள்ளுவம் ஒன்றிற்குத் தான் உண்டு. இப்பெருமை எம்மத நூலுக்கோ, வேறு எம்மொழி நூலுக்கோ, இலக்கியத்திற்கோ இல்லை! இல்லை! முக்காலும் இல்லை ! இதனை முப்பதினாயிரம் கோயில் ஏறிச் சத்தியம் செய்து கூறலாம்.

மொழியைவிட மொழியிலுள்ள ஒரு நூல் விளக்கம் பெற்றுள்ளமை ஒரு புதுமையே. செந்தமிழின் அமைப்பையும் போக்கையும் அறியாத நாடுகளும் குறளை அறிந்திருக்கின்றன; வள்ளுவரைப் புரிந்திருக்கின்றன. வள்ளுவக் கருத்து மணிகளைத் தமது இலக்கியப் பொன்னகைகளில் பதித்து அழகு பார்க்கின்றன. அப்படியே மொழிமாற்றித் தமதாக்கிக் கொண்டும் இருக்கின்றன. அப்படித் தமதாக்கினாலும் கருத்தை அப்படியே எடுத்துத் தம் இலக்கியத்தில் புதைந்து வைத்துக் கொண்டாலும் வள்ளுவர் குறள் என்ற உரிமையை மாற்றவில்லை. தமிழ் தந்த வளன் குறளாகும் என்ற நிலையை அழிக்கவுமில்லை. ' எமது கருத்தே வள்ளுவர்க்கு வந்தது' என்ற வறட்டுப் பெருமையும் பேச முற்படவில்லை. நம் நாடுகளிலுள்ள சில பேரறிஞர்கள் தாம் வள்ளுவர்க்குச் சொந்தக் கருத்தில்லை என்று சொல்வதில் இன்புறக் கூடியவர்கள். மேலை நாட்டார் மேலை நாட்டாரே!

தமிழ் இலக்கியங்களும் பிறநாட்டு இலக்கியங்களும் :

பொதுவாக இலக்கியத் தோற்றத்தில் நம் நாட்டு இலக்கியங்களுக்கும் பிறநாட்டு இலக்கியங்களுக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. பிறநாட்டு இலக்கியங்கள் கவிஞனின் அகப்புற வாழ்வில் உண்டான இன்ப துன்பங்களை அடிப்படையாகக் கொண்டு விருப்பு, வெறுப்புக்களாகிய மணங்களை வீசுவன ஆகும். மலர்ந்த காலத்தில் மனத்தைக் கொள்ளை கொள்ளும் மணத்தைப் போலத் தோன்றிய காலத்தில் உலகத்தைச் சொக்க வைக்கும். காலம் கனிந்த பின்பு வாடிய பூப்போல் பழங்கதையைத் தெரிந்து கொள்ளும் அளவிற்குப் பயன்படும். தமிழ்நாட்டு இலக்கியங்கள் உலகியல் தத்துவங்களை அடியொற்றி எழுதப்பெறுவன ஆகும். கவிஞனின் வாழ்க்கை வறுமையால் வயிறு ஒட்டி நிற்கும். அவன் கவிதையில் அதனைக் காணமுடியாது. கவிஞன் அறிவுலகத்தில் தானோர் அரசனாகி, ஆனையும் தானையும் புடை சூழ, அவனியெலாம் உலா வந்து, படிப்பவர்களையும் பக்கம் நின்று கேட்பவர்களையும் இந்நிலையில் ஆக்கிவிடுவான்.

இயற்பெயர் இல்லா வள்ளுவரும் வள்ளுவமும் :

நமது வள்ளுவர் வாழ்ந்த வாழ்க்கையும் மண்குடிசை வாழ்க்கையோ, மணி மாளிகை வாழ்க்கையோ அறியமுடியவில்லை. ஆனாலும் அவர் சொல்லும் கருத்துக்களில் அரசன் ஆண்மை தொனிக்கின்றது. அமைச்சர் அறிவு அலை பாய்கின்றது. அரசியல் தந்திரம் ஆழம் கொள்கின்றது. தூதரின் சொல்வன்மை தோன்றுகிறது. பதினாறாண்டுப் பருவத்தினராக எழில் நிறைந்த இளமங்கையுடன் நுகரும் இன்பத் தேன் எங்கும் களிப்பூட்டுகின்றது. அறவோராகவும் துறவோராகவும் இருந்து வழங்கும் அறமொழிகள் ஒளி விடுகின்றன. இவற்றில் இருந்து இவர் எத்தகைய வாழ்க்கையினர் என்று துணியக் கூடும்? முடியாது;! முடியவே முடியாது. இதனாலேயே இந்நூல் அனைவரின் வாழ்வுடன் ஒட்டி அனைவர்க்கும் இன்பம் பயக்கும் பொது நூலாக அழியாப் புகழுடன் விளங்கிக் கொண்டிருக்கின்றது. இந்நூலிற்கு மிகுதியோரால் வழங்கப்படும் பெயர் திருக்குறள் என்பதாகும். 'சிலப்பதிகாரம் என நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்' என்று மிகப் பெருமிதமாக இளங்கோவடிகள் நூற்பெயரைச் சொல்கின்றார். கம்பரும் தம் காப்பியத்திற்கு இராமாவதார மாக்கதை எனப் பெயர் சூட்டியுள்ளார். அதுபோல் வள்ளுவர் எங்கேயாவது தம் நூலிற்கு இதுபெயர் என எடுத்துக் கூறியுள்ளாரா? தமக்கு ஓர் இயற்பெயர் இல்லாமல் தாம் செய்த நூலுக்கும் பெயர் சூட்டாமல் உயர்ந்த நூலொன்றைச் செய்து உதவிய வள்ளலை நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். நூலுக்குத் திருக்குறள் என்ற பெயர் அவர் வைத்ததன்று. அது உலகம் சூட்டிய உயர்ந்த பெயராகும். பெயர் எப்படி வந்ததாயினும் குறட்பாவினால் ஆகிய இந்நூல் திருக்குறள் என அழைக்கப்பட்டது என்பதற்கு ஐயம் ஏதுமில்லை.

உலகின் பல நாடுகளில் பற்பல அறிஞர்கள் தோன்றியுள்ளனர். அவர்கள் அனைவரும் அவ்வக்கால மக்களுக்குப் பல அறிவுரைகள் வழங்கிப் போயுள்ளனர். அவர்கள் கூறிய அறிவுரைகள் மிகுதியும் அவரவர் நாட்டு மக்களுக்குக்காகப் புகலப்பட்டனவையே. ஏசுநாதர் இசுரேலிய நாட்டு மக்களுக்கு வழிகாட்ட வந்தவர். நபிகளின் நல்லுரைகள் இசுலாமிய இனத்தவர்க்கு மட்டும் உரியன. ஆனால் வள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களின் நிலை என்ன? அவை தமிழ்நாட்டார்க்கு மட்டுமின்றி, மனித இனம் அனைத்திற்கும் பொதுவாகச் சொல்லப்பட்டவை. வள்ளுவர்க்கும் உலகத்தின் மற்ற அறிஞர்க்கும் நுட்பமான வேறுபாடு உண்டு. மற்ற அனைத்து நாட்டு அறிஞர்களும் தத்தம் நாட்டு மக்களுக்கு அறிவுரை கூறுவதன் வாயிலாக உலகை அறிவுறுத்தி உள்ளனர். ஆனால் வள்ளுவரோ உலகத்தவர்க்கு அறிவுரை கூறுவதன் வாயிலாகத் தம்நாட்டுக்கு அறிவுரை வழங்கியுள்ளார். எனவே தான் தமது நூலில் தமிழர் என்றோ, தமிழ்நாடு என்றோ கூறாது உலகம், மக்கள் என்று பொதுவாகக் கூறியுள்ளார்.

வள்ளுவர் - சாக்ரடீசு :

மேலை நாட்டவர் சாக்ரட்டீசை அறிவின் தந்தை எனப் போற்றிப் புகழ்வர்.

அறிவின் இன்றியமையாமை பற்றிச் சொல்ல வந்த அவர், அறிவைத் தேடிப் பெறாதவன் ஒரு கயிற்றைத் தேடித் தூக்குப் போட்டுக் கொள்ளட்டும் எனச் சொல்கின்றார். இக்கருத்தை இன்று மேலை நாட்டார் மிகுதியாகப் புகழ்கின்றனர். இதே கருத்தைத் திருவள்ளுவரும் பேசுகின்றார் :

" அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர் "

திருவள்ளுவரும் சாக்ரடீசும் ஒரே கருத்தைத் தான் வலியுறுத்தி உள்ளனர். இருப்பினும் இருவர் போக்கிலும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வேறுபாடு காணப்படுகின்றது. சாக்ரட்டீசின் கருத்திலே கடுமை காணப்படுகிறது. வள்ளுவரின் கருத்திலோ கனிவு கசிகின்றது. அது மட்டுமன்று. சொல்லும் வகையிலும் இருவரும் பெரிதும் வேறுபடுகின்றனர். சாக்ரட்டீசு மனிதன் அறிவைப் பெற வேண்டுமென்று வலியுறுத்துகின்றாரே தவிர, அதன் இன்றியமையாமையை அவர் வலியுறுத்தவில்லை. ஆனால் வள்ளுவரோ அறிவின் பெருமையை நன்கு சுட்டியுள்ளார். அறிவை மட்டும் பெற்று விட்டால் இன்ப வாழ்விற்குத் தேவையானவைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம். அறிவில்லாமல் வாழ்வின் தேவைக்குரியவை அனைத்திருந்தும் பயனில்லை. ஏன்? அறிவில்லையேல் அவற்றைச் சிறந்த வழிகளிலே பயன்படுத்தி இன்பமாக வாழ இயலாது. எனவே அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வள்ளுவர் அன்புடன் வேண்டுகின்றார்.

வள்ளுவர் - அரிஸ்டாடில்

நட்பைப் பற்றி அரிஸ்டாட்டிலும் குறிப்பிட்டுள்ளார். துன்பத்தில் ஆழ்ந்து துயர்ப்படும் பொழுதை விட இன்பம் துய்க்கும் நிலையில்தான் நண்பர்கள் இன்றும் மிகுதியாகத் தேவைப்படுகின்றனர். மகிழ்ச்சியைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளும் பொழுதுதான் அது இருமடங்காக வளரும் என்கிறார் அரிஸ்டாட்டில். நட்புப் பற்றித் திருவள்ளுவரும் கூறுகின்றார். நட்பு, நட்பாராய்தல், தீ நட்பு, கூடா நட்பு என்ற தலைப்புக்களிலே பல பொன்னுரைகளைக் குறிப்பிட்டுள்ளார். இதுபோல் வேறெந்த இயல்பிற்கும் இத்துணை அதிகாரங்கள் அவர் வகுத்து வலியுறுத்தவில்லை. மக்களின் நல்வாழ்விற்கு நட்பு எவ்வளவு இன்றியமையாதது என்பதை அன்றே திருவள்ளுவர் உணர்ந்து அறிவுறுத்தியுள்ளார். இன்பம் வரும்போது அதைப்பகிர்ந்து கொள்வதுடன் நட்பின் பணி நின்று விடுதல் கூடாதாம். தன் நண்பனுக்குத் தீங்கு நேருங்கால் அவனுக்குத் துணை நின்று அவனைக் காக்கவும் வேண்டும் என்று நட்பின் இலக்கணத்திற்கே நற்பொலிவு ஊட்டுகின்றார் :

" உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு "

அதுமட்டுமன்று, தன் நண்பன் தீய வழியில் செல்லும் போது அவன் செய்யும் தவறுகளை எடுத்துக்காட்டி, இடித்துக்கூறி, அவனை நல்வழிப்படுத்துவதும்

ஆகும் என்று சொல்வதன் வாயிலாக நட்பிலக்கணத்தின் எல்லைக் கோட்டையே வள்ளுவர் தொடுகின்றார்.

" நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு "

வள்ளுவப்புரட்சி :

" இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் "

அம்மம்மா ! என்ன துணிவு! என்ன நெஞ்சுரம் ! எத்துணைப் புரட்சி ! மனிதன் தனது மாண்புமிக்க நிலையிலிருந்து வழுவித் தாழ்ந்த ஓர் இழி நிலையில் வாழக்கூடாதென்பதை எவ்வளவு அழுத்தமாக வள்ளுவர் உணர்த்தியுள்ளார். வள்ளுவர் முதல் பெர்னாட்சா ஈறாக எண்ணற்ற அறிஞர்கள் புரட்சிப் பொறிகளை அள்ளி, அள்ளித் தெளித்திருக்கின்றனர். ஆனால் வள்ளுவரைத் தவிர வேறு எவர்க்கும் இவ்வளவு நெஞ்சுரம் இருந்ததில்லை. புரட்சி எண்ணங்களின் இருப்பிடமான காரல்மார்க்சு இது போன்றதொரு வேகமான கருத்தை வெளிப்படுத்தவில்லை. ஏங்கல்சு என்னும் பொருளாதார அறிஞன் இப்படி எண்ணியதில்லை. மனித இனத்தின் மாபெரும் தலைவனான இலெனின் கூட இப்படிக் குறிப்பிடவில்லை. நம் திருவள்ளுவரே இதைப் பேசியுள்ளார். இவர்தான் மனிதத் தெய்வமாவார்.

வள்ளுவரின் தனித்தன்மை :

ஆங்கிலேயேர்கள் சேக்ச்பியரை வானளாவப் போற்றுகின்றனர். சேக்ச்பியரின் நூலிலே இத்தகைய உயர்ந்த கருத்து ஒன்றையும் காணோம். சேக்ச்பியருக்கு உள்ள பெருமையெல்லாம் கருத்துக்களின் உயர்விற்காக அல்ல. கருத்துக்களை அவன் சொல்லிப் போயுள்ள முறையில்தான் பெருமை அடங்கியுள்ளது என்கின்றனர் மேலைநாட்டு ஆய்வறிஞர்கள். ஆனால் வள்ளுவர் சொல்லும் முறையும் புதிது; கருத்துக்களும் இணையற்றவை. இன்று மாபெரும் புலவர்கள் எனப் போற்றப்படும் ஓமர், தாந்தே, மில்டன், வர்சில், சேக்ச்பியர், கதே, இளங்கோ, கம்பர், காளிதாசர் போன்றவர்களுக்கும் திருவள்ளுவருக்கும் மிகப்பெரிய வேறுபாடு உண்டு.

மேலே சொல்லப்பட்ட பெரும்புலவர்கள் அனைவரும் கதைகள் சொல்லிக் காப்பியம் ஆக்கியவர்கள் ஆவர். கதைக்குக் காலில்லை என்ற சொல்லிற்கு ஏற்பக் கதைப் போக்கைத் தங்கள் விருப்பப்படிச் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் சொல்லும் திறனுக்கு ஏற்ப மாற்றி அமைத்துக் கொள்ளும் வாய்ப்புடையவர்கள் ஆவர். மனம்போன போக்கில் எழுத்தாணியைச் ஓடவிட்டு எழுதியவர்கள் இவர்கள் ஆவர். ஆனால் வள்ளுவரின் நிலை அத்தகையதன்று. வள்ளுவர் ஓர் அறநூல் ஆசிரியர் ஆவார். அவரது ஒவ்வொரு சொல்லிற்கும் ஏன் ஒவ்வொரு எழுத்திற்கும் கூட ஆழ்ந்த பொருள் காணலாம். அவரது

நூலிற்கு நேர்மையே உடல்; அறமே உயிர் ; அவ்வுயிரோட்டம் நூல் முழுவதும் சீராக ஓடி அமைதல் வேண்டும்.

" அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை "

" தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை "

" ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும் "

என்னும் இக்குறள்களை வாழ்வியல் அடிப்படையில் விளக்க எழுந்ததே சிலம்பாகும்.

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் " .

என்னும் குறளிற்கு வாழ்விலக்கியமாய் எழுந்ததே இராமாயணமாகும்.

சொற்கோயில் எழுப்பிய இளங்கோ :

பாரதி பாராட்டும் சிலம்பு :

' நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு ' - சிலப்பதிகாரத்தின் சிறப்பு இயல்புகளை வியந்து பாரதி அளித்த பாராட்டுரை என்றே நம்மில் பலர் இதனைக் கருதுகின்றோம். ஆனால் இவ்வாறு கருதுவது அக்கவியரசன் கருத்தை உள்ளவாறு உணர்ந்து கொண்டதாகாது. உண்மையை மிகுதிப்படுத்துவதே பாராட்டுரையாகும். இங்குப் பாரதி கடுகளவு கூட மிகைப்படுத்திக் கூறவில்லை. உண்மையை உள்ளபடியே அவன் உணர்த்தியுள்ளான்.

நம் நாட்டின் சிறப்பு, மொழிவளம், கலையின் அகலம், கருத்தின் வீச்சு, பண்பாட்டு ஒருமை, சமய ஒருமைப்பாடு, தெய்வ வழிபாட்டில் கனிந்த உள்ளத்தின் ஆழம், பிறரை வாழவைப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட சால்பு இவையனைத்திற்கும் சிலம்பு ஓர் ஒப்புயர்வற்ற எண்ணமாகும். ஏற்றமிகு தமிழின் எழிலை எடுத்துக்காட்டும் மணியாரம் என்றும் படிப்பவர் நெஞ்சினை அள்ளிச் செல்லும் பண்புமிக்கது என்றும் சிலம்பைத்தவிரவேறு எந்நூலையும் அவன் குறிப்பிடவில்லை. தமிழ்ப்பெருமக்கள் இயல்பாய்த் தன்னடக்கம் உடையவர் என்பதைப் பாரதி நன்கு அறிந்திருந்தான். ஆகவே தன் சொற்களைத் தற்புகழ்ச்சி என்று கருதித் தள்ளிவிடுவரோ என அவன் அஞ்சினான். இல்லையேல் ஒருமுறை தெள்ளத் தெளியக் கூறியதனை மீண்டும் குறிப்பிட்டு, 'உண்மை வெறும் புகழ்ச்சியில்லை' என உறுதி தோன்ற அவன் வற்புறுத்தி இரான்.

இக்காப்பியத்தைப் பன்முறை பயின்று சுவைத்த காரணத்தாலேயே காப்பியம் ஒன்றினை இயற்றித்தரும் கவிஞனே தமிழ்மொழிக்குச் சிறந்த தொண்டனாவான் என்ற கருத்து அவனைக் கவர்ந்தது. அதனைச் செயற்படுத்திப் 'பாஞ்சாலி சபதம்' என்ற குறுங்காப்பியத்தை அவன் இயற்றினான். தான் பெற்ற எல்லையற்ற இன்பப் பெருக்கினையும் பெருமித உணர்ச்சியினையும் தமிழக மக்கள் அனைவரும் நுகர வேண்டும் என்பதுவே அவனது பேரவா ஆகும். இவ்விருப்பமே சேரன் தம்பி இசைத்த சிலம்பொலியைப் பேரிகையின் பெருமுழக்கமாக ஆக்கிக்காட்ட அவனைத் தூண்டியது.

நம் பாரதி அடிமையாகப் பிறந்தான். தன் ஆற்றல் காரணமாகக் கவிஞருள் மன்னனாய் மதிக்கப்பட்டான். சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோ அடிகளோ மக்களை ஆளும் தகுதியுடைய மன்னர் மரபில் தோன்றினார். எனினும் அவர் தம் பிறப்புரிமையை இளமையிலேயே துறந்துவிட்டார். ஆண்டவன் அடிமையாக அவர் மாறியதற்குக் காரணம் அவரது பேராற்றலே ஆகும். அடிமையாய்ப் பிறந்து பின்னர் ஆளும் மன்னனுக்கு ஒப்பாக மதிக்கப்பட்ட கவிஞன் அரசராய்ப்பிறந்து பின்னர் ஆண்டவன் அடிமையாய் மாறிய கவிஞரைப் போற்றிப் பின்பற்றிய செயல் வியந்தும் நயந்தும் பாராட்டத்தக்கதாகும்.

மும்மூன்றின் சிறப்பு :

சிலப்பதிகாரத்தின் பதிகத்தால் இக்காப்பியம் மூன்று உண்மைகளை நிலைநாட்டத் தோன்றிற்று என்ற கருத்துத் தெரிகின்றது. இது மூன்று காண்டங்களை உடையது. இதன் நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டின் மூன்று பெரும் பிரிவுகளிலும் நடைபெறுகின்றன. இதனுடைய முப்பிரிவுகளும் முத்தமிழ் நாட்டின் தலைநகரங்களின் பெயராகவும் விளங்குகின்றன. இக்கதையின் முதன்மைப் பாத்திரங்கள் மூவர். இக்காப்பியம் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் விரவப் பெற்றது. மூன்று காண்டங்களும் சிறப்பான முச்சுவைகளைப் பயப்பன. தமிழ்நாட்டு மூவேந்தரையும் இது பாராட்டுகின்றது. இவ்வாறு மும்மூன்றாய் விளங்குவது சிலம்பிற்கு மட்டுமே உரிய ஒரு தனிச்சிறப்பு ஆகும்.

அரசியல் முறையில் தவறு செய்யும் மன்னனை அறக்கடவுளே கூற்றுவனாக மாறி அழித்துவிடுவான். கற்புடைப்பெண்டிரைப் பெரியோர்களும் போற்றி வணங்குவர். ஊழ்வினை செய்தவரைச் சென்று சேர்தல் உறுதியாகும். வேறு பிறவி எடுத்தாலும் ஊழ் வலியை மாற்ற இயலாது. அது தொடர்ந்து சென்று உரியாரை நலிவிக்கும். இவை அடிப்படை உண்மைகள். மன்னர்க்குரிய ஒன்று, மங்கையர் பெருமையைப் புலப்படுத்தும் ஒன்று, மக்களை நல்லாற்றிற் செலுத்தும் வல்லமையுடைய ஒன்று ஆக இம்மூன்று உண்மைகளைப் புலப்படுத்திக்காட்டவே அடிகள் இக்காப்பியத்தை இயற்றினார். புகார்க் காண்டத்துள் மக்களுள் ஒருத்தியாய்ப் பிறந்தவளாய் மனத்திட்பம் மிக உடையவளாய் விளங்கிய கண்ணகி மதுரைக் காண்டத்தில் மக்களுள் மேம்பட்டவளாய்த் தெய்வங்களை ஏவல் கொள்ளும் தகுதியுடையவளாய், விண்ணவர்களால் பாராட்டப்பட்டவளாய் உயர்ந்தமையை உணர்கிறோம்.

பயன் தராக் கண்ணகி ஆற்றல் :

கண்ணகி விண்ணவர் உலகத்திற்கு ஒப்பான புகார் நகரத்தில் பிறந்தாள். மழைபோல் வழங்கும் மாநாய்கனுக்குச் செல்வ மகளாய் அவள் பிறந்து வளர்ந்தாள். இருநிதிக்கிழவன் என்று பாராட்டப்பட்ட பெருஞ்செல்வன் வீட்டில் அவள் குடியேறினாள். எனினும் என்ன? இவற்றுள் ஒன்று கூட இன்ப வாழ்க்கையை நடத்த அவளுக்குத் துணையாய் இருக்கவில்லையே. கண்ணகி பொன்னையும் கொடியையும் ஒத்த பண்புடையவள் என்பதனைத் தெய்வமுற்றவளும் தவ வாழ்க்கையை மேற்கொண்டவரும் கண்டு அறிவிக்கின்றனர். அவளுடைய கணவனோ இறப்பதற்கு முதல் நாள் தான் அவள் பண்பு மேம்பாட்டை அறிந்து கொண்டான். இவ்வாறன்றித் தன் பண்புக் கூறுபாடுகள் வெளியார்க்குப் புலப்படும் வண்ணம் - சிறப்பாகக் கோவலனுக்குப் புலப்படும் முறையில் அவள் நடந்து கொண்டிருந்தால் அவளை விட்டு நீங்கி அவன் சென்றிருப்பானா? கண்ணகி அழகு மிக்கவள். திருமகளுடன் ஒப்புச் சொல்லக்கூடிய எழிலை அவள் பெற்றிருந்தாள். எனினும் என்ன? அவளுடைய அழகு அவள் கணவனை முற்றிலும் ஈர்த்து அவனை அவளுடனேயே தங்கியிருக்கும்படிச் செய்யவில்லையே. அவள் அருந்ததிக்கு ஒப்பான கற்பாற்றல் பெற்றவள். விண்ணவர்களையும் ஏவல் கொள்ளும் திறன் அவளுக்குண்டு. இருந்தும் என்ன பயன்? தான் கண்ட கனவின் வாயிலாகத் தீமை நிகழும் என்றுணர்ந்தவளாய் இருந்தும் அவள் ஆற்றல் அவளுக்கு நேர்ந்த தீமைகளைத் தடுக்கும் திறனற்றதாய் இருந்துவிட்டதே.

கோவலனின் கோலமற்ற வாழ்வு :

கோவலன் புகழ்படைத்தவன். புகார் நகரத்தவரால் அவன் பாராட்டப்பட்டவன். பணம் மிகப் படைத்தவன் அவனாவான். இருந்தும் என்ன பயன்? பிறரால் பாராட்டப்படும் பண்புடைய வாழ்க்கையை அவன் நடத்தவில்லை. அவனது அளவில்லாத செல்வம் அவனுக்கு இன்பம் பயக்கவில்லை. கண்ணகி தன் இச்சைப்படி நடக்கும் உரிமையில்லாதவளாய் இருந்தாள். ஆனால் கோவலனோ கட்டுப்பாட்டிற்கு உட்படாத வாழ்க்கையைக் கசக்கிப் பிழிந்து இன்பம் அனைத்தையும் துய்த்துவிட வேண்டுமென்று துடித்தான். ஆனால் தன்னை இயற்கை கசக்கிப்பிழியும்படி விட்டுவிட்டானே.

கண்ணகி கோவலரின் திருமணம் மிகப் பொருட்செலவில் ஆரவாரத்துடன் நடந்தது. புகார் நகர மக்கள் இதனைப் போன்ற திருமணத்தைத் தம் வாழ்நாளில் கண்டிருக்க மாட்டார்கள். இருந்தும் என்ன பயன்? இவர்கள் இணைந்து இருவரும் துன்பம் அடைவதற்கே இத்திருமணம் என்று சொல்லும்படி ஆகிவிட்டதே. அந்நகர மக்களின் விருப்பம் நிறைவேறவில்லையே. கண்ணகியை மணவறைக்கு அழைத்துச்சென்ற பெண்கள் எவ்வளவு உள்ளன்புடன் வாழ்த்தினர். அவர்களுடைய வேண்டுதலைத் தெய்வம் பொருட்படுத்தவில்லையே. அவர்கள் விரும்பியதற்கு நேர்மாறாகக் கண்ணகி கோவலர் வாழ்க்கை நடந்து முடிந்ததே.

அவலமே காப்பியக்கரு :

ஆன்றோர், கண்ணகிகோவலரின் பெற்றோர், இம்மனமக்கள், பெண்டிர், ஊரார் இவர்கள் அனைவரும் பெரும் ஏமாற்றத்தையே கண்டனர். அவர்கள் விரும்பிய வண்ணம் நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை. இக்காப்பியத்தில் பங்குபெறும் பாத்திரங்கள் இன்பத்தையே எதிர்நோக்கின. ஆனால் அவை துன்பத்தையே பெற்றன; அழிவையே அடைந்தன. மிகச்சிறிய அளவில் பங்குபெற்றிருக்கும் கவுந்தியடிகளும் மாதரியும் கூட மடிந்துவிட நேர்ந்துள்ளதே.

இளங்கோவடிகள் இயற்றிமிருக்கும் காப்பியத்தில் துன்பத்தை அடையாதவர் எவருமிலர். அழிவை எய்தாதது எதுவுமிலை. கதையில் பங்குபெறும் பாத்திரங்கள் துன்பம் உற்றதனைக் கூறியதுடன் அடிகள் நிறுத்திக் கொள்ளவில்லை. கதை தோன்றிய புகார் நகரம் கடலால் விழுங்கப்பெற்று அழிந்தது. சோழ அரசு ஆட்டம் கண்டது. மதுரை நகரம் நெருப்புக்கு இரையாயிற்று. அதன் மன்னன் மடிந்துவிட்டான். ஆக இக்காப்பியம் ஒரு பேரழிவின் சித்திரமேயன்றி வேறு எதுவாக உள்ளது?

சிலம்புணர்த்தும் வாழ்வுநெறி :

சிலப்பதிகாரக்கதை நடந்து முடிந்த தன்மையைக் கண்டபின் நமக்குத் தெளிவாய் விளங்குவது என்ன? இயற்கையோ, உண்மையோ அல்லது ஊழ்வினையோ அதனை எப்பெயரிட்டு அழைத்தாலும் என்ன? தனக்கென ஒரு வழி அது வகுத்துக் கொண்டுள்ளது. ஆன்றோர் கருத்துக்கோ, பெற்றோர் விருப்பத்திற்கோ, இளைஞர் ஆசைக்கோ, பெண்களின் வேண்டுதலுக்கோ அல்லது உலகத்தார் எண்ணத்திற்கோ அது இசைந்து கொடுத்துத் தன் போக்கை மாற்றிக் கொள்வதில்லை. அடிகள் மங்கல வாழ்த்துப் பாடலில் பலதரப்பட்ட மக்களைக் காட்டிஅவர்கள் பெரிதும் விரும்பியும் வாழ்த்தியும் முயன்றும் வேண்டினாலும் கூட இவ்வுலகப் போக்கினை மாற்றியமைக்க முடியவில்லை என்ற கருத்தினை அடிகள் நிலை நாட்டியுள்ளார். இதனால் இவ்வுலகில் உள்ளவர் எவரே ஆயினும் அவர் எவ்வளவு முயன்றாலும் உலக நெறியை, ஊழின் விளைவை, இயற்கையின் போக்கை மாற்றி அமைக்கவே முடியாது என்று அடிகள் தெளிவாக வற்புறுத்தியுள்ளார்.

இருப்பதனை வைத்துக்கொண்டு செம்மையான முறையில் வாழ்க்கையை நடத்தவதை விட்டு விட்டு இல்லாததற்கு ஏக்கம் கொண்டு அதனைப் பெற அலைந்து, திரிந்து, இறுதியில் துன்பமும் சோர்வும் அடைந்து, அழிவு எய்துவானேன்? இதனை நாம் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பதுவே அடிகளின் உட்கிடக்கை ஆகும். நம் மனம் ஆசைப்பாதையில் நம்மை இழுத்துச் சென்று அல்லற்படவே வைக்கும். அதன் மயக்கத்தில் நம் உயிரைப் பலியிட்டு விடாமல் உலகப் போக்கினை உணர்ந்து நம் வாழ்க்கையை அதனை எதிர்த்துச் செல்லாத வகையில் அமைத்துக்கொள்ள வேண்டும். இதுவே உலகில்வாழும் வழி என்பது அடிகள் கருத்தாகும். உலகத்துடன்

ஒட்ட ஒழுகுதல் இன்றியமையாதது மட்டுமல்லாமல் அறிவுடைமையும் ஆகும் எனத் திருவள்ளுவரும் அறிவுறுத்தியுள்ளார்.

வள்ளுவமும் இளங்கோவும் :

அடிகள் வள்ளுவரைப் போலவே எந்நாட்டிற்கும் எச்சமயத்திற்கும் ஏற்ற பொது நெறியையே காட்டி இருக்கின்றார். வள்ளுவர் விதித்தனவற்றையும் விலக்கியனவற்றையும் அடிகள் எடுத்துக்காட்டியுள்ளார்.வள்ளுவர் தம் நூலுக்குப் பாயிரம் ஒன்றைப் பாடிச் சேர்த்திருப்பது போல் அடிகளும் தம் காப்பியத்தில் பாயிரம் ஒன்றை அமைத்துள்ளார். வள்ளுவர் பரம்பொருளை வாழ்த்திப் பின்னர் தம் பாயிரத்தாலேயே நூலின் இயல்பினையும் போக்கினையும் புலப்படுத்தி இருத்தலைப்போன்று அடிகளும் தாம் தெரிந்தெடுத்துக் கொண்ட நான்கு பொருள்களை வாழ்த்திப் பின் தம் நூலின் இயல்பு, முடிவு, பயன் இவையனைத்தையும் தம் பாயிரப்பாடலிலேயே குறிப்பாய்ப் புலப்படுத்தியுள்ளார். வள்ளுவர் தாம் இயற்றிய கடவுள் வாழ்த்தில் இறைவனின் பொதுப் பண்புகளையே குறிப்பிட்டுள்ளார். இதனை அடிகள் எதிர்பார்த்திருக்க வேண்டும். மேலும் அவர் வாழ்ந்த காலத்தில் சமயப் பூசல்கள் தலைதூக்கியிருந்தன. எனவே துறவியாய் விளங்கினாலும் வாழ்த்துப் பகுதியில் இறைவனை வாழ்த்தாமல் ஞாயிறு, மதி, மழை, புகார் என்ற நான்கை மட்டும் வாழ்த்தியிருக்கின்றார்.எச்சமயத்தவருக்கும் ஏன் சமயச்சார்பு சிறிதும் இல்லாதவருக்கும் ஏற்ற வாழ்த்துப்பகுதி இதுவாகும்.

' சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும் திருக்குறள் உறுதியும் பொருளின் ஆழமும் விரிவும் அழகும் கருதியும் எல்லை ஒன்றில்லை எனும் பொருள் அதனைக் கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சியைக் கருதியும், முன்பு தமிழச்சாதியை அமரத்தன்மை வாய்ந்தது ' என்று பாரதி கொண்டிருந்த உறுதியை மேலும் நாம் ஆழமாக்குவோம்: விரிவாக்குவோம். மனிதனை மனிதனே அழிக்கும் விலங்குத் தன்மையைவிட வெறித் தன்மை நிறைந்த இவ்வுலகில் மானுடம் தழைக்க இராமாயணம் வழிகாட்டட்டும். சாதியாலும் சமயத்தாலும் மொழியாலும் இனத்தாலும் பிரிந்து பிணங்கிக் கொண்டிருக்கின்ற பேதைமை சூழ்ந்த உலகத்தை வள்ளுவம் நன்னெறிப் படுத்தட்டும். மாசும் தூசும் நிறைந்துள்ள இன்றைய அரசியல் உலகம் தூய்மையும் நேர்மையும் பெறச் சிலம்பு நற்பாதை சுட்டட்டும். அல்லலுற்று ஆற்றாது துன்பக்கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் இத்தமிழகத்தைக் கம்பரின் புலமையும் வள்ளுவரின் பொதுமையும் இளங்கோவின் புதுமையும் கரை சேர்க்கும், உய்தி தந்து உயர்வளிக்கும் என நம்புவோமாக.

10 பாரதிதாசன் காட்டும் பைந்தமிழ் வாழ்வு

" தமிழகத்தில் நாம் பிறந்தோம்
தமிழர்களாய் வாழ்வோம்
தமிழ் இனத்தில் நாம் பிறந்தோம்
தமிழ் மொழிக்காய் வாழ்வோம் "

என்றவாறு தமிழகத்தில் பிறந்து, தமிழராய் வாழ்ந்து, தமிழுக்காய்த் தம் வாழ் நாளை முழுமையாகவும் பயன்படுத்தியவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனாவார்.

" கடல் போலும் எழுக! கடல்
முழக்கம் போல் கழறிடுக!
தமிழ் வாழ்க என்று!
கெடல் எங்கே தமிழின் நலம்?
அங்கெல்லாம் தலையிட்டுக்
கிளர்ச்சி செய்க!
மொழிப்போரே வேண்டுவது
தொடக்கம் செய்வீர் வெல்வீர்
மொழிப்போர் வெல்க! "

என மொழிப்போருக்குத் தொடக்கக் குரல் கொடுத்தவர் கடக்க முடியாத் தமிழ்க்காதல் கொண்ட புரட்சிக்கவி ஆவார்.

" உடையினிலே ஒன்றாதல் வேண்டும் உண்ணலும்
உணவினிலே ஒன்றாதல் வேண்டும் நல்ல
நடையினிலே ஒன்றாதல் வேண்டும் பேசும்
நாவிலும் எண்ணத்திலும் ஒன்றாதல் வேண்டும்
மடைதிறந்த வெள்ளம் போல் நம் தேவைக்கும்
மாற்றாரை ஒழிப்பதற்கும் ஏறிப் பாயும்
படையினிலே ஒன்றாதல் வேண்டும் வாழ்வில்
பயன்காண வேண்டுமன்றோ ? தமிழினத்தார் "

என்றவாறு தம் உடையில், உணவில், நடையில், பேசும் நாவில், எண்ணத்தில், தமிழ்ப்படையில் தம்மைத் தமிழராகக் காட்டித் தமிழ்ப்பயன் கண்டவர் அவராவார்.

மொழியும் விழியும் :

' தமிழும் சேயும் இமைப்போது பிரிந்தாலும் வாழ்வதில்லை, இதனாற்றான் மொழி ஒருவன் உயிர் என்றார்கள் ' என்பது பாவேந்தரின் கூற்றாகும். விழித்திருக்கும் போதே கழுத்தறுக்கும் பொல்லா உலகத்தில் விழி இழந்தவர் வாழ்வு பற்றி விளம்பத் தேவையில்லை. மொழியிழந்தவன் விழியிழந்தவனே ஆவான். 'வாயுள்ள பிள்ளை பிழைக்கும் ' என்பது போல் மொழியறிவு நிரம்பப் பெற்றவன் புகழ் வாழ்வு பெறுவான். உயிருடன் உயிராயும் உணர்வுடன் உணர்வாயும் அணுவுடன் அணுவாயும் பின்னிப்பிணைந்து இரண்டறக் கலந்து கிடப்பது மொழியாகும். நாம் காண்பது மொழி; கேட்பது மொழி; உரைப்பது மொழி; பூனையைக் கண்டால் அச்சம் ; யானையைக் கண்டால் பேரச்சம் என அஞ்சி, அஞ்சிச் சாவாரும் வீறு கொண்டு எழும் வண்ணம், ' அடே காலா, சற்றே என் முன்னே வாடா! உனை என் காலால் மிதிக்கிறேன் ' என்று சிங்க ஏறு போல் பாரதியை முழங்கச் செய்தது மொழி. அதுவும் நம் தமிழ் மொழியே ஆகும்.

தலைமை சான்ற தமிழ் இனம் மடிமை சான்ற அடிமைக்கண் அழுந்தி, ' இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன ' எனத் திண்ணை வேதாந்தம் பேசியதோடு, 'மரம் வைத்தவன் நீர் விடுவான்' எனக் கோழைத்தனமாகத் தம் பொறுப்பை விதியின் தலையில் அற்றைத் தமிழர் போட்டுக் கொண்டனர். அதனால் வலியிழந்து, மதியிழந்து, நிதியிழந்து, நேர்மையிழந்து, சீர்குலைந்து, நாடிழந்து தமிழர் பிறர்க்கு அடிமையாயினர். இச்சூழலில் தான் தமிழ் உரம் ஏறிய நெஞ்சையும் தமிழ் முழங்கி விளையாடிய பாவையும் துணைக் கொண்டு தமிழைத் தன் பேச்சாய், மூச்சாய், முனைப்பாய் ஏன் அனைத்துமாய்க் கொண்ட மூவாத் தமிழ் பயின்ற மூதறிஞர் வழி வந்த முத்தமிழ் வித்தகரான பாரதிதாசன் கவிதைப்புரட்சி உலகில் காலடி எடுத்து வைத்தார். சீரிய, கூரிய தீஞ்சொல் வவ்விய கவிஞர் அவராவார். 'வழிந்திட வேண்டும் தமிழ்த்தேன், உலகமெலாம் பொழிந்திட வேண்டும், செந்தமிழ் வானம் புதுமையதே ' என்று முழங்கிய முதற்கவிஞர் பாரதிதாசனாவார்.

தமிழின் தொன்மையும் வன்மையும்:

" புனல் சூழ்ந்து வடிந்து போன
நிலத்திலே புதிய நாளை
மனிதப் பைங் கூழ் முளைத்தே
வருத்தது! மனித வாழ்வை
இனியநற் றமிழே நீதான்
எழுப்பினை ! " என்று தமிழின் தொன்மையையும் அதன் வன்மையையும் பாரதிதாசன் சுட்டியுள்ளார். உலகின் ஆதிமொழி அருமைத் தமிழே ஆகும் என்றும் அவ்வுண்மையை ஒதி உலகுக்கு உணர்த்திட வேண்டுமென்று அவர் விரும்புகின்றார். சொல்லாற்ந்த தமிழ் மொழித் தோற்றம், அதன் தொல் பழமை இவற்றின் அடி முடியைக் கண்டார் எவருமிலார் என்றும் தனி மொழியாகிய தமிழ் மொழி உலகத் தாய்மொழியாகும் என்றும் மூத்த மொழியான தமிழ் மொழியின் உலகளாவிய சிறப்பை அவர் எடுத்துரைக்கின்றார்.

" திங்களொடும் செழும்பருதி தன்னோடும் விண்ணொடும் உடுக்களோடும் மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழ் " என இயற்கைப் பொருள்கள் தோன்றிய காலமே தமிழ்த் தோற்றத்தின் காலமும் ஆகும் எனப் பாரதிதாசன் கருதுகின்றார்.

தமிழ் தந்த உறவு :

தமிழிடம் இவர் கொண்ட உறவு வானினும் உயர்ந்தது; நிலத்தினும் திண்மையது; நீரினும் ஆழமுடைத்ததாகும். 'அமிழ்தினும் இனிதென ஆன்றோர் போற்றும் தமிழ்மொழித் தொண்டே தவமெனத் தாங்கியவர்' என நவின்று நாமக்கல்லார் இவரைப் பாராட்டுகின்றார். 'தித்திக்கும் செந்தமிழ்த் தேன் அள்ளி எத்திக்கும் இல்லை தமிழ்மொழிக்கு ஈடெனும் நல்லுரையை வெல்லும் வகையுரைத்த வித்தகன்' என்று இவருக்குப் புகழாரம் சூட்டுகின்றவர் பொன்னடியான் என்னும் கவிஞராவார். 'தலைக்கேறிய தமிழ் மயக்கம் அவர் வாழ்வோடு பிறந்த சால்பு ' என இவரைப் பெருமைப்படுத்துகின்றவர் திருநாவுக்கரசு எனும் நல்லறிஞர் ஆவார். 'அவர் பாடலைப் படிக்கும் அந்நியனும் தமிழன்பனாகிவிடுவான் ' என அவரைப் பாராட்டி மகிழ்கின்றவர் சிதம்பரநாதன் ஆவார். 'பழந்தமிழ்புதுக்கும் பாரதிதாசன்' என அவரைப்பாராட்டிப் பாவாணர் மகிழ்கின்றார்.

" தேவ நட்சத்திரங்கள்
தெருவோடு போனபோது
இந்த
வசந்த நிலா மட்டுமென்
வாசலுக்குள் வந்தது
தென்னங்கீற்றுகளில்
காற்று
தலைவாரிக் கொண்ட போது
இந்தத்
தென்றல் மட்டுமென்
நெஞ்சைத் தொட்டது
கலங்கரை விளக்குகள்
கதவடைப்புச் செய்தபோது
இந்தத்
துறைமுகம் மட்டுமென்
நங்கூரமானது " எனத் தம்மிடம்

தமிழ்த் தாக்கத்தை உருவாக்கிய பாரதிதாசன் பற்றிக் குறிப்பிடுகின்றவர் கவிஞர் பன்னீர்செல்வம் ஆவார்.

" தந்தை பெரியாரின்
தத்துவக் கப்பலை
மனித மனங்களில்
செலுத்திய மாலுமி
பாரதியின்
படைப்புகளிலேயே
தலையாய படைப்பு
உணர்ச்சியின் உள்ளடக்கம்
வளர்ச்சியின் வார்ப்பு
எழுச்சியின் இதயம்
புரட்சியின் தாய்வீடு
பாவேந்தர் தன் பாட்டென்றால்
மறுமலர்ச்சிச்
சிந்தனையாளர்களும்
மறுப்பின்றி
ஏற்றுக் கொள்வார்கள் " என்று

புரட்சிக் கவியைப் புகழ்ந்து பூரிக்கின்றவர் கவிஞர் சாமி பாலையா ஆவார்.

தமிழ், தமிழர் என்ற இரண்டுமே அவர் உள்ளம் ஆண்டுகொண்டிருப்பன ஆகும். அவரைத் தமிழ் இயக்குகின்றது. தமிழ்ச்சீர், தமிழ்த்தீனி, தமிழ்ச்சாப்பாடு, தமிழ்ச்சாராயம், தமிழச்சியின் கத்தி, தமிழ்ப்பெரியார், தமிழ்ப்பிள்ளை, தமிழ்ப்பள்ளி என அவர்க்குப்படுவன எல்லாம் தமிழேயாகும்.

" நல்லுயிர் உடம்பு செந்தமிழ் மூன்றும்
நான் நான் நான்
தமிழும் நானும் மெய்யாய் உடலுயிர் கண்ணீர் " என்றும்

" எதை வேண்டித் தவங்கிடந்தாய்
என் தமிழ்த் தாயே - நீயே
எனது உயிரே உடலே பொருளே நீ " என்றும்

" அளப்பிலா உவகை ஆடற்றமிழே நீ எந்தன் ஆவி " என்றும்
" உடலியக்கும் நல்லுயிரே உயிரியக்கும் நுண்கலையே "

என்றும் தம் உடம்பையும் உயிரையும் தமிழாகவே அவர் உருவகித்துள்ளார். தம் கவிதையில் ஏறத்தாழ அறுபதுக்கும் மேற்பட்ட இடங்களில் தமிழை உயிருக்கு ஒப்பாக்கியுள்ளார். தமிழைத் தம் உயிர்ப்பொருளாகப் பாடிய முதற் கவிஞர் பாரதிதாசன் ஆவார்.

" ..... நீயோ
கருமான் செய் படையின் வீடு
நானங்கோர் மறவன் கன்னல்
பொருள்தரும் தமிழே நீ ஓர்
பூக்காடு நான் ஓர் தும்பி " எனத் தமிழ்க்கேடு நிகழ்ந்தால் துடித்தெழும் மறவனாகவும் மற்றைப் பொழுதில் தமிழின் இனிமையைச் சுவைத்தெழும் தும்பியாகவும் தாசன் தம்மைக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் வெண்ணிலா எனில் அது தவழும் வானம் தாம் என்றும் தமிழ் வீரன் எனில் அவன் கை தாங்கியுள்ள கூர்வாள் தாமென்றும் தமிழ் வண்ணப்பூ எனில் அது பரப்பும் மணம் தாமென்றும் தமிழ் மகர யாழ் எனின் அது எழுப்பும் இன்னிசை தாமென்றும் தமிழ் கண்ணாகுமாயின் அது தரும் ஒளி தாமென்றும் பல்வகை நற்பொருள்களிலும் தாம் காணும் தமிழுடன் தம்மைத் தாசன் இணைத்துக் காட்டியுள்ளார்.

" தமிழ் எங்கள் இளமைக்குப் பால் !- இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல் !
தமிழ் எங்கள் உணர்வுக்கு வாள் ! - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வைரத்தின் வாள்!
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய் ! - இன்பத்
தமிழ் எங்கள் வலமிக்க உளமுற்ற தீ !

என இளமைப்பால், கூர்மை வேல், விரிந்த வானம், சுடர்த்தேன், திண்தோள், வைரவாள், பிறவித் தாய்மை, வலமிக்க தீ ஆகியவற்றுடன் தமிழைப் பொருத்திக் காட்டுகின்றார்.

செந்தமிழின் செப்பரிய இனிமை :

இனிமை எனப்படுவது கனிமிடை ஏறிய சுளையல்ல; கருப்பஞ்சாறல்ல ; பசுவின் பாலல்ல ; தெங்கின் இளநீரல்ல ; பின் எதுவெனில் தமிழ் அமுதும் தமிழ்ப்பண்ணாகிய அமிழ்தமுமேயாகும். சீர்பெறு முத்தமிழாகவும் தெவிட்டாத புத்தமிழ்தமாகவும் உள்ள தமிழ்மொழியானது சுவையில் தலைமலைத் தேனிற்கு ஒப்பானதாகும். அன்றன்று அணுகப் புதியபுதிய சுவை குன்றாத இயல்பு சுந்தரத் தமிழுக்குண்டு. ஆண் பெண் உறவில் கிடைக்கும் இன்பம்தான் கிடைத்தற்கரிய பேரின்பம் எனக்கருதி அறியாமக்கள் அவ்வின்பத்திலேயே அழுந்திக் கிடக்கின்றனர். ஆனால் பாரதிதாசன்கருத்துப்படி இன்பம் எனப்படுதல் தமிழ் தரும் இன்பமே ஆகும். ' மங்கை ஒருத்தி தரும் சுகமும் மாத்தமிழ்க்கு ஈடில்லை ' எனத் தமிழின்பத்திற்கு உலக இன்பம் எதுவும் இணையாகாது எனப் பாரதிதாசன் இயம்புகின்றார்.

தமிழ்த்திரு :

" இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால்
துன்பங்கள் நீங்கும், சுகம் வரும் நெஞ்சினில்
தூய்மை யுண்டாகிவிடும், வீரம் வரும் "

எனத் தமிழ் தரும் பேறுகளையெல்லாம் பாரதிதாசன் விவரிக்கின்றார். தினையளவு வருவாய் இல்லாதவரும் தமிழ் கற்றால் திருவாகிய செல்வம் வழி தேடி அவரை வந்தடையும் எனத் தமிழ்த்திருப் பெற்றார் வாழ்வில் வறுமையுண்டாகாது என்று அவர் உறுதியாக நம்புகின்றார்.

" எம்மொழி அருமை பெருமை பெறுவதற்கு
அரிய அன்னையா? அப்பனா? உடன்பிறந்
துரிமையில் இணையும் ஒப்பில் உறவினரா?
வாழ வைத்திடும் தோழனா? காதலால்
சூழ் உலகத்துத் தோன்றாத் துணையா?
மயக்குறு மக்களா? மண்ணுலகத்தில்
எதைச் சொன்னாலும் அதனை ஏற்றிடேன்
ஏனெனில் எந்தமிழ் இன்பம் என்னுடைமை
ஊனில் உயிரில் உவப்புறும் எதற்கும்
மேலே மேலே தாவிச் செல்வது!
எவைக்கும் மேலாய் எவைக்கும் உள்ளாய்
சுவை பட்டுயிரில் உயிர்ப்புறு வாழ்க்கையில்
ஒங்கியும் உயர்ந்தும் பாங்குற விரிந்தும்
மேன்மைக்கெல்லாம் மேன்படும் எம்மொழி "

என்று மேன்மைக்கெல்லாம் மேன்மையானது தமிழே என்றும் உலகில் எவை உயர்ந்தவையோ அவற்றிற்கெல்லாம் மேன்மையானது தமிழே என்றும் தமிழின் மேன்மையை இம்மேதினிக்கு அவர் எடுத்துரைக்கின்றார்.

தமிழ்க்காதல் :

தெய்வக்காதல், மானுடக்காதல் என்பன நடைமுறைக் காதல்களாகும். ஆனால் பாரதிதாசன் கொண்ட காதலோ இவ்விரண்டினும் வேறுபட்டு விளங்கும் தன்மையதாகும்.

" பயிலுறும் அண்ணன் தம்பி - அக்கம்
பக்கத்து உறவின் முறையார்
தயை மிக உடையாள் அன்னை - என்னைச்
சந்ததம் மறவாத் தந்தை
குயில்போற் பேசிடும் மனையாள் - அன்பைக்
கொட்டி வளர்க்கும் பிள்ளை
அயலவ ராகும் வண்ணம் தமிழ்என்
அறிவினில் உறைதல் கண்டீர் "

என்று மனித உறவெல்லாம் மணித்தமிழ் உறவிற்கு ஒப்பாகாது என்பது பாரதிதாசன் கருத்தாகும்.

முற்றிய காதல் :

" ஊனுக்குள் உணர்வேயும்
தமிழன்றோ ! வெளியேயும்
உள்ளத் துள்ளும்
தான் நத்தும் அனைத்துமே
காட்சி தரும் வாயிலெல்லாம்
தமிழே யன்றோ " என்றும்

" தமிழ் எங்கள் உயிர் தமிழ் எங்கள் உடல்
தமிழ்வாழ்வதனால் யாம் வாழ்கின்றோம்
தமிழ் எம் உணர்வு தமிழ் எம் உணர்ச்சி
உண்ணும் உணவும் பருகும் நீரும்
தமிழே ! தமிழே " எனத்

தமிழிடம் தாம் கொண்டிருக்கும் முற்றிய காதலை அவர் முறையாய்க் காட்டுகின்றார். இறையடியார்கள் தாம் உண்ணும் உணவில், பருகும் நீரில், பயன்படுத்தும் வெற்றிலையில் இறைவனைக் கண்டனர். ஆனால் பாரதி தாசனோ அவற்றில் எல்லாம் இணையிலாத் தமிழைக் கண்டு இன்புறுகின்றார்.

தமிழ் விடுதலை :

நாட்டு விடுதலை என்பது மொழி விடுதலையாகும். மொழி அடிமைப் படுமாயின் நாடும் விடுதலையை இழந்துவிடும்.

" தமிழுக்காக
என் தாயினுக்காக
அமையாரின் படையை என்
சினத்தால் எரிப்பேன்
அவராலே நான்சாகநேரினும் சிரிப்பேன் "

எனத் தமிழ் விடுதலைக்காகத் தம் உயிரையும் உவந்து வழங்கத் தாசன் முன் வருகின்றார்.

" குருதி பொங்கினால் தயங்காது - தமிழ்க்
குருளைக் கூட்டங்கள் மயங்காது
இருப்ப தல்லது தமிழோடு இறப்பது என்றிடும்
கொள்கை மறவர் உயிர் தயங்காது
தமிழர்கள் வீரம் கிளர்ச்சியில் வெல்லாது ஒடுங்காது".

எனத் தமிழுக்குக் கேடு சூழும் மதிகேடர்களைப் புரட்சிக் கவிஞர் எச்சரிக்கின்றார்.

" இன்பத் தமிழ்க்கின்னல் விளைக்கையில்
கன்னலோ என்னுயிர் கணவனும் வேண்டேன்
உற்றார் வேண்டேன் உடைமை வேண்டேன் "

எனத் தமிழைக் கெடாது காத்தலைத் தம் உயிரினும் மேலாக அரிவையர் உலகம் கருத வேண்டும் எனப் பாரதிதாசன் விழைகின்றார்.

இற்றைத் தமிழ்ச்சூழல் :

நாட்டின் பெயர் தமிழகம் ஆகும். வீதியின் பெயர் தமிழ் வீதியாகும். ஆனால்

தணிப்பரிதாம் துன்பமிது
தமிழகத்தில் தமிழ்த் தெருவில்
தமிழ் தானில்லை "

எனப் பாரதிதாசன் வருந்துகின்றார்.

" ஆங்கிலத்தைக் கற்கையிலும்
அயல்மொழியைக் கற்கையிலும்
எந்த நாளும்
தீங்கனியைச் செந்தமிழைத்
தென்னாட்டின் பொன்னேட்டை
உமிராய்க் கொள்வீர் "

எனப்பிறமொழிக் காதலர்களைத் தமிழ்க்காதல் கொள்ளுமாறு வேண்டுகின்றார்.

" விலங்கு பறவை செந்தமிழ்நாட்டில்
விரும்பிக் கேட்பது செந்தமிழ்ப்பாட்டை
குலுங்கும் அரும்பும் செந்தமிழ் நாட்டில்
குளிர்ந்த செந்தமிழ் கேட்டு மலரும் "

என இயற்கையெல்லாம் தமிழ் கேட்டு மலரும் பொழுது தமிழர் மட்டும் தமிழ் கேட்டு மலரமறுப்பது குறித்துப் பாரதிதாசனின் மனம் வருந்துகின்றது.

" கொலை வாளினை எடடா - மிகு
கொடியோர் செயலறும்படித் "

தமிழ்ப்போர் நிகழ்த்தத் தமிழரைத் தாசன் அழைக்கின்றார்.

தமிழ் வாழ்வு :

தமிழகத் தமிழரெல்லாம் தமிழ்வாழ்வு வாழ்ந்திடப் பாரதிதாசன் விரும்புகின்றார். தமிழ் பாய்ந்திடுவதும் மூதறிவுள்ளதுவும் நறும் முத்தமிழைக் கற்பதுவுமே தமிழ் வாழ்வாகும் எனத் தமிழ் வாழ்வை இன்னதெனப் பாரதிதாசன் இயம்புகின்றார்.

" தமிழுயர்ந்தால் தமிழ்நாடு
தானுயரும் அறிவுயரும்
அறமும் ஓங்கும் " என்று தமிழுயர்வின் பயனைக் கூறி,

" இமயமலை போலுயர்ந்த
ஒருநாடும் தன்மொழியில்
தாழ்ந்தால் வீழும் " என மொழி வீழ்ச்சி நாட்டின் வீழ்ச்சிக்கு அடிகோலும் என அறிவுறுத்தி,

மூச்சாகவும் மனிதமாகவும் உணர்வாகவும் வழியாகவும் வாழ்வாகவும் உலகமாகவும் இன்பமாகவும் மொழியைப் போற்றுமாறு பாரதிதாசன் வேண்டுகின்றார். தமிழ் காத்தலையும் தமிழ்நாட்டைப் பாதுகாத்தலையும் தமிழர் தம் கடனாகக்

கருதுமாறு பாரதிதாசன் வேண்டுகோள் விடுக்கின்றார். இங்ஙனம் தமிழ் மண்ணில் அயலக நாகரிகப் போர்வையில் மறைந்து திரியும் போலித் தமிழர்க்கெல்லாம் தமிழ் வாழ்வு வாய்க்க வேண்டுமென்பது அவரது வேணவாவாகும்.

தாசன் விடுத்துள்ள தமிழ் வேண்டுகோள் :

1. கட்டாயத் தமிழ்க் கல்விக் கழகம் தமிழ் நாட்டில் நிறுவ வேண்டும்.
2. ஆண், பெண், ஆண்டான், அடிமை, உடையார், இல்லார் என்ற பாகுபாடின்றி அனைவரும் பல்வேறு துறைக்கல்வி பெற்று அறிவில், ஆற்றலில், அன்பில் இமயம் போல் உயர்ந்துள்ளனர் எனப் பிற நாட்டார் கூறக் கேட்டிட வேண்டும்.
3. துறைதோறும் தமிழர்க்கே தலைமை இருந்திட வேண்டும்.
4. அரசியல் துறைகள் யாவும் தமிழ்ப்பேச்சால், தமிழ் எழுத்தால் நடத்தப்பட வேண்டும்.
5. தாயாம் தமிழையும் தமிழரின் கவிதைகளையும் உலகமொழிகள் அனைத்திலும் மொழிபெயர்த்திட வேண்டும்.
6. தமிழ்நாட்டின் தமிழர்களால் குழு அமைத்துச் சட்டதிட்டம் தமக்கான முறையில் அமைத்திட வேண்டும்.
7. தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை என்பதால் அனைவரும் தமிழுக்குத் தக்க தொண்டாற்ற வேண்டும்.

" தமிழின் சாசனமாய் இருந்த
சங்கப் பலகை
பூசனம் பிடித்த பொழுது
அந்தப் பலகையைச்
சொந்த ஊஞ்சலாய் ஜோடித்து
உல்லாசத் தமிழ் மகளை
உட்கார்த்திப் பார்த்தவன் நீயல்லவா "

என்ற கவிஞர் வைரமுத்துவின் வார்த்தைகளுக்கு வாழ்வளித்தவர் வண்டமிழ்ச் செல்வர் பாரதி தாசனாவார்.

தமிழரே வாருங்கள்! பாரதிதாசன் காட்டும்தமிழ் வாழ்வு வாழ வாருங்கள்! தமிழைப் புதுக்கிப் பொலிவுறச் செய்ய வாருங்கள்! தமிழுக்குத் தளராத் தொண்டாற்ற வாருங்கள்! தமிழுக்குக் கேடு நேருமாயின் தமிழ்ப் படையில் சேர வாருங்கள்!.

11 சீவாவின் இலக்கியச் சிதறல்கள்

பொதுவுடைமைக் கொள்கை எனும் பூங்காவில் பூத்த தண்ணமத் தாமரை மலர் தமிழாய்ந்த சீவாவாவார். பொதுவுடைமைக் கொள்கை எனும் வானப் பறவைகளுள் அரசச்சிறப்புப் பெற்ற அன்னப் பறவை அவராவார். பொதுவுடைமைக் கொள்கைக் குறிக்கோள் அழுத்தத்தில் அவர் " பீனிக்சு " பறவையாவார். வெற்றியோ தோல்வியோ, தாழ்வோ உயர்வோ, வாழ்வோ சாவோ எதுவரினும் இறுதி வரையிலும் பொதுவுடைமைக் கொள்கை மூச்சையே உயிர்ப்பாக அவர் கொண்டிருந்தார். பொதுவுடைமைக் கொள்கையில் ஊன்றியிருந்தாலும் தமிழ்ப்பற்று அவர் உள்ளத்தில் ஆழமாகவே ஊன்றியிருந்தது. தமிழ்இலக்கியம் என்ன பாதிப்பை அவருக்கு ஏற்படுத்தியது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலக்கியத்தின் இருவகைகள் :

சீவா இலக்கியத்தை நசிவு இலக்கியம் என்றும் நல்ல இலக்கியம் என்றும் இரண்டாகப் பகுத்து அவ்விரண்டின் தகுதிப்பாட்டினைச் சீர்தூக்கிக் காட்டியுள்ளார். கவிதை, காப்பியம், கட்டுரை, சிறுகதை, பெரும்புதினம், நாடகம், திறனாய்வு இங்ஙனம் எந்த வடிவு கொண்ட இலக்கியத்தை எடுத்துக் கொண்டாலும் இன்று இரு அடிப்படைக் கருத்தோட்டங்கள் ஊடுருவி நிற்கின்றன. இக்கருத்தோட்டங்களின் அடிப்படையில்தான் நசிவு இலக்கியம், நல்ல இலக்கியம் என இலக்கியம் பகுக்கப்பட்டுள்ளது.

நசிவு இலக்கியம் :

சிறந்து சீரழிந்து வருகிற சமுதாயத்தை இவ்வகை இலக்கியம் எடுத்துக்காட்டும். நொறுங்கி வருகிற பழைய கட்டுக் கோப்பிற்கு நசிவு இலக்கியம் குரல் கொடுக்கும். இதன் உள்ளடக்கத்தில் குருதி செத்திருக்கும். கலைத்திறச் சீர் சிதைந்திருக்கும். இவ்வகை இலக்கிய ஆசிரியர்களின் தரம் இறங்கு முகமாய் இருக்கும். கதைப் பாத்திரங்களின் வரிசையில் சீரழிவு காணப்படும். இவ்விலக்கியம் மென்மேலும் அழுகி வருகின்றது. சனநாயகப் புரட்சி கண்டு இது அஞ்சிச் சாகும்; முற்போக்கைக் கண்டு அஞ்சி நடுங்கும்; பிற்போக்குச் சக்திகளின் காவலனாக இருக்கும் ; பணச் செல்வாக்கிற்கு விலை போய்விட்ட எழுத்தாணிக் கலைஞர்கள் இவ்விலக்கியப் படைப்பாளர்கள் ஆவர். இவ்விலக்கியப் பாத்திரங்கள் திருடர்கள், முடிச்சு மாறிகள், துப்பறிவோர், விலைமகளிர், கூட்டிக்கொடுப்போர், கொடிய கூட்டத்தார் இத்தகைய மனிதத் திருப்பிறப்புக்களாக இருப்பர். வள்ளுவப் பெருந்தகை கேலி செய்யும் தேவர்கட்கு ஒப்பான கயவர்கள் பாத்திரங்களாகும் தகுதி பெற்றவர் ஆவர். இன்றைய சமுதாயத்தின் சீரழிவை மாயை வலை வீசி இவ்விலக்கியம் மூடி மறைக்க முயல்கிறது. சமுதாய வாழ்வில் நிகழும் மாறுபாடுகளை மறைத்து, இந்திரசாலம், மகேந்திரசாலம் செய்ய இது துணிகின்றது. இவற்றையும் மீறித்தவறு நிகழ்ந்தால் ' எல்லாம் ஆண்டவன் செயல் ' என்றும் அது பலிக்காவிட்டால் ' எல்லாம் நன்மைக்கே ' என்றும் போலி வேதாந்தம் பேசிச் சமுதாயச் சிந்தனையைத் தட்டிக் கழிக்கின்றது.

நல்ல இலக்கியம் :

சமுதாய முன்னேற்றத்தைக் காட்டுவது தான் சரியான இலக்கியமாகும்.

" நமக்குத் தொழில் கவிதை
நாட்டுக் குழைத்தல்
இமைப்பொழுதும்
சோராதிருத்தல் " என்று பாடிய பாரதிதான்,

" முப்பது கோடியும் வாழ்வோம் - வீழின்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம் " எனச் சமுதாயச் சிந்தனையைவழங்குகின்றான். கோடானுகோடிப் பாட்டாளிப் பெருமக்களின் விதியுடன் தன் விதியை இணைத்து அவர்களின் புதுப் போராட்டங்களுக்குப் பெருங்கருவியாய் அவன் இருந்தான்.

" அரும்பும் வியர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே
பெரும் புகழ் உமக்கே இசைக்கின்றேன் " எனத்

தொழிலாளர் பற்றிய நல்ல சிந்தனை அவன் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது. புதிய வாழ்க்கையை உருவாக்குவதில் சஞ்தையையும் குருதியையும் வியர்வைப் பிழிவாக்குகின்ற ஆண்களும் பெண்களும் நல்இலக்கியத்தின் தலைமைப் பாத்திரங்களாக இடம் பெற்றிருப்பர். தொழிலாளர், உழவர், விஞ்ஞானி, கலைஞர், பொறிவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நல்வாழ்வு இயக்கத்தில் ஈடுபட்டுள்ள முன்னணி வீரர், வீராங்கனைகள் அனைவரும் முதன்மைப் பாத்திரமாக அமைந்திருப்பர்.

நல்ல இலக்கியத்தின் மரபு :

நல்லிலக்கியத்தின் மரபினையும் கீழ்வருமாறு சீவா விளக்கியுள்ளார். மனிதப் பண்பியல், மெய்யுணர்வியல் இரண்டும் இணைந்ததே நல் இலக்கியத்தின் மரபாகும்.

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் " என்பார் வள்ளுவர்.

" வேறுள குழுவை எல்லாம்
மானுடம் வென்றதம்மா " என்பான் கம்பன்.

" வையத் தலைமை கொள்"
" நன்றென்று கொட்டு முரசே - இந்த
நானில மாந்தருக்கெல்லாம் " என்று பாடியுள்ளான் பாரதி.

'மனிதன்' - இந்தச் சொல் மனிதன் கண்ட சொற்களில் நிகரற்றதாகும் என்பது கார்க்கியின் கூற்றாகும். இவையெல்லாம் மனிதப் பண்பியல் பேசும் பகுதிகளாகும். இன்றைய, நாளைய வரலாற்றுப் படைப்பாளனும் புலவனும் மனிதனே ஆவர்.

மெய்யுணர்வியல் எது என்பதையும் அவர் வழிக்காண்போம். புகழ்ச்சிச் சொல் மாலைகளுக்கும் அலங்கார வருணனைகளுக்கும் மெய்யுணர்வியல் எதிரிடையானதாகும். இக்காலம் மட்டும் பார்த்து இதன் தொடர்ச்சியாக வருங்காலத்தைப் பார்க்க முடியாத குறுகிய பார்வைக்கு இது எதிரிடையானது.

அதுபோல் நிகழ்காலம் சென்ற காலத்தின் தொடர்ச்சி என்ற வரலாற்று வளர்ச்சியைப் பார்க்க முடியாத - பார்க்க மறுக்கின்ற போக்கிற்கும் இது எதிரிடையானது.

எழுத்தாளர் கடமை :-

படைப்பாளிகளின் தலையாய கடமை பற்றியும் சீவா குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். கோடிக்கணக்கான மக்களுக்காக எழுதுகின்ற உண்மையை எழுத்தாளர் மறக்கக் கூடாது. சொற்களைப் பொறுக்குவதில், கோர்ப்பதில் இனிமை, எளிமை, தெளிவு ஆகியவற்றை நேர்மையாகக் கடைப்பிடிக்க வேண்டுவது எழுத்தாளர்களின் கடமையாகும். தம்முடைய அனுபவங்களையும் சிந்தனைகளையும் படிப்பவர்களின் கவனத்தில் விழச் செய்ய வேண்டுவது அவர்களின் பொறுப்பாகும். அனைத்து நன் முயற்சிகளையும் எழுத்தாளர்கள் பின்பற்ற வேண்டும். படைப்பின் உருவத்திற்கும் உள்ளுறைக்கும் உயிருள்ள ஒருமைப்பாடு காணப்பட வேண்டும். அங்ஙனம் காட்டும் இலக்கியமே சிறந்த இலக்கியம் ஆகும். உருவத்தை விட உள்ளுறைக்குத்தான் முதலிடம் தரப்பட வேண்டும்.

இலக்கியத்தின் உயிர்நாடி எது என்பதைத் தக்க சான்றுடன் சீவா எடுத்துக் காட்டியுள்ளார். வான நூலார் சந்திர மண்டலத்தை ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டறிகிறார்கள். ஆனால் சிறு குழந்தைகள் அம்புலியைக் கண்டு மகிழ்வுக் கூத்தாடுகின்றன. அவை சந்திரனை ஆராய்வதில்லை. தாவர நூலார் ஆய்வுக் கூடத்தில் செடி, கொடிகளை அறுத்து, அக்கு வேறாக, அலகு வேறாகப் பிரித்து, அவற்றுள் பொதிந்து கிடக்கும் உண்மைகளைத் தேடுகிறார்கள். ஆனால் தன் தாயின் கல்லறையில் படர்ந்துள்ள கொடிகளைப் பார்க்கின்றவர்கள் தாவர ஆராய்ச்சியில் இறங்குவதுண்டோ? ஒரு பிஞ்சுக் குழந்தையை ஓர் உடற்கூறு ஆராய்ச்சி வல்லவர் சோதித்து 1½ அடி உயரம், 20 அங்குலம் சுற்றளவு, 13 இராத்தல் எடையுள்ள ஒரு தசைப் பிண்டம் என்று கூறலாம். ஆனால் பெற்ற தாய்,

" சீரங்கம் ஆடி
திருப்பாற் கடலாடி
மாமாங்கம் ஆடி
மாசிக் கடலாடி
தைப்பூசம் ஆடி
தவம் செய்து பெற்ற கண்ணே "

என அன்பு சொரிந்து அள்ளி எடுப்பாள். மிதி வண்டியை ஒரு பொறிவலாளன் பார்த்தால் ஒருருளையின் பின் மற்றொருருளை ஒழுங்காகச் சுழன்று செல்வதையும் அதன் அமைப்பையும் கண்டு ஆராயத் தொடங்குவான். ஆனால் கவிஞனோ,

" அக்காளும் தங்கையும் போல்
அவை போகும் அழகைப் பார் "

எனப்பாடுவான். சாதாரண நிலையில் ஒரு பெண் மானிடப் பிறப்பின் சின்னமாவாள். ஆனால் மன உணர்ச்சியில்,

" ஞானத் திருவடிவாய்
இன்ப மதுக்குடமாய்
கான மதுகரமாய்
கண்ணிறைந்த பேரழகாய்க் "

காட்சி அளிக்கின்றாள். எனவே இலக்கியத்தின் உயிர் உணர்ச்சி வெளிப்பாடே ஆகும்.

தலைசிறந்த கலைஞன் யார்? :

தலைசிறந்த கலைஞனின் இயல்பை நல்லுவமை கொண்டும் தக்க எடுத்துக் காட்டுடனும் சீவா சித்திரித்து உள்ளார். படைக்கும் பாத்திரத்தின் நிகழ்ச்சியில் தன்னை மீத மிச்சமின்றிக் கரைத்து விடுகின்றவனே தலைசிறந்த கலைஞன் ஆவான். பாரசீகப் புலவன் ஒருவன் சுட்டியுள்ள உவமானம் பற்றிச் சிந்திப்போம் :

ஒரு நாள் இரவில் சில வண்ணாத்திப் பூச்சிகள் ஒன்று கூடுகின்றன. விளக்கின் ஒளி பொருந்திய சூட்டுடன் ஐக்கியம் ஆகிவிட வேட்கை அவைகளுக்கு எழுந்தது. தீக்கொழுந்தின் தன்மையை யாராவது சென்று பார்த்தால் நல்லது என்று முடிவு எடுக்கப்பட்டது. ஒரு வண்ணாத்திப் பூச்சி விளக்கருகே சென்று விட்டுத் திரும்பியது. விளக்கொளி பற்றி விளக்கம் செய்ய அது தொடங்கியது. சுடர் பற்றிய உண்மை ஞானம் அது பெறவில்லை என்றும் எனவே விளக்கும் தகுதி அதற்கு இல்லை என்றும் தலைமைப் பூச்சி கூறியது. மீண்டும் மற்றொரு பூச்சி சுடரின் வெப்பம் தன்மீது படும் அளவிற்குச் சென்று திரும்பியது. அதன் விளக்கமும் நிறைவு தரவில்லை. ஆகவே மூன்றாவது பூச்சி விளக்குச் சுடரினுள் நுழைந்தது. உடல் எரிந்து நெருப்பாயிற்று. பூச்சியும் நெருப்பும் ஒன்றாகி விடுகின்றன. அதுபோல் தன் வாழ்வை அறவே கரைத்து விடுகின்ற போதுதான் இலக்கினை அடையமுடியும். இவ்வுணர்வு கலைஞனுக்குத் தேவைப்படுகின்றது.

" அணிசெய் காப்பியம்
ஆயிரம் கற்பினும்
ஆழ்ந்திருக்கும் கவியுளத்தைக் "
காண்பதே தலைசிறந்த கலைஞனின் கடமையாகும்.
சான்றாக ஒரு நிகழ்வினைக் காட்டலாம்.

இராமன் காட்டிற்குப் போகுமுன் கோசலையைச் சந்திக்கின்றான். பரதன் நாடாளும் செய்தி மகிழ்வே எனினும் இராமன் காடாளும் செய்தி வருத்தமே எனக் கோசலை கூறுகின்றாள். இராமன் அவளைத் தேற்றுகிறான். எங்ஙனம்?

சிறந்த தம்பி திருவுறுதல் மூலம் தந்தையை அவன் பொய்யிலனாக ஆக்கியுள்ளான். தந்தை சொல் பொய்க்கக் கூடாதெனில்தானும் காட்டிடையே உறை தல் தவிர்க்க முடியாதது என்கிறான். இது கதையாகும். இக் கதையின் ஆழத்தில் பொதிந்துள்ள பொருள் வளத்தைச் சிந்தித்துப் பார்த்தலே அறிவுடைமையாகும். உழைப்பால், ஒழுக்கத்தால், உதவியால், பண்பால் சிறந்த தம்பியை அனைத்துச் செல்வங்களையும் ஆண்டு அனுபவிக்க விட வேண்டும். வாழையடி வாழையாக வளர்ந்து வரும் சமுதாய மெய்யறம் காப்பாற்றப்பட வேண்டும். காட்டிடை உறைதல் என்பது நல்ல செயலுக்கு நானூறு இடையூறுகள் என்பதற்கு அறிகுறியாகும். உறுதியுடன் அவ்விடையூறுகளைத் தாண்டிச் செல்ல வேண்டும். இங்ஙனம் பொருள் காண்போமாயின் இக்கதையில் ஆழ்ந்திருக்கும் கம்பன் வளத்தைக் கண்டு உணர்பவராவோம்.

எங்கும் மனிதனையே காணவேண்டும் :

கம்பனின் கடவுட் காட்சியின் படிப்படியான வளர்ச்சி இதற்கு விளக்கமாக அமைந்துள்ளது. உலகம் முழுவதையும் படைத்தும் காத்தும் அழிக்கும் எண்ணற்ற விளையாட்டுக்களை உடைய கடவுளாக இராமனைப் பற்றிப் பேசுவது பாலகாண்டமாகும். அரசு துறந்து, காடு சென்று, தேவர் துயர் துடைத்துத் தியாகம், ஒழுக்கம், செயல்திறன் மிக்க மனிதனாக இராமனைக்

காட்டுவது அயோத்தியாக் காண்டம் ஆகும். கடவுளை எப்படி உணர்கிறார்கள் என்பதைக் காட்ட அவனுடைய பண்புகளை மக்களைத் திரும்பத் திரும்பப் பேசச் செய்வது ஆரணிய காண்டம் ஆகும். காணப்படும் அனைத்திற்கும் சான்றாக இராமன் விளங்குவதைக் காட்டுவது கிட்கிந்தை ஆகும். மாயைத் தோற்றத்தில் ஐம்பெரும் பூதங்கள் காரிருளில் கயிற்றரவு போலத் தோன்றுகின்றன. காரிருள் நீங்குகின்றது. கயிற்றரவு மயக்கம் அகலுகின்றது. மாயை மறைந்து, ஞான ஒளி பிறக்கும் காண்டமே சுந்தர காண்டமாகும். ஒரு கடவுட் கொள்கை, பல கடவுட் கொள்கை, கடவுள் உண்மைக் கொள்கை, கடவுள் இன்மைக் கொள்கை ஆகிய கொள்கைகள் ஒன்றுடன் ஒன்று மோதுகின்றன. இதனால் தெளிவுக்குப் பதில் குழப்பம் ஏற்படுகின்றது. வெற்றறிவு வாதத்தால் பயனில்லை. இராமனின் மனித வாழ்வே கடவுள் வாழ்வாகும். இது கடவுளுக்குப் பெருமை அல்ல. மனிதனின் பெருமையே ஆகும். கடவுள் மனிதனாக வந்தது சிறப்பல்ல. மனிதன் கடவுளான பெருமையே சிறப்பானதாகும். மனிதன் கடவுளரை வென்ற பெருமை இதுவாகும். இவ்வுண்மையைப் புலப்படுத்துவதே ஆறாவது காண்டமாகிய யுத்த காண்டமாகும்.

சீவாவின் அறிவியல் ஈடுபாடு :

புரோனோவஸ்கி என்பவர் பிரிட்டனின் தலைசிறந்த அறிவியலார் ஆவார். அவர் கருத்துப் பின் வருவதாகும் :

' சனநாயகம் அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் மக்களிடம் தழைக்காது. அணுவைப் பற்றியும் அணுக்கருவைப் பற்றியும் அறியாதவர்கள் குழந்தைகளின் படிப்பிற்கான பாரம்பரிய உண்மையை அறியாதவர்கள் ஆவார். '

' இது செயற்கைக் கிரக யுகம் '
என்பது பண்டித நேருவின் கூற்றாகும்.

' அறிவியலை அடிப்படையாகக் கொள்ளாத எச்சமயமும் இனி நிலைத்து நிற்க முடியாது 'என்பதே ஆன்மீக மேதையான சர்வபள்ளி இராதாகிருட்டிணனின் மொழியாகும்.

' வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மொழி ' எனப் பாடியவன் பாரதி ஆவான். பாரதி பாடிய இவ்வரி நன்னம்பிக்கைக் கற்பாறையாகும். இதில் தமிழில் அறிவியல் வளராது என்னும் நல்லறிவாளர்களின் அவநம்பிக்கை அலை மோதி உடையும். அறிவியல் வளர்ச்சி பெறும் ஆற்றல் தமிழுக்கு இல்லை என்பாரின் பயனற்ற சொல் செல்லாக் காசாக மாறும். உலகம் புகழும் அறிவியல் அறிஞரைத் தமிழன் நினைத்தால் தனக்குள்ளேயே உருவாக்க முடியும். ஆனால் கல்லூரியில் அறிவியல் தமிழோசையைப் பெற முடியாது என்பது உளுத்து உதிர்கின்ற பிற்போக்கான அவலக் கூற்றாகும்.

உருசியாவில் நாட்டு வருமானத்தில் 2% ம் ஆளுக்கு ஆண்டு தோறும் நூற்றைம்பதும் அறிவியலுக்காகச் செலவிடப்படுகின்றது. நம் நாட்டில் நாட்டு வருமானத்தில் 1600 இல் ஒரு பங்கும் ஆளுக்கு 15 நயாப் பைசாவும் செலவிடப்படுகின்றது. இந்நிலை மாறுமா? மாறும். அதோ!

" எங்கள் தமிழ்மொழி
எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே "

என்ற பாரதியின் முழக்கொலி தமிழ்ப் பெருமக்களிடையில் சமுதாய அளவில்

வெடித்துக் கிளம்பி ஒலிக்கவும் எதிரொலிக்கவும் செய்யும் காலம் மிக அணித்தே வரும் என்பது சீவாவின் திடமான நம்பிக்கையாகும்.

சார்ந்த இயக்கத்தைப் பெருமைப்படுத்துதல் :

இலக்கிய வளர்ச்சியில் இலெனின் சிந்தனையை இவர் எடுத்துக் காட்டியுள்ளார். முதிர்ந்த பெரும்புலவர்களின் இலக்கியப் படையல்கள் யாவும் மக்களின் பொதுவுடைமையாக வேண்டும். கல்வி நிலையங்கள், கலைக் கழகங்களுக்கு அவற்றின் முழுப்பதிப்பு இருத்தல் வேண்டும்.

பொதுமக்களுக்கு அவற்றின் சுருக்கப் பதிப்பைத் தரவேண்டும். விற்பனை விலையும் மலிவாக இருத்தல் வேண்டும். வெளிநாட்டுச் சிறந்த இலக்கியங்களை வெளியிட உலக இலக்கியப் பதிப்பகம் உருவாக வேண்டும். புரட்சி, அறிவியல், இலக்கியம் இவற்றில் புகழ் பெற்றார்க்கு உருவச்சிலை நிறுவ வேண்டும் என்பதுவே இலக்கிய வளர்ச்சிக்கு இலெனின் தந்த கருத்துக் கருவூலமாகும் எனச் சீவா குறிப்பிடுகின்றார்.

தாம் சார்ந்த பொதுவுடைமை இயக்கத்தையும் பெருமைப்படுத்தி உள்ளார். உலகின் மிகச்சிறந்த உயர்ந்த கலைஞர்கள் அனைவரும் பொதுவுடைமை இயக்கத்தைச் சார்ந்தவர்கள் ஆவர் எனக் குறிப்பிடுகின்றார். தலைசிறந்த உலகப்பாடகர் பால்ராட்சன், தலை சிறந்த ஓவியக் கலைஞர் பிகாசோ , தலைசிறந்த எழுத்தாளர் லூயி ஆர்கான், தலைசிறந்த கவிஞர்களான பாப்லோ நேருடா, நசீம் ஹில்மத், இந்தியச் சிற்பிகளான தாகூர், பாரதி அனைவரும் பொதுவுடைமை இயக்கத்தின் தோழர்கள் ஆவர் எனக் குறிப்பிடும் சீவா இவ்வியக்கத்தின் தலைசிறந்த தமிழ்ச் சிந்தனையாளர் ஆவார்.

பொதுவுடைமை இயக்கச் சாம்பவான் இவர் எனினும் தமிழ்மொழி, அதன் இலக்கியம் ஆகியவைபற்றி இவர் கொண்டிருந்த ஈடுபாடு இமயமன்ன உயர்ந்தும் சிறந்தும் காணப்படுகின்றது.

12 மாணிக்கக் குறளில் மணக்கும் தமிழ்

புலத்துறை முற்றிய தமிழ்ப் புரவலர் :

தமிழ் மூத்த மொழி; மூப்படையாத மொழி; முத்தமிழ் எனும் முறையான பகுப்பினைக் கொண்ட பழைய மொழி; முச்சங்கங்கள் போற்றி வளர்த்த ஏற்றமிகு மொழி; பொருப்பிலே பிறந்து, தென்னன் புகழிலே கிடந்து, சங்கத் திருப்பிலே இருந்து, வையை ஏட்டிலே தவழ்ந்து, நெருப்பிலே நடந்து பயின்ற நற்றமிழ் மொழி நம் மொழியாகும். இம் மொழி வாழ - வளர அன்று சங்கங்கள் ஆற்றிய தொண்டு அளவிடற்கரியது. சங்கங்களின் வாழ்விற்குப் பின் பல்வேறு கால கட்டங்களில் தோன்றிய பைந்தமிழ்ப் புலவர்கள் இச்செந்தமிழ் செழிக்கச் சிறப்பாகவே பணியாற்றி வந்துள்ளனர்; வருகின்றனர். 'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை; தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ' என்ற பாவேந்தரின் வரிகளுக்கேற்பப் பூத உடம்பு பொய்த்துப் போயினும் தமிழ் உணர்வால் தம் தள்ளாத காலத்திலும் தம் நெஞ்சிலிருந்து - நினைவிலிருந்து தள்ள முடியாத தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டாற்றித் தமிழர் சிந்தனையில் தமக்கெனத் தனியிடத்தைப் பெற்றுப் பிறங்கும் தமிழ்ப் பெரியார்களுள் புலத்துறை முற்றிய வ.சுப. மாணிக்கனாரும் ஒருவராவார் என்பது எண்ணி மகிழ்வதற்குரியதாகும்.

வ.சுப. மாவின் வண்டமிழ்ப்பணி :

வ.சுப. மாணிக்கனார் குறைபடாக் குறிக்கோளினர் ஆவார். மழலையர் ஆங்கிலவழிப் பள்ளிகள் தமிழ்ப் பள்ளிகளாக மலர்தல், தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தமிழ் பயிற்று மொழியாதல், தமிழ்வழிக் கல்வி இயக்கம் கண்டு அதனைத் தமிழகம் எங்கும் நடத்துதல் ஆகியன மாணிக்கனாரின் உறுதிக் குறிக்கோள்களாக இருந்தன. ' ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளாகத் தமிழ்ப்படிப்பு வட்டத்தில் முதல் நிலைக் கருத்தாளராக மாணிக்கனார் இருந்தார் ' என்பது அறிஞர் திருமிகு. வ.அய். சுப்பிரமணியனின் கருத்தாகும்.' தமிழுண்டு, தமிழ் மக்களுண்டு, இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்லதொண்டு ' என்ற பாரதிதாசனின் கூற்றினை நடைமுறைப் படுத்திய தமிழ்நாயகம் இவராவார்.

துறைதோறும் துறை தோறும் தொய்வில்லாமல் தோய்வுடன் தொண்டாற்றிய தூயர் இவராவார். ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியம் தொடங்கி இற்றைத் திரை இசைப் பாடல் வரையிலுள்ள அனைத்தையும் ஆய்வுப்பொருளாக உட்படுத்திய பெருமை இவருக்குரியதாகும். நடைமுறைக் கண்ணோட்டத்தால், செம்மைநடையால், சிறந்த சொல்லாக்கத்தால், நுட்பமான நயத்தால் உயர்ந்து விளங்கும் இமயம் இவராவார்.

வள்ளுவமும் வண்டமிழ்ச் செல்வரும்

குறளில் தொல்காப்பியச் செல்வாக்கு :

தொல்காப்பியமும் திருக்குறளும் செந்தமிழின் இரு கண்களாய்த் திகழ்கின்றன: இவ்விரு நூல்களுக்கும் விந்தை மிகும் விளக்கங்களைத் தந்தவர் மாணிக்கனார் ஆவார். பல்புகழ்த் தொல்காப்பியரை நினைத்துப் போற்றித் தொல்காப்பியப் புதுமையினைத் தமிழ் உலகுக்கு அவர் அறிமுகம் செய்துள்ளார்.

திருக்குறள் கருத்தாலும் சொல்லாலும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, இராமாயணம் முதலான வழிவழி இலக்கியங்களை ஆட்சி செய்த ஆற்றலை நாம் கற்றிருக்கிறோம்.

இத் துறையில் தொல்காப்பியச் செல்வாக்கைப் பற்றிப் புலவர் பெருமக்கள் ஆராயத் தொடங்கினாரில்லை எனக் குறிப்பிடும் மாணிக்கனார் திருக்குறளின் காமத்துப்பால், பொருட்பால் ஆகியவற்றுள் பலஅதிகாரங்கள் தொல்காப்பியத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டுள்ளதைக் காட்டியுள்ளார்.

" நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப "

எனவரும் தொல்காப்பிய நூற்பா அன்றோ,

" நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"

எனத் திருக்குறளாக மாறி நிற்கின்றது.

" எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேற்
பொற்புடை நெறிமை யின்மையான "

என்ற தொல்காப்பிய நூற்பாவும்,

" கடலன்ன காம முழந்து மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில் " என்ற திருக்குறளும்

ஒன்றாகத் திகழ்வதை நோக்குவார்க்குத் தொல்காப்பியத்தை வள்ளுவர் பொன்னே போற் போற்றியமை பெறப்படும்.

' அகரமுதல ' எனத் தொடங்கிப் ' பெறின்' என்று ' ன ' கரமாகக் குறளை முடிக்க வேண்டும் என்ற சிந்தனை,

" எழுத்து எனப்படுப
அகரமுதல் னகரம் யிறுவாய்
முப்பஃது என்ப "

என்னும் தொல்காப்பிய முதற் நூற்பாவினால் வள்ளுவர்க்கு இருக்கவேண்டும் என்று கருதுவதில் பிழையில்லை. தொல்காப்பியம் கற்றபின் தான் குறளைக் கற்க வேண்டும். அங்ஙனம் கற்பார் பெறும் அறிவே தனித்தன்மையானது என்பது மாணிக்கனாரின் கருத்தாகும்.

செந்நாப் போதாரின் செயல் நெஞ்சு :-

வள்ளுவரின் தனிப்பொது நெஞ்சம் செயல்! செயலேயாகும். இச்செயல் வள்ளுவத்தை மறந்து மாங்குடி மருதனார் 'ஒதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாகி' என்ற பாராட்டு அளவோடு அமைந்தார். புலவர் சிறுகருந்தும்பியார், 'உள்ளுதல் உள்ளி உரைத்தல் உரைத்ததனைத் தெள்ளுதலன்றோ செயல்பால' எனத் தெளிதல் அளவுடன் நின்றுவிட்டார். ' வந்திக்க சென்னி; வாய்வாழ்த்துக; நன்நெஞ்சம் சிந்திக்க; கேட்க செவி ' எனச் செயல்காட்டாது நிறுத்தினார் உக்கிரப்பெருவழுதியார். மருதனார், தும்பியார் உள்ளிட்ட திருவள்ளுவமாலை பாடிய புலவரனைவரும் வள்ளுவரின் செயல் நெஞ்சினை மறந்தொழிந்தனர். புகழ் சான்ற திருக்குறளைப் போற்றுகிறோம்; பல்தடவையும் பறைசாற்றுகிறோம். அவ்வளவோடு அமைதலாகாது. ' புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் ' என்பது ஒரு தனி வள்ளுவம். ' செய்யாது இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்' என்பது குறள் காட்டும்

அச்ச முடிவாகும். ஆதலில் யார்க்கும் செயல்வேண்டும் என்பதுதான் வள்ளுவர் நெஞ்சம் என வள்ளுவத்தை மனித வாழ்வில் செயற்படும் நூலாகக்காட்டிய மாணிக் கனார் செயல்முறை யாதென்பதையும் விளக்குகின்றார்.

' யானார், என்னுள்ளமார் ' எனத் தன்னிலை கண்டு என் நிலைக்கும் ஏற்ற - யான் இதுபோன்று செய்தற்கு வாய்ந்த குறள்கள் இவை இவையென நாடித் தன்நிலைக் குறள்களைப் பொறுக்கி எடுத்துக் கொள்ளச் சொல்கின்றார். என்வாழ்வில் முன்னரே செயலாகிச் செறித்த குறள்கள் இவை, இன்றே செயலுக்குக் கொள்ள வேண்டும் குறள்கள் இவை, உடனடிச் செயலுக்கு வாராவாகினும் என்னுள்ளத்தே இன்று முதற் கிடந்து ஊறுகாய் போல் பதமாக வேண்டும் குறள்கள் இவை என இவ்வண்ணம் அவரவர் அற்றை நிலைக்கு ஏற்ப, ஆற்றற்கேற்ப, விளைபயனுக்கேற்பக் குறளறிவுப் பகுப்பு ஒவ்வொருவருக்கும் தேவையென விரும்புகின்றார். இதனையே அவர் செயல்வழியாகக் காட்டுகின்றார். திருக்குறள் தம் வாழ்க்கைச்சுவடி என உணர்ந்து ஒவ்வொருவரும் தாம் உழைத்து ஈட்டிய பொருள் வழித் திருக்குறளை வாங்கிக் கற்கும் நாள் தமிழ் மண்ணில் மலர வேண்டும் எனத் தம் விருப்பத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

குறள் நெறி வாழ்வு :

திருக்குறட் பற்று அறிவாகவும் செயலாகவும் விளைய வேண்டுமென்பது அவரது அவாவாகும். சிலர் இதுவரை மடிப்பட்டு முடங்கிக் கிடந்திருக்கலாம்; சோதிடம் பார்த்துப் பார்த்து நல்லூழ் இல்லை என அறிவு மழுங்கியிருக்கலாம். நல்லோர்க்கு இது காலமில்லை என்று உலகத்தைப் பழித்து வாளாஉடல் சுமந்திருக்கலாம். ஈட்ட முனைந்து, குற்றமே பெருக்கி, வஞ்சனை அணிந்து, மனமாசுபடிந்திருக்கலாம்; அரைகுறை முயற்சியினராய்க்கொட்டாவி விட்டிருக்கலாம். கடந்த நிலை கிடக்க; சென்றது கவலற்க. வள்ளுவப் பொருள் செவிமடுத்த இன்னே உடல் முடக்கம் உதறுமின்! அறிவு மழுக்கம் தீட்டுமின்! வாய்ப்பேச்சு மூடுமின்! படிமாசு துடைமின்! கொட்டாவி சுண்டுமின்! முயற்சிக்கு இடையூறாம் எதனையும் வாழ்வுப் பகை எனத் துணிமின்! முயல்மின்! முயற்சிப்படுமின்! என்றெல்லாம் குறள்நெறி வாழ்வை மேற்கொள்ளுமாறு மாணிக்கனார் வேண்டுகின்றார்.

வள்ளுவம் பரவும் வழிகள் :

வள்ளுவம் பரவ வழிவகைகளையும் அவர் காட்டுகின்றார். வள்ளுவர் பெயரால் தெருத்தோறும் பள்ளி அமைத்தல், ஊர்தோறும் பெரும்பள்ளிகள் நிறுவுதல், நூல் நிலையங்கள், படிப்பகங்கள் பெருக்குதல், கேள்விக்கூடங்கள் கட்டுதல், வள்ளுவர் பெயரால் தொழிற்களங்கள் . உழவுப் பண்ணைகள் தொடங்குதல், வள்ளுவர் பெயரால் ஏழை இல்லங்கள், குழந்தை விடுதிகள் அமைத்தல் ஆகியவற்றை ஆற்றுதலைத் தமிழரின் தலைமைக் கடனாக அவர் காட்டுகின்றார். இத்தொண்டுகளையெல்லாம் முதற்கண் தத்தம் ஊரிலேயே ஆற்ற வேண்டும். செல்வம் மிகுதியிருப்பின் பிற ஊர்களுக்கும் தொண்டினைப் பரப்புதல் வேண்டும். கோடிச் செல்வம் குவியுமாயின் வள்ளுவப் பல்வகைக் கல்லூரிகளும் வள்ளுவப் பல்கலைக்கழகமும் நிறுவுதல் வேண்டும். திருக்குறள் பல்பதிப்பும் உலகப்பதிப்பும் ஒரு பால் இன்றியமையாச் செயல்களாகும் என்றெல்லாம் வள்ளுவம் பரவும் வழியினை அவர் எடுத்துக்காட்டியுள்ளார்.

தமிழரின் தனிப் பெருங்குறை :

வள்ளுவம் வழிப்பட்ட வாழ்க்கையை வகுத்துக் காட்டியுள்ள மாணிக்கனார் தமிழரிடம் காணப்படும் பெரும் குறை ஒன்றினையும் வள்ளுவர் வழியாகவே சுட்டுகின்றார். கல்வி, அறிவு, செல்வங்கள் வேண்டும் என்ற எண்ணம் நமக்குண்டு. தும்மை, வாய்மை, சால்புகள் வேண்டும் என்ற எண்ணம் நமக்குண்டு. நல்லவை யெல்லாம் வேண்டும் என்ற எண்ணம் நமக்குண்டு. எண்ணிய எண்ணியாங்கு எய்தல் வேண்டுமென்ற பெரிய எண்ணம் நமக்குண்டு. இவ்வெண்ணமெல்லாம் நிரம்பி வழியும் நமக்கு எண்ணத்திட்பமில்லை.

எண்ணியதை மீண்டும் பெருக்கல் வாய்பாடு போல் நினைவுக்குக் கொண்டுவரும் எண்ணப்பயிற்சி இல்லை. உள்ளத்தால் உள்ளிய எனைச் சிறுபெருஞ்செயலையும் திரும்பத் திரும்ப உள்ளிக் கொள்ளும் உறைப்பு இல்லை. கோளற்ற, செயலற்ற, முறையற்ற வாழ்க்கையாகத் தள்ளிக்கொண்டு இறப்புத் நோக்கிச் செல்கின்றோம். நெஞ்சுரம் அற்ற மகன் நினையும் எண்ணம் பேடி கைவாள் ஒக்கும். ஆதலின் வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பமாகும். இத்திட்ப வள்ளுவத்தை நினையுமாறு தமிழரைப் பன்முறை அவர் வேண்டுகின்றார். நம்பிக்கை நூலாக மாணிக்கனார் கருதும் குறளைத் தேசிய நூலாக்க வேண்டுமென்பது அவரின் பெரு விருப்பமாகும். இந்திய அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ள கோட்பாடுகளுடன் குறள் ஒத்து இயங்கும் முறையினை விளக்கிக் காட்டி, அங்ஙனம் ஒத்தியங்கும் நூலாகிய குறளைத் தேசிய நூலாக இடம் பெறுவதற்குரிய தகுதி பெற்றது என மாணிக்கனார் தக்க சான்றுகளுடன் நிறுவிக் காட்டுகின்றார்.

மாணிக்கக் குறளில் மலைக்கும் தமிழ் :

வள்ளுவர் அருமை, பெருமையினைப் பாராட்டிக் கொண்டே காலத்தைப் போக்காமல் குறளிற்கு ஓப்பான குறளைக் குறள் வடிவிலேயே இவர் யாத்துள்ளார். இக்குறள் " மாணிக்கக் குறள் " என அழைக்கப்படுகின்றது. ஆயிரம் குறள் வெண்பாவில் அந்தாதியாகத் " தமிழ்" எனத் தொடங்கித் " தமிழ்" என முடித்துத் "தமிழாயிரம்" என்னும் நூலை இயற்ற மாணிக்கனார் திட்டமிட்டிருந்தார். இந்நூல் முற்றுப்பெறாமல் ஐந்நூற்றுறு குறளளவிலேயே நின்று விட்டது. இந்நூலில் தமிழ்ச்சிறப்பு, அதனைப் பாதுகாத்த தமிழ்க்காவலர்கள், அதனைப் போற்றிப் புரந்த வள்ளல்கள், மொழிக்கலப்பின் தீமை, பிறமொழி மோகக் கொடுமை, தமிழ் வளர்ச்சிக்குரிய வழிகள் என நூலைத் தொட்டவையெல்லாம் தமிழின் மலைமே கமழுமாறு அவர் செய்துள்ளார். தமிழ்ப்பயனையும் கூறப்படுகின்றது.

தமிழ்ச் சிறப்பு :

"தமிழிற் சிறந்ததோர் நாய்மொழி இல்லை
இமிழ் கடல் ஞாலத்து எமக்கு"

என்றவாறு தமிழை விடச் சிறந்த மொழி எங்கும் இல்லை என்பது அவரின் திடமான கருத்தாகும்.

"தமிழ்முதல் ஞாய் என்ற யாவனைன் தஞ்சொல்
அமிழ்விலும் என்றாம் அறி"

என்று தமிழின் தொன்மைக்கு அகச்சான்றினையும் அவர் சான்றாக்குகிறார்.

" தமிழின் அகலமென் சப்பான் மொழியும்
மகிழும் தமிழ்ச்சொல் மலிந்து "

என்று அயலக மொழியிலும் அருந்தமிழ்ச் சொற்கள் விரவிக் கிடப்பதைச் சுட்டுகின்றார்.

" துளை துளையா ஏடுகளைத் தொட்டு வணங்கி
உலையுலையாய் விட்டகதை யொன்று "

" ஒன்றாக ஏடுகளை ஊர்க்கறையான் உண்கவென
நன்றாக விட்டகதை நாடு "

" நாடாதும் நாணாதும் நாத்தீப் பருகுவெனச்
சூடாக விட்டகதை சொல் "

என்று தமிழ் ஏடெல்லாம் தமிழரின் விழிப்பின்மையாலும் கறையானாலும் தீயாலும் அழிந்து ஒழிந்ததை அறிவிக்கின்றார்.

தமிழ்க் காவலர்கள் :

" துணையாகிக் காத்தான் துயர்சாமி நாதன்
புணையாகி நின்றானைப் போற்று "

" போற்றற் குரித்து புகழ்நா வலர்பெருமான்
தேற்றம் பதிப்பின் திறம் "

" திறமிக்க தாமோதர் செம்மைப் பதிப்பும்
அறமிக்க தொண்டென் றறி "

" நிலை நூல்கள் காத்தான் நெடும்பவா னந்தன்
சிலைநடற் குற்ற சிறப்பு "

என்று மூதறிஞர் உ.வே.சா, பதிப்புக் காவலர்களான ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரனார், பவானந்தர் என்பவரைச் சுட்டுவதுடன் பின்னத்தூர் நாராயணசாமி, திரு.வி.க., யாழ் நூல் படைத்த விபுலாநந்தர், வடமொழிச் சகுந்தலை நாடகத்தைத் தமிழ்ப்படுத்திய மறைமலையடிகளார், அருத்த சாத்திரத்தைத் தமிழில் தந்த பண்டித மணி கதிரேசனார், தமிழ்க் கீதை அருளிய சித்பவானந்தர், சிங்கப்பூரில் தமிழ்ப்பணியாற்றிய சாரங்கபாணியார், மறைந்த மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் ஆகியோரையும் தமிழ்க்காவலர்களாகக் காட்டி, அவர்கள் ஆற்றிய தொண்டினை நன்றியுடன் போற்றி அவர் மகிழ்கின்றார்.

" உண்டு தமிழ்த்திறம் ஊர்புகழ் கால்டுவேல்
தொண்டு விளைத்த துணிபு "

" அதுவன்றோ போப்பையர் ஆயுள் அறைமேல்
இதுமகன் என்ற எழுத்து "

என்று வேற்று நாட்டிலிருந்து வந்த தமிழ்ப்பணி புரிந்த கால்டுவேல் அய்யரையும் கல்லறையில் ' தமிழ்மகன் ' எனப் பொறிக்கச் செய்த போப்பையர் போன்றோரையும் அவர் நினைவுபடுத்துகின்றார்.

தமிழ் வளர்த்த வள்ளல்கள் :

" செய்தா னவனொருவன் சீகாதி மோதிரத்தைப்
பெய்தான் பிரிந்ததன் பின் "

" பின்னுடைமை வேண்டாப் பெருவள்ளல் பேரழகன்
தன்னுடைமை இல்லான் தனி "

" தனித்தொரு பல்கலைத் தாய்க்கழகம் கண்டான்
மனித்தருள் அண்ணா மலை "

" மலைபச்சை நேரில்லை மாயா அறத்தால்
நிலைபச்சை யப்பனே நேர் "

" நேரினிய சொற்செல்வன் நெல்வேலிச் சேதுவின்
ஊரினிய பேரறத்தை ஒது "

எனச் செத்தும் கொடுத்த சீரிய வள்ளல் சீதக்காதி.யை, தமக்கென்று உடைமை ஒன்றையும் கொள்ளாது அனைத்தையும் கல்விக்கு அளித்த அழகப்பரை, தனித்தொரு பல்கலைக்கழகம் கண்டும் தமிழுக்கும் தமிழ் இசைக்கும் நிலைத்த தொண்டாற்றிப் புகழ் எய்திய அரசர் அண்ணாமலையாரை, நிலைத்த அறத்தினாற் நிலைத்த புகழ் கொண்ட பச்சையப்பரை, பல்கலைக் கழகத்திற்கு அறக்கட்டளை நல்கி அருந்தமிழ் போற்றிய சொல்லின் செல்வர் சேதுவையும் தமிழைப் போற்றிப் புரந்த வள்ளல்களாக நினைத்து அவர் பாடியுள்ளார்.

தாய்மொழிக் கல்வி :

" மொழியியல் கற்க முயலுமுன் உன்தாய்
மொழி தமிழ் கற்பாய் முதல் "

என அயல் மொழி கற்க முயலுமுன் தாய்மொழித் தமி.ழைக் கற்க அவர் வேண்டுகிறார்.

" முதலாகக் கற்பின் முழுக்கூர்மை பெற்று
முதலாவாய் கல்வி முறை "

எனத் தாய்மொழியை முதலில் கற்றபின் அறிவுக் கூர்மையை முதன்மையாகப்பெற்று மேன்மையுறலாம் எனத் தாய் மொழிக் கல்வியின் பயனையும் அவர் குறிப்பிடுகின்றார்.

" என்று முதற்பள்ளி என்தமிழ் இல்லாமோ
அன்று பிறக்கும் அறிவு "

" அறிவு வளர்ச்சிக் கயல்மொழிகள் வைக்கும்
குறியை மறிப்போம் குறி "

என்று தொடக்கப் பள்ளியெல்லாம் என்று தமிழ் இல்லமாக மாறுமோ அன்றுதான் அறிவு பிறக்கும் என்றும் அறிவு வளர்ச்சிக்கு அயல்மொழிகள் விதிக்கும் தடைகளை மறியல் செய்து தடுக்க வேண்டும் என்றும் மாணிக்கனார் வேண்டுகின்றார்.

" மயிர்வளராக் கன்னிமை மானும் தமிழின்
பயிர்வளராப் பள்ளிப் படிப்பு "

எனத் தமிழ்ப்பயிர் வளராத இளமைப் பள்ளிப் படிப்பை மயிர் வளராத கன்னிமைக்கு ஒப்பிட்டுக் காட்டுகின்றார்.

மொழிக் கலப்பு :

" களைக அயலொலி காண்க தமிழ்ச்சொல்
அளைக பொருள்வளம் ஆர்ந்து "

என அயல்ஒலியைக் களைவதன் வாயிலாகத் தமிழை வளர்க்கலாம் என மாணிக்கனார் வலியுறுத்துகின்றார்.

" கேட்கும் ஒலியெல்லாம் கேடுணரார் சேர்ப்பரேல்
வாய்க்கு விளங்கா வரம்பு "

என வேண்டாத ஒலிகளைச் சேர்த்து எழுதினால் ஒலி வரம்பின்றிப் போகும் கேட்டை அவர் உணர்த்துகின்றார்.

" கூறிய வேங்கடம் கோனொடு போயிற்று
மாறிய கேரளம் மலையொடு மற்று "

" மற்றுங் குமரி மலையொடு மூழ்கிற்று
பற்றும் முதுகோடி பாழ் "

" பாழில் பிராகூய் பரவிய எல்லையும்
ஊழின் இழந்தோமோ ஒது "

" அணைக்கட்டுச் சோழர் அயல்கிழக்கிற் கண்ட
துணைக்கட்டும் போயிற்றே தொக்கு "

" தொக்குத் தமிழர் தொகைவாழ் இலங்கையும்
கக்குவா னாமோ கருது "

என்றவாறு மொழிக் கலப்பினால் தமிழ்நாட்டு எல்லை சுருங்கியதை அவர் சுட்டுகின்றார்.

பிறமொழி மோகம் :

" குறில்கள் நெடில்கள் சூரல்வகை மெய்கள்
அறுதிசால் முப்ப தரண் "

" அரண்சிறந்தும் என்பயன் ஆங்கில மோகம்
முரண்வளர்த்த மூட ரிடத்து "

" மூடருள் மூடன் எனப்படுவான் தாய்மொழி
வாடக் களிக்கும் மகன் "

என்றவாறு ஆங்கில மோகம் கொண்ட மூடரிடத்துத் தமிழுக்கு அரணாக உயிரும் மெய்யுமாக முப்பது எழுத்து இருந்தும் பயனில்லை என்று கருதும் மாணிக்கனார் தாய்மொழி வாட மகிழும் மகனை மூடருள் மூடன் என அழைக்கின்றார். தமிழ்த்தாயை அசல் என்று கருதாது நகல் என்று கருதும் தசைப் பிண்டத்தை மகவென்பேனோ, மண்ணென்பேனோ, மக்கு என்பேனோ எனப் பிறமொழி மோகம் கொள்பவனை மகன் என்னாது மண் என்றும் மக்கென்றும் அழைக்க வேண்டும் என மறைவாய் உணர்த்தி அவர்கட்கு உணவும் உடையும் வீண் எனக் காட்டுகின்றார்.

எழுத்துச் சீர்திருத்தம் :

எழுத்துச் சீர்திருத்தம் என்ற பெயரால் எழுத்துக்களைக் குறைப்பதும் மாற்றுவதும் இவருக்குப் பிடிக்காத ஒன்றாகும். ஆதலால்,

" எழுத்துத் திருத்தம் இயல்போ தமிழைக்
கழித்துச் சுழிக்குங் கதை "

என வினவுகின்றார்.

" ஒலிகூட்ட வேண்டா உயர்தமிழ்க் கல்வி
வலியூட்ட வேண்டும் வரிந்து "

என ஒலிகளைக் கூட்டாது தமிழ்க் கல்விக்கு வலியூட்ட அவர் வேண்டுகிறார்.

தமிழ் வளர்ச்சிக்கு வழி :

வருவாய்க்குரிய வளர்தமிழாக விரிவாய்ப் புதுக்க விரும்ப வேண்டும். விரும்பும் துறையெல்லாம் தமிழிலே கற்குமாறு ஆவன எய்தல் வேண்டும். ஆக்க அறிவனைத்தும் தமிழ் மொழி வாயிலாகப் பயிலப் பல நிறுவனங்களைத் தொடங்க வேண்டும். வளமற்ற மொழியெல்லாம் கல்விமொழியாக உயர்கின்ற பொழுது தமிழன் ஒய்ந்திருத்தல் கூடாது. ' இந்தி ஒழிக ', எனக் கத்துதலால் இந்தி ஒழியாது. தமிழும் வளராது. தமிழைப் பல வகையிலும் உயர்த்த முனைய வேண்டும். ஊர், பள்ளி தோறும் தமிழ் பயிற்று மொழியாக ஆட்சி செய்ய வேண்டும். அப்பள்ளிகளில் இடம் பெற்றுள்ள அயல் மொழியை அகற்ற அயராது பாடுபட வேண்டும்.

" குறிக்கோள் அரசெங்கும் கொள்ளுக என்றும்
அறிக்கோள் தமிழ் வழியே யாம் "

" ஆமெனச் செய்குவோம் அன்றேல் பதவியைப்
போவெனக் காண்போம் பொருது "

என அரசு எங்கும் தமிழ்வழியே அரசியல் நடத்த வேண்டும். அதற்கு இசைவிலை எனில் அரசியல் பொறுப்பைத் தூக்கி எறியத் துணிவு வேண்டும். உயர்ந்த நூல்கள் வேண்டும் எனத் தமிழ் வளரத் தக்காங்கு வழிகாட்டியுள்ள மாணிக்கனார் முதல் நூலாகிய தொல்காப்பியம், பழம்போலும் சங்கப்பனுவல், கீழ்க்கணக்கு நூல்கள், திருவாசகம், ஆழ்வார் தமிழ், ஆண்டாள் தமிழ் ஆகியவற்றைக் கற்கப்படும் நூல்களாகத் தமிழர்க்கு அறிமுகப் படுத்துகின்றார்.

தமிழர்க்கு விடுத்த வேண்டுகோள் :

" இரப்பேன் தமிழரை இன்றேனும் தாயைப்
புரப்பீர் புரப்பீர் பரிந்து "

" எனைத்தானும் காக்க இருக்கின்ற நூல்கள்
உனைத்தானும் வேண்டுவன் ஒன்று "

" உறையுள் உணவுடை எல்லாம் தமிழால்
நிறையக் கிடைக்கும் நினை "

" நினைவு தமிழாயின் நீள்நில வாழ்க்கை
புனைவிலை பொற்றாலிப் பொன் "

என்றவாறு தாயாம் தமிழைப் புரந்திடவும் இருக்கும் நூல்களைப் பொறுப்பாய்ப் பாதுகாக்கவும் தமிழ் நினைவு உறையுள், உணவு, உடை ஆகியவற்றை நிறைவாகத் தரும் என்றும் நினைவெல்லாம் தமிழாயின் பொற்றாலிப் பொன்போல் நீள் நிலை வாழ்க்கையைப் பெறலாம் என்றும் தமிழர்க்கு அறிவிக்கின்றார்.

கல்வி முழுவதையும் தமிழுக்கு உரிமையாக்குவதைத் தமிழர் கடமையாகக் காட்டுகின்றார். அரசாணையை நம்பினால் யாதும் நடவாது. சூடற்ற ஆட்சிக் கொள்கை படைப்பொறுப்பு அற்றுப் போர் செய்தலை ஒக்கும்.

" போராட்டம் இன்றிப் பொருவில் தமிழுக்குத்
தேரோட்டம் இல்லை தெளிவு "

எனத் தமிழ்க் கிளர்ச்சிக்கு மாணிக்கனார் வித்திடுகின்றார். மாணிக்கனார் வேண்டிய வாறு தன்மானத் தமிழரே! நீவிர் அனைவரும் உட்பகை நீக்கி ஒன்று கூடுவீர்! தமிழை இழிவுபடுத்தும் எவரையும் பாராட்டாது அவரிடம் பகைமை பாராட்டுவீர். எங்கும் தமிழ், எதிலும் தமிழ், எப்பொழுதும் தமிழ் எனத் தவளை போல் கத்தாது தேவையெனில் சமராற்றித் தமிழ் அன்னையை அரியணையில் அமர்த்த முற்படுவீராக!

13 நூலின் தோற்றமும் வளர்ச்சியும்

ஓலை ஏட்டிலிருந்து ஒலி நாடா வரை :

ஒருவர் கருத்தைப் பிறர் அறியச் செய்வதற்குத் தொடர்புச் சாதனங்கள் பயன்படுகின்றன. அச்சாதனங்கள் அச்சு, பருவஏடுகள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் மற்றும் நூல்கள் ஆகியனவாம். இவற்றுள் நூல்கள் முற்காலத்தில் உருவமற்ற நிலையில் வாய்மொழியாகத் திகழ்ந்தன. எழுத்தின் தோற்றத்திற்குப் பின் பனை ஓலை நறுக்குகள், எழுத்தாணி முதலிய எழுதுபொருள்களின் துணையுடன் செய்யுள் நூல்கள் உருவாக்கப்பட்டன. அவற்றைப் படிப்பதற்கு மரபு இலக்கணம் முதலியன தேவையாக இருந்தன. தாள், மை, அச்சு முதலியவற்றின் வருகையால் தமிழ் நூல்கள் அச்சில் ஏறின. அத்தகைய நூல்கள் படிப்பவர்க்கு வசதியாகவும் எளிமையாகவும் இருந்தன. தமிழ்நூல்கள் அச்சாக்கப்பட்டன.

பின்னர் மின்னனு முறையில் கணிப்பொறியின் துணையுடன் அச்சிடப்பட்ட நூல்கள் அறிமுகமாயின. இதே சூழலில் சி.டி. ரோம் என்னும் தொழில் நுட்பத்தின் வழி ஒரிரு நூல்கள் வெளிமிடப்படுகின்றன. தற்போது இம்முறை நூலகப் பயன்பாட்டிற்கு மட்டும் உள்ளது. இலக்கியம் என்பது மட்டுமின்றிப் பிறதுறை நூல்களின் தோற்றம் தற்காலத்தில் மிகத் தொடங்கியுள்ளது. முற்காலத்தில் பொதுவாக நூல்கள் என்று குறிக்கப்பட்ட நிலை மாறிக்கதை நூல்கள், சிறுவர் நூல்கள், அறிவியல் நூல்கள் முதலிய பல்வேறு நிலைகளில் நூற்பொருளின் பரப்பு விரிவடைந்துள்ளது. அவற்றைப் படிப்போரும் எண்ணிக்கையில் மிகுந்து வருகின்றனர். எனினும் மிகுதியான படிப்பாளிகளை நூல் படிப்பினின்றும் திசை திருப்பும் வகையில் தொலைக்காட்சி அலைவரிசைகள் மிகுந்து வருகின்றன. இவை தமிழ் மக்களின் சுவை ஈடுபாட்டை மாற்றும் தன்மையனவாகவும் அமைந்துள்ளன.

எதிர்காலத்தில் நூல்கள் அச்சு வழியில் அல்லாமல் ஒலி நாடாக்களாகவே வெளிமிடப்படும். அத்தகைய நூல்களைப் படிப்பதற்கு எத்தகைய சூழலும் தடையாக இராது. மேலும் அவற்றை உருவாக்க மிகச் செலவிராது. எனவே குறைவான விலையில் நூல்களை வாங்கிப் படிக்க மிகுதியானவர் முன்வருவர். அச்சு நூல்கள் எண்ணிக்கையில் குறையத் தொடங்கும். பழங்காலத்தில் தமிழகத்திலிருந்த பாடல்கேட்டல், வாய்மொழிக் கல்வி, செவிவழிப் பரப்பு முதலியவற்றுடன் தொடர்புடையனவாக எதிர்காலத்தில் ஒலி நாடா நூல்கள் வெளியிடப்பட்டுப் படிக்கப்படும். இதனாலன்றோ 'பாடமது ஏறினும் ஏடது கைவிடேல் ' என்னும் பழமொழி எழுந்தது.

உலகில் மானிடஇனம் பல்வேறு வளர்ச்சிகளைக் கடந்து தோன்றியதாகும். இம்மானிட இனத்தின் அறிவு நிலையும் படிப்படியாக வளர்ந்ததை மானிடவியல்

சுட்டுகின்றது. அத்தகைய சூழலில் மானிடன் தான் புதிதாகக் கண்ட, சிந்தித்த கூறுகளை, செய்திகளைப் பிறருக்கு எடுத்துரைக்கத் தொடங்கினான். மொழியின் தோற்றத்திற்குப் பிறகு இந்நிலை மிகுதியாக வளர்ந்துள்ளது. கருத்தை வெளியிடுவதற்கும் அதைப்புரிந்து கொள்வதற்கும் மொழி தேவைப்படுகின்றது. மொழி என்பது பேச்சுமொழி,எழுத்துமொழி என இருவகைப்படும். இவற்றுள் பேச்சுமொழியே முதலில் தோன்றியதாகும். எனவே கருத்தை வெளியிடுதல் பேச்சுமொழி வழியே முதலில் தோன்றியுள்ளது. அதன் பின்னரே எழுத்து மொழி நடைமுறைக்கு வரலாயிற்று. அத்தகைய காலகட்டத்தில் மானிடன் தனக்கு கிடைத்த எழுதுபொருள்களின் துணைக்கொண்டு கருத்தை எழுதி வெளிப்படுத்தினான்.

நூலின் சமூகப் பயன்பாடு :

நூல் வெளியீடு என்பது சமூகத்தில் நிகழும் தன்மையதாகும். சமூக இயலின் பல்வேறு கூறுகளுள் இன்றியமையாதது பண்பாடாகும். இப்பண்பாடு என்பதனை மனிதன் சிந்திக்கிற, கொண்டிருக்கிற, செய்கிற எல்லாச் செய்திகளையும் உள்ளடக்கி இருக்கின்ற ஒரு சிக்கலான தொகுதி, எனலாம். இவ்வரையறையில் குறிக்கப்பட்ட சிந்தனை என்பது மனத்துள்ளேயே இருந்து விட்டால் வெளியில் எவர்க்கும் தெரியவராது. அச்சிந்தனை எண்ணத்தை வெளிப்படுத்தும் போதுதான் அச்சிந்தனையின் பயன்பாட்டைப் பிறர் அறிவர். வெளியிடப்பெறும் சிந்தனை என்பது பல்வேறு நிலைகளில் அமையும். அவை,

1. வானொலி 2. மேடை நாடகம், தொலைக்காட்சி நாடகம் 3. திரைப்பட்ம் 4. நூல்கள் என்பனவாகும். வெளிமீடு என்பது மனிதனின் சமுதாயத் தேவையாகும். மனிதன் சிந்தித்த, கேட்ட, படித்த, பார்த்த, அறிந்த பல்வேறு கருத்துக் கூறுகள், குறிப்பிட்ட சூழலில் பேச்சாகவோ, எழுத்தாகவோ வேறு கலைகளாகவோ வெளியிடப்படும்.

தொல்காப்பிய விளக்கம் :

முற்காலத்தில் நூல் விளக்கம் பற்றிய செய்திகள் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன. முதல் நூல், வழி நூல், சார்பு நூல் எனத் தொல்காப்பியர் நூலை மூவகைப் படுத்துகின்றார். வழி நூலின் வகைகள் தொல்காப்பியரால் சுட்டப்பட்டுள்ளன. நூலின் இயல்பினையும் தொல்காப்பியர் காட்டியுள்ளார். முதல் நூலின் சிறப்பினையும் தொல்காப்பியர் சுட்டியுள்ளார். நூலின் குற்றங்களை அவர் விரிவாக்கக் காட்டியுள்ளார். நூலின் உத்திகள், நூலாசிரியரின் மதங்கள், (கொள்கைகள்) நூலின் அழகுகள் ஆகிய அனைத்தும் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன. தொல்காப்பியரால் சுட்டப்பட்டுள்ள நூல் பற்றிய விளக்கங்கள் அவர்தம் காலத்திற்கே உரியனவாகும். தற்கால நூல்களுக்கு அவர் தந்துள்ள விளக்கங்கள் பொருந்துவனவாய் இல்லை.

ஏடும் எழுத்தாணியும் :

பனைஓலை வழியாக உருவாக்கப்பட்ட ஏடுகளே எழுதப்பயன்பட்டன. இப்பனைஓலை சாதாரணப் பனையிடமிருந்தும் சீதாளப் பனையிடமிருந்தும் பெறப்பட்டது. சீதாளப்பனைஓலை சாதாரணப் பனை ஓலையைவிட அகலமாகவும் நீளமாகவும் மெலிவான தன்மையதாகவும் அமைந்திருக்கும். எழுத்தாணி கூர்மையான இரும்பினால் ஆக்கப்பட்டிருக்கும். குண்டெழுத்தாணி, வாரெழுத்தாணி, மடக்கெழுத்தாணி என எழுத்தாணிகள் பலவகைப்படும். ஓலையை இடக்கையில் பிடித்து வலக்கையால் எழுத்தாணியைக் கொண்டு எழுதிப் பழகுவர். எழுதும் பொழுது ஓலைதான் நகர்த்தப்படும். எழுத்தாணி பிடித்த இடத்திலிருந்து எழுத்துக்களை வருவும். தமது இடக்கைப் பெருவிரல் நகத்தை வளர்த்து, ஓலையில் பிறை வடிவில் துளையிட்டு, அப்பள்ளப் பகுதியில் எழுத்தாணியை வைத்து ஓர் ஓலையில் வரிவரியாக ஓர் எழுத்தின்மீது மற்றொரு எழுத்துப்படாமலும் ஒரு வரியின் மீது மற்றொரு வரி இணையாமலும் தேவையான இடம் விட்டு எழுதுவோர் எழுதுவர். ஒரு பக்கத்தில் மிக நுண்ணிய எழுத்துக்களாக 20 அல்லது 30 வரிகள் இடம் பெற்றிருக்கும்.

சுவடி வரலாறு :

ஏட்டுச் சுவடிகளுக்குக் குறிப்பிட்ட அளவு என்று ஒன்றுமில்லை. சுவடிகளில் ஒற்றைத் துளை அல்லது இரட்டைத்துளையிட்டு ஒரு நூல் கயிற்றைக் 'கிளிமூக்கு' என்ற ஒன்றில் முடித்துச் சுவடியின் துளை வழிச்செலுத்தி அதைக் கட்டுவர். ஏடுகளின் தொடக்கத்திலும் இறுதியிலும் எழுதப்படா வெற்றேடுகள் சேர்த்து இணைக்கப்பட்டிருக்கும். ஓலைச்சுவடிகள் பெருவிரல் அளவிற்கும் மிகச்சிறிய வடிவினதாய் அமைந்திருக்கும். சுவடிகள் நீளவடிவம், உருளை வடிவம், பந்து வடிவம் எனப் பல வடிவங்களில் காணப்படும். ஓலைச் சுவடியின் ஓர் இதழின் இரு பக்கங்களும் எழுதப் பயன்படுத்தப்படும். ஒவ்வொரு பக்கத்தின் எண் இடம் பெற்றிருக்கும். புதியது தொடங்கும் போது ஓலை இதழின் இடப்பக்க ஓரத்தில் நூலின் தலைப்புக்கள் குறிக்கப்படும். ஒரு நூலின் இறுதியில் அந்நூலின் உள்ளடக்க அட்டவணை காணப்படும். சுவடிகளின் மேலேடுகளில் பலவகையான சித்திரங்கள் காட்சியளிக்கும். சாதாரணக் கயிறு அல்லது பட்டுக் கயிற்றால் குறுக்கும் நெடுக்குமாகச் சுவடியை முறையாகக் கட்டுவர். சுவடி எழுத்துக்கள் செம்மையாகத் தெரியச் சுவடியில் வசம்பு, மஞ்சள், மணத்தக்காளி, தர்ப்பைக்கரி ஆகியவற்றால் கூட்டிச் செய்த மையினை ஓலைச்சுவடியில் தடவுவர். எழுத்துக்களைத் தெளிவாகத் தெரியச் செய்வதுடன் கண்ணிற்குக் குளிர்ச்சியையும் இந்த மை தரவல்லதாகும்.

பழங்காலம் முதல் ஒவ்வொரு பொருளுக்கும் அதன் பண்பு, உரு, அமைவு, நிறம், சாயல், பயன்படும் விதம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு பெயர் வைத்திருக்கின்றனர். இவ்வடிப்படையில் ஏடு, சுவடி, ஓலை, தூக்கு, பனுவல், புத்தகம் என நூல் பலபெயரைப் பெற்றுள்ளது. நூல் என்றாலே இலக்கியம் எனப்பொருள்படும். இலக்கியம் என்றாலே நல்ல நூல்

எனப்பொருள்படும். நல்ல நோக்கம் அல்லது நல்ல பயன் என்று பொருள் தரக்கூடிய இலக்கியம் என்பது அனைத்து நூல்களுக்கும் பொதுப்பெயராகும். ஆயினும் நல்லநோக்கம், நல்லபயன் அனைவர்க்கும் ஒரே தன்மையாய் இருப்பதில்லை. ஒருவர்க்கு ஒரு நூல் நல்லதாகத் தோன்றலாம். மற்றவர்க்கு அதே நூல் சுவை தராமல் போகலாம்.

பனைஓலையில் இரும்பாணி கொண்டு புள்ளி வைத்தால் அடுத்த பக்கத்திலும் அது பதிந்து விடும் அல்லது ஓலைகிழியலாம். எனவே ஒற்றெழுத்து, முற்றுப்புள்ளி, அரைக்காற்புள்ளி எதுவும் எழுத்தில் இடம் பெறா. எனவே எந்த எழுத்து எப்படி இருக்கும், எப்படி அமையும் போன்ற தெளிவுகளை அறிந்திருந்தால்தான் பாடல்களைப் பிழையின்றிப் படிக்க முடியும். ஓலையில் இடைவெளியின்றித் தொடர்ந்து எழுதப்பட்டிருக்குமாதலால் பாவின் அடிகள் எங்கு முடியும் என்ற தெளிவும் இராது. எனவே படிக்க மரபிலக்கணம் இன்றியமையாததாய் ஆயிற்று. நூல் அல்லது இலக்கியம் முதலிலும் உரைகள் அடுத்ததாகவும் ஓலைச் சுவடிகளில் பதிவு செய்யப்பட்டிருக்கும். காலப் போக்கில் ஓலைச் சுவடிகள் அழியத் தொடங்கியிருக்க வேண்டும். அக்கால மன்னர்கள் சங்கப்பாடல்களில் பற்றுக் கொண்டவர்கள். எனவே அவைஅழியாமல் பாதுகாக்கப்படுவதற்காகத் தகுந்த புலமை மிக்கவரைக்கொண்டு சுவடிகளைத் திரட்டி மன்னர்கள் ஒழுங்குபடுத்தினர். பலவிடங்களில் வாழ்ந்து வந்த புலவர்களைத் தம் அவைக்கு வரச்செய்து அவைகளைத் தொகுக்கச் செய்தனர். 'இத்தொகை முடித்தோன் பூரிக்கோ, இத்தொகை பாடியகவிகள் இருநூற்றைவர். இத்தொகை நாலடிச் சிற்றெல்லையாகவும் எட்டடிப் பேரல்லையாகவும் தொகுக்கப்பட்டது' எனக்காணப்படும் குறிப்புக்கள் மன்னர்களால் தொகுக்கப்பட்ட செய்தியை உறுதிப்படுத்துகின்றன. 'நூலோர் தொகுத்தவற்றுள்' என வள்ளுவரால் கையாளப்பட்டுள்ள தொடர் பழங்காலத்திலேயே ஓலைத் தொகுப்பு இருந்தது என்பதை உணர்த்துகின்றது. இன்றும் செம்பதிப்புப் பொருட்டுச் சங்கப்பாடல்களை ஓலைச்சுவடியில் படிக்கும் வழக்கம் நடைமுறையில் உள்ளது. ஓலை இலக்கியப் படிப்பும் படிப்படியாகவே வளர்ந்தது. செவி வழியாக மட்டும் ஓலைப்படிப்பு வளர்ந்தது. பின்னர் ஒருவர் படிக்க மற்றொருவர் படி எடுப்பர். ஆயினும் செவி வழிப்படிப்பு முற்றிலும் மறைந்துவிட வில்லை.

மறைந்த நூல்கள் :

அடியார்க்கு நல்லார் முதலிய உரையாசிரியர்கள் மறைந்து போன தமிழ் நூல்களைத் தம் உரையிடையே சுட்டிச் சென்றுள்ளனர். முதுநாரை, முதுகுருகு போன்றவை மறைந்து போன நூல்களில் குறிப்பிடத் தக்கனவாகும். மயிலை சீனி வேங்கிடசாமி 'மறைந்து போன நூல்கள்' என்னும்நூலையே எழுதியுள்ளார். அந்நூலில் மறைந்து போன நூல்களை அவர் தொகுத்துத் தந்துள்ளார். நூல்களின் மறைவிற்குக் கடல்கோள், வேற்றுமொழி ஆட்சி என்னும் இருவகைக் காரணங்கள் முதன்மையாகக் கருதப்படுகின்றன. கடல்கோள் நிகழ்ந்தமையை இலக்கியச் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. தமிழ் மண்ணில் நிகழ்ந்த பிறமொழி ஆட்சியும் தமிழ் நூல் மறைவிற்குத் துணை புரிந்துள்ளது.

பனை ஓலை நறுக்குகளின் ஆயுட்காலம் நூறாண்டு ஆகும். தமிழ்நாட்டில் நூல்கள் ஐவகை நிலைகளில் வெளியிடப்பட்டுள்ளன.

முதல்நிலை :

தொடக்க கால நூல் வெளியீடு என்பது வாய்மொழியாக இருந்த படைப்பைப் (ஓலையில் எழுதிச் சுவடியாக்கும் முன்பே) பிறர்க்கு - மாணவர்க்கு எடுத்துரைத்தலைக் குறிக்கும். ஆயினும் அதனைப் 'பாடம் சொல்லல்' என்றே குறிப்பிடுவர். ஆசிரியரின் மனத்திலிருந்து நூல் வெளிவரும் நிலையே நூல் வெளியீட்டின் தொடக்க நிலையாகும். குறள் என்பது நூல் வடிவில் இருப்பது மட்டுமல்ல. பலரின் மனங்களின் மனப்பாடமாய்க் குறள் இருப்பின் அதுவும் நூல்தான்.

இரண்டாம் நிலை :

ஓலை, எழுத்தாணி, எழுத்து முறை முதலியவற்றின் தோற்றத்திற்குப் பின் ஓலைச் சுவடிகளில் படைப்பை எழுதினர். இதனையும் நூல் வெளியீடாகவே கருத வேண்டும். ஆசிரியர் மனத்துள் இருந்த நூலை மற்றவர் படிக்கும் பொருட்டு ஓலைச் சுவடிகளில் எழுதச் செய்துவிட்டார். மற்றவர்க்கே எழுதப்பட்டமையால் அதுவும் வெளியீடே ஆகும். தொல்காப்பிய நூல் வெளியீடு பாண்டியன் அவையில் நிகழ்ந்துள்ளது. எனவே இதுபோன்ற ஏனைய தமிழ் நூல்களும் அறிஞர் முன்னிலையில் வெளியிடப் பட்டிருக்கும் என்பது உண்மையாகும்.

மூன்றாம் நிலை:

தாள், மை முதலியவற்றின் தோற்றத்திற்குப் பின் படைப்பைத் தாளில் எழுதி மற்றவர்க்கு வெளியிடும் போக்கு நிகழ்ந்துள்ளது. ஓலைச்சுவடியைப் பார்த்துத் தாளில் எழுதியதும் உண்டு. அது வெளியீடு ஆகாது. அது படி எடுத்தலே ஆகும். இம் முதல் மூன்று வெளியீட்டு நிலைகளிலும் ஆசிரியரே வெளியிடுவோராக உள்ளமை விளங்குகின்றது. அவ்வாறே இம் மூன்று நிலைகளிலும் நூலின் ஒருபடி மட்டுமே வெளியிடப்படும்.

நான்காம் நிலை :

இந்நிலையில் நூல் வெளியீடு என்பது ஓலைச் சுவடிகளைப் பதிப்பிக்கும் செயலைக் குறிக்கும். இந்நிலையில் பதிப்பாசிரியரின் பணி முக்கியமானதாகும். பதிப்பாசிரியர் சிறந்த படிப்பாளராக இருந்தால்தான் நூலை அச்சேற்றி வெளியிட முடியும். இலக்கண அறிவு, பன்னூற் புலமை முதலியன இப்பதிப்பாளருக்குத் தேவைப்படுவனவாகும். மூலம் மட்டும் அச்சேறிய காலகட்டத்திற்குப் பின் குறிப்புரை, அரும்பதவுரை, தெளிவுரை முதலியவற்றையும் சேர்த்து அச்சேற்றும் பாங்கு பின் பற்றப்பட்டுள்ளது. முற்காலங்களில் படிப்போர் தொகை குறைவாக இருந்த காரணத்தாலும் குறைவான எண்ணிக்கையில் நூல்கள்

அச்சிடப்பட்டதாலும் நூல்களை வெளியிட்டு விற்பனை செய்வதற்கென்று தனியே பதிப்பகங்களோ, விற்பனை நிலையங்களோ ஏற்படவில்லை. இப்பணியினை அச்சகங்களே மிகுதியும் செய்து வந்தன.

முதன் முதலில் தமிழை அச்சுக்குட்படுத்தியவர் வெளிநாட்டுப்பாதிரியர் ஆவர். அவர்கள் ஓலைச் சுவடிகளில் தமிழ் எழுத்துக்களின் தோற்றம் இருந்தது போன்றே அச்சு எழுத்துக்களையும் உருவாக்கினர். அந்த அச்செழுத்துக்களைக் கொண்டே நூல்களை வெளியிட்டனர். எனவே நெட்டெழுத்து, மெய்யெழுத்து முதலியவை நூல்களில் தெளிவின்றி இருந்தன. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வீரமாமுனிவர் எழுத்துச் சீர் அமைப்பை அறிமுகப்படுத்திய பின் தமிழ் அச்சுமுறை சற்றுச் சிறப்பாக மாறியது. பழங்காலத் தமிழ் அச்சு நூல்களைப் பார்க்கும் பொழுது அவை தலைப்பேடுகளிலும் பிற பகுதிகளிலும் மெய்க்குறியீடுகள் இடப்படாமலும் நெடிற் கொம்புகள் சுழிக்கப்படாமலும் இருந்து வந்துள்ளன.

மேலும் தமிழ் நூல்களுக்கு ஆங்கிலத்திலும் தலைப்பிடும் பழக்கம் நடைமுறையில் இருந்துள்ளது. அதுமட்டுமன்றி நூலின் பெயர், நூலைச் சோதித்தவர் பெயர், பதிப்பித்தவர் பெயர், அச்சிட்டவர் பெயர், அச்சகத்தின் பெயர் ஆகியன அட்டையில் அமைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு சுவடிகளைப் பதிப்பித்தலில் முன்னோடியாகப் பலர் விளங்கினர். அவர்களுள் மிகுதியாக நூல் வெளியிட்ட முதன்மையானவர்கள் சி.வை. தாமோதரன். ஆறுமுக நாவலர், உ.வே.சா. ஆகியோர் ஆவர். இத்தகைய நூல் வெளியீடு பதிப்பு என்றே குறிக்கப்படும். அச்சுப் பதித்தல்வழி நூல் வெளியிட்டமையால் இப்பெயர் பெற்றது.

ஐந்தாம் நிலை :

நாடு விடுதலை பெற்ற பின் கல்வி நிறுவன வளர்ச்சியில் படித்த நடுத்தர மக்கள் பிரிவு உருவானது. அவர்தம் கடமைகளை - பணிகளைச் செய்தநேரம் போக எஞ்சிய ஓய்வு நேரங்களில் படிக்க வேண்டிய தேவை அவர்கட்கு ஏற்பட்டது. அதன் விளைவாக நூல்களை அச்சேற்றி வெளியிடும் போக்கு மிகத் தொடங்கியது. மேல்நாட்டுத் தாக்கத்தினால் புதினம் முதலிய புது வடிவங்கள் தோன்றத் தொடங்கின. தற்காலத்தில் நூலாசிரியர் நூலை எழுதுகிறார். அச்சகத்தார் அதனை அச்சிடுகின்றனர். வெளியீட்டாளர் அச்சிற்குரிய செலவை ஏற்றுக் கொள்கின்றனர். அவ்வாறே தயாரான நூல்களைத் தம் நிறுவன வழியாகவோ, வேறு நூல் வெளியீட்டகத்தின் வழியாகவோ, பிற விற்பனை நிலையங்களின் வழியாகவோ படிப்பவர்களுக்கும் நூலக ஆணைக்குழு போன்றவற்றிற்கும் நூல் விற்பனையை வெளியீட்டாளர்கள் நிகழ்த்துகின்றனர்.

நூல் எழுதக்காரணங்கள் :

நூல் எழுதுவதற்குத் துணைபுரியும் காரணங்கள் சிலவற்றைப் பின்வருமாறு சுட்டலாம் :

1) தன் உணர்ச்சியை வெளியிடும் விருப்பம்.
2) பிறருடையை வாழ்விலும் செயலிலும் காட்டும் அக்கறை.
3) உண்மை உலகில் உள்ள ஆர்வம், கற்பனை உலகினைப் படைக்கும் ஆர்வம்.
4) ஒலி, சொல், கோடு, வண்ணம் முதலியவற்றிற்கு அழகிய வடிவம் தந்து அமைப்பதில் உள்ள ஆசை என்னும் நால்வகைக் காரணங்களை வின்செஸ்டர் என்னும் மேலைட்டு அறிஞர் நூல் எழுதுவதற்கு உரியனவாகக் காட்டுகின்றார். மேலும் சில காரணங்களைப் பின்வருமாறு காட்டலாம் :

1) தன் மன உளைச்சல்களை விலக்கிக் கொள்ளும் விருப்பம்.
2) தன் சிந்தனைகளை மற்றவர்கட்குத் தெரிவிக்கும் ஆர்வம்.
3) தன் எழுத்து வெளியீட்டால் போற்றுதலும் புகழும் கிடைக்கும் சூழல்.
4) தன் கருத்துக்கள் படிப்பவரை மகிழ்விக்கவும் தன் கருத்துக்களைப் பயன்படுத்தவும் விரும்புதல்.
5) தன் எழுத்து சமூகத்தின் அறியாமையையும் சீர்கேடுகளையும் நீக்குவதில் உள்ள ஆர்வம்.
6) தன் உறவினர், நண்பர், உடன் பணி செய்வோர், அதிகாரி முதலியோரிடம் நூலாசிரியராக வெளிப்படுத்திக் கொண்டு அதன் வழிப் பாராட்டைப் பெற நினைத்தல்.
7) சமூக மதிப்பு எய்த விரும்புதல்.
8) கருத்து அதிகாரத்தைக் காட்ட நினைத்தல்.
9) வேலை வாய்ப்புக்களில் முன்னுரிமை பெற விழைதல்.
10) தன் மறைவிற்குப் பிறகும் மக்கள் நினைவில் வாழ நினைத்தல்.
11) நிறைவான வருவாய் பெறக் கருதுதல்.
12) பரிசு பெற ஆர்வப்படுதல்.

மேற்சுட்டப்பட்ட காரணங்கள் அனைத்தும் நூல் எழுத்தக்க காரணங்களாக அமைகின்றன.

அவ்வகையில் தம் சிந்தனையைக் கட்டுரை, கதை, கவிதை, நாடகம் ஏதேனும் ஒரு வடிவத்தில் எழுதி வெளிக்கொணர்கின்றனர். இவர்களில் எழுதுவோரே வெளியீட்டாளராகவும் இருப்பர்.

நூல்களின் வகைகளைக் கீழ்வருமாறு பகுக்கலாம்.

1) தகவல் தருபவை
2) புத்துமிர் தருபவை
3) உயிர்ப்புத் தருபவை

நூலக இயலாரின் கருத்துப்படி நூலை ஐவகையாகப் பிரிக்கலாம். அவை :

1) கருமூலம்

2) ஆய்வுப்பொருள்
3) விளக்கம்
4) தொடக்கநிலை
5) அறிக்கை நிலை

பொதுவாக நூல்கள் வாழ்க்கைக்குரியன, பொழுதுபோக்குக்கு உரியன என இருவகைப்படும். இலக்கியம், இலக்கணம், சமயம், வரலாறு, புதினம், நாடகம், திறனாய்வு, அறிவியல் கலைகள், விளையாட்டு, சமூகஇயல், மொழியியல், நாட்டுப்புற இயல், புதுக்கவிதை இயல், பொருளியல், வணிக இயல், தொழில் நுட்ப இயல், வேளாண்மை என்று பொருள் உள்ளீடு நிலையில் நூல்கள் பலவகைப்படும். அமைப்பு நிலையில் நூல்கள் தனிநூல், தொகுப்பு நூல் என இருவகைப்படும்.

நெடுநல்வாடை, ஆய்வேடு, புதினம் போல்வன தனி நூல்களாகும். புறநானூறு, சிறுகதைத் தொகுப்பு, ஆய்வுக்கோவை போல்வனதொகுப்பு நூல்களாகும்.

நூல்களின் குறைபாடு :

மக்கள் மனத்தைப் பாழ்செய்யும், பண்பாட்டைச் சிதைக்கும் தரமற்ற மோசமான நூல்களும் வெளிவராமல் இருப்பதில்லை. மது உண்டு, வெறி கொண்ட குரங்கு ஒன்றினைப் பேயும் பிடித்து அலைப்பதைப் போல் ஏற்கனவே அறியாமையில் நலிவுற்ற மக்களைப் பாழ்படுத்துதலையே குறிக்கோளாகக் கொண்ட தொன்னூறு விழுக்காடு நூல்கள் தரக்குறைவாய் வெளிவருகின்றன. அறிவு வளர்ச்சிக்கு அவை பயன்படுவதாய் இல்லை. குறைபாடு உடையனவாய் வெளிவரும் நூல்களுள் கதை நூல்களே மிகுதியாகும்.

நூல் ஈடுபாட்டில் அன்றும் இன்றும் :

முற்கால நூல்கள் அகம், புறம் என இருவகையானவாகும் அவற்றுள் அகப்பொருள் நூல்களே மிகுதியாகக் (72%) கற்கப்பட்டன. தற்காலத்திலும் அகப்பொருள் தொடர்பான கதை நூல்கள் மிகுதியாகப் (45%) பயிலப்படுகின்றன. பொதுவாக நம் நாட்டில் நூல் படிப்போரின் எண்ணிக்கை குறைவாய் உள்ளது. ஆண்டிற்கு 2000 பக்கங்கள் படிப்பவர்கள் உயிரோட்டமும் விழிப்பும் கொண்ட குடிமக்கள் வாழும் ஐக்கிய நாட்டினர் ஆவர். ஆனால் இந்தியாவில் ஆண்டிற்குச் சராசரியாக ஒரு படிப்பாளி படிக்கும் பக்கங்கள் 32 ஆகும். தமிழர் படிக்கும் பக்கங்கள் இவற்றை விட மிகக் குறைவானதாகும். நகரத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட திரையரங்குகள் பன்னிரெண்டு மணிநேரம் இடைவெளியின்றி இயங்குகின்றன. நகர மைய நூலகம் தவிர ஏனைய நூலகங்கள் பகுதிநேரமாக இயங்குகின்றன. கல்வி அறிவில் மிகப்பின் தங்கிய பெற்றோர்களும் மக்கள் தொகைப் பெருக்கமுமே

நூற்படிப்பை மிகக்குறையச் செய்து உள்ளன. நூல்களை மட்டும் படிப்போர் 12% ஆவர். இதழ்களைப் படிப்போர் 35% ஆவர். நூலைத் தம் சொந்தப் பணத்திலிருந்து வாங்கிப் படிப்ப்வர்களை விட இரவல் வாங்கிப் படிப்போரே மிகுதியாக உள்ளனர்.

நூல் வெளியீட்டில் முதலிடம் பெறுவன கதைகளாகும் (45%). அடுத்த இடம் பெறுவன சிறுவர் நூல்கள், சமய நூல்கள், அறிவியல் நூல்கள், ஆய்வு நூல்களாகும் (30%). நுண்கலை நூல்கள், வாழ்க்கை வரலாற்று நூல்கள், பயண நூல்கள் மூன்றாம் இடம் பெறுகின்றன (15%). கவிதை, சமூக இயல் முதலிய பிறதுறை நூல்கள் நான்காவது இடம் பெறுகின்றன (0.8%). கதை நூல்கள் படிப்பவர்களே மிகுதியாக உள்ளனர். சிறுவயது முதல் கதைகேட்கும் பழக்கம், நிகழ்காலத் துன்பத்தை மறக்கச் செய்யும் இயல்பு, வேகமாகப் படிக்கக்கூடிய எளிமைத் தன்மை ஆகியன கதை நூல் படிப்போரின் எண்ணிக்கையை மிகுதியாக்கி உள்ளன. கேரளாவில் எழுத்தறிவு பெற்றோர் 90% ஆவர். மலையாள நாளிதழான மனோரமாவின் நாள் விற்பனை 97 இலட்சத்து 85 ஆயிரம் ஆகும். தமிழ்நாட்டில் எழுத்தறிவு பெற்றோர் 63% ஆவர். தமிழ் நாளிதழான தினத்தந்தியின் நாள் விற்பனை 97 இலட்சத்து 31 ஆயிரம் ஆகும். கேரளாவில் இயங்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் 5 இலக்கம் ஆகும். தமிழ்நாட்டிலோ இயங்கும் தொலைக்காட்டிசிப் பெட்டிகள் 17 இலக்கம் ஆகும். அறிவு நிலையில் தமிழ்நாடு கேரளாவைப் பின்பற்றினால் தமிழ்நாட்டின் அறியாமைக் கேடுகளெல்லாம் விரைவில் அகலும்.

நூல்களின் தேவைகள் :

1) சமுதாய வளர்ச்சிக்குப் பயன்படும்.
2) வாழ்க்கை நிலை உயர்விற்குத் துணை செய்யும்.
3) நூல்களைப் படித்தபின் நூலின் தரம்பற்றிய தம் கருத்துக்களைத் தொடர்புடைய ஆசிரியர்களுக்கு, வெளிமீட்டாளர்களுக்கு எடுத்துரைக்கலாம்.
4) நூல்கள் தரக்குறைவாக இருக்குமாயின் இடித்து உரைத்து அதனைச் சுட்டலாம்.
5) தரமான நூல்களைப் பாராட்டி மகிழலாம்.

நூல்களின் சிறப்புக்கள் :

1) நம்பகமான தகவல் சாதனமாகச் செயல்படுகின்றது.
2) உலகமாந்தர் மனத்துடன் பேசும் வாய்ப்பினை உருவாக்குகின்றது.
3) உலக அறிவு வளர்ச்சிக்குத் துணை செய்கின்றது.
4) வாழ்க்கை என்ற மரத்தின் பல்வேறு கிளைகளைச் செழித்து வளரச்செய்கின்றது.

5) தொழில்துறை முன்னேற்றம், பண்பாட்டுச் சிறப்புக்கள் போன்றவற்றை அறிய வாய்ப்பினை வழங்குகின்றது.
6) நூலாசிரியரின் மனத்தை வெளிப்படுத்தும் களமாக அமைந்துள்ளது.
7) படைப்பிலேயே சிறந்த படைப்பு நூற்படைப்பே.

மற்றைப் படைப்பு நீண்டகாலம் நிலைப்பதில்லை. வரலாற்றுச் சின்னங்கள் அழியலாம். நாடுகள் அழியலாம். நாடுகள் போற்றிய நாகரிகம் அழியலாம்.. நூல்கள் என்றும் காலத்தால் அழியா வரம் பெற்றன ஆகும்.

" புத்தகங்கள் தரும் உதவி பெரிது ! மிகப்பெரிது கண்ணீர் !
மனிதரெல்லாம் அன்பு நெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப் போல் விரிவடைந்து
தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கிச்
சக மக்கள் ஒன்றென்பது உணர்வதற்கும்
இனிது இனிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை "

என்று பாரதிதாசன் சுட்டியுள்ளவாறு அன்பு நெறி உலவுவதற்கும் வானைப்போல் நம் மனநிலை விரிவடைவதற்கும் மக்களின் சமநிலைப்பாட்டை உணர்வதற்கும் உயர் எண்ணமெல்லாவற்றையும் உரிமைப்படுத்துவதற்கும் துணை புரியும் நூல்களை வாங்குவீர்களாக ! அவற்றை மனம் என்னும் பாத்தியில் பதியம் போடுவீர்களாக!

14 எங்கும் புதுமை! எதிலும் புதுமை!

மாயமான்வேட்டை :

பழையது செத்த பிணம். புதியது இப்பொழுது பிறந்த பச்சிளங்குழந்தை. பழமை சாவிற்கு வழி. புதுமை வாழ்வுக்கு வழி. பழமை உலகத்தினை எங்கே கொண்டுபோய் விட்டிருக்கின்றது? இதற்கு அறிவு ஆராய்ச்சி வேண்டாம். வயிறு பசி, பசி என்கிறது. உடம்பு வாடி, வதங்கி, நோய், நோய் என்று கதறுகின்றது. மனம் அமைதியின்றி அலைகின்றது. மனிதனை மனிதன் பிடுங்கி உண்ணும் பேயாட்டம், ஏமாற்றம், வஞ்சகம், மங்கம்மாள் சந்தை ஆகிய கொடுமைகளும் வெற்றி, வீறு, செல்வம், நாகரிகம் என்ற பெரிய பெரிய பெயர்களைத் தாங்கி நாட்டில் நடமாடுகின்றன. அடிமைத் தன்மை, போர், பட்டினி, அறியாமை என்ற இவற்றினை எல்லாம் ஆரவார வெளிப்பகட்டிற்குள் மறைக்க முயல்வதனைப் பண்பாடு எனச் சிலர் பாராட்டித் தம்மையும் பிறரையும் மயக்குகின்றனர். மனிதனை மனிதனாகப் பார்க்கும் கண் குருடாகிவிட்டது. அவனும் தன்னை மறைத்துக் கொண்டு கிடக்கும் தோல்சட்டை, ஒலி முதலியவற்றையே மனிதன் என்று நம்புகின்றான். அந்த மாயமான் பின் சென்று ஏமாற்றம் அடைந்து உண்மைச் சீதையை அவன் பறிகொடுக்கிறான்.

மீன் போலக் கடலினையெல்லாம் மறித்து வைத்து ஆண்டாலும் மீனாகலாமே தவிர மனிதனாகி விட முடியாது. பறவையைப் போல் காற்றில் பறந்து வானமெல்லாம் கட்டி வைத்து ஆண்டாலும் பறவையாகலாமே தவிர மனிதனாகி விட முடியாது. எந்திரங்களை எல்லாம் புதிது புதிதாகப் படைத்து ஒட்டினாலும் எந்திரமாகலாமே தவிர மனிதனாக முடியாது. வயிறே வாயாகி உண்டு களித்தால் கவந்தனாகலாம். உண்பதும் உறங்குவதுமே இன்பம் என்றால் கும்பகர்ணன் ஆகலாம். இயற்கையை வெல்லும் மாயம் வந்தாலும் இந்திரசித்தாகலாமே அன்றி மனிதனாக முடியாது.

வித்தும் செடியும் :

பழமையெல்லாம் செத்த பிணமா? நமக்கு மிக மிகப் பழைய பாட்டனான கதிரவன் செத்த பிணமா? அல்ல. புதியன எல்லாம் உயிரா? புதிய குழந்தையும் செத்துப் பிறக்குமே. உறங்கும் வழக்கம் எவ்வளவு பழையது? உண்ணும் வழக்கம் எவ்வளவு பழமையானது? மண்வீட்டைச் சாணியிட்டு மெழுகுவது பொருளுள்ள வழக்கமாகும். தாசுமகானைச் சாணியிட்டு மெழுகச் சொல்வது பொருளற்ற வழக்கம் ஆகும். பழமை, புதுமை என்று பிரித்துப் பேசிப் பயனில்லை. பொருளுண்டா?

இல்லையா? உயிர் உண்டா? இல்லையா? என்றுதான் பார்த்தல் வேண்டும். புதியது என்று எதுவுமில்லை. பழையதே புதுமை பெறுகிறது. வித்தின்றேல் செடியில்லை. பழமையின்றேல் புதுமையில்லை. இனி , சொல்லில் புதுமை, செயலில் புதுமை, நோக்கில் புதுமை, சூழலில் புதுமை என்பன பற்றிச் சிந்திப்போம். இவற்றைச் சிந்திப்பதற்கு முன் இலக்கியம் காட்டும் புதுமை சிலவற்றைக் காண்போம்.

வள்ளுவப் புதுமை :

" நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள் "

எனப் பெண்ணிடம் பொருந்தியுள்ள புதுமைத் தீயை வள்ளுவர் அறிமுகம் செய்கின்றார்.

முத்தொள்ளாயிரப் புதுமை :

" அள்ளற் பழனத் தரக்காம்பல் வாய்அவிழ
வெள்ளந்தீப் பட்ட தெனவெரீஇப் - புள்ளினந்தான்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்குங் கவ்வை உடைத்தரோ "

என முத்தொள்ளாயிர ஆசிரியர் நீர்ப்பரப்பில் மிதக்கும் நெருப்புத் துண்டங்களைப் புதுமையாக அடையாளம் காட்டுகின்றார்.

கம்பன் புதுமை :

" நதியினும் குளத்தும் பூவா நளினங்கள் குவளை யோடு
மதிநுதல் வல்லி பூப்ப நோக்கிய மழலைத் தும்பி
அதிசயம் எய்திப் புக்கு வீழ்ந்தன ; அலைக்கப் போகா
புதியன கண்ட போழ்து விடுவரோ புதுமை பார்ப்பார் "

எனக் கம்பர் பெண்ணாகிய பூந்தடாகத்தில் முகமாகிய தாமரையும் விழியாகிய குவளையும் ஒரு சேரப் பூத்திருக்கும் புதுமை கண்ட வண்டு அப்பெண்ணை விட்டுஅகலாமல் அவளையே சுற்றிச் சுற்றி வருவதாகிய புதுமையைப் படைத்துள்ளார்.

பாரதி புதுமை :

" புதியன விரும்பு " - எனப் பாரதி

தான் பாடிய ஆத்திசூடியில் புதியனவற்றை விரும்பும் தன்மை ஒவ்வொருவரிடத்திலும் இருக்க வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளான்.

" இன்றுபுதி தாய்ப் பிறந்தோம் என்று நெஞ்சில்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு
தின்றுவிளை யாடியின்புற் றிருந்து வாழ்வீர் "
எனப் பாரதி செயற்புதுமை காட்டுகின்றான்.

சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொற்புதிது என அவன் கவிதைக்குப் புதுமை சேர்த்துள்ளான்.

பாரதிதாசன் புதுமை :

" பழமை அனைத்தையும் பற்றுக என்றும்
புதுமை அனைத்தையும் புதைப்பீர் என்றும்
இன்றைய தேவையை எழுதேல் என்றும்
முன்னாள் நிலையிலே முட்டுக என்றும்
வழக்கா றொழிந்ததை வைத்து எழுதித்தான்
பிழைக்கும் நிலைமை பெறலாம் என்றும்
புதுச்சொல், புதுநடை போற்றேல் என்றும்
நந்தமிழ்ப் புலவர் நவின்றனர் நாளும் ! "

என்ற வரிகளில் முடைநாற்றம் வீசும் பழம் புலவனின் மூடப்பழக்கத்தைப் பாரதிதாசன் வெளிப்படுத்தியுள்ளார்.

" சித்தம் சலியாத் திறன் வேண்டும்
மக்கள் உழைப்பில் மலையாத நம்பிக்கை
எக்களிக்க வேண்டும் இதயத்தில் ஈதன்றி
நல்லறிவை நாளும் உயர்த்தி உயர்த்தியே
புல்லறிவைப் போக்கிப் புதுநிலை தேடல் வேண்டும் என்றும் "

" புதியதோர் உலகம் செய்வோம் " என்றும்

" அந்நாளின் இலக்கியத்தை ஆய்தல் ஒன்றே
அரும்புலமை எனும்மடமை அகன்ற திங்கே
இந்நாளில் பழம்தமிழில் புதுமை ஏற்றி
எழுத்து எழுத்துக்கு இனிப்பு ஏற்றுவோம் "

என்றும்

" தின்றதையே தின்று தெவிட்டுதல் இல்லாமல் வாழ்வில்
அன்றன்று புதுமை காண்போம் என்றும் "

புதுமையின் சிறப்புப் பற்றியும் அதன் இன்றியமையாமை பற்றியும் பாரதிதாசன் எடுத்தியம்புகின்றார்.

சொல்லில் புதுமை :

செய்தி,விளம்பரம், சிறுகதை, புதினம் இவற்றில் சொல்தோறும் நின்று படிப்பதில்லை; படிக்க வேண்டுவதுமில்லை ; திரண்ட கருத்துக்களைக் கண்டால் போதும். 'இறந்த காலத்தின் இறவா வரம் பெற்ற சம்பவங்கள் வாயிலிருந்து வெளிப்பட்ட வெண்புகையைச் சமந்திரக் கோடுகளாகவும் சுருள் சுருளாகவும் காற்றிலே மிதக்கவிட' எனச் செல்லும் சிறுகதை, 'மின்னொளியின் தண்ணொளியால் கண்விழிகள் பறிக்கப்பட்டுக் கதறுகின்றான்; ஆற்றொணாத் துயரடைகின்றான் - விடை வெண்திரையில் விளக்கம் ' என வரும் திரைக்கதைச் சுருக்கம் ஆகியவற்றையெல்லாம் கூர்ந்து நோக்குவதில்லை. ஆனால் இலக்கியத்தில் பொருள் விளங்காத அருஞ்சொற்கள் வரக்கண்டு மேலோடாது நிற்கிறோம். பாரதி பாடிய ஆத்திசூடியில்,

" ஞமலிபோல் வாழேல்
ஞிமிறென இன்புறு
ஞெயம் காத்தல் செய் " எனப்

பாப்பாப் பாட்டிலேயே புதிய சொற்கள் பலவற்றை இடம்பெறச் செய்துள்ளான். இளமைஇதயத்தில்தான் எதுவும் எளிதில் பதியும் எனவுணர்ந்தே புதிய சொற்களின் களமாக ஆத்தி சூடியைப் பாரதி பயன்படுத்தியுள்ளான். தமிழ்மொழியில் இயல்பாகப் பேசிவரும் வாய்ச்சொற்களை வ.சுப. மாணிக்கம் கீழ்வருமாறு ஆராய்ந்து கூறியுள்ளார்.

(1) வளி - இஃது ஓர் அருஞ்சொல். ஆனால் வழக்கில் சூறாவளி என்கிறோம் .

(2) பொறி - இஃதும் ஓர் அருஞ்சொல்லே. வழக்கில் எலிப்பொறி, பொறி கெட்டவன் என்று பயன்படுத்துகின்றோம்.

(3) பா - பரந்துபட்டுச் செல்லும் ஒசை. பா - பரப்பு, பாவாடை என வழக்கில் இருப்பதை உணர்கிறோம்.

(4) மாடு - கால்மாடு, தலைமாடு, மாடல்ல என்பன வழக்கில் உள்ளன.

(5) முல்லை - இயல்புநிலை அல்லது தன்னிலை மாறியவன் முல்லை மாறியாவான். முல்லைமாறி என்பதுதான் மொல்லை மாறியாக மருவியுள்ளது.

நண்பி, இளைஞி, திறனி, கற்பி, உறுப்பி, குழமை, சொற்பொழிந்தேன், வானொலிக்கின்றேன், பழமொழிகின்றோம், நன்றியன் எனப்படும் புதிய சொற்களின் ஆட்சியை மாணிக்கனார் அமைத்துத் தந்துள்ளார். பழமைச் சொற்கள் பற்றிய கவிஞர் வைரமுத்துவின் வைரவரிகள் எண்ணுதற்குரியன.

" ஒரே கல்லில் துவைத்து துவைத்துச்
சாயம் போயின வார்த்தையின் நிறங்கள்
இனி ஒவ்வொரு சொல்லையும்
ஒட்டடை தட்டுவோம்
இனிமேல் வார்த்தைகளை
இடம் மாற்றிப் போடுவோம் ".

இடம் மாற்றப்பட்ட சொற்களாக வைரமுத்து கீழ்வருவனவற்றைக் காட்டுகின்றார்.

(1) ம்ரித்தான் - வாழ்வை வென்றான்.
(2) தோல்வி - விலகிநிற்கும் வெற்றி.
(3) எதிரி - தூரத்து நண்பன்.
(4) சதிபதியின் சண்டை - முரட்டு அன்பு.
(5) இலைகள் கழிந்த கிளைகள் - அடுத்த வசந்த ஆரம்பம்.
(6) நோயில் நொந்த தேகம் - உடம்பே கொள்ளும் ஓய்வு.
(7) வெள்ளைச் சட்டையில் மைத்துளி - மையைச் சுற்றிலும் வெள்ளை.
(8) நிலவைத் தொலைத்த வானம் - விண்மீன் முளைத்த விண்வெளி.

" பழைய வார்த்தைகளைப் பறித்துப் பறித்துப்
புதிய நிலத்தில் பதியன் போடுவோம்
புளித்த வார்த்தைகள் மாறும்போது
சலித்த வாழ்க்கையும்
சட்டென்று மாறும்" .

என்பது சொற்புதுமை பற்றிய கவிஞர் வைரமுத்துவின் அழுத்தமான கருத்தாகும்.

பொருள் புதுமை :

அழகுணர்ச்சி, சமுதாயநடப்பு, உளவியல், சிக்கல், மார்க்சிய இலெனின் கண்ணோட்டம் போல்வன இன்றைய எழுத்துக்களில் காணப்படுகின்ற பொருள் புதுமைகளாகும்.

" கோடி மணி ஆசனமே
குடியாய்நான் இருப்பதில்லை
பாடுபடும் கரங்களிலே
பாக்கு வெற்றிலை ஆவேன்
நாற்றுநடும் ராமாயி
நாவிலொரு தேனாவேன்
ஏற்றம்தொடும் மாசாணி
தோளிலொரு கிளியாவேன்
சாலைகளில் மாட்டுவண்டிச்
சலங்கையிலே கொஞ்சிநிற்பேன்
காலத்தை மிதிக்குமவர்
கண்வீச்சைக் கெஞ்சிநிற்பேன்
களையெடுக்கும் கூந்தலிலே
காற்றுவந்து கதையுரைக்க
விளையுமந்த பறைச்சிறுமி
தெம்மாங்காய் விம்மிநிற்பேன்
உப்பரிகைக் காற்றெதிரே
உழைப்பாளி பெருமூச்சை
செப்புமொரு படைக்கலனாய்ச்
செப்பனிடும் நெருப்பாவேன்
மனக்கதவு தட்டி
மாணிக்கம் கொட்டுகின்ற
எனக்கு வயதாவதில்லை
என்றும் இளையவள்நான் "

என்று கவிஞர் சிற்பி கவிதைப் பாடுபொருளின் புதுமைபற்றிப் பாடுகின்றார். பாட்டாளி, நாற்று நடுபவள், ஏற்றம் இறைப்போர், வண்டியோட்டி, களை எடுப்போர், உழைப்பாளி ஆகியோரின் வாழ்க்கை அவலங்கள் புதுமைப் பொலிவுடன் கவிதைப்பொருளாக வேண்டுமென்பது சிற்பியின் அவாவாகும்.

" நேரே நில் - நிமிர்ந்து பார்
நெஞ்சில் பட்டதை வளமாய்ச் சொல்
இதுதான் எழுத்தின்
மங்கல சூத்திரம்
கருத்தடை கூட நடைமுறையாச்சு
கருத்துக்களுக்கோ தடைகள் இல்லை.

பொறுப்புக்கள் இன்றிப்
பிறப்பெடுக்கின்றன,
சிலரது எழுத்துக்கள்
திருதிராஷ்டிரப் பிறவிக் குருடாய்
இருப்பதைக் கூடப் பொறுக்கமுடியும்
ஆனால் அவை
சமுதாயத்தின் பீம பலத்தை நொறுக்கப்
போலித் தழுவல் வேடம் பூண்டால்?
வெள்ளி மூக்குக் குதிரை
பஞ்சகல்யாணியாய் ஊர்வலம் வரட்டும்
ஆனால் சங்கீதம் என்பிறப்புரிமை எனச்
சண்டிகள் சொல்ல முற்பட்டால்?
சூரிய மையத்தில் வெப்பம் எடுத்து
ஆர்டிக் மடியை உருக்கும்
நெருப்பு எழுத்துக்கள் நமக்கு வேண்டும்
அந்த நெருப்பு
நம் வீட்டு அடுப்பங்கரையில்
சோறு சமைக்கும்
அமுத விரல்களில் அடங்கவும் வேண்டும்
எழுத்து ஒரு தவம்
வரங்கள் பெறுவதற்காக அல்ல
சிருட்டிக் கனலை
கால பரிணாமங்களுக்கேற்ப வளர்த்துச்
சொர்க்கங்கள் படைக்க "

என்ற வரிகளில் சிற்பி பொறுப்புக்கள் இன்றிப் பிறக்கும் எழுத்துக்களைச் சாடுகின்றார். படைப்புக்களைக் காலப்பரிணாமங்களுக்கு ஏற்பப் புதுமைக் கோலத்தில் வார்த்தெடுக்க அவர் வேண்டுகிறார்.

"கருப்பை இல்லாமல்
கண நேரத்தில்
கச்சிதமாய்
கதிரொளியின்
கருணையால்
வானத்தாய்க்கும்
முகில் மழைத்
தகப்பனுக்கும்

நீர்த்துளித்
தொட்டிலிலே
தவறிப்பிறந்த
எழுகால் குழந்தை "

என வானவில்லைப் புதுமைக் கற்பனையில் வண்ண ஒளி வீச்சில் கவிஞர் படைத்துள்ளார்.

செயல் புதுமை :

ஒட்டப்பந்தயம் வெல்ல நினைத்தால் பந்தயத்தில் முதலில் கலந்து கொள்ள வேண்டும். 'நன்றும் தீமையும் பிறர் தரவாரா, முன்பெல்லாம் எல்லாம் நம் தலையில் எழுதப்பட்டுள்ளது. நம் தலையெழுத்தும் அப்படித்தான்' எனச் சொல்லினர். நாம் வாழும் காலத்தில் புதிய ஒளி பிறக்கச் செய்ய வேண்டும். நம் வாழ்க்கையை நாமே உருவாக்க வேண்டும். நம் விதியை நாமே தீர்மானிக்க வேண்டும். நம் தலையெழுத்தை மாற்றப் புதிய முறையில் செயலாற்ற வேண்டும். நம்மிடம் சிறந்த இரண்டு கால்கள் உள்ளன. அதற்கு மேலாக எதையும் சாதிக்கும் மனம் நம்மிடமே உள்ளது.

புராணம் சுட்டும் இறைவர் ஒவ்வொருவரும் தத்தம் இயல்பிற்கு ஏற்பப்புத்தம் புதிய செயலில் ஈடுபடுமாறு கவிஞர் வைரமுத்து அவர்கட்கு வேண்டுகோள் விடுத்தமை புதுமையானதாகும்.

" ஓ விநாயகா !
உன்
இன்னொரு தந்தத்தையும்
இரண்டாய் உடைத்து
இந்தியர் எல்லார்க்கும்
எழுத்தறிவித்தால் . . . . . "

என விநாயகரின் தந்தம் எழுத்தறிவிக்க வேண்டும்.

" ஹரே கிருஷ்ணா !
வான் கிழிந்து தலையில்விழும்
மழை மாதத்தில்
கூன் விழுந்த குடிசைக்கெல்லாம்
உன் கோவர்த்தனகிரி குடை பிடித்தால் . . . . . "

கிருட்டிணன் கோவர்த்தன கிரி பிடித்து ஏழைக் குடிசையைக் காப்பாற்ற வேண்டும்.

" ஓம் முருகா !
சூரனை எறிந்த உன்
சுத்த வேல்
ஊழல் பூதத்தின்
உயிர்தடவி முடித்தால் . . . . "

முருகனின் சுத்தவேல் ஊழல் பூதத்தின் உயிர் குடிக்க வேண்டும்.

" அம்மா ஆண்டாள்!
முப்பத்தைந்து வயது
முதிர் கன்னியர்க்கெல்லாம்
நீ மாப்பிள்ளை அடைந்த
மகத்துவம் சொன்னால் . . . "

ஆண்டாள் மணமாலை பெற முடியாமல் மனமுடைந்து உருகும் மகளிர்க்கெல்லாம் இல்லற வாழ்க்கை அமைய வழி காட்ட வேண்டுமாம்.

" சாமி திருநீலகண்டா !
பூமியை விழுங்ஞானம்
கடைந்தபொழுது
எந்திரம் துப்பிய விஷத்தையெல்லாம்
அடுத்தொரு மிடறு
அள்ளிக் குடித்தால் . . . . "

நீலகண்டனின் மற்றுமொரு மிடறு பொறிகள் வழி வெளியாகும் நஞ்சையெல்லாம் உட்கொள்ள வேண்டும்.

" நமோ நாராயணா !
பணமுதலை வாய்ப்பட்ட
பாமர சமூகத்துக்கு
மீட்சி தந்து நீமோட்சித்தால் "

நாராயணன் பணக்காரன் எனும் முதலை வாய்ப்பட்டுள்ள பாமர சமூகத்தை மீட்கத் துணை புரிய வேண்டும்.

" அய்யா முக்கண்ணா !
தாம் பிழைக்கும்
தமிழுக்குத்

தாமே பிழை செய்யும்
தமிழரெல்லாம
இனிமேலும் எழாதபடிக்கு
உன்
நெற்றிக்கண் நெருப்பால்
சுட்டுத் தீர்த்தால் . . . . "

முக்கண்ணன் தமிழுக்குப் பிழை செய்யும் தரமற்ற தமிழரைத தன் நெருப்பால் சுட்டுத் தீர்க்க வேண்டும்.

" ஹே ராம் !
மிதிலைச் சிறையில்
மீளாதிருக்கும்
மைதிலிகளை நீ
மீட்டு முடித்தால் . . . . . "

இராமன் ஆடவர் பிடியில் கிடந்துழலும் பெண்டிர்க்கு விடுதலை தர வேண்டும்.

" ஹே கங்காதரா !
மரணத்தை
அடைகாக்கும்
அணு ஆயுதங்களை
உன்
ஆகாய கங்கை
அணைத்து முடித்தால் . . . . "

கங்காதரன் தன் ஆகாய கங்கைகொண்டு அணு ஆயுதங்களை அழிக்க வேண்டும்.

" ஓ ! ஆஞ்சநேயா !
மன்மத அஸ்திரத்தில் மயங்கிப்போன
எய்ட்ஸ் நோயாளர் எல்லாருக்கும்
முழுக்குணம் காட்டும் மூலிகை தேடி
ஏதேனும் ஒரு மலை ஏந்திவந்தால் . . . . "

ஆஞ்சநேயர் உயிர்க்கொல்லி நோயான எய்ட்ஸைப் போக்க வல்ல மூலிகை மலை கொண்டு வரவேண்டும்.

" தாயே மாகாளி !
சூழும் சுய நலமெனும்
பாழும் அரக்கனை உன்
திரிசூலம் கொண்டு
தீர்த்து முடித்தால்
நான் கூடக்கோவிலுக்குப் போவேன்"

காளியின் திரிசூலம் தன்னல அரக்கனின் கொடுமையைத் தகர்க்க வேண்டுமாம். கவிஞரின் வேண்டுகோள் அனைத்திலும் புதுமை பொங்கித் ததும்பி வழிகின்றது.

புதியநோக்கு :

தமிழ்நாடு என்பது நம் தாயகத்தின் பெயர். நாட்டின் பெயரே ' தமிழை நாடுக' என்று மொழிப்பற்றையும் குழைத்து ஊட்டுகின்றது : ' தமிழைப்படி ' என்று ஏவலும் செய்கின்றது. ஒன்றை அல்லது ஒருவரைப் பார்ப்பது வேறு; காண்பது வேறு; நோக்குவது வேறாகும். நோக்குதல் என்பதன் பொருள் திட்ப நுட்பமானது. நோக்கு என்பது மேலோட்டமான பார்வையன்று. அழுந்திக் காணும் அகக்காட்சி அதுவாகும். 'பிறர்மனை நோக்காத பேராண்மை' என்ற குறள் பகுதியில் இப்பொருளின் உண்மை அறிக. இயல்பான கண் பார்வை பிழையன்று. நோக்கல்தான் பிழையாகும்.

' கண்ணொடு கண்ணினை நோக்கு ஒக்கின் ' என்பார் வள்ளுவர்.
' நோக்கரிய நோக்கே ' என்பார் மணிவாசகர்.
' அண்ணலும் நோக்கினான் ; அவளும் நோக்கினாள்' என்பான் கம்பன்.

" கைக்கை குருவி எங்கள் சாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்க நோக்கக் களியாட்டம் "

என்று பாடுகிறான் பாரதி.

பாட்டு ஒன்றில் நோக்கரிய நோக்கு :

" கரும்பே தேனே யமிர்தே காமர் மணியாழே
அரும்பார் மலர்மே லணங்கே மழலை யன்னம்மே
சுரும்பார் சோலை மயிலே குயிலே சுடர்வீசும்
பெரும்பூண் மன்னன் பாவாய் பூவாய் பிணைமானே "

இப்பாடல் சிந்தாமணியில் இலக்கணையாரிலம்பகத்தில் இடம் பெற்றுள்ளது. உரையாசிரியரின் ஆழ்ந்த நோக்கால் இப்பாடலில் பொதிந்து கிடக்கும் அரும் பொருளை அறிய முடிகின்றது. பின்வருவதுஉரையாசிரியரின் ஆழ்ந்த நோக்கில் பிறந்த உரையாகும்.

" கணவர்க்கு மெய்ம் முழுவ்தும் இனிமை - எனவே கரும்பு
நல்லார் உறுப்பெல்லாம் கொண்டு இயற்றல் - எனவே தேன்
மிக்க சுவையும் உறுதியும் கொடுத்தல் - எனவே அமிழ்து
காம வேட்கையை விளைவிக்கும் இனிய பண் - எனவே யாழ்
கணவர்க்குச் செல்வத்தைக் கொடுத்தல் - எனவே திரு
நடையால் அன்னம். சாயலால் மயில், கேட்போர்க்குக் குயில்,
மன்னனின் கண்மணிப் பாவை - இன்பம் செய்தல் -
கொல்லிப் பாவை அல்லள்
தோழியர் கற்பித்த கட்டளையைத் தப்பாமல் கூறுதல் -
எனவே பூவை. நோக்கத்தால் மான் ".

சூழல் புதுமை :

" புதுமைகொள் தமிழா
புழுதி கழுவு
உலக நீரோட்டத்தில்
கரைந்து விடாமல்
கலக்கப்பழகு
அடுத்த நூற்றாண்டின்
அந்தி நேரத்தில்
மூளை தவிர எல்லாம்
செயற்கையாய்க் கிடைக்கும்
ஆண்டுக்கொருமுறை
முகம் மாற்றலாம்
மரத்தின் திசுக்களில்
மனிதன் வாழுவான்.
எண்ணம் இட்ட
இருதயம் கிடைக்கும்
கணவனுக்கு மனைவி

செவ்வாயிலிருந்து
செலவுக்கனுப்புவாள்
உணவு மாறும்
எல்லாம் மாறும் எல்லாம் மாறும்
இன அடையாளம் மொழியாய் மிஞ்சும்
அடையாளம் இழக்காதே
மேற்கே விஞ்ஞானம்
பொருள் கண்டறிந்தது
போன நூற்றாண்டு
அதற்கு நீ
சொல் கண்டறிந்தது
இந்த நூற்றாண்டு
என்று நீ சொல்
சொல்லை விடுத்துப்
பொருள் கண்டறிவாய்
அறி
அன்றுதான் நீ
அறியப்படுவாய் "

எனக் கவிஞர் வைரமுத்து வருங்காலச் சூழல் வைப்பு நிதியாய் வைத்துள்ள புதுமை மாற்றங்களைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார்.

என்ன மாற்றம் எழுந்தாலும் இன அடையாளத்தை மட்டும் இழக்கக் கூடாது. இன அடையாளம் பழமையிலும் பழமையானது. இனமென்னும் பழமை அடித்தளத்தில்தான் புதுமைச் செடி வளர்கின்றது. இறைவனிடம் அருளுமாறு கேட்டலில் கூடப் புதுமை ஆட்சி செய்கின்றது.

மழை கேட்டோம் - வெள்ளம் தந்தாய்.

தென்றல் கேட்டோம் - புயல் தந்தாய்.

புதுப்பிணிகள் வரவேண்டாம் என்றோம் - பழைய எய்ட்ஸையே
திருப்பி அனுப்பிவிட்டாய்.

பள்ளிகளில் பாலுணர்வுக் கல்வி கூடாது என்றோம் -
ஆசிரமங்களை
அடையாளம் காட்டினாய்.

மீன் பிடிக்கும் படகு கேட்டோம் - ஊருக்குள்ளே பெரும்
கப்பலையே அனுப்பி வைத்தாய்.

படைத்தவனே! போதும். இப்புத்தாண்டிலாவது போனசு இல்லாமல் கேட்டதைக் கேட்ட அளவிலே மட்டுமே கொடுத்து அருள் புரிவாயாக!

" புதுமையே அறிவின் ஆக்கம்
புதுமையே புகழ் உண்டாக்கும்
புதுமையே தலைமை தாங்கும்
புதுமையே நிலைத்து நிற்கும்
புதுமையே இன்றிப் பாடல்
புனைந்திடல் உயிரில்லாத
பதுமையின் மீது சுற்றும்
பட்டுடை போன்றதாகும் "

என்பது கவிஞர் சுரதா காட்டியுள்ள புதுமையாகும்.

" புதுமைக்கான புகலிடங்கள்
இங்கே ஏராளமாகவே
இருக்கின்றன
வாருங்கள் வாருங்கள்
மரணம் என்பது
உண்மையான வீரனுக்கு
இரண்டாவது பிறந்தநாள் அவ்வளவுதான்
வாருங்கள் வாருங்கள்
அச்சத்தை
உதிர்த்து விட்டே வாருங்கள் " என்றே கவிஞர்

வேண்டியபடி எங்கும் எதிலும் பழமை போக்கிப்புதுமையாக்க இன்றே - இன்னே எழுவீர் !

15 குமரப்பா பார்வையில் மனிதன்

மனிதன் எத்தகையவன் ? அவன் தன்மை எத்தகையது என்பதை அறிதலும் நிலத்தை உள்ளடக்கிய இயற்கை வளங்களை ஆய்தலும் உற்பத்தி முறைகள், துய்ப்பு, பங்கீடு ஆகியன பற்றிச் சிந்தித்தலும் பொருளாதார மேதை குமரப்பாவின் கருத்துப்படி பொருளாதாரத் தொடர்பான நடவடிக்கைகளாக வளர்ந்துள்ளன. இவற்றுள் அவர் காட்டும் இன்றைய மனிதன் காண விழையும் மனிதன் பற்றிச் சற்றுச் சிந்திப்பது கேட்டில் ஆழ்ந்து, அமிழ்ந்து கிடக்கும் மனித சமுதாயத்தைக் கைதூக்கி நன்னெறியில் நடக்கச் செய்யத் தூண்டும் ; துணை செய்யும்.

இன்றைய மனிதன் :

மனிதப்பிறப்புப் பிறப்பில் எல்லாம் உயர்ந்ததாகும். இம் மனிதப்பிறப்புப் பல பரிணாமங்களைப் பெற்று முழுமையடைந்ததாகும். பிறப்பு மட்டும் மனிதனைப் பெருமைப்படுத்தி விட முடியாது. மனிதன் கண்ட சொற்களிலேயே 'மனிதன்' என்ற சொல்லே தரமானது என்பது அறிஞர் கார்க்கியின் கருத்தாகும். வாழ்விடம் நாடாகலாம் ; காடாகலாம் ; பள்ளமாகலாம் ; மேடாகலாம். நிலப்பெருமை அந்நில அமைப்பால் வருவதன்று. அங்கு வாழும்மனிதரின் பண்பாடே நிலப்பெருமையை உருவாக்கிக் காட்ட வல்லதாகும். வற்றாது வளம் கொழிக்கும் ஆறுகள், இயற்கை வளத்தைத் தப்பாமல் ஈந்துவரும் மலைக் குவியல்கள், தன் நீர்மை குன்றாத முந்நீர்ப்பெருக்கங்கள், நிமிர்ந்து பார்த்தால் கழுத்தை நோகச் செய்யும் வானளாவிய கட்டிடங்கள் ஆகியனவெல்லாம் ஒரு நாட்டின் புறவளர்ச்சி காட்டுவனவாகும். மனிதப்பண்பாடு - பிறர்க்கு அவன் தந்து நிற்கும் பயன்பாடே ஒரு நாட்டின் அகவளர்ச்சி மேம்பாட்டின் அடையாளங்களாகும். பொருட்காட்சி ஒன்றில் மூன்று கண்ணாடிப் பெட்டிகள் இடம் பெற்றிருந்தன. முதல் கண்ணாடிப் பெட்டியில் ஒரு குறிப்புக் கண்ணில் பட்டது. 'இதற்குக் கொடுக்கில் நஞ்சுண்டு' என்பது அக்குறிப்பாகும். அப்பெட்டியினுள் தேள் இருந்தது. அடுத்த கண்ணாடிப் பெட்டி அறிவித்த குறிப்பு யாதெனில், ' இதற்குப் பல்லில் நஞ்சுண்டு' என்பது. அப்பெட்டியில் இருந்தது அரவமாகும். மூன்றாவது பெட்டியில் குறிப்பு மட்டும் இருந்தது. அக்குறிப்பு ' இதற்கு உடலெல்லாம் நஞ்சு ' என்பதாகும். வேறு பொருள் எதுவும் பெட்டியினுள் இல்லை. பார்க்கும் மனிதனே கண்ணாடியில் தெரிகிறான். நச்சுடைய விலங்கினும் மனிதன் மிகக் கொடுமையான நச்சாவான் என அக்குறிப்புச் சொல்லாமல் சொல்லுகின்றது.

தேளின் முன்பக்கம் வர நேரின் தேளினால் தொல்லை இல்லை. அரவின் பின் பக்கம் போகின் அரவினால் அழிவில்லை. மனிதனிடம் எப்பக்கம் சென்றாலும் அவன் கொட்டாமலோ, தீண்டாமலோ விடான். அவன் பிறந்த பொழுது இறைத் தன்மையுடன் தான் பிறக்கின்றான். வளர, வளர இறைத்தன்மையை அவன் இழந்து சைத்தானாக உருவெடுக்கின்றான். அவன் சாகும் அளவும் சமுதாயத்தைத் துன்பத்திற்குட்படுத்திக் கொண்டிருப்பான்.

" ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய் "

என வள்ளுவர் சமுதாயக் கேடர்களின் இயல்பு பற்றி எடுத்துரைக்கின்றார்.

இவர்களைப் பைந்தமிழ்ப்புலவன் பாரதி,

" தேடிச் சோறு நிதம் தின்று பல சின்னஞ்
சிறு கதைகள் பேசிப் பிறர் வாடச் செயல்புரிந்து
நரை கூடிக் கிழப்பருவம் எய்திக் கூற்றிற்கு
இரையாகும் வேடிக்கை மனிதராகக் "

காட்டுவான். உலகம் முழுவதும் கேடர்களைக் கொண்டு இயங்குவதில்லை. கேடர்கள் வாழும் இவ்வுலகில் தான் நயத்தக்க நாகரிகரும் வாழ்ந்து வருகின்றனர். மனிதன் முழுமையாகத் தீயவன் ஆகான். அதைப் போன்றே முழுமையாக நல்லவன் ஆகான். நன்மை, தீமை என்னும் இரண்டின் கூட்டுறவில் உருவானவனே மனிதனாவான். காடு திருத்திக் கழனி காண்பதுபோல் மனிதன் தன்னிடம் பொருந்தியுள்ள அல்லதை அகற்றி,நாளும் நல்லதை வளர்க்கும் மனநிலையும் திடமும் பெற்றவனாய் இருத்தல் வேண்டும்.

" குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல் "

என வள்ளுவரும் மனித இயல்பினை விளக்கியுள்ளார்.

மனிதன் தான் வாழும் முறையால் மனிதனாகவே மதிக்கப்படலாம். அதனினும் ஒருபடி மேலே இறைவனாக அவன் போற்றப்படலாம். விலங்கினும் இழிவாகக் கீழ்மைப்படியில் அவன் உழலவும் செய்யலாம். ஒருவனின் பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் கட்டளைக் கல்லாய் இருப்பது அவனவன் செயற்பாடே ஆகும். இச்செயற்பாட்டின் அடிப்படையில் பொருளாதார நிபுணர் குமரப்பா மனிதரை ஐவகையாகப் பகுத்துக் காட்டுகின்றார். அவர்கள்,

1. சேவைப் பொருளாதாரத்தைச் சார்ந்தவர்கள்
2. கூட்டப் பொருளாதாரத்தைச் சார்ந்தவர்கள்
3. தமக்காகவே உழைப்பவர்கள்.
4. பிறரைக் கொண்டே வாழ்பவர்கள்.
5. புல்லுருவிகள் எனப்படும் ஐவகையர் ஆவர்.

முதலாம் வகையினர் :

வாழ்க்கையின் உயர்படியில் உள்ள மனிதன் சேவைப் பொருளாதாரத்தைச் சார்ந்தவனாக இருப்பான். இத்தகையன் தன்னலம் பாரான் ; மக்களின் நன்னலம் ஓர்வான். அவன் செயலெல்லாம் மனித நலம் சார்ந்ததாகவே அமைந்திருக்கும். தன்னைச் சிந்தியாது, தன்னலம் கருதாது, தன் வளர்ச்சி பேணாது, தன் சேயின் நலத்தையே நாடிக் குழந்தைக்குரிய தொண்டில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் தாய்மை உள்ளத்தை அவன் பெற்றிருப்பான். குமரப்பாவின் கருத்துப்படிச் சீர்திருத்தவாதியும் பொதுநல ஊழியரும் சேவைப் பொருளாதாரச் சார்புடையர் ஆவர். அரசியல்வாதி அடுத்த தேர்தலைச் சிந்திப்பவன் ஆவான்.

சீர்திருத்தவாதியோ அடுத்த தலைமுறை பற்றி எண்ணுபவனாவான். வள்ளுவர் இத்தகையாரை நீர் நிறைந்த ஊருணி, உள்ளூரில் பழுத்துள்ள மரம், மருந்தாகித் தப்பாமரம் ஆகியவற்றிற்கு ஒப்புமையாக்கிக் காட்டியுள்ளார்.

இரண்டாம் வகையினர் :

இவ்வுயர் படிக்கு அடுத்த கீழ்ப்படியில் இருப்பவன் ஓரளவு தன்னலம் தாங்கியவன் ஆவான். தானும் தன்னைச் சார்ந்தவர்களும் நலவாழ்வு பெறுவதற்காக உழைப்பினை அவன் மேற்கொள்வான். தன் குடும்ப எல்லையைத் தாண்டி அதற்கப்பாலும் உள்ள வெளியுலகம் அவன் நினைவிற்கு வருவதில்லை. தன்னை மட்டும் சிந்தித்துக் கொண்டிருக்கும் தன்னலவாதியை விட இவன் ஒருபடி உயர்ந்தவனாவான். இவனுக்கு ஒப்புமையாகத் தேனீக்களையும் எறும்புகளையும் குமரப்பா காட்டியுள்ளார். தேனீக்கள் தாம் துய்த்ததற்குப் பின் எஞ்சும் தேனைப் பிறர்க்காகப் பயன்படுத்தாமல் யாருக்கும் தெரியாமல் பதுக்கிக் கொள்ளும் தன்மையன ஆகும். எறும்புகளும் உணவைச் சேகரிப்பதிலும் சேர்ப்பதிலும் தேனீக்கள் போன்று செயற்படும். தம்மினம் தவிரப் பிற இன உயிர்களிடம் இவை அன்பு பாராட்டுவதில்லை. மாறாக இவை பகைமை பாராட்டும். இவை போன்ற மனிதனும் தன் சுற்றம் பற்றி நினைப்பானே தவிரப் பிறரைப் பற்றிய நினைவு எள்ளளவும் அவனிடம் இராது.

மூன்றாம் நிலையினர் :

இரண்டாம் படிக்குக் கீழான படியிலிருக்கும் மனிதன் தன்னை மட்டும் பேணுவதில் பெரு நாட்டம் உடையவனாக இருப்பான். தன் குடும்ப அளவில் கூட இவன் சிந்தனை விரியாது. தன்னளவில் மட்டும் சுருங்கி நிற்கும். தன்னால் உருவாக்கப்படும் பொருள்களெல்லாம் தன் துய்ப்பிற்கு மட்டுமே உரியன என்று நினைக்கும் குறுகிய அறிவையும் கோணல் நினைப்பையும் உடையவனாவான். அவனுள்ளத்தில் தன்னலப்பேய் தாண்டவமாடுமே தவிரப் பொதுநலத் தென்றல் வீசாது. வணிகர்கள், தொழில் தலைமையர்கள் ஆகியோர் தமக்கென வாழுநர் ஆவர் எனக் குமரப்பா குறிப்பிடுகின்றார்.

இறுதி இருநிலையினர் :

மேற்கண்ட மூன்று படிகளிலும் அமைபவர்கள் தம் தேவைகளைத் தங்கள் உழைப்பின் வழி நிறைவேற்றுபவர்கள் ஆவர். வாழ்வின் கடைப்படிகளில் வீழ்ந்து கிடப்பவர்களைப் புல்லுருவிகள் எனக் குமரப்பா சுட்டுகின்றார். பிறர் உடைமையை எவ்வித உழைப்புமின்றிக் கைப்பற்றுதலுக்கும் சுரண்டலுக்கும் உட்படுத்துகின்றவர்கள் புல்லுருவி போல் வாழும் இப்புல்லர்களே ஆவர். பிறர் உடைமைகளைப் பறிப்பவர்கள் பல்வகையினர் ஆவர். பணம் வைத்திருப்பவனை அடிக்கவோ, அழிக்கவோ செய்யாமல் அவன் பணத்தை மட்டும் எடுத்துக் கொள்கின்றவன் குழந்தையின் நகையைத் திருட அக்குழந்தையையே கொல்பவன் அளவிற்குக் கொடியன் ஆகான். இருவரும் சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிப்பவர்கள் ஆயினும் உடைமையாளனுக்கு ஊறு நேராமல் உடைமையை மட்டும் அவனறியாமல் பறிக்கின்றவனால் பெருந்தீங்கு

நிகழ்வதில்லை. தன்னலம் பெருக்கிப் பிறரின் வளத்தைச் சுரண்டும் இவன் தன்னாற்றலால் பிறரை நசுக்கவும் தயங்குவதில்லை. இக்கீழ்த்தன்மை உடையவர்களே வள்ளுவர் காட்டியுள்ள கயவர்கள் ஆவர்.

" எற்றிற்கு உரியர் கயவர் ஒன்றுற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து "

எனக் கயவர் இயல்பை அங்கை நெல்லிக்கனி என வள்ளுவர் விளக்கிக் காட்டியுள்ளார். சூதும் பந்தயமும் ஆடுபவர்கள் புல்லுருவித்தன்மையர் ஆவர் என்பது குமரப்பாவின் கருத்தாகும்.

நானை உலகம் நல்ல உலகம் :

கீழ்மைப் படிகளில் உழலும் மனிதன் நீங்கப் பெற்று மேன்மைச் சிறப்பான மனிதர்களை இவ்வுலகம் பெற விரும்பினால் காந்தியடிகள் சுட்டும் காந்திய நெறி வாழ்க்கையை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். காந்திய நெறி வாழ்க்கை முறை என்பது எத்தகையது? ஒவ்வொருவருக்கும் தனித்தனியே ஆன வாழ்க்கை முறையுண்டு. அவற்றுள் நல்லமுறையும் உண்டு ; கெட்ட முறையும் உண்டு. காந்தியடிகள் வகுத்த வாழ்க்கை முறை உண்மை, இன்னா செய்யாமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொருவர் செயலிலும் இவ்விரண்டும் பொருந்த வேண்டும். இவரது குறிக்கோள் வாழ்க்கை பொருளாதாரம், அரசியல், சமுதாய அமைப்பு மூன்றையும் அடக்கியதாகும். இவர் நெறிப்படி வாழ்தல் சுரண்டப்படாத சாதி வகுப்புகளற்ற சமுதாயம் உருவாக உதவும். நாம் நடத்தப்படும் முறை, நம் செயல் பிறரை எப்படிப்பாதிக்கிறது என்பன பற்றியும் எண்ண வேண்டும். நம்செயல் எந்த அளவிற்கு நன்மையை உருவாக்குகின்றது. நாம் அச்செயலால் எவ்வளவு பண்புடையவர்களாகின்றோம் என்பதைச் சிந்திக்க வேண்டும். குழந்தையின் தின்பண்டங்களைத் தாய் தயாரிப்பதற்கும் கடைக்காரன் தயாரிப்பதற்கும் வேறுபாடு உண்டு. தாய் குழந்தை நலம் நாடுவாள். கடைக்காரன் வருமானம் பற்றியே சிந்திப்பான். தாய்வழிக் குழந்தைகளுக்கு நன்மை உண்டாகும். அவள் மனநிறைவும் பெறுவாள். கடைக்காரனுக்குப் பணப்பெட்டி நிறைகின்றது. ஆனால் அது பண்பாட்டைக் கெடுக்கின்றது. சமுதாயம் தாய்வழி நடக்க வேண்டும். கடைக்காரன் வழி அது நடந்தால் பித்தலாட்டம் தலைவிரித்தாடும்.

காந்தியடிகள் சுட்டும் தாய்மைப் பண்பைச் சமுதாயத் தொண்டைப் பெருக்கிட நாம் முயல வேண்டும். இதனை எவ்வளவிற்குக் கடைப்பிடிக்கின்றோமோ அவ்வளவிற்கு இறைவன் நம்மை விரும்பும் நிலையை நாம் எய்துவோம். இத்தகைய வாழ்க்கையைத்தான் வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் என வள்ளுவர் மொழிகின்றார். அங்ஙனம் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்கள் வானுறையும் தெய்வத்தின் உள்ளத்தில் இடம் பெறுவர்.

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் "

என்னும் குறட்பா குமரப்பா கருத்திற்கு அரண் சேர்க்கின்றது. இன்று நாட்டைச் சூழ்ந்திருப்பவர்கள் சூறையாடுபவர்களும் புல்லுருவிகளும் ஆவர். இவர்களின் பெருக்கம் மக்களின் துன்பப் பெருக்கமாகும். குமரப்பா காட்டியுள்ள மனித வாழ்வுப் படிகளில் முதல் மூன்றில் அமைபவர்களால் நாடு நலம் எய்தும். குமரப்பா காட்டியுள்ளவாறு மனிதன் கேட்டிலிருந்து உய்தி பெறுவானாக. தன்னையும்நாட்டையும் பெருமையுறச் செய்வானாக.

16 பூவொன்று புயலானால் . . . .

நாணயத்தின் இருபக்கங்கள் :

பொருள்களில் மிக மென்மையானது பூவாகும். அதைவிட மென்மைப் பொருளை வள்ளுவர் தவிரப் பிறர் சுட்டவில்லை. 'மலரினும் மெல்லிது காமம் ' எனக் குறிப்பிடும் வள்ளுவர் அதன் செவ்வி உணர்வார் ஒருசிலரே ஆவர் என்றும் குறிப்பிடத் தவறவில்லை. காம வழிப்பிறக்கும் இன்பக்களமாய் உள்ள பெண் நல்லாளும் ஒரு வகையில் மென்மைப் பூவே ஆவார். அப்பூவின் இதழ் கிள்ளப்படும் பொழுது அப்பூவும் புயலாக உருக்கொள்ளும். ' சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்பது போல் பூவொன்று புயலானால் புவி தாங்காது. இந்தகைய பூக்களாகிய மகளிரைப் பாராட்டும் நாளே மார்ச் திங்கள் 8 - ஆம் நாளாகும். இம் மகளிர் நாள் உலகம் முழுவதும் கொண்டாடப்படும் சிறப்புடையதாகும். பெண் பொறுப்பு நிலையில் பல்வேறு பாத்திரங்களைத் தாங்கியுள்ளாள். அன்னை, அருமை மனைவி, கண்ணிறைந்த காதலி, உடன் பிறந்தவள், மாமியார், மருமகள், மகள், பேத்தி எனப் பல்வேறு பரிணாமங்களில் சிறக்கும் இயல்புடையது பெண்மையாகும்.

மனைவியை அல்லது காதலியைத் தவிரப் பிற பெண்களையெல்லாம் தாயாகக் கருதுவது பண்பாட்டின் உச்சமாகும். தாயைத்தவிரப் பிற பெண்களை எல்லாம் மனைவியாக அல்லது காதலியாகப் பாவிப்பது கயமைமின் உச்சமாகும். இருநிலைகளுமே இயல்பை மீறியவை ஆகும். இவ்விரு நிலைகளுக்கும் இடையே மிகுதியானர்கள் ஊசலாடிக் கொண்டிருக்கின்றனர். பண்பாட்டை நோக்கி நடைபோடுவது விரும்பத்தக்கதாகும். கயமையை நோக்கிக் காலடி வைப்பது விரும்பத்தகாததாகும். ஆண்மை, பெண்மை என்பன நாணயத்தின் இரு பக்கங்களாகும். பெண்மையின் துணையில்லாத ஆண்மை, ஆண்மைமின் துணையில்லாத பெண்மை பயனற்றவையாகும். ஓர் ஆணிடம் நூறு விழுக்காடு ஆண்தன்மை இருப்பதில்லை. அதே போன்று ஒரு பெண்ணிடம் நூறு விழுக்காடு பெண் தன்மை இருப்பதில்லை. ஓர் ஆணிடம் எழுபத்தைந்து விழுக்காடு ஆண் தன்மையும் இருபத்தைந்து விழுக்காடு பெண்தன்மையும் ஒரு பெண்ணிடம் எழுபத்தைந்து விழுக்காடு பெண்தன்மையும் இருபத்தைந்து விழுக்காடு ஆண் தன்மையும் பொருந்தியிருக்கும்.

ஆண் பெண் கூட்டுறவே வாழ்க்கை :

நகை செய்ய இருபத்திரண்டு காரட் அளவுத் தங்கம் போதும். இருபத்தி நான்கு காரட் அளவில் செய்யப்படும் நகை மிகுதியும் உறுதியிராது. தங்கத்தில் ஓரளவு செம்பு கட்டாயம் கலத்தல் வேண்டும். அதுபோல் ஆண்மையில் ஓரளவு பெண்மையும் பெண்மையில் ஓரளவு ஆண்மையும் கட்டாயம் கலந்தே காணப்படும். பெண்மையைச் சார்ந்த ஆண்மை இயக்கம், ஆண்மையைச் சார்ந்த பெண்மை இயக்கம் தவறில்லை;

வரவேற்கத் தக்கன. இத்தகைய சார்பு இல்லை எனில் உலக இயக்கமே உருக்குலைந்து விடும். கருவறை முதல் கல்லறை வரை ஆணுக்குப் பெண்துணை தேவைப்படும். எச்சமுதாயம் பெண்மையை மதிக்கிறதோ, அச்சமுதாயம் வளர்ச்சிப் பாதையில் வீறு நடைபோடும். எச்சமுதாயம் பெண்மையை மிதிக்கிறதோ அல்லது வதைக்கிறதோ அச்சமுதாயம் சரிவுப் பள்ளத்தாக்கில் பரிதாபமாக வீழ்ந்து கிடக்கும்.

பெண்ணின் பெருமித வளர்ச்சி :

பெண்கள் இன்று அனைத்துத் துறைகளிலும் பரவியிருக்கின்றனர். கடந்த நூற்றாண்டை விட இந்நூற்றாண்டில் பெண்கள் மேம்பாடான நிலை எய்தியுள்ளனர். அடுத்த நூற்றாண்டில் இதைவிட மிகுதியான மேம்பாட்டினைப் பெண்கள் எய்துவர். பெண்கள் இன்று அரசியல் அரங்கில் குறிப்பிடத்தக்க அளவிற்குப் பங்குபெற்று வருகின்றனர். பாராளுமன்றமும் சட்டமன்றமும் பெண்களுக்கு முன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு தரப்படவேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றன. பெண்கள் அரசியலில் மட்டுமல்லாமல் பொருளாதார நிலையிலும் முன்னேற வேண்டும். பொருளாதாரத் தற்சார்பு இல்லையெனில் அவர்களின் அரசியல் முன்னேற்றம் அர்த்தமற்றதாகிவிடும். ' அரசன் நல்லவனாக இருந்தால் சட்டங்கள் தேவையில்லை; சட்டங்கள் நல்லவையாய் இருந்தும் அரசன் கெட்டவனாக இருந்தால் சட்டங்களால் எப்பயனும் இல்லை ' என்பது சீன ஞானி கன்பூசியசின் கனிமொழியாகும்.

"ஆங்கமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமைவு இல்லாத நாடு "

எனக் கன்பூசியசின் கருத்தை மிக முன்னரே வள்ளுவர் சுட்டியுள்ளார். பெண்கள் வாழ்க்கை சார்புடைய வாழ்க்கையாக இருப்பதால்தான் அனைத்துத் துன்பங்களும் சோதனைகளும் அவர்களைச் சார்கின்றன. பெற்றோர், கணவர், மகன் அல்லது மகள் ஆகியோருள் யாரையும் சாராமல் வாழ்கின்ற பெண்களும் உளர். ஆனால் இவர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவாய் உள்ளனர். ' அர்த்த நாரீசுவரர் ' என்பது ஆண்மையும் பெண்மையும் இரண்டறக் கலந்துள்ளமையின் குறியீடாகும். ஆடவர் உலகம் ஆற்றலைப் பயன்படுத்திப் பெண்ணைப் பணிய வைக்க முடியாது. அதுபோல் அழகு, கவர்ச்சி காட்டி ஆடவரையும் மகளிர் அடிபணிய வைக்க முடியாது. ஆண், பெண் ஆகியோர்க்கு இடையே ஈர்ப்பு இயல்பாய் இருத்தல் வேண்டும். அவ்விருவர்க்குரிய ஈர்ப்பு வலுப்பெறுதல் புறத்தோற்றத்தால் அல்ல. பண்பார்ந்த செயல்களால் அது வலுப்பெறுவதாகும். இவ்வகை ஈர்ப்புத்தான் வளர்பிறை போல் வளரும். முந்திய ஈர்ப்புத் தேய்பிறை போல் தேயும். ஆண்களின் வெற்றிக்குப் பின்னால் பெண்கள் இருப்பது போல் பெண்களின் வெற்றிக்குப் பின்னால் ஆண்களும் இருத்தல் வேண்டும். இனி, தாளாத துயராலும் மாளாத சோதனையினாலும் புயலாய் வெடித்துக் கிளம்பிய பூக்கள் சிலவற்றின் புரட்சிச் செயலைக் காண்போம்.

மலையாள நாட்டின் மானப்பூ :

அன்வேசி இயக்க அஜிதா

அறுபதுகளில் இந்தியா முழுவதும் ஒருவிதத் திகிலுடனும் பரபரப்புடனும்

ஒலிக்கப்பட்ட பெயர் 'அஜிதா' என்பதாகும். மூன்று நிலக்கிழார்களைக் கொலை செய்து வாயிற் கதவில் தலைகளை மாட்டிவிட்டமை, காவல் நிலையத்தையே தாக்கிக் கருவிகளைப் பறிக்க முயன்றமை என மிகுதியான குற்றச்சாட்டுகள் அவள்மீது சார்த்தப்பட்டிருந்தன. காடுகள், மலைகள், அச்சம் தரும் விலங்குகளுக்கு மத்திமில் ஒளிந்து நடமாடிய வாழ்க்கை அவள் வாழ்க்கையாகும். இறுதியில் காவல்துறைமிடம் அவள் பிடிபட்டாள். ஏழரை ஆண்டுகள் சிறை வாழ்வு பெற்று அவள் விடுதலை ஆனாள். விடுதலைக்குப் பின்அவள் வாழ்வில் நிகழ்ந்ததைக் கண்ணுறுவோம்.

'சிரீதேவி' என்னும் பெண்ணொருத்தி கோழிக்கூடு என்னுமிடத்தில் கேளிக்கைக் கூடம் என்னும் போர்வையில் பெரிய மனிதர்களின் காமச்சுவைக்கு அப்பாவிப் பெண்களை ஏமாற்றிப் பலிமிட்டு வந்தாள். விடுதலைக்குப்பின் அஜிதா ஆதரவற்ற பெண்களுக்காக நடத்தி வந்த 'அன்வேசி' என்ற பெண்கள் அமைப்பு இதைக்கண்டுபிடித்துக் கேரளாவையே பரபரப்பாக்கியது. வழக்கு இன்னும் முடியாமல் உச்ச நீதி மன்றத்தில் உள்ளது. நியாயம் கேட்டுக் கேரளா முழுவதும் நடைப்பயணத்தை அஜிதாவின் இயக்கம் நிகழ்த்தியது. அவளின் தற்போதைய வயது ஏறத்தாழ ஐம்பது ஆகும். எனினும் உள்ள உறுதிமில்அவளுக்குத் தளர்ச்சியில்லை. இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் எழுபது வயது நிர்ம்பிய அவளது தாய் தன்மகளின் சாதனை பற்றிப் பெருமையுடன் பேசி வருகின்றாள். இத்தகைய துணிச்சல் அஜிதாவிற்கு எழுந்த சூழலையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இளம் வயதுப் பரபரப்பு :

இளமைப் பருவத்தில் தீவிரவாத இயக்கத்தில் அஜிதா பங்கு பெற்றாள். இதற்குக் காரணம் தீவிரவாதியான இவரது தந்தையின் தூண்டுதலாகும். உயர்நிலைப்பள்ளி மாணவியாகப் பயின்ற பொழுது மக்களுக்கு உணவுப் பங்கீட்டு மூலம் தந்த அரிசியை அரசு திடீரென்று நிறுத்தியதால் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் பள்ளி மாணவியரைத் திரட்டி அஜிதா போராட்டம் நிகழ்த்தினாள். வேளாண்மைக் கூலிப் பெண்களும் பீடி சுற்றுதல் மற்றும் கைத்தறித் தொழிலாளப் பெண்களும் மிகுதியாகப் பாதிக்கப்பட்டனர். முறையான கூலி அவர்கட்குத் தரப்படவில்லை. ஆண்டுக்கணக்கில் அவர்கள் அடிமையாக நடத்தப்பட்டனர். அவர்களில் பலர் வன்முறைக் கற்பழிப்பிற்கும் பலியாயினர். இக்கொடுமைகளை எல்லாம் கண்டு கொண்ட அஜிதா தீவிர இயக்கமொன்றைத் தொடங்கினார். இக்கொடுமைகளுக்குக் காரணமான நிலக்கிழார்கள் கொல்லப்பட்டனர். கொலைக்குற்றத்தில் நேரடித் தொடர்பு அஜிதாவிற்கு இல்லையெனினும் காவல்துறையின் முக்கியக் குற்றவாளியாக அவள் பதிவு செய்யப்பட்டாள். கொலை செய்தல் என்பது இயக்கத்தின் குறிக்கோளல்ல. ஆனால் தீவிரவாதம் மூலம்தான் சில செயல்களைச் சரிப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை அவளிடம் இருந்தது. எனவே அவள் வழி நடத்தப்பட்ட போராட்டங்கள் மக்களைச் சிந்திக்க வைத்தன. அதுவே அஜிதாவிற்குக் கிடைத்த வெற்றியாகும். மக்கள் இவ்வியக்கத்தினரைக் காட்டிக் கொடுத்ததில்லை. எனவே காவல்துறைக் கொடுமை அவர்கட்கு மிகுதியும் உண்டு.

நக்சலைட் இயக்க நங்கை :

மாவோவின் ஆங்கில எழுத்துக்களை மலையாள மொழியில் பெயர்த்து இதழ்களுக்குச் செய்திகளை ஒழுங்குபடுத்தி அனுப்பும் பணியில் அஜிதா ஈடுபட்டாள். நக்சலைட் இயக்கத்தைச் சார்ந்த ஒரே பெண் அஜிதா ஆவாள். அவள் பட்ட துன்பங்களை, துயரங்களை, அவமதிப்பை அவள் கூற்றின் வாயிலாகவே அறிவது நல்லது.

" என்னை மோசமாகக் காவல்துறையினர் சித்திரித்துக் காட்டினர். ஆண்களுடன் மாதக்கணக்கில் காடுகளில் தலைமறைவாய் இருந்ததால் விலைமகள் போல் என்னைக் கருதிப் பேசினர். சிறையிலும் முதலில் விலைமகளிருடன் நான் அடைக்கப்பட்டிருந்தேன். ஆட்சியின் கோணத்தனமான அறிவிற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். காட்டில் வாழ்ந்த பொழுது பேன்ட், ஜாக்கெட், மேற்சேலை இவையே எ ன் உடைகளாகும். காவல்துறை சேலையைக் கழற்றச் சொல்லி என்னைப் படமெடுக்கச் செய்தது. கவர்ச்சிப் புயல் (Sex Bomb) என்ற பட்டத்தை எனக்குச் சூட்டியது. நான் நினைத்திருந்தால் மற்ற இளம் பெண்களைப் போல் சமையல் செய்து, வீடு பெருக்கித் திருமணமாகிய அமைதியான வாழ்க்கையை ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் நம்மைச் சுற்றியிருக்கும் அவல வாழ்க்கையை நான் நினைத்த வழியில் சரிப்படுத்த முயற்சி எடுத்தேன். அதற்கு நான்நம்பிய வழியே தீவிரவாதமாகும்! ' இந்நெருக்கடிகளுக்கு இடையேயும் அஜிதாவின் திருமணமும் சிறப்பாகவே நிகழ்ந்தது. அவரை மணந்தவர் அவரைவிட எட்டுவயது இளையவர் எனினும் அவரை எட்டி மிதியாமல் ஏற்றிப் போற்றுகின்றார். நிறைவாக அஜிதா உதிர்த்த உண்மையை உணர்வோம். ' பேருக்குத் தேர்தல் நடக்கின்றது. அரசியல் வாதிகளைத் தேர்ந்தெடுத்தாலும் குடியரசு நாட்டில் மக்களுக்கு ஆற்றலே இல்லை. திருடர்களைத் தான் மாற்றி மாற்றி நாம் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கின்றோம். மனிதர்களை எல்லாம் சமமாகப் பார்க்கும் பொதுவுடைமையே வாழ்க்கைக்குச் சிறந்த வழிமுறையாகும் '.

ஆந்திராவின் அருச்சனைப் பூ :

விருதிற்குரிய விளங்கிழை :

ஆந்திர மாநிலத்தில் கர்நூலிருந்து இருபத்தைந்து கிலோமீட்டர் தொலைவில் உசேனபுரா என்னுமிடம்உள்ளது. இங்கிருந்து குதிரை வண்டியில் ஐந்து கிலோமீட்டர் பயணத்தொலைவில் கால்வா என்னும் சிறு கிராமம் அமைந்துள்ளது. கடந்த அக்டோபர் 16 - இல் அனைத்து நாட்டு வறுமை ஒழிப்பு நாளை ஐ.நா.அவை கொண்டாடியது. இவ்வவை கூடிய நியூயார்க் நகரம் கால்வாய்க் கிராமத்தைச் சார்ந்த ஒரு பெண்மணியை அழைத்துப் பல நாட்டுத் தலைவர்களின் முன்னிலையில் விருதினை வழங்கிப் பாராட்டியது. அப்பெண்மணி தான் பாத்திமா பீவி ஆவாள். தொண்ணூறு விழுக்காடு முகமதிய மக்கள் வாழும் கால்வாய்க் கிராமத்தின் பஞ்சாயத்துத் தலைவியும் அவராவார். ஒரு பெண்ணைத் தலைவியாக முகமதிய ஆண்கள் ஏற்றுக் கொண்டதே ஒரு வியப்புக்குரிய செய்தியாகும். ஏற்கனவே நடந்து வரும் வறுமையொழிப்புத் திட்டக்குழுவில் உறுப்பினராக அவர் இருப்பதுவும் பஞ்சாயத்துத் தலைவியாகத் திட்டச் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்புத் தருவதுமே

அவர் விருது பெறக் காரணங்களாகும். விருது பற்றி அம் பெருமகன் குறிப்பிட்ட செய்தியை அவர் மொழியிலேயே காண்போம் :

விருதிற்குரியோர் விடுத்த செய்தி :

" ஐந்நூறு அலைவரிசை எனக்குக் கொடுக்கப்பட்ட விருது என் ஒருத்திக்கு மட்டும் கிடைத்த விருது இல்லை. இந்தக் கிராமத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு பெண்ணிற்கும் கிடைத்த விருதாகும். இதில் முக்கியமான பெண் விசயமாரதியாவாள். இந்தக் கால்வாய்க் கிராமத்தின் பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரத் தயங்கி வீட்டிற்குள்ளேயே வறுமையுடன் குடும்பம் நடத்திக் கொண்டிருந்த காலம் ஒன்று உண்டு. வறுமையிலிருந்து விடுதலை அடைந்து வளமை நோக்கிச் செல்வதெப்படி என்று எங்களுக்குச் சொல்லிக் கொடுத்தவளே இந்தப்பெண் தான் " என்பது அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் அனைவர் உலகத்திற்கு அவர் விடுத்த நற்செய்தியாகும்.

வாடாத மனத்திடம் :

கிறைத்திருத்தம் செய்த காவற்பெண்டு :

" கிரண்பேடி " என்ற பெயரை ஒலித்தாலே உடம்புக்குள் ஒரு பேராற்றல் பிறக்கும். இந்தியாவில் வாழும் அத்தனைப் பெண்களுக்கும் உத்து சக்தியை அப்பெயர் உருவாக்கும். சட்டம் என்று வந்துவிட்டால் எவரு, பணக்காரர், அமைச்சர், வாடகை வண்டி ஓட்டி என வாழ்வின் பல்வேறு நிலையினரும் சட்டத்திற்கு முன் சமமானவர்களோ என்பது கிரண்பேடியின் உறுதிக்குரலாகும். நேர்மையும் துணிச்சலும் கொண்ட பெண் காவல் அதிகாரி கிரண்பேடி. ஆதலால் ஆளும் இனம் அத்தனை எளிதில் அவரை ஏற்றுக்கொள்ளுமா? இடமாற்றுதல் என்ற பெயரில் அவர் பந்தாடப்பட்டார். ஆனால் தட்டத் தட்டத் தங்கம் போன்றே அவர் ஒளிர்ந்தார். திகார் சிறைச்சாலை அவர் பணியாற்றிய சிறைச்சாலையாகும். நூற்றுக்கணக்கான அச்சம் தரத்தக்க கைதிகள் அங்கிருந்தனர். அஞ்சா நெஞ்சமுடைய கிரண்பேடி அவர்களுடன் நட்புக் கொண்டு உறவாடி, உன்னை யாராய்ந்து, வழிபாடு மற்றும் பிற நல்ல செய்திகளை அவர்கட்கு அறிமுகம் செய்தார். சிறைச்சாலையில் மனிமேகலையாய் அவதரித்து அவர் செய்த சீர்மைப்புக்களைப் பார்த்து வியந்த வெளிநாட்டவர் அவருக்கு " மதர்தேரசா " என்றும் விருது வழங்கினர். இவர் எழுதிய நூல் " எதுவும் செய்ய இயலும் " என்றும் பொருளமைந்த ஆங்கில நூலாகிய " It is always Possible " என்பதாகும்.

குறையாடாக் குறிக்கோள் வாழ்வு :

இளமையிலேயே குறிக்கோளுடன் வாழ்க்கையை அவர் அமைத்துக் கொண்டார். ஒரு ஆசிரியரிடம் பத்தாம் வகுப்பு விருதியாகப் போராட்ட உணர்வு பெற்றவர் அவராவார். அதிகம் நிகழ்ந்த ஆணாதிக்கம் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார் :

'ஆணாதிக்க உலகத்தில் மகளிர் துன்பப்பட்டு ஓரிடம் பிடித்தால் தட்டிக் கொடுக்கவோகுறைந்த நிலையில் புன்முறுவல் செய்யவோ யாரும் இருக்கமாட்டார்கள். அதன்பிறகு முன்னேற வேண்டிய இடத்திற்கு நம் சொந்த முயற்சியில் தான் போக வேண்டும். இந்த உலகத்தில் பெண்கள் மிக விழிப்புடன் இருத்தல் வேண்டும். தொண்ணூற்றொன்பது விழுக்காடு ஆண்கள் சந்தர்ப்பவாதிகளாவர். ஓரெல்லை வரை ஆண்களுடன் பழகலாம். நம்மைத் தவறாகப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கக் கூடாது. அப்போதுதான் நம் இலக்கை நாம் அடைய முடியும் ' என்பது மகளிரின் விழிப்புணர்விற்கு அவர் காட்டிய வழிமுறையாகும்.

தமிழ்நாட்டின் தனல் பூ :

திடச்சிந்தைத் திலகவதியார் :

' எனக்கு நண்பர்கள் மிகுதியும் கிடையாது. விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் இருக்கும் சில நண்பர்கள் கூட ஏன் ஒரு தீவு போல் உனக்குள்ளேயே நீ ஒளிந்து கொண்டிருக்கிறாய் என்று கேட்பர், நான் அங்ஙனம் வாழக்காரணம் அடுத்தடுத்து நான் பட்ட அடிகள், வேதனைகளாகும். என் பெற்றோர் காதல் திருமணம் புரிந்தவர்கள். என் சாதியே எனக்குத் தெரியாது. கல்லூரியில் படிக்கும் பொழுது திணிக்கப்பட்ட காதலால் எனது பதினான்காம் வயதில் எனக்குத் திருமணம் நிகழ்ந்தது. ஓரளவு வசதியான வேளாண்மைக் குடும்பம் என் கணவர் குடும்பமாகும். எனவே படிப்பைத் தொடர எனக்கு வழியில்லை ' - இக்கூற்றிற்குரியவர் தமிழகக் காவல்துறைப் பெண் அதிகாரியான திலகவதி ஆவார்.

வயிற்றில் நான்கு மாதக்கருவைத் தாங்கியிருந்த பொழுது தந்தை வீட்டிற்கு வந்தார். அங்கிருந்தவாறே தேர்வை எழுதினார். ' ஜாய் ' (JOY) என்றால் கலப்பில்லாத மகிழ்வு என்று எங்கோ கவிதை படித்த நினைவு வந்ததால் தமக்குப் பிறந்த குழந்தைக்கு ' ஜாய்ஸ் ரேஸா' எனப் பெயர் சூட்டினார். இரு குழந்தைக்குத் தாயான பின்பும் மணமுறிவு நிகழ்ந்தற்குப் பின்பும் அவர் ஸ்டெல்லா மேரி கல்லூரியில் எம்.ஏ. வகுப்பில் சேர்ந்தார். தந்தைக்குப் பணம் அனுப்பமுடியாத பொருளாதார நெருக்கடியிலும் அவர் எம்.ஏ. தேர்வில் சிறப்பாக வெற்றி பெற்று இந்திய நிர்வாகப் பணிப் பயிற்சியில் தமிழகத்தின் முதல் இந்தியக் காவல் துறை அதிகாரியாக வெற்றி பெற்றார். இவரைப் பற்றி வெளிவந்த கட்டுக்கதைகளை அவர் சொற்களிலேயே காண்போம்.

வீழுவது எழுவதற்காகவே :

'என் கணவர்தான் என்னை ஊக்குவித்துப் படிக்க வைத்தாரென்றும் அவரை ஏணியாக்கி ஏறி வந்தவுடன் அவரை வீசி எறிந்துவிட்டேன் என்றும் பொய்க்கதையைப் பரப்பினர். ஆண்களே வேலையில்லாமல் இருக்கும் நாட்டில் ஒரு பெண்ணிற்கு உயர் காவல்துறைப் பதவி தேவையா? அந்தப் பதவியை வைத்துக் கொண்டு அந்தப் பெண் அதிகாரி தன் கீழ் வேலை செய்யும் ஆண்களை அடிப்பதும் உதைப்பதுமாக இருக்கிறாள் ' என்று பொறாமையால் விளைந்த

பொய்ப்பேச்சும் நடமாடியது. இந்நிலையில் அவரது இரண்டாவது திருமணமும் மணமுறிவில் முடிந்தது. அவரது சோகத்தின் வெளிப்பாடான எழுத்து இன்று நாற்பது நூல்களாக மலர்ந்துள்ளது. இப்பொழுது குழந்தைகளும் நூல்களும்தான் அவரது உலகமாய் உள்ளன.

' விழுவது எழுவதற்காகத் தானாம். விழுவதும் எழுவதுமாகவே இருந்தால் வீடுபோய்ச் சேர்வது எப்படி? ' என்று அவர் எழுதிய கவிதை போலவே அவர் வாழ்க்கை இருந்தாலும் ' இன்று புதிதாய்ப் பிறந்தோம்' என்ற எண்ணம் அவரது வாழ்வை இன்றும் சுவைக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் தவப்பூ : பெண்நலம் பேணும் பெருமகள் :

மும்பை ஒய்.பி.சவான் அரங்கத்தில் தலைமை அமைச்சர் வாஜ்பாய் உட்படப் பல தலைசிறந்த மனிதர்கள் குழுமி இருந்தனர். எதற்காக? நான்கு சிறந்தவர்க்கு " ஜமூனாலால் பஜாஜ்" என்னும் விருதை வழங்குவதற்காகக் குழு கூடியிருந்தது. " அம்மா " என அன்புடன் அழைக்கப்படும் தமிழ்நாட்டைச் சார்ந்த இராசம்மாள் தேவதாசு என்பாரும் அவர்களுள் ஒருவராவார். கோவை அவிநாசலிங்கப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகப் பொறுப்பேற்ற பெருமையும் இவருக்கு உரியதாகும். பெண்கள் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சிக்குச் சந்தடியே இல்லாமல் அவர் செய்திருக்கும் அமைதிப்பணி மிகப் பெரியதாகும்.

உழைப்பின்வாரா உறுதிகள் உளவோ :

பள்ளி இறுதி வகுப்புப் படிப்பதற்குக் கூட வீட்டினருடன் அவர் பெரிய போராட்டமே நிகழ்த்தினார். அக்காலத்தில் பெண்கள் வயதிற்கு வந்தால் வெளியில் அனுப்பும் பழக்கமில்லை. எனவே அவர்களின் படிப்புப் பாதியில் நிறுத்தப்படும். பத்தாம் வகுப்புப் பயிலும் பொழுதே அவருக்குத் திருமணமும் நிகழ்ந்தது. ஆனால் தொடர்ந்து படிப்பதற்கு அவர் கணவர் பச்சைக்கொடி அசைத்தார்.அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அவர் சேர்ந்து பயிலத் தொடங்கினார். இதற்கிடையில் அவரது கணவர்க்குப் பணி இடமாற்றம் நிகழ்ந்தது. எனவே அவரது படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஒரு குழந்தைக்கு அவர் தாயானார். அதன் பின்னர் இராணி மேரிக் கல்லூரியில் தம் படிப்பைத் தொடர்ந்து தங்கப்பதக்கம் பெற்றுச் சிறந்த மாணவியாக அவர் வெளிவந்தார். அக்கல்லூரியிலேயே சிறிது காலம் அவர் பணியாற்றினார். அமெரிக்காவில் மேல் படிப்பிற்காக அவர் தேர்வு செய்யப்பட்டார். தன்னந்தனியாக அமெரிக்கா அவர் போய்ச் சேர்ந்தார். படிப்பை முடித்து அமெரிக்காவிலிருந்து திரும்பியவுடன் அரசுப்பணியிலிருந்து தம்மை விடுவித்துக் கோவை அவிநாசலிங்கம் கல்வி நிறுவனத்தில் சேர்ந்தார். இன்று அவரது வயது என்பதைத் தொடுகிறது. இவ்வயதிலும் காலை நான்கு மணிக்கு எழுந்து இரவு பன்னிரண்டு மணிக்குப்படுக்கைக்குப் போகும் வரையிலும் அவர் மேற்கொண்டு இருப்பது உழைப்பு, உழைப்பு, ஓயாத உழைப்பே ஆகும்.

இணையிலா வீரச்சாதனைகளின் விளைவிடமாக இந்தியப் பெண்கள் இருத்தல் போல் ஆற்றல் ஊற்றாய் விளங்கி வீரச்செயல்புரிந்த வெளிநாட்டுப் பெண்டிர் இருவர் வரலாற்றினை இனி விளக்குவோம்.

பிரெஞ்சு நாட்டின் புரட்சிப்பூ :

பெண்கள் ஆண்களுக்குப் பின்னால் தான் நிற்கவேண்டுமா? ஆயிரம் ஆண்கள் ஒன்று சேர்ந்து நகர்த்த முடியாத சிவனருளால் பெற்ற வில்லைச் சீதை சிறுமியாக இருந்தபோது விளையாட்டுப் பொருள்போல் கையாண்டாளாம். ஆனால் சீதை தனது வீரத்தையோ ஆற்றலையோ முழுமையாக வெளிப்படுத்தவில்லை. தான் இராவணனைத் தண்டித்தால் அது இராமனுக்குப் பெரிதும் பெருமை சேர்ப்பதாகாது என்று இலங்கை மாநகரில் அசோகவனத்தில் முகத்தைக் கைகளால் பொத்தித் தேம்பித் தேம்பி அவள் அழுதாள். இப்பழக்கம் இன்று சரிப்பட்டு வராது. ஆண்களுடன் போட்டி போட்டு முன்னேற வேண்டிய காலம் இதுவாகும். ஆண்மகனுக்கு இருக்க வேண்டிய போராட்டப் பண்பு அன்பே உருவான பெண்ணிற்கு இருக்க முடியுமா? தன்நாட்டிற்குக் கேடென்றால் தகப்பன், கணவன், பிள்ளையைப் பெண்ணொருத்தி அனுப்பிய நாடு நம் நாடாகும். ஓராண்மகனை வெற்றிபெற வைப்பவள் பெண்ணென்றால் ஏன் அவளாலே வெற்றி பெற முடியாதா?

புரட்சி இள ஞாயிறு :

பதினைந்தாம் நூற்றாண்டில் பிரான்சு இங்கிலாந்து மன்னரால் ஆளப்பட்டது. பிரெஞ்சு மக்கள் தொடை நடுங்கிகளாக இருந்தனர். ஆங்கிலேய மன்னர்கள் ஃபிரான்சை அடிமைப்படுத்தினர். ஆங்கிலேயர்களைப் ஃபிரான்சிலிருந்து விரட்டப் பதினாறு வயதுச் சிறுமி ' உதய ஞாயிறு ' ஒப்ப எழுந்தாள். அவள்தான் ஜோன்ஆப்ஆர்க் என்னும் வீரப்பெண்மணி ஆவாள். அவளுக்கு எழுதப்படிக்கத் தெரியாது. அஞ்சி நடுங்கிய தன் மன்னனுக்கு உரம் அவள் ஊட்டினாள். மன்னன் சார்பில் அவள் படை திரட்டினாள். எதிரியுடன் கடுமையாகப் போருடற்றினாள். ஆனால் விந்தை என்னவென்றால் சீதையைப் போல் அவளும் தீக்குளித்தாள். புராண காலத்தில் நடந்த கொடுஞ்செயல் பதினைந்தாம் நூற்றாண்டிலும் நிகழ்ந்தது. புராண காலச் சீதையைக் காப்பாற்ற இராமனிருந்தான். இன்று தீக்குளிக்கும் மகளிரைக் காப்பாற்ற இராவணன் கூட வரமாட்டான். பதினைந்தாம் நூற்றாண்டில் எம்மன்னனுக்காக ஆணுடை தரித்துக் கடும் வீரத்துடன் போராடினாளோ துன்பப்பட்ட அவளுதவிக்கு அம் மன்னன் வரவில்லை. இதைச் சொல்லக் காரணம் ஆண்களை நம்பாதீர்கள் என்பதற்காக அல்ல. பெண்கள் தங்களையே நம்பியிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக இச்செய்தி இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆணினம் வலியே அறியாததாகும். பெண்களோ மகப்பேற்று வலியில் இருந்து உடலளவில் பல வலிகளைத் தாங்கிப் பழக்கப்பட்டவர்கள் ஆவர். வலியைப் போல் பாடம் கற்றுக் கொடுக்கும் ஆசான் உலகில் எவரும் இலர். ஆண்களைவிடப் பெண்களுக்கு மனவலிமை மிகுதியும் உண்டு. ஆனால் இன்று எத்துனைப் பெண்களால் மனவலிமையுடன் வாழ முடிகின்றது? எத்துனைப் பெண்களால்

தங்களுக்குள் புதைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணர முடிகிறது? 'அப்பா சொன்னார்' என்று பாதியிலேயே படிப்பை நிறுத்தும் பெண்டிர், ' கணவர் சொன்னார் ' என்பதற்காக வேலையை விட்டு விடும் பெண்கள் நம் நாட்டில் எண்ணிக்கையில் அடங்கார்.

யூத இனச் சாதனைப் பூ :

யூத இனத் திற்குப் பாதகம் :

'ஆன்ஃபிரான்ஸ்' என்பவள் யூத இனச் சிறுமியாவாள். இரண்டாம் உலகப்போர் தொடங்கிய நேரத்தில் கோடிக்கணக்கான யூதர்களைச் செருமனியின் நாசிப்படை ஆடுமாடுகள் போல் கேவலமாக நடத்தியது. கொசு, கரப்பான்களைப் போல் ஈவு இரக்கமின்றி அவர்களைக் கொன்றது. கொடுமை தாங்காத ஆன்ஃபிரான்ஸின் தந்தை தம் மனைவி, இரு குழந்தைகளுடன் செருமனியில் வாழாமல் நெதர்லாந்து நாட்டில் தஞ்சம் அடைந்தார். அவருக்குக் கெட்ட நேரமாகையால் ஒருசில மாதங்களுக்குள் நெதர்லாந்தையும் செருமனி முற்றுகையிட்டது. ஆன் ஃபிரான்ஸ், அவர் உடன் பிறப்பு, அன்னை, தந்தை அனைவரும் வீட்டிற்குள் பதுங்கு குழியில் மறைந்த வாழ்க்கை வாழ்ந்தனர். உணவு, ஒளி, காற்று, கழிப்பிடம் எதுவும் இல்லாமல் பதினாறு மாத வாழ்க்கை அப்பதுங்கு குழியினுள் அவர்கட்கு நிகழ்ந்தது. செருமனியைச் சார்ந்த வீரர்களால் பிடிக்கப்பட்டுப் போலந்து நாட்டின் நரபலிக் கூடத்திற்கு அனுப்பப்பட்டனர். கூட்டுக் குடும்பங்கள் கலைக்கப்பட்டன. ஆன்ஃபிரான்ஸ், அவள் உடன்பிறப்பு, அன்னை ஆகிய மூவரும் தந்தையிடமிருந்து பிரிக்கப்பட்டனர். அவர்கள் அணிந்திருந்த துணிகள் கிழிந்தவை ஆகும். அவர்களின் தலைகள் முடியை இழந்தன. அவர்களில் கை அடிமைச் சின்னமான ஓர் உலோக வளையத்தைத் தாங்கியிருந்தது. படிப்படியாகக் கொல்லப்படுவதற்காக மாதக் கணக்கில் தண்ணீர் இல்லாமல் ரொட்டித்துண்டு மட்டும் அவர்கட்கு உணவாகத் தரப்பட்டது. பதினைந்து வயதே நிரம்பிய ஆன் ஃபிரான்ஸ் எழிலுடன் விளங்குவதற்குப் பதிலாக உணவின்றி எலும்புருவாய்க் காட்சி தந்தாள். ஆனாலும் வீரத்தை அவள் இழக்கவில்லை. அனைவர்க்கும் உணவு, தண்ணீர் தரப்படவேண்டும் என்று கடுமையாக அவள் போராடினாள். அவளுக்குக் கிடைத்தவை உணவு, தண்ணீரல்ல; அடி, உதையே தரப்பட்டன. கொலைப் பீடத்திற்கு அவள் போகு முன் தாயையும் தன் உடன் பிறப்பையும் இழந்தாள். அவளுக்கு உண்டான நச்சுக் காய்ச்சல் அவள் உயிரைப் பறிக்கும் எமனாகியது.

நாட்குறிப்புச் சாதனை :

இதற்கிடையில் செருமனியை உருசியா வெற்றிபெற்றது. ஆன் ஃபிரான்ஸின் தந்தை தப்பித் தம் குடும்பத்தினரை மீண்டும் சந்திக்க முயன்றார். அனைவரும் இறந்தது பற்றிய செய்தியை அவரறிந்தார். ஆனால் ஆன்ஃ பிரான்ஸ் எழுதி வைத்திருந்த நாட்குறிப்பு அவர் கையில் கிடைத்தது. யாரதைப் படித்தாலும் நெஞ்சு விம்மும் : இதயம் துடிக்கும்: தான் பார்த்த கொடுமைகளையும் தான் அனுபவித்த வேதனைகளையும் உணர்ச்சி பொங்க அவள் அந்நாட்குறிப்பில் பதிவு செய்திருந்தாள். அவளது நாட்குறிப்பு நூலாக மலரும் நல்வாய்ப்பைப் பெற்றது

அது நூலாக வெளிவந்த பின்புதான் சர்ச்சில், ரூஸ்வெல்ட், ட்ரூமன் போன்ற உலகத் தலைவர்கள் செய்யமுடியாத சாதனையை இறந்துபோன இச்சிறுமி எழுதிய நாட்குறிப்பு சாதித்தது என்பதை உலகம் உணர்ந்தது. செருமானியர்கள் யூதர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்காக மனம் வருந்தி நாணத்துடன் தலை குனிந்தனர். தங்கள் தவறையும் அவர்கள் உணர்ந்தனர். எனவே அரியன செய்வதற்கு உரிய வயது என்றெதுவுமில்லை. ஒரு மனித வாழ்க்கையின் அனைத்துக் காலகட்டமும் அரியன செய்ய உரிய பொழுதாகும் என அறிகிறோம்.

'பெண்ணின் பெருமை என்ற நூலை எந்நோக்குடன் இயற்றினேனோ, அந்நோக்கு நிறைவேறியே வருகின்றது. அந்நூல் ஒருபெரும் அறப்புரட்சியை நுண்ணமையாகச் செய்து வருதல் கண்கூடு. அப்புரட்சியை இப்பிறவி காணும் பேறு பெற்றது. 'பெண்ணின் பெருமை 'ஒருவித வெற்றியை விளைத்ததென்று நினைக்கின்றேன். பெண்ணின் பெருமை பிறங்கப் பிறங்க நாடு விடுதலையடைதல் ஒருதலை' என்ற திரு.வி.க. வின் கூற்றிற்கு ஏற்பப் பெண்ணிற்கு இழைக்கப்படும் சிறுமை நீங்கிப் பெண்ணின் பெருமையைப் பிறங்கச் செய்ய ஆணவம் பேசும் ஆடவர் உலகம் முன்வரும் நாளே பெண்ணுலகின் பொன்னாள் ஆகும்.

தமிழையே பேச்சாகவும் மூச்சாகவும் ஆக்கிவரும் நல்ல தமிழ்ப்பாரம்பரியத்தை உரிமையாகக் கொண்ட இவர் சங்கரன்கோயிலில் பிறந்து, நாங்குநேரி,பாளையங்கோட்டை - யில் கல்வி கற்றுக் கோயிற்பட்டி நகரில் உள்ள கோ.வெ.நா.கல்லூரி, கே.ஆர். கலைக்கல்லூரி ஆகிய கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிப் பணி நிறைவு பெற்றவராவார்.

'வ.உ.சி யின் வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும்' என்ற தலைப்பில் ஆய்வு அறிஞர் பட்டம் பெற்றவர் ஆவார். ஆய்வு நூலுடன் 'வ.உ.சி யும் தமிழும்' என்ற நூலையும் குறளிற்குத் தெளிவுரையும் வெளிக்கொணர்ந்துள்ளார். நகரில் திருவள்ளுவர் மன்றத் தலைவராகக் கடந்த முப்பது ஆண்டாகத் தொண்டாற்றி வருகின்றார்.

திருக்குறள்வேள், குறள் பரப்பும் குரிசில், குறள் ட செம்மல், வ.உ.சி. விருது குறள் உரைச்செம்மல், இலக்கியச் சிந்தனை எனப்படும் விருதுகள் தமிழ்த்தொண்டு கருதி வ பட்டனவாகும். இளைஞ இலக்கியத்துறையில் ஈ செய்வதில் இணையற்ற கண்டவர். எண்ணற்ற இல மேடைகள் இவரது பேச்சாற்ற சுவைத்துள்ளன.

தமிழ்த்திருமணங் நடத்துவதில் தணியாத ஆ உடையவர். காட்சிக்கு எளிய கடும்சொல் அற்றவர் ; த உலகம் மீக்கூறும் மேன் பெற்றவர்.

" தமிழால் உணர்வாள்வே குறளால் உலகாள்வோம் என்பதுவே இவரது மந்திரமாகும்.